# பஞ்சே மங்கேசராவ்


வி. சீதாராமய்யா



இந்திய
இலக்கியச்
சி

T
891.481 409 2
R 18 S





பஞ்சே மங்கேசராவ்

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை, மன்னர் சுத்தோதனனுக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்தரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

[நாகார்ஜுன் மலைச் சிற்பம் — கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.
படம் உதவி: நேஷனல் மியூஸியம், புதுதில்லி.]

இந்திய இலக்கியச் சிற்பிகள்

# பஞ்சே மங்கேசராவ்

ஆசிரியர்

வி. சீதாராமய்யா

தமிழாக்கம்

டாக்டர் சி. சிவசண்முகம்

சாகித்திய அக்காதெமி

Panje Mangesha Rao:- Tamil translation by C. Sivashanmugam of V. Sitaramaiah's monograph of the same title, Sahitya Akademi, New Delhi (1993)

ISBN - 81 - 7201 - 517 - 8

© Sahitya Akademi
First Published 1993

**சாகித்திய அக்காதெமி**
இரவிந்திர பவன், 35, பெரோஸ் ஷா சாலை,
புது தில்லி 110 001.

Library IIAS, Shimla
T 891.481 409 2 R 18 S
00117414

'சுவாதி' மந்திர் மார்க், புதுதில்லி—110 001.

ADA ரங்கமந்திர, 109 ஜெ.ஸி. ரோடு, பெங்களூர்—560 002.

'குணா பில்டிங்', 304—305, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை—600 018.

T
891.481 409 2
R 18 S

ஜீவன் தாரா பில்டிங், 4வது மாடி
டைமண்ட் ஹார்பர் சாலை, கல்கத்தா—700 053.

172, பம்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலயா சாலை,
தாதர், பம்பாய்—400 014.

விலை: ரூ. 15/—

117414
14/12/04
SHIMLA

Sri Vinayaka Offset Printers

# முன்னுரை

பஞ்சே மங்கேசராயரின் வாழ்க்கை, செயற்பாடு, ஆளுமை ஆகியன பற்றி நான் எழுதியிருப்பது இவை பற்றிய எனது நிபுணத்துவத்தைக் காட்டுவதற்காக அல்ல. அவர் தமது பெரியவர்களுள் மதிப்பிற்குரியவராயிருந்தார்; அப்படிப்பட்டவருக்கு ஒரு காணிக்கை செலுத்திட வேண்டும் என்னும் நோக்கில்தான் நான் இதை எழுதினேன். 1925–26ம் ஆண்டு முதற்கொண்டு அவரைப் பலமுறை கண்டு சந்தித்து அவர்மேல் மதிப்பும் மரியாதையும் வளர்த்துள்ளேன். அவர் சொந்தமாக எழுதி வெளியிட்ட எல்லா நூல்களையும்விட மனிதராக அவருடைய குணம், பண்பு ஆகியன மிகவும் சிறப்பானவை; வியப்பளிக்கக்கூடியவை. அவர் மனது வைத்திருந்தால் மேலும் பற்பல நூல்களை எழுதி வெளியிட்டிருக்கமுடியும். ஆனால் அவர் அதில் அக்கறை காட்டாது, மங்களூரிலும் கர்நாடகத்தின் வெவ்வேறு பகுதிகளிலும் உள்ள இளம் எழுத்தாளர்களின் வழிகாட்டியாக, நண்பராக விளங்குவதில் அக்கறை காட்டினார். அக்காலத்தில் அவருடன் அறிமுகம் பெற்றிருந்தோர் இன்று நம்மிடையே குறைவாகவே உள்ளனர். டாக்டர் மாஸ்தி வெங்கடேச அய்யங்கார் அவர்கள் நான் எழுதித் தட்டச்சுச் செய்த இந்நூலின் பிரதியை ஒரு முறை படித்துப் பார்த்துவிட்டு மேலும் சில செய்திகளைத் தெரிவித்தார். ஆங்காங்குள்ள சில குறைகளையும் தெரிவித்தார். அதற்கு நான் அவருக்கு நன்றியுடையவனாக இருக்கிறேன். வயதில் அவர் மங்கேசராவிற்கு — என்னைக்காட்டிலும் — பக்கத்திலிருப்பவர்; மங்கேசராவை மிக நன்றாக அறிந்தவர். கன்னட கவிதை, உரைநடை, திறனாய்வு போன்றவற்றில் அவர் தமக்கென ஒரு தனியிடம் வகுத்துக் கொண்டவர்.

மங்கேசராவின் மூத்த மகன் முகுந்தராயரும், இருமகள்களும், இரு மருமகள்களும் மங்கேசராவ் பற்றிய தமது நினைவுகளையும் சிந்தனைகளையும் என்னிடம் நேரிலும் கடிதத்தின் மூலமும் தெரிவித்தனர். அவரது இளைய மகனாகிய ராமராயர் தனது தந்தையின் வாழ்க்கை வரலாறு பற்றிய விரிவானதொரு கட்டுரையை எழுதி வைத்திருந்தார். அதனை ராமராயரின் மகள் எனக்கு அனுப்பிவைத்தது மிகப்பெரிய உதவியாகும். சேகர இட்ய அவர்கள் அளித்த பிற செய்திகளும் எனக்குப் பேருதவியாய் இருந்தன.

பஞ்சே மங்கேசராவ் அவர்கள் பதிப்பித்த ஆங்கில—கன்னட அகராதியின் ஒரு பிரதியை அவர் எனக்கு அனுப்பிவைத்தது எனக்கு மிகுந்த உதவியாயிருந்தது.

இது மங்கேசராவ் அவர்களின் வாழ்க்கை பற்றிய முழு விவரத்தையும் கொடுப்பதாக எண்ணிவிட வேண்டாம். அவரைப் பார்த்தவர்களும் அவருடன் சிறிதுகாலமாவது சேர்ந்திருந்தவர்களும் அவரை மறப்பது இயலாத செயல். மனிதராக வாழ்ந்து, மக்கள் மீது அவர் காட்டிய அன்பும் கனிவும் அவருக்குச் சிறப்பான தொரு இடத்தை அளிக்கவல்லன. அவர் தமது படைப்புகளை அவற்றின் தகுதிக்கு ஏற்றவிதத்தில் வெளியிட்டு, சுற்றுக்கு விடும் செயலில் ஈடுபாடு காட்டவில்லை. அவருக்குப் பின்னர் பிறர் இச்செயலைச் செய்யவேண்டியிருந்தது. இத்தகைய செயல்களைச் செய்வதில் கன்னட மக்கள் முன்னேறியவர்கள் அல்லர்.

சாகித்திய அக்காதெமியினர் மிகவும் புகழ்பெற்ற பல எழுத்தாளர்கள் எழுதி வெளியிடும் நூல் வரிசையில் என்னையும் சேர்த்துக் கொண்டு இந்நூலை எழுதும் பணியை என்னிடம் ஒப்படைத்துள்ளனர். இவ்வாறு ஒப்படைத்தவர்களின் எதிர்பார்ப்புக்கள் ஓரளவுக்காவது நிறைவேறியிருப்பின் நான் மகிழ்வேன். எந்த அறிஞரின் குணவியல்புகளை இங்கு அறிமுகம் செய்துள்ளேனோ அப்படிப்பட்ட பெரியோரின் அறிமுகமும் சிறப்பும் இதில் தெளிவாக உள்ளனவென்றால்; அவர் எவ்வளவு மனிதநேயப் பண்புகொண்டவர், கருணையுள்ளம் கொண்டவர் என்பன இதில் விளக்கப்பட்டுள்ளனவென்றால் எனது மகிழ்ச்சி பலமடங்கு அதிகமாகும். சென்ட்ரல் பேங்கில் பணியாற்றும் திரு. எம். வி. வெங்கடேசமூர்த்தி அவர்கள் இதனை நான் சொல்லச் சொல்ல எழுதியதோடு தட்டச்சுப்படியையும் தயார் செய்து கொடுத்தார். அவருக்கு எனது நன்றி.

பெங்களூர், வி. சீதாராமய்யா
8.7.1977.

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 9 |
| 2. | இளமையும் கல்வியும் | 18 |
| 3. | தொழில் | 25 |
| 4. | மங்கேசராவின் படைப்புகள் | 50 |
| 5. | பின்னிணைப்புகள் | 152 |

# 1

## அறிமுகம்

பழங்காலத்தில் இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தலை சிறந்த புலவர்களும் கவிஞர் பெருமக்களும் பிறந்து வளர்ந்திருக்கிறார்கள. அவர்கள் பரந்து விரிந்த இந்திய நாட்டிலுள்ள அனைத்து மக்களின் கவனத்திற்கும் ஆளாகியிருக்கவில்லை. அவர்கள் கவனிக்கப்படாமலிருந்ததற்குக் காரணம் அவர்களின் தகுதியின்மையோ, புகழின்மையோ அல்ல; அவர்கள் பயன்படுத்திய மொழியானது அவர்களுக்கு அத்தகைய சிறப்பு கிடைக்கப் பெறாமற் செய்துவிட்டது. இன்றும் கூட அதே நிலைதான் உள்ளது. நான் தற்போது பஞ்சே மங்கேசராவ் அவர்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறேன். கன்னட நாட்டு இலக்கிய ஆசிரியர்களுள், புலவர் பெருமக்களுள் அவர் மிக உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்தவர். கன்னட நாட்டிலேயே கூட நாடு முழுவதிலுமான மக்கள் வெகுகாலத்திற்கு அவரைப் பற்றி நன்கு அறிந்திருக்கவில்லை. காரணம், அவர் கரிசல்மண் பகுதியாகிய தெற்குக் கன்னட மாவட்டத்திலிருந்தார். துங்கபத்ரா நதியின் அந்தப்பக்கம் இருக்கும் இப்பகுதி அப்பொழுது இன்னொரு பகுதியின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அப்பகுதியின் முக்கிய ஊர் பூனாவாகும். அது பண்பாட்டின் தலைநகராய் விளங்கியது. பிற எல்லாவற்றிற்கும் பம்பாய் முக்கிய நகரமாய் விளங்கிற்று. சிந்து மற்றும் குஜராத் பகுதிகளிரண்டும் அந்நாட்களில் பம்பாய் மாகாணத்திற்கு உட்பட்டிருந்தன. தெற்கில் எவ்வாறு சென்னை மாகாணம் இன்றைய கேரளம், ஆந்திரம் மற்றும் ஒரிசா மாநிலங்களைக் கொண்டிருந்ததோ அவ்வாறே வடக்குக் கர்நாடகமானது தெற்கு மகாராட்டிரத்தின் பகுதியாக விளங்கிற்று. அப்போது அதை அவ்வாறுதான் அழைத்தார்கள். பின்னர் உருது, தெலுங்கு, தமிழ் ஆகிய மொழி பேசும் மக்களிடமிருந்து பிரிந்து கன்னட நாடு தனிநாடாக ஆயிற்று. இவர்களை எல்லாம் ஒன்று சேர்த்து, உறவுமுறைக்குள் கொண்டுவந்து, ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்துபவர்களாக ஆக்கக்கூடிய எந்தவிதத் தொடர்பும்

இருக்கவில்லை. கன்னட நாடு என்று அழைக்கப்படும் நாட்டின் வெவ்வேறு பகுதிகளிலும் வெவ்வேறு கன்னட வட்டார வழக்குகள் பேசப்பட்டு வந்தன. அவை ஒன்றுக்கொன்று எவ்வித உறவுமின்றி அன்னிய மொழிகளைப் போன்று தொடர்பற்று இருந்தன. இரண்டு கன்னட மாவட்டங்களில் ஒன்று பம்பாய்ப் பகுதியிலும் மற்றொன்று சென்னைப் பகுதியிலும் சேர்ந்தன.

வடக்குக் கன்னட மற்றும் தென் கன்னட மாவட்டங்களில் மிகவும் பழமையான கன்னட வழக்கு ஒன்று ஹவ்யக என அழைக்கப்படும் இனத்தைச் சேர்ந்த மக்களால் இன்றளவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இம்மாவட்டங்களில் பள்ளிகளில் கன்னட மொழியில் பாடம் கற்பிக்கப்பட்டு வந்தது. துளு மற்றும் கொங்கணி ஆகிய இருமொழிகளுக்கும் வெவ்வேறு எழுத்து வடிவங்கள் இருக்கவில்லை. அதைப் போன்றே, அம்மொழிகளுக்கு என்று எவ்விதமான எழுத்துவழியான இலக்கியப் பாரம்பரியமோ செல்வமோ இருக்கவில்லை. இம்மொழிகளைப் பேசும் இரு இன மக்களும் அறிவு நிரம்பியவர்கள். விரைவாக வளர்ந்து வரும் அவர்கள் மொழிப்பற்றும் கல்வி முன்னேற்றமும் அவைகளிரண்டையும் இலக்கிய வளங்கொண்ட மொழிகளாக ஆக்கக்கூடும். நாட்டின் மேற்குப் பகுதியிலுள்ள மலைத்தொடருக்கு மேற்குத் தொடர்ச்சி மலை என்று பெயர். மலைநாடு என்று அழைக்கப்படும் பகுதி மைசூருக்கும் கன்னட மாவட்டங்களுக்கும் நடுவில் உயரமான சுவரைப் போன்று இன்றும் பரவியுள்ளது. பஞ்சே மங்கேசராவ் தெற்குக் கன்னட மாவட்டத்தைச் சேர்ந்தவராவார். அப்பகுதி சென்னை மாகாணத்தின் ஆளுகைக்கு உட்பட்டது. கேரளமும் கூட அம்மாகாணத்தின் பகுதியேயாகும். வடக்குக் கேரளத்தில் மட்டும் சில பகுதிகள் ஆங்கிலேயர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. கொச்சி, புதுக்கோட்டை, திருவாங்கூர் ஆகிய பகுதிகள் அரசர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பகுதிகளாகும். குடகு சென்னை மாகாணத்திற்குட்பட்டிருந்தது. ஆனால், அங்கிருந்த ஒரு செயல் முறை பின்வருமாறு இருந்தது: மைசூர்ப் பகுதியின் ரெசிடெண்ட் அலுவலரே குடகுப் பகுதியின் தலைமை ஆட்சிப் பொறுப்பாளராகவும் இருந்தார். மொத்த செயல்பாடுகளும் சென்னை மாகாணத்தின் அதிகார வரம்பிற்குட்பட்டிருந்தது.

பஞ்சே மங்கேசராவ் சாரஸ்வத பிராமண இனத்தைச் சேர்ந்தவர். அவரது தாய்மொழி கொங்கணி. மங்களூரில் மக்கள் பயன்படுத்தும்

மொழி துளுவாகும். கன்னடமொழியின் கிளைமொழிபோன்று தோன்றும் துளு மொழியானது அவ்வளவாகப் புகழ்பெற்றிராத, சிறப்புப் பெற்றிராத மொழியாகும். கொங்கணி மொழியில் இரண்டு பிரிவுகள் உள்ளன. ஒன்று, பிராமணர்கள் மற்றும் அவர்களைப் போன்றோர்கள் பயன்படுத்தும் பிரிவு; மற்றொன்று கிருத்துவ மதத்திலுள்ள இரு பிரிவினர்களாகிய கத்தோலிக்கர்களும் பிராட்டஸ்டண்டுகளும் பயன்படுத்தும் மொழி. பிராமணர்களில் இரண்டு பிரிவுகள் உள்ளன. ஒன்று சாரஸ்வதர்கள், மற்றொன்று கௌட சாரஸ்வதர்கள். இவர்களில் கௌட சாரஸ்வதர்கள் கொங்கணி மொழி பேசுபவர்கள் ஆவார்கள். இவர்களின் கொங்கணி மொழி உச்சரிப்புக்கும் பழக்க வழக்கங்களுக்கும் சிறு வேறுபாடுகள் இருந்தன. மகாராட்டிரத்தின் எல்லையிலிருந்து கேரளத்தின் எல்லைவரையில் கொங்கணி மொழிபேசும் வெவ்வேறு விதமான மக்கள் இருந்தார்கள். வடக்குக் கன்னட மாவட்டத்தின் பகுதிகளில் நவாயிதர்கள் என்பவர்கள் முஸ்லிம் இன வணிகர்கள் ஆவார்கள். அவர்கள் பயன்படுத்தும் மொழி சற்றே கலப்படம் நிறைந்த உருது மொழியாகும். தெற்குக் கன்னட மாவட்டத்தில் சைவ மற்றும் வைணவ பிரிவுகளைச் சார்ந்த பிராமண இன மக்களும் இருந்தார்கள். கௌட சாரஸ்வத இனத்தைச் சேர்ந்தவர்கள் தொழில் பார்க்கும் இனத்தைச் சேர்ந்தவர்களாவார்கள். வாணிகம், லேவாதேவி, தொழிற்சாலை போன்றவற்றில் அவர்கள் ஈடுபட்டு வந்தார்கள். சாரஸ்வத இனத்தைச் சேர்ந்த இந்த இரு பிரிவினருக்கிடையே நீண்ட நாட்களாக திருமணம் செய்து கொள்ளுதல் போன்ற கொண்டு—கொடுப்பு உறவுகளோ ஒன்றாக அமர்ந்து உண்ணுதல் உபசரித்தல் போன்ற உறவுகளோ ஏற்படவில்லை. இக்காரணத்தால் இந்த பிரிவினர்கள் ஒரே குழுவாக இல்லாது பிரிந்திருந்தனர். கௌட சாரஸ்வதரும் பிற சாரஸ்வதரும் பெரும்பாலும் த்வைத, அத்வைத மதப் பிரிவுகளைச் சேர்ந்திருந்தார்கள்.

இவ்வளவையும் நான் கூறியதற்குக் காரணம் இவர்களது சமுதாயங்களுக்கிடையேயான வாழ்க்கை நடைமுறையையும், பண்பாட்டு உயர்வு தாழ்வுகளையும் கூறுவதற்காகத்தான். ஹவ்யக பிராமண இன மக்கள் பழைய கன்னடம் மற்றும் சமஸ்கிருதம் ஆகிய இருமொழிகளிலும் புலமைபெற்று ஆழ்ந்த மொழி அறிவுகொண்டு பள்ளிகளில் ஆசிரியர்களாகப் பணியாற்றியுள்ளார்கள். இவர்களுக்கும் கேரள மக்களுக்கும் எவ்விதமான சமுதாய உறவும் ஏற்படவில்லை. இவ்வாறு, இவர்களுக்கிடையே நட்புறவோ, ஒற்றுமையோ ஏற்பட

வழியில்லாமல் போயிற்று. உடுப்பியின் வடக்குப்பகுதியில் மிகுந்த மதிப்பும் உயர்ந்த நிலையும் கன்னடமொழிக்குக் கிடைத்தது என்று கூறவேண்டும். ஆனால், ஹவ்யக இனத்தைச் சார்ந்திராத மக்களின் இயல்பில் இம்மியளவுகூட வாழ்க்கைப் பிடிப்பையோ உற்சாகத்தையோ காண்பது அதிசயம். இது இயல்பானதுதான். மக்கள் சுறுசுறுப்பானவர்கள். நாடு பெருமளவுக்கு வளம் நிறைந்தது. ஆட்சிப்பொறுப்பு, நீதி வழங்குதல் போன்ற செயல்முறைகளிலும் நடவடிக்கைகளிலும் இந்தப் பக்கத்தில் தமிழர்களுடனும், தெற்கில் மலையாள நாட்டவர்களுடனும் போட்டிபோட்டு வெல்ல வேண்டியிருந்தது. நீண்டகாலம் அரசாங்க மற்றும் நீதித்துறை அலுவலகங்கள் சென்னையிலிருந்ததால் ராமேசுவரம் கன்னியாகுமரியிலிருந்து வடக்கில் விசாகப்பட்டினம் வரை சென்னை மாகாணத்தின் பெரும் ஆதிபத்தியத்திற்கு உட்பட்டு இருந்தன. அதாவது, பெருமளவுக்கு அதற்குக் கட்டுப்பட்டிருந்தது. அதிகாரத்தில் இருந்தவர்களில் பலர் தமிழர்கள். பள்ளிகளின் போதனா மொழிமட்டிலும் கன்னடமாகும். தென்னிந்தியாவின் வரைபடத்தைப் பார்த்தால் கிழக்கில் சென்னை, மேற்கில் மங்களூர், இவ்விரண்டுக்கும் இடையில் பெங்களூர் உள்ளது. கிழக்குத் தொடர்ச்சி மலையும் மேற்குத் தொடர்ச்சிமலையும் சேரும் நாடாக திருப்பதி உள்ளது. இரண்டும் கடல் மட்டத்திலிருந்து மூன்றாயிரம் அடி உயரத்தில் உள்ளன. மங்களூர் மேற்கு முனையிலும் சென்னை கிழக்கு முனையிலும் உள்ளன. அக்காலத்தில் கொங்கணி மொழிபேசுவோர் கன்னட மொழியைப் பயன்பாட்டிற்கு ஏற்றுக்கொண்டது ஒரு விதத்தில் அவர்கள் செய்த பாக்கியமே[1] பள்ளிக்கூடத்தில் படித்தவர்கள் யாவருக்கும் அது புரிந்தது. இப்பகுதியில் கன்னடமொழி அறிஞர்கள் பலர் பிறந்து வளர்ந்தது இலக்கிய வளர்ச்சிக்கும் பண்பாட்டு வளர்ச்சிக்கும் பெரும் உதவியாய் இருந்தது.

ஒட்டுமொத்த சமுதாய அமைப்பில், சாரஸ்வத இனத்தவர்களின் எண்ணிக்கை குறைவானதேயாகும். அவர்கள் அழகிய

---

[1] இந்த பாக்கியம் எதிர்வரும் காலத்தின் ஐம்பதாண்டுகளில் எந்தளவுக்கு இருக்கப்போகிறது என்பதைக் கூறுவது இயலாத செயலாகும். கோவா விடுதலை பெற்ற பின்னர் அங்கு கொங்கணி தலைதூக்கியது. இன்று அம்மொழி சாகித்திய அக்காதெமியின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. அம்மொழியின் இலக்கியத்தை வளப்படுத்த ஆற்றலும் மொழிவளமும் மிக்க அறிஞர் பெருமக்களும் கவிஞர்களும் உள்ளனர். ஒருநாள் துளு மொழிக்கும் இதேபோன்ற சிறப்பு வரக்கூடும்.

உடலமைப்பைக் கொண்டவர்கள். அறிவு நிறைந்தவர்கள். கல்வி கேள்விகளிலும் தத்துவம் போன்ற கலைகளிலும் ஆர்வம் நிறைந்தவர்கள். அமைதிக் கலைகள் (Arts of peace) அல்லது மானிடப்பண்பாட்டு இயல், அல்லது வருவாய்த்துறை உத்தியோகம் என்று எவற்றையெல்லாம் நாம் அழைக்கிறோமோ அவற்றிலும் மற்றும் இலக்கியம், பண்பாடு, இசை போன்ற கலைகள், நிருவாகம், தொழில் நுட்பம், நீதித்துறை, சிறிதளவுக்கு மருத்துவவியல் போன்றவற்றில் எல்லாம் விருப்பம் கொண்டவர்கள். இவர்களிடையே சமுதாயப் பாகுபாடு வெகுவாக இருந்தது. தெற்குக் கன்னட மாவட்டத்தை விட்டு விட்டு வெகுதூரத்திற்கு இம்மக்கள் பரவியுள்ளார்கள். பம்பாய், தார்வார், பெங்களூர், சென்னை [தற்போது டெல்லியிலும் கூட] ஆகிய பகுதிகளில் அதிகம் குடியேறியுள்ளார்கள். இந்த இடங்கள் யாவும் பண்பாட்டிலும், கல்வியிலும் முன்னேற்றம் கொண்ட பகுதிகள். அரசியல் நடவடிக்கைகளிலும், நகர்ப்புறப் பண்பாட்டிலும் முன்னணியில் நிற்கும் பகுதிகள். அவர்கள் தாம் இருக்கும் பகுதிகளில் அங்குள்ள மக்களின் கவனத்தையும் மதிப்பையும் பெறக்கூடியவர்களாக இருக்குமளவிற்கு உயர்ந்து நிற்பார்கள். உயர்நிலையைச் சேர்ந்த (elite) மக்கள் என்று கூறலாம். பேச்சுவழக்குகள், சமுதாய நடைமுறைகள் இவற்றில் இன்றளவும் வேறுபட்டுள்ளனர். இவர்களுள் யாருக்குத் தமிழ், மலையாளம், கொங்கணி, மராட்டி மற்றும் கன்னடம் ஆகிய மொழிகளின் உறவு அல்லது கலப்பு இருந்தனவோ அவ்வம்மொழிகளின் தாக்கத்தையும் பண்பாடுகளின் பாதிப்புகளையும் அவர்களில் காணலாம். அவர்களது படைப்புகளிலும் இவற்றைக் காணலாம். இன்றும்கூட அவர்களுள் பலருக்கு மராட்டிய மொழியின் தாக்கம் மிகுந்திருப்பதைக் காணலாம். எப்போது கோவா பகுதியைப் போர்ச்சுகீசர்கள் தங்கள் வசப்படுத்திக் கொண்டார்களோ அப்போது அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு தார்வார், பூனா, பம்பாய் ஆகிய பகுதிகளுக்குச் சென்று குடியேறினார்கள். இவர்கள் யாவருக்கும் மராட்டி மொழி புரியும். ‘உத்திராதி’ என்னும் மராட்டிய இசையின் மீது இவர்களுக்கு மிகுந்த பற்று உண்டு. இவ்வாறு, தெற்குக் கன்னட மாவட்டத்தில் குடியேறி நிலை பெற்றவர்கள் பின்னர் பிறபகுதிகளுக்குச் சென்று அங்குள்ளவர்களின் மீது பாதிப்புகளை உண்டாக்குவதும் அவ்வப்பகுதிகளின் மொழி வளர்ச்சிக்கு உதவி புரிவதும் அவர்களுள் மிகவும் எளிதில் கைவரப்பெற்ற கலையாறிற்று.

துங்கபத்திரா நதியின் இந்தக் கரையிலாகட்டும் அல்லது அந்தக் கரையிலாகட்டும் கன்னட மொழி பேசப்படும் கன்னட நாட்டின் அன்றாட வாழ்க்கை நடைமுறையில் கன்னடமொழியானது எவ்விதமான சிறப்பையும் பெற்றிருக்கவில்லை. பழைய மைசூர் ராஜ்ஜியம் முழுவதும் சற்றேறக்குறைய ஓரளவுக்குக் கன்னடமொழி பேசப்படும் பகுதியாக இருந்தது. ஆனாலும், அம்மக்களின் மனது இன்னமும்கூட முற்றிலுமாக கன்னடத்தின் பக்கமாக வந்திருக்கவில்லை. கடந்த நூற்றாண்டின் எழுபதுகளுக்குப் பின்னர் மைசூர் ராஜ்ஜியத்தை ஆண்ட திவான்கள் சென்னை மாகாணத்தின் அதிகார எல்லைக்குட்பட்டு வந்தார்கள். மைசூர் ராஜ்ஜியத்தின் தன்மை எப்படிப்பட்டது என்றால் எல்லாவற்றிற்கும் வரவேற்பளிப்பது. அதாவது, இங்கு எந்த மொழியை வேண்டுமென்றாலும் பேசலாம்; அதிலும் ஆங்கிலமொழியின் மீது விருப்பம் அதிகம் காட்டப்பட்டது. 1798–99–ஆம் ஆண்டு வரையிலும் இரண்டு தலைமுறைகளுக்கு முஸ்லிம் சுல்தான்கள் மைசூர் ராஜ்ஜியத்தை ஆட்சி செலுத்தியதால் இங்கு சிறிதளவிற்கு இஸ்லாம் இனத்தின் தாக்கத்தையும் காணலாம். இந்நூற்றாண்டின் இருபதுகள் வரை – ஏன், முப்பதுகள் வரையில் என்று கூட கூறலாம் – கன்னடமொழி ஒரு சக்தியாகவோ அதைப் பேசும் மக்கள் ஒரு சக்தியாகவோ ஆகவில்லை. அம்மொழியின்பால் ஓர் ஆர்வம் இருந்தது. அதை ஒருவிதக் காதல் என்று குறிப்பிடுவதே மிகவும் பொருத்தமானது. அறிஞர்களும் இலக்கிய ஆசிரியர்கள் பலரும் வங்க மொழியிலும் மராட்டி மொழியிலும் புதிதாகத் தோன்றிய புதுப்புது இலக்கிய வகைகளை, நெறிமுறைகளைக் கற்றுத் தமதாக்கிக் கொண்டு அதேபோன்ற படைப்புகளைச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டனர். அவர்கள் தமக்கிருந்த சிறிதளவு ஆங்கில அறிவைக்கொண்டு நாடு முழுவதிலும் வெவ்வேறு மொழிகளில் நடைபெறும் புதுப்புது இலக்கியப் படைப்பு முயற்சிகளை ஆய்வு செய்யும் முயற்சியில் ஈடுபட்டனர். இவ்வாறு செய்து இந்தப்பகுதியின் மொழியைப் புதுமைப்படுத்தி அறிமுகமாகியுள்ள அனைத்துத் துறைக் கல்வியையும் அதன்மூலம் கற்றிடும் முயற்சியை மேற்கொண்டனர். அந்த வேளையில் தெற்குக் கன்னட மாவட்டத்தில் பஞ்சே மங்கேசுவரரைப் போன்றவர்கள் இருந்தது கன்னடமொழிக்கு ஒரு வரப்பிரசாதமாகவே இருந்தது. யாவரும் கன்னடமொழியை வளப்படுத்தி மேம்படுத்தும் ஆர்வத்தையும் பற்றையும் அவர் உண்டாக்கினார். எல்லா இடங்களுக்கும் கல்வி கற்பதில் புது உற்சாகத்தை ஊட்டிட வேண்டும், அவர்கள் யாவரும்

படைப்புக்கலைகளில் ஈடுபட வேண்டும் என்னும் குறிக்கோள்கள் அவரது மனதில் நிரந்தரமாக இருந்தன. சுருக்கமாகக் கூறுவதென்றால், நம்பிக்கை, கடின உழைப்பு ஆகியன இல்லாமல் வதங்கிப்போயிருந்த அம்மக்களின் திறமைகள் யாவும் மேம்பட இவரது கல்வி உதவிற்று.

இந்த நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகளில் நம்மைப் போன்றவர்கள் பள்ளிகளில் கல்விபயிலும் மாணவர்களாக இருந்த பொழுது பஞ்சே மங்கேசராவ் போன்ற கவிஞர்களின் பெயர்களைக் கேட்டிருக்கிறோம். எம். என். காமத்தும், 'ஸ்வதேசாபிமானி' மற்றும் 'கண்டீரவ' ஆகிய அச்சகங்களும் நூல்கள் மற்றும் சஞ்சிகைகளை அச்சிட்டு வெளியிட்டுள்ளன. அதேபோன்று தர்மபிரகாஷ் அச்சகம் போன்ற அச்சகங்களும் கொடியால பைல் மற்றும் மங்களூரைச் சேர்ந்த பேசல் மிஷன் அச்சகம் ஆகிய அச்சகங்களும் நூல்களை அச்சிட்டு வெளியிட்டுள்ளன. இவற்றுள்ளும் மங்களூர் பேசல் மிஷன் அச்சகத்தாரும், அலுவலர்களும் மற்றும் பிராடஸ்டண்ட் கிருத்துவர்களும் புதுயுகத்தின் கல்விசார்நூல் வெளியீடுகள் என்று எவற்றையெல்லாம் அழைக்கலாமோ அவற்றையெல்லாம் வெளியிட்டனர். மேலும், இலக்கணம், அகராதி போன்ற நூல்களையும் அச்சிட்டனர். அத்தகைய நூல்கள் இன்றளவும் தமது சிறப்பையும் புகழையும் இழக்காமல் காப்பாற்றி வருகின்றன. கன்னட எழுத்துக்களுக்குச் சற்றேறக் குறைய இன்றைய எழுத்து வடிவங்களை அளித்தவர்கள் அவர்களேயாவர். அத்தோடு, சென்னை மாகாணத்தின் அதிகார எல்லைக்குள் கல்விக்கூடங்களில் மாணவர்களுக்கான பயிற்று நூல்களைத் தயாரித்தனர். இச்சூழ்நிலையில், யார் செய்த நற்பயனோ தெரியவில்லை பஞ்சே மங்கேசராவையும் பேசல் மிஷன் அச்சகத்தாரையும் ஒன்று சேர்த்து வைத்துச் செயல்பட வைத்தது. இவர் மூலமாக அவர்களும் அவர்கள் மூலமாக இவரும் பயன்பெற்றனர். இந்த இருசக்திகளும் சேர்ந்து கன்னடமொழியின் கோட்டை போன்றும் வளர்ச்சி மையம் போன்றும் செயல்பட்டனர். கல்வித்துறைகளில், இலக்கிய ஆய்வுகளில், அயல் மொழித் துறைகளில் எவற்றையெல்லாம் அடிப்படை என்று அழைக்கலாமோ அப்படியே இவற்றையும் அடிப்படையானவை என்று அழைக்கக்கூடிய அளவிலான செயல் அதுவாகும். இந்த அளவுக்குக் கல்வியறிவு நிரம்பப் பெற்றும் சிந்தனை வளம் சிறக்கப் பெற்றும் உள்ளவர்கள் நம்மிடையே பலர் இருந்தபோதிலும்

பஞ்சே மங்கேசராவைப் போன்று மனிதப்பண்பும் இயல்புகளும் நிரம்பியவர்களாக இன்றளவும் ஒருவர் கூட நம்மிடையே பிறந்திடவில்லை. கல்வியறிவின் ஆழத்தில், இலக்கியப் படைப்பாற்றலில் மஞ்ஜேஸ்வரம் என்னும் ஊரைச் சேர்ந்த கோவிந்தபை என்பவர் ஒருபுறம் புகழ்பெற்றவராக விளங்குகையில் இன்னொரு புறத்தில் அவருக்குச் சற்றுப் பின்னர் உடுப்பி மற்றும் மணிபால் ஆகிய பகுதிகளில் டாக்டர் டி.எம்.எ.பை என்பவர் கல்வி மறுமலர்ச்சியிலும் பண்பாடு தொடர்பான செயல்களிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டு கல்வி நிலையங்களையும் ஆய்வு மையங்களையும் தோற்றுவித்தார். பஞ்சே மங்கேசராவை நன்கு அறிந்தவர்கள் அவரை என்றும் மறந்திடமுடியாது. எப்போதும் நினைவில் வைத்திருக்கப்படக்கூடியவர். அவரிடமுள்ள மனிதநேய இயல்புகள் முழுமை பெற்றவை என்பதை அறிவார்கள். ஒரு இனத்து மக்களின் பண்பாட்டையும் மிகச் சிறந்த இயல்புகளையும் அவரது வாழ்க்கை நெறிப்படுத்தியது என்றால் அது மிகையாகாது.

மத்தியதரக் குடும்பம் ஒன்றில் பிப்பிரவரி மாதம் இருபத்திரண்டாம் நாள் ஆயிரத்து எண்ணூற்று எழுபத்து நான்காம் ஆண்டு மங்கேசராவ் அவர்கள் பிறந்தார். அந்தக் குடும்பத்திற்கு இயல்பாகவே இருந்த நல்லியல்புகள், பின்பற்றும் மதத்தில் பற்று, நம்பிக்கை மற்றும் பக்தி ஆகியன யாவும் இவரிடம் இருந்தன. பொருளாதார ரீதியில் இவர் குடும்பம் அவ்வளவாக மேல்மட்டத்தைச் சேர்ந்ததல்ல. தெற்குக் கன்னட மாவட்டத்திற்கும் மைசூருக்கும் நடுவில் சுப்பிரமணியம் என்னும் புண்ணிய யாத்திரைத் தலம் ஒன்று உள்ளது. பஞ்ச என்னும் ஊர் அவ்வூருக்குப் பக்கத்திலிருக்கும் ஒரு கிராமமாகும். அச்சிற்றூரிலிருக்கும் குடும்பங்கள் யாவும் பண்டவாளம் என்னும் ஊருக்கு வந்து குடியேறின. பண்டவாளம் என்னும் ஊர் மங்களூரிலிருந்து சுமார் முப்பது மைல் தூரத்தில் உள்ளது. ஊரின் நடுவில் நேத்ராவதி என்னும் ஆறு ஓடுகிறது. அந்த நதி தெற்குக் கன்னடத்தில் ஓடும் எல்லா நதிகளையும் விடவும் பெரியதாகும். பஞ்சே மங்கேசராவின் தந்தையரான ராமப்பய்ய அவர்கள் மிகுந்த மத நம்பிக்கையுள்ளவர். தாயார் சாந்த துர்காதேவி என்னும் சீதம்மா அவர்கள் சம்பிரதாயமானதொரு குடும்பப்பெண். கணவன் இறந்தபின்னர் அவரே குழந்தைகளை எல்லாம் வளர்த்து ஆளாக்க வேண்டியிருந்தது. அவர்களுக்கு நான்கு ஆண் குழந்தைகள். ஒன்றோ இரண்டோ பெண் குழந்தைகள். நீதிமன்ற வழக்கு ஏதோ ஒன்றில்

ராமப்பய்யருக்குச் சேரவேண்டிய குடும்ப வழியிலான சொத்துக்கள் யாவும் அழிந்து போயின. சீதம்மாவின் தந்தையார் கோவிலில் அர்ச்சகராகப் பணிபுரிந்து ஈட்டிய சிறிதளவு பணமே வருமானமாகும். சீதம்மா தன்னிடமிருந்த சில சொத்துக்களை விற்றுத் தான் சேர்ந்து வைத்திருந்த சிறிது பணத்தையும் அத்தோடு சேர்த்து ஒரு வீடு கட்டினார். வீட்டின் உட்பகுதியிலேயே இரு சிறு அறைகளைக் கட்டி அவற்றை வாடகைக்கு விட்டு அந்தப் பணத்திலேயே குடும்பத்தை நடத்திச் சென்றார். குடும்ப நிலை சிரமமானதாகவே இருந்திருக்கிறது. ஆயினும், சுற்றிலுமுள்ள எல்லா குடும்பத்தவர்களும் அவருக்கு மிகுந்த மதிப்பும் கௌரவமும் அளித்தனர். பலருக்குத் தேவையான புத்திமதியளித்தும் தக்க அறிவுரை கூறியும் வழிகாட்டியாக விளங்கினார். புராணக் கதைகள் பலவற்றை அறிந்து வைத்திருந்தார். தர்ம சிந்தனையுள்ளவரும் பிறருக்கு உதவிடும் மனப்பாங்குள்ளவருமான அப்பெண்மணி தூய வாழ்க்கை நடத்தி மங்கேசராவின் தந்தையைப் போன்றே தர்மசிந்தனை நிறைந்தவராக வாழ்ந்து வந்தார். காலமாகிவிட்ட தந்தையாரின் நினைவு குழந்தைகளின் மனதில் நீண்ட காலத்திற்கு நீங்காததொரு இன்பப் பெட்டகமாகத் திகழ்ந்தது. தாயின் மேல் குழந்தைகள் மாறாத அன்பு பூண்டவர்களாகத் திகழ்ந்தார்கள்.

[மங்கேசராவ் அவர்களின் வாழ்க்கையோடு தொடர்புடைய இவரது குடும்பத்தைப் பற்றிய சுருக்கமான விவரங்களும் இன்னும் பிறதொடர்புடைய செய்திகளும் பின்னிணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.]

# இளமையும் கல்வியும்

அவ்வளவாகப் பெரியதல்லவென்றாலும் பண்டாவளம் ஓர் அழகிய ஊராகும். மேற்குத் தொடர்ச்சி மலைகளைத் தாண்டிக் கிழக்கில் உள்ள சமவெளிப் பகுதிக்குச் செல்ல வேண்டுமென்றாலும் இந்தவூர்தான் வழியாகும். அதனால் கிராமம் நகரம் ஆகிய இரண்டின் சாயலையும் இவ்வூர் பெற்றிருந்தது. இவ்வூரில் சுமார் முப்பது — நாற்பது சாரஸ்வத பிரிவைச் சேர்ந்த குடும்பங்கள் இருந்தன. அவற்றில் சிறியதொரு குடும்பம் பஞ்சே மங்கேசராவ் அவர்களின் குடும்பமாகும், ராமப்பய்யாவின் குழந்தைகள் யாவரும் தமது பெற்றோர்களைப் போன்றே குடும்பப் பெரியோர்களின் அறிவுத்திறத்தை மிஞ்சுவதிலும், பண்பாட்டைப் போற்றுவதிலும் பெயர் பெற்றவர்களாக விளங்கினார்கள். இயல்பாகவே முன்னேற்றச் சிந்தனைகள் கொண்டவர்கள். தம்மைச் சுற்றிலுமிருந்தவர்களுக்குப் பலவிதத்திலும் உதவுபவர்களாக இருந்தார்கள். ஊரில் நடைபெறும் பற்பல சமுதாய, பண்பாட்டு நிகழ்ச்சிகளில் ராமப்பய்யாவின் குழந்தைகள் கலந்து கொண்டனர். குழந்தைகளில் மூத்தவரின் பெயர் கிருஷ்ணராயர் என்பதாகும். இயல்பாகவே கம்பீரமான தோற்றம் கொண்டவர் இவர். ஈடுபடும் செயல்களிலும் அப்படிப்பட்டவரே. இரண்டாம் மகன் பெயர் மங்கேசராவ். பின்னர் சிவராவ், சங்கரராவ், சீனிவாசராவ் மற்றும் ராகவேந்திரா ஆகியோர். பத்து மாதக் குழந்தையொன்று தந்தையார் இறந்த போதே இறந்து போயிற்று. குழந்தைகள் யாவரும் ஊர் மக்களின் கவனத்தை ஈர்ப்பவர்களாக வளர்ந்து அவர்களின் அன்பிற்குப் பாத்திரர்களானார்கள். தென்னைமரம், மாமரம், பலாமரம், முந்திரி மரம், புளியமரம் ஆகிய மரங்கள் அங்கு சுற்றிலுமுள்ள நிலப்பரப்பை பசுமைப்படுத்தி வந்தன. ஒருபுறத்தில் நேத்திராவதி நதியானது மாறாத மகிழ்ச்சியைச் சிறுவர்களுக்கு அளித்துவந்தது. சிறுவர்கள் விளையாடும் விளையாட்டுக்கள் பலவற்றில் மங்கேசராவ தூரர். உடற்கட்டைத் திடப்படுத்தும் உடற்பயிற்சிகளில் அவருக்கு அவ்வளவாக விருப்பம் இருக்கவில்லை. சதுரங்க விளையாட்டில் அவருக்கு

மிகுந்த விருப்பம் இருந்தது. நீரில் நீந்தி விளையாடுவதிலும் அப்படியே. அவர் ஒரு சிறந்த நீச்சல் வீரராக இருந்தபோதிலும் ஒருமுறை தன் தம்பியொருவன் நீரில் முமுகிவிடாமல் காப்பாற்றுவதற்காக இவர் போய் இறுதியில் இருவரும் மூழ்கிவிடும் அபாயம் ஏற்பட்டது என்று கூறப்படுகிறது. சங்கரன் என்னும் தன் தம்பியையோ அல்லது வேறொரு தம்பியையோ காப்பாற்றப்போய் பிடி தவறி இருவரும் நீரில் முழுகிக் காணாமற் போய்விட்டார்கள். தற்செயலாக அவர்களிருவரையும் பார்த்த யாரோ ஒருவர் ஆற்றில் குதித்து அவர்களிருவரையும் வெளியே கொண்டு வந்தாராம். சிறுவர்களுக்கு நினைவு தவறியது. சில நாட்கள் படுக்கையிலிருந்தனர். தமது சிறு வயதில் தந்தையாரைப் போன்றே இவரும் தூய்மையானவராகவும் ஆசாரசீலராகவும் இருந்தார். வீட்டிலும் கோவிலிலும் உச்சரிக்கப்பட்ட மந்திரங்கள் யாவும் அவருக்குப் பழக்கமாயின. அவ்வாறே, மராட்டி மொழியிலிருந்தும் கன்னடமொழியிலிருந்தும் சந்தர்கார் மற்றும் தாசரின் பாடல்களைத் தாயின் வாயிலாகக் கற்றுக்கொண்டார். அவரது குரல் இனியது, மென்மையானது, நுட்பமானது. அதனால் அவர் பாடலைக் கேட்டு எல்லோரும் மகிழ்ந்தனர். அந்தச் சிறுவயதிலேயே சில பாடல்களை அவரே இயற்றியதாகவும் கூறப்படுகிறது. பாடல்களின் இசையும் லயகதிகளின் வகைவகையான சிறப்பும் அவரது மனதை ஆரம்ப நாட்களிலேயே மிகவும் ஈர்த்துள்ளன. அறிவு புகட்டும் கதைகள், வாதப் பிரிதிவாதங்கள் ஆகியன மூலமாக எல்லோரது மனதையும் கவருதல் அவரது இயல்பாயிருந்தது. இவ்வாறு வாதப் பிரதிவாதங்களில் அவருடன் கலந்து கொண்டவர்களுள் சிலர் வாய் பேச முடியாதபடியும் விவாதத்தை விட்டுவிட்டு, ஓடி விடும்படியும் ஆயிற்றாம். அறிவுபுகட்டும் சிறிய சிறிய கதைகள், மெல்லிய நகைப்பூட்டும் கதைகள், ஆழ்ந்த அறிவை வெளிப்படுத்தும் பேச்சு ஆகியன கேட்பதற்கு மிகவும் இனிமையாக இருந்தன. பஞ்சே மங்கேசராவின் இத்தகைய அறிவுத்திறத்தால் அவரது தாயும் பாட்டியும் அவர் மேல் மிகுந்த பாசம் கொண்டிருந்தார்களாம். சிறுவர்களிடம் வளர்ந்து வந்த இந்த அறிவாற்றலைக் கண்டு அவர்கள் மிகவும் மகிழ்ந்தனர். அவர்களது பாசத்தையும் பற்றையும் அது வளர்த்தது. கர்நாடக நாட்டின் சில பகுதிகளிலும் தெலுங்கு மொழி வழங்கப்படும் பகுதிகளில் பல பகுதிகளிலும் இருவர் சேர்ந்து ஒருபாடலை இயற்றும் வழக்கம் இருந்துவந்தது. அதாவது, கவிகளில் யாராவது ஒருவர் ஒரு தொடரையோ அல்லது ஒரு வரியையோ கூறுவது; அதற்கு இணையாக வேறொரு கவி மற்றொரு

தொடரையோ அல்லது வரியையோ சேர்ப்பது; இதேபோன்று மேலும் இரு வரிகளைச் சேர்த்து அதை ஒரு பாடலாக மாற்றுவது வழக்கம். அப்பாடலில் புதிய அழகிய பொருள் பொதிந்திருக்கும். பாடலின் இசை நயம் செவிகளுக்கு மிகவும் இனிமையூட்டக் கூடியதாக இருக்கும். நான்கு வரிகளைக் கொண்ட அத்தகைய பாடல்கள் யாருடைய மனதையும் தொடக்கூடியனவாக இருக்கும். பலவேளைகளில் அப்பாடல்கள் முடியும் பொழுது மகிழ்ச்சியால் மக்கள் எழுப்பும் ஆரவாரமும் கரவொலியும் மிகுதியாக இருக்குமாம். பஞ்சே மங்கேசராவ் மற்றும் அவரது சகோதரர்களின் இத்தகைய சிறப்புகளைப் பற்றிப் பற்பல செய்திகளைக் கூறுகிறார்கள். தாயாருக்கும் மற்றும் வீட்டிலுள்ளவர்களுக்கும் இத்தகைய சிறப்பும் திறமையும் சாதாரணமானதாகத் தோன்றியிருப்பினும் ஊர் மக்களுக்கு இது ஒரு புதுமையான அறிவுத்திறனாகக் காட்சியளித்திருக்கிறது. ஊர் மக்களில் சில முதியவர்கள் கூட இத்தகைய பாமாலைகளையும் கவிதைகளையும் சொந்தமாக இயற்றியுள்ளனர் என்று கூறுகிறார்கள்.

பஞ்சே மங்கேசராவ் சிறுவனாக இருந்தபோது தன்னைச் சுற்றியுள்ள சிந்தனைமயமான உலகத்தின் வாழ்க்கையில் எப்போதும் முழுமகிழ்ச்சியுள்ளவராகவே இருந்துவந்தார். எல்லா விதமான தகவல்களையும், உலக விஷயங்களையும் தனது அறிவுப்பசி தீரும் வண்ணம் திரட்டிக் கொண்டார். அவர் இருந்த ஊர் சிறியது. உயர்கல்வி பெறுவதற்கோ அறிவுச் சுரங்கத்தைத் திறந்து வாரிவழங்குவதற்கோ அங்கு எவ்விதமான நிறுவனமோ அல்லது வேறுவசதிகளோ இருக்கவில்லை. ஆனால் அவரது மனம் எப்போதும் அவரைத் தூண்டியதால் தான் கற்றுக் கொண்டயாவற்றையும், புரிந்துகொண்ட எல்லாவற்றையும் தன்னுடன் கலந்துரையாடும் எல்லோருடனும் பகிர்ந்து கொள்ளுவதில் மிகுந்த ஆர்வம் கொண்டவராக இருந்தார். பல வேறு நண்பர்களுடன் சேர்ந்து சிறுவர்கள் யாவரும் பலவகையான விளையாட்டுக்களை விளையாடினார்கள். அவற்றுள் பள்ளிக்கூட விளையாட்டும் ஒன்றாகும். அப்பள்ளி விளையாட்டில் பஞ்சே மங்கேசராவ் தலைமையாசிரியர் பாத்திரத்தைச் செய்வார். இத்தகைய திறன்கள் வளர்ந்து கொண்டிருந்தன. சொற்களை வெவ்வேறு விதங்களில் கோர்த்துச் சொற்சிலம்பம் ஆடும் திறன் வளர்ந்தது. தனக்கு எவையெல்லாம் உற்சாகத்தையும் இன்பத்தையும் அளித்தனவோ அவற்றை எல்லாம் தனது நண்பர்களிடம் பரப்புவதில் மிகுந்த ஆர்வம் காட்டினார். சிறுவயது நண்பர்களிடம் நிகழ்ந்த இத்தகைய

நிகழ்ச்சிகள் யாவற்றையும் பெரியவர்கள் மிகவும் வரவேற்றார்கள். இத்தகைய நிகழ்ச்சிகளைப் பெரியவர்கள் விரும்பினார்கள். நீண்ட காலத்திற்கு பண்டவாளத்து மக்கள் இந்த நினைவைப் போற்றி மகிழ்ந்தார்கள். வீட்டுவேலைகளிலும் அவர் தனது தாய்க்கு உதவி செய்திட வேண்டி இருந்தது. கிணற்றிலிருந்து நீர் இறைத்துக் கொடுத்திருக்கிறார். ஊர்த்திருவிழாக்களிலும் ஊர்வலங்களிலும் தேர்த்திருவிழா மற்றும் இதர கோவில் சார்ந்த நோன்புகளிலும் பற்பல உதவிக் காரியங்கள் செய்திருக்கிறார். தந்தையாரின் வருமானமோ சிறிது; குடும்பத்தின் மேலே விழுந்த கடன் சுமையோ அதிகம். இக்காரணங்களினால் இக்குடும்பம் துயரக்கடலில் மிதக்க வேண்டியிருந்தது.

**உயர்நிலைப்பள்ளிக் கல்வி**

இந்தச் சூழ்நிலையில் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து கல்வி கற்கவேண்டிய அவசியம் அவருக்கு ஏற்பட்டது. பண்டவாளத்தில் இருந்தது ஒரு துவக்கப்பள்ளி மட்டுமே. அங்கு உயர்நிலைப் பள்ளிக் கல்விக்கு எவ்வித வசதியும் கிடைக்கவில்லை. அவருக்கு உயர்நிலைப்பள்ளிக் கல்வியளித்திட குடும்பத்தில் உள்ளவர்களுக்கு எவ்வித வழியும் இருக்கவில்லை என்று பஞ்சே மங்கேசராவ் குறிப்பிட்டுள்ளார். மங்களூரில் தனது தாயின் உறவினர் ஒருவர் வீட்டில் தங்கி உயர்நிலைப்பள்ளியில் பயின்றாராம். மங்களூரைப் போன்ற பெரியதொரு நகரத்தில் கல்வி பயிலும் மாணவனொருவன் அணிந்து கொள்ள வேண்டிய துணிகளைத் தயார் செய்து கொள்ளுவதுகூட மங்கேசராவிற்குச் சிரமமானதாயிருந்தது. இயல்பாகவே அறிவுநிறைந்தவர்; கல்வியில் ஆர்வம் மிக்கவர். நன்கு பயின்றதால் பள்ளிக் கட்டணம் கட்டவேண்டியிருக்கவில்லை. தமது தேவைகளை, பிற சிறுவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதன்மூலம் கிடைத்த வருவாயைக் கொண்டு பூர்த்தி செய்துகொண்டார். தமது பிற்பகல் உணவிற்கு எத்தகைய ஏற்பாடு செய்து கொண்டார் இரவில் எங்கு படுத்துறங்கினார் என்பனவற்றைப் பற்றி கோவிந்தபை பின்வருமாறு விவரித்துள்ளார்.

> "அப்பொழுது தனது குடும்பத்தவர்களை இன்னமும் மங்களூருக்கு அழைத்துக் கொண்டு வந்திருக்கவில்லை. பிள்ளையார் கோவிலின் வழியில் உள்ள வேணுகோபாலன் கோவிலின் மடத்தின் பக்கத்திலிருந்த சகோதரியின் வீட்டில் பகல் உணவும் இரவு உணவும் அருந்தினார்.

117414

பாணே மங்களூரைச் சேர்ந்த விட்டலராவ் என்பவரின் உணவகத்தில் சிற்றுண்டி, காப்பி போன்ற பானங்கள் ஆகியவற்றை அருந்தினார். கௌரிமடம் சாலையில் இருந்த நாயம்பள்ளி சங்கரநாராயண ராயர் என்பவரின் வீட்டில் தங்குதல். இதுவே அவருடைய தினசரி வாடிக்கையாக இருந்தது. அவரைப் பார்க்க வேண்டுமென்றால் சங்கரநாராயண ராயரின் வீட்டில் பார்க்கலாம்."

எழுதவதற்கும் பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் கூறியனவற்றைக் குறித்துக் கொள்ளுவதற்கும் வெள்ளைத்தாள்களின் தேவையிருந்தது. தாளின் ஒரே பக்கத்தில் இரண்டு தடவைகள் எழுதியுள்ளாராம். முதலில் எழுதும்போது வரிகளுக்கிடையே விட்ட வெற்றிடங்களில் மறுமுறை எழுதுவாராம். முதலில் எழுதும்போது ஒரு குறிப்பிட்ட நிறத்திலுள்ள மையாலும் மறுமுறை எழுதும்போது மற்றொரு நிறத்திலுள்ள மையாலும் எழுதுவார்! பள்ளிக்கூடத்தின் ஒய்வு நேரங்களில் வேறு மாணவர்களிடமிருந்து புத்தகங்களை இரவில் பெற்றுத் தனது தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டார். அவருடைய நினைவுத்திறன் மிகுதியானது. மனதை ஒருமுகப்படுத்தும் திறனும் மிகுதியாயிருந்தது. செய்தியைப் புரிந்து கொண்டு கிரகித்துக்கொள்ளும் வேகம் மிகவும் அதிசயமானது. இவ்வாறு பஞ்சே மங்கேசராவ் கல்வியில் எல்லாத் திறமைகளையும் பெற்று விளங்கினார்.

தனது சொந்த ஊராகிய பண்டவாளத்தில் வீட்டிலிருந்து தனது சகோதரிக்குத் தான் உதவ வேண்டியுள்ளது என்பதை அவர் விரைவில் உணர்ந்து கொண்டார். வேறு சில மாணவர்களுக்குத் தனி வகுப்புகள் நடத்துவதன் மூலம் பாடம் சொல்லிக் கொடுத்தார். இதன் வாயிலாக அவருக்குக் கிடைத்த சிறு வருமானம் அவருக்கும் சற்று உதவியது; அவரது குடும்பத்தாருக்கும் உ தவியாயிருந்தது. ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்றிரண்டில் கடன் சுமையைத் தாங்கவியலாது மனமுறிவு ஏற்பட்டு அவரது தந்தையாராகிய ராமப்பய்யா காலமானார். கடன்சுமை இவருக்கு ஏற்பட்டது தன்னுடைய சித்தப்பா மற்றும் பெரியப்பாக்களின் காரணத்தாலேயே. மேல் நீதிமன்றத்தில் ஏதோவொரு வழக்கு இவருக்கு எதிராகத் தீர்ப்பாயிற்றாம். குடும்பம் உண்மையிலேயே சிரம நிலையிலிருந்தது. தந்தையாரின் இறுதிநேர வாழ்த்தையாவது பெற்றாக வேண்டும் என்னும் குறிக்கோளுடன் நடந்தே ஊரைச் சென்றடைந்தார்.

தந்தையாரின் குழந்தைகள் யாவரும் அவரது அருகிலேயே இருந்தார்கள். பஞ்சே மங்கேசராவிற்குத் தந்தையார் சொன்ன வாக்கு இதுதான், 'மதுவைத் தொடவேண்டாம், மனத்தூய்மையுள்ளவனாக இரு; உடலைத் தூய்மையாக வைத்துக்கொள்; துயரம் எவ்வளவுதான் வந்தாலும் தம்பிகளையும், தங்கைகளையும் கவனித்துக்கொள்'. இறுதிவரை வேதவாக்கைப் போன்று இவற்றை பஞ்சே மங்கேசராவ் கடைப்பிடித்தார்.

இதற்குள்ளாக மங்கேசராவின் மூத்த அண்ணன் கல்வி பயில்வதற்காகச் சென்னைக்குப் புறப்பட்டுச் சென்று விட்டார். படித்துப் பட்டம் பெற்ற பின்னர் திருமணம் செய்து கொண்டு பம்பாய் மாகாண அரசாங்கத்தில் ஒருவேலையில் அமர்ந்தார். அதன் பிறகு அந்த வீட்டுக்கு அவர் செல்வது மிகவும் குறைவாகவே இருந்தது. அண்ணன் தம்பியர்களுக்குள் அன்பும் பாசமும் அக்கறையும் கடைசிவரை நிலைத்திருந்தது என்றாலும், மூத்த அண்ணனாகிய கிருஷ்ணராயர் தன் வீட்டுக்குச் செய்யமுடிந்தது மிகவும் குறைவானதேயாகும். அக்காலத்தில் பயணம் செய்வது அவ்வளவு எளிதல்ல. அஞ்சல் வசதியும் மிகவும் குறைவானதே. அஞ்சலில் சேர்க்கப்பட்ட கடிதங்கள் தவறாது அந்த முகவரிக்குப் போய்ச் சேருவது கடினம். அரசாங்க வேலையிலிருந்த அவர் தன் கடமையிலேயே முற்றிலும் முழுகிப் போனார்.

ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்று நான்காம் ஆண்டு வாக்கில் பஞ்சே மங்கேசராவ் உறவினர் ஒருவரின் தங்கையைத் திருமணம் செய்து கொண்டார். அவர் கன்னட மொழியில் புலமைபெற்று நல்ல அறிஞராக இருந்ததால் நாளடைவில் சென்னை மாகாண அரசாங்கத்தின் தலைமைக் கன்னட மொழி பெயர்ப்பாளராக நியமிக்கப்பட்டார். அவருடைய குடும்பம் புத்தூரில் இருந்தது. புத்தூர் மங்களூருக்குத் தெற்கில் முப்பத்தைந்து மைல் தூரத்தில் உள்ளது. மங்கேசராவ் எப். ஏ. தேர்வில் தேர்ச்சி பெற்றவுடன் வீட்டிலுள்ள சிறுவர்களின் கல்விக்கெனவும் அன்றாடத் தேவைகளுக்கெனவும் வீட்டுச் செலவினங்களின் தேவைகளுக்கெனவும் உழைக்க வேண்டியதாயிற்று. கணிதவியல் படித்துப் பட்டம் பெறவேண்டுமென்பது அவரது பேரவா. செயிண்ட் அலோஸ்ய்ஸ் என்றழைக்கப்பட்ட அந்த ஒரேயொரு பட்டப்படிப்பு வழங்கும் கல்லூரியில் கணிதவியலைப் பாடமாகப் படிப்பதற்கு வசதியில்லை. அதனால் வரலாறு, பொருளியல், கன்னடம் ஆகிய

பாடங்களை எடுத்துக் கொண்டு திருப்தியடைய வேண்டியதாயிற்று. மூன்று பாடங்களுள் இரண்டு பகுதிகளில் விரைவாக அவர் தேர்ச்சி பெற்றுவிட்டார். பட்டக்கல்வி முற்றுப் பெற்றுப் பட்டம் பெறுவதற்குள்ளாகவே மங்களூரிலிருந்த அரசாங்கக் கல்வி நிறுவனத்தில் உதவி ஆசிரியராகப் பணியாற்றும் பொறுப்பு கிடைத்தது. கன்னடம் படிப்பதற்கு இவர் ஏற்றவரல்ல என்று எண்ணிக் கொண்டிருந்த அங்கிருந்தவொரு கன்னட ஆசிரியருக்கு இச்செய்தி பெருவியப்பை அளித்தது.

-தொழில்

இது தொடர்பாக ஒரு செய்தி நமக்கு மகிழ்ச்சியளிப்பதாக இருக்கிறது. அப்பொழுது மிகவும் திறமைமிக்க கவிஞராகவும், கன்னடமொழி அறிஞராகவும் போற்றப்பட்ட நந்தளிகே லட்சுமிநாரணப்பன் என்பவரும் இதே வேலைக்கு விண்ணப்பம் அனுப்பியிருந்தாராம். அவர் அந்த காலத்தில் கன்னடமொழிக்கு மிகச்சிறந்த இலக்கியங்களைப் படைத்துக் கொடுத்தவராவார். ஆனால், அரசாங்கக் கல்லூரி முதல்வர் – சிங்களத்தைச் சேர்ந்த ஹென்ஸ்மன் என்னும் பெயரைக் கொண்டவர் – ஆங்கிலம் அறிந்திருந்த பஞ்சே மங்கேசராவையே இந்த வேலைக்குத் தேர்வு செய்தார். நந்தளிகே லட்சுமிநாரணப்பன் அவர்களுக்கு ஆங்கிலம் தெரிந்திருக்கவில்லை. இந்நிகழ்ச்சி நடைபெறுவதற்கு முன்பு இதைப்பற்றிய விவரம் மங்கேசராவிற்குத் தெரிந்திருக்கவில்லை. இவ்வாறு தேர்வு செய்ததால் இரண்டு வாழ்க்கை முறைகள் வெவ்வேறாக உருப்பெற்றன.

தன்னைத் தேர்வு செய்ததன் மூலம் நந்தளிகே லட்சுமிநாரணப்பருக்கு அந்த வேலை கிடைக்காமல் போய்விட்டது என்பதைத் தெரிந்து கொண்ட பின்னர் அவருக்கு மங்கேசராவ் பின்வரும் இனிமையான கடிதம் ஒன்றை எழுதினாராம்.

> "நெல் குத்தும் உலக்கையைக் கன்னட மொழியைக் கற்பிப்பதற்கு நியமித்துள்ளனர். வண்ணம் தீட்ட உதவும் அழகிய மயிற்பீலியை காதுகுடையப் பயன்படுத்துகின்றனர்"

அப்பொழுது மங்கேசராவ் உடுப்பியில் உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியராகப் பணியாற்றிய நந்தளிகே லட்சுமிநாரணப்பனின் படைப்புக்கலைத் திறமை பற்றி முழுமையாக

அறிந்திருக்கவில்லை. அரசாங்கக் கல்வி நிறுவனத்தில் ஆசிரியர் பணிக்குத் தன்னுடன் நந்தளிகே லட்சுமிநாரணனும் போட்டியிடுகிறார் என்பதை மங்கேசராவ் அறியாதிருந்த போதிலும் 'குமாரவிஜயம்' என்னும் யட்சகான நூல் ஒன்றைப் படித்தபொழுது அதன் ஆசிரியரின் திறமையை வெகுவாக மதித்தார், விரும்பினார். தெற்குக் கன்னட மாவட்டத்தில் கடைசியாக உண்மையாகவே தலைசிறந்ததொரு கவிஞன் இருக்கிறான் என்பதைப் பல மேடைகளில் மங்கேசராவ் கூறியுள்ளார். தான் ஆற்றப்போகும் பணியில் திறமைபெற வேண்டும் என்பதற்காகக் கன்னடப் பயிற்சியை மங்கேசராவ் மிகவும் கவனத்துடன் மேற்கொள்ள வேண்டியிருந்தது. நந்தளிகே லட்சுமிநாரணப்பனுக்கு இந்தத் தேர்வின் மூலம் எந்தவிதமான நல்லதும் ஆகியிருக்காவிட்டாலும் பஞ்சே மங்கேசராவிற்கு இது ஒரு அதிர்ஷ்டம் போலவே — எதிர்பாராமல் காற்றினால் விழுந்த பழத்தைப் போன்றே இருந்தது. இந்தப் பணியில் அவருக்குக் கிடைத்த ஊதியம் என்னவோ மாதத்திற்கு இருபது ரூபாய் தான். ஆனால், அவரது குடும்பத்தவர்கள் யாவரும் பண்டவாளத்தோடு தங்களுக்கிருந்த எல்லா உறவுகளையும் முற்றிலுமாக வெட்டிக் கொண்டு மங்களூருக்கு வந்து சேர்ந்தனர். சிறிதுகாலம் மூத்த மகனுடன் இருக்கலாம் என்று தாயார் புறப்பட்டுப் போனார். இன்னொரு தம்பி கல்வி பயிலும் பொருட்டுச் சென்னைக்குச் சென்றான். இங்கே இருந்தது பஞ்சே மங்கேசராவின் துணைவியார் மற்றும் குழந்தைகள் மட்டுமே. தனக்குக் கிடைக்கும் ஊதியம் மற்றும் சிறுசிறு வருமானங்கள் மூலமாகக் குடும்பத்தை அவர் நடத்திச் சென்றார்.

இன்னும் இரண்டு தம்பிகள் சற்று முன்னரே காலமாகிவிட்டிருந்தனர். ராகவேந்திரன் என்னும் தம்பி பஞ்சே மங்கேசராவிடம் அலாதியான பாசம் கொண்டு ஒட்டி உறவாடியவர். 'உயிரும் உடலும்' என்று கூறுவதைப் போன்று, பஞ்சே மங்கேசராவின் முழு அன்பும் அவருக்குக் கிடைத்தது. மங்கேசராவின் தேவைகள், விருப்பு—வெறுப்புகள், அன்பு முதலிய யாவும் அவருக்குத் தெரிந்திருந்தன. அண்ணனுடன் தம்பி சதுரங்க ஆட்டம் ஆடியுள்ளார். ஆனால், அவரும் இறந்து போய்விட்டார். தாயார் இந்த வீட்டை விட்டு வேறு இடத்திற்குப் போவதற்கு முன்பு நிகழ்ந்த நிகழ்ச்சி இது. அகந்தன் என்று அழைக்கப்பட்ட இந்தத் தம்பியின் மரணம் மங்கேசராவிற்குப் பெருந்துயரத்தையளித்தது. ஒருபுறம் அது தனிப்பட்ட முறையில் அவருடைய மனதைப் பாதித்த

துக்கம். இன்னொரு புறமோ மங்களூரில் குடும்பத்தை நடத்துவதற்குப் போதுமான அளவு வருமானமும் வசதிகளும் பெற்றுச் சுதந்திரமாக வாழ வேண்டும் என்னும் கஷ்டம் அதிகமாக இருந்தது. எப்படியிருப்பினும் அவை முக்கியமான கடமைகள். தன்னைவிடத் திறமைமிக்கவர்களின் ஆற்றலை அப்படியே கிரகித்துக் கொள்ளும் திறன் பெற்றிருந்தார் மங்கேசராவ். அவருக்குப் பொறுமை மிகவும் அதிகம். நிதானமாகச் செயலாற்றக்கூடியவர். தன்காலில்தான் தான் நிற்கவேண்டும் என்னும் கருத்தும் தனது பாதுகாப்பைத் தேடிவந்தவர்களுக்கு முடிந்ததை உதவிடவேண்டும் என்னும் உறுதியான மனமும் அவரை முன்நடத்திச் சென்றன. தம்பியின் மறைவினால் நீண்டகாலம் மீளாத் துயரத்தில் ஆழ்ந்திருந்தார். இந்த வேளையில் அவர் இயற்றிய ஒரு பாமாலையைச் சிலர் திருமதி ஃபெலிஸிய ஹெமன்ஸ் என்பவர் இயற்றிய பாடலின் மொழித்தழுவல் அல்லது மொழி பெயர்ப்பு என்று கருதியிருந்தார்கள். பிற்காலத்தில் அவருடைய மூத்த மகனும் இன்னும் வேறுசிலரும் இது பற்றித் தந்தையிடம் கேட்ட போது பஞ்சே மங்கேசராவ் குறுநகை புரிந்தாராம். இப்படிப்பட்ட எல்லா நிகழ்ச்சிகளிலும் இருந்து தூண்டுதல்கள் பெறுவதைப் போன்று ஏதோவொரு நிகழ்ச்சி அல்லது மூலம் இப்பாடலை எழுதும்படி அவருக்குத் தூண்டுதல் அளித்துள்ளது. மூலங்களைத் தேடிக் கொண்டிருப்பது இனிய வேலையல்ல. ஆனால், அந்தப் பாமாலையின் இறுதிப் பகுதி வரவர அதன் பொருளில் மனம் லயித்துப் போகிறது. அதிலும் இறுதிப் பாடலில் இந்துக் குடும்பம் ஒன்றின் அன்றாட வாழ்க்கையில் பண்பாட்டின் இடம், அதன் பொருள் ஆகிய எல்லாவற்றையும் மிகவும் சிறப்பாகப் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

"சந்துவே கேள்! பாதையில் நான் செல்வேன் முன்னே
வந்திடுவார் நின் அன்புத்தந்தை என் பின்னே
பெற்ற குழந்தைகளுடன் நீயும் பின்னர் வந்திடுவாய்
என்றவன் வாயை அடைத்தாள் முத்தமிட்டு"

இது நீண்ட காலமாக இந்துக் குடும்பத்தில் பின்பற்றப்பட்டு வரும் நடைமுறைகளையும் பண்பாட்டையும் விளக்குகிறது.

சிறிதுகாலத்திற்குப் பிறகு பள்ளிக்கூடத்தின் உயர்ந்தநிலை ஆசிரியராகப் பணியாற்றிய கிருஷ்ணய்ய ஆசிரியர் ஒய்வு

பெற்றமையால் அந்தப் பதவி பஞ்சே மங்கேசராவிற்குக் கிடைத்தது. மாதச்சம்பளம் இன்னும் பத்து ரூபாய் அதிகமாயிற்று. அதன் பின்னர் பஞ்சே மங்கேசராவின் வாழ்க்கை சிக்கற்றதாகவும் பொருளாதார ரீதியில் இன்னும் பிரகாசமானதாகவும் இருக்கவாரம்பித்தது என்று கூறப்படுகிறது.

ஆசிரியத் தொழில்தான் தனக்குத் கிடைக்கக்கூடிய பதவி என்று தற்போது ஓரளவிற்கு உறுதியாகத் தெரிந்துவிட்டது. இதனால் அதற்குத் தேவையான பயிற்சி ஒன்றுக்குச் சென்று பட்டம் பெறவேண்டியது அவசியமாயிற்று. அதற்காக அவர் சென்னைக்குச் சென்று பயிற்சி பெற வேண்டியிருந்து. எனவே அவர் சென்னைக்குப் புறப்பட்டார். குடும்பத்துடன் மாட்டு வண்டியில் புறப்பட்டு கண்ணனூர் போய்ச் சேர்ந்தார். பின்னர் அங்கிருந்து ரயில் வண்டியில் சென்னைக்குப் புறப்பட்டார் தனது உணவு, இருப்பிடத்தேவைகளை, ஒரு குழுவாகக் கூடியிருந்த தெற்குக் கன்னட மாவட்டத்தைச் சேர்ந்த சிலர் நடத்திவந்த ஒருசிறு உணவகத்தில் பூர்த்தி செய்து கொண்டார். மனைவி மக்களை உறவினரொருவரின் வீட்டில் விட்டிருந்தார். உண்மையில் இதில் கஷ்டம் இருக்கத்தான் செய்தது. ஆனால், ஒன்பதே மாதத்திற்குள் அவர் எல்.டி. பயிற்சியை முடித்துக்கொண்டு பட்டத்தைப் பெற்றுக் கொண்டு மங்களூருக்குத் திரும்பியபொழுது அரசாங்கப் பள்ளியில் அந்தவேலையில் அவரை நிரந்தரப்படுத்தினார்கள்.

### பள்ளி ஆய்வாளர்

அதன் பின்னர், அவர் பணியிலிருந்தபோது உதவித் துணைப்பள்ளி ஆய்வாளராக வேலை செய்ய வேண்டிய பொறுப்பு வந்தது. காசர்கோட்டில் அவரைப் பணியில் அமர்த்தினார்கள். அப்பொழுது அந்தப் பகுதி முழுவதும் தெற்குக் கன்னட மாவட்டத்துடன் சேர்ந்திருந்தது. பள்ளி ஆய்வாளராக அவர் பணியாற்றியது தொடர்பாக சிறுகதையொன்றைக் கூறுவார்கள். சிறு குழந்தைகளுக்குப் பாடம் கற்பிக்கும்போது கற்பிக்கும் முறையை எளிமைப்படுத்துவதில் மங்கேசராவிற்கு இருந்த அதிசயமான ஆர்வத்தை அக்கதையிலிருந்து நாம் கண்டுகொள்ளலாம். பேசல் மிஷன் அச்சகத்தாருடன் அவருக்கு வளர்ந்திருந்த பிணைப்பின்

---

தற்போது அது வடக்குக் கேரளத்தில் உள்ளது. முன்பு காசர்கோடு சென்னை மாகாணத்தின் ஆட்சி எல்லைக்குள் இருந்தது. அந்தத் தாலுக்காவின் வடக்குப் பகுதி கருநாடகத்தின் பகுதியாக ஆயிற்று.

பயனாய் பாடங்களைப் படிக்கக் கற்றுக் கொடுத்தல், எழுதக் கற்றுக் கொடுத்தல் மற்றும் எண்களைக் கற்றுக் கொடுத்தல் ஆகியன அவருக்கு மிகவும் கைவந்த கலையாயின. குழந்தைகள் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் இருக்கும் பொழுதே அவற்றைக் கற்பித்து, படிப்பை ஒரு மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சியாக மாற்றிக் காட்டினார். அவரது வழிமுறை, கல்வி கற்பதை ஒரு இனிய நிகழ்ச்சியாக ஆக்கியது. இக்காரணத்தால் ஒவ்வொரு நாளும் பள்ளிக் கூடத்திற்கு வரும்பொழுது குழந்தைகள் மிகுந்த மகிழ்ச்சியுடனும் ஆர்வத்துடனும் வரத் தொடங்கினார்கள். பள்ளிக்குச் செல்லவேண்டும் என்னும் அவர்களின் விருப்பும் அதிகமுற்றது. விளையாட்டு, கல்வி இரண்டும் ஜெர்மானிய மற்றும் மேற்கத்திய முறைகளைப் பின்பற்றிக் கற்பிக்கப்பட்டன. பாடத்தில் உள்ள செய்திகளைப் பாடல்களின் வாயிலாகவும் ஆட்டங்களின் வாயிலாகவும் கற்பிக்கும் விதத்தில் புத்தகங்களை வெளியிடுவது ஒரு புதுமுறையாகும். இதனைக் கிண்டர்கார்டன் முறை என்றழைப்பார்கள். பாடல்களின் அடிகள் மேற்கத்திய இசைநயத்திற்கேற்ப இருக்கும். மூலப்பாடலிலுள்ள சொற்களுக்குப் பதிலாக அவற்றின் கன்னட வடிவம் அல்லது புதிதாக உருவாக்கப்பட்ட கன்னடச் சொற்கள் இருந்தன. இத்தகைய மொழித்தழுவல் முறைகள் பிற கிருத்தவர்களின் மனத்திற்குத் திருப்தி அளிக்காமலும் அவர்களின் குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்ளுவதற்கு உதவிபுரியாமலும் இருந்தபோதிலும் பஞ்சே மங்கேசராவ் எவ்வளவு மனப்பூர்வமாக அதனை அங்கீகரித்தார் என்பது அவர்களுக்குப் புரிந்தது. இதைப் புரிந்துகொண்ட கிருத்தவர்கள் அவரது இந்தப் புதிய முயற்சிக்கும் பார்வைக்கும் உபாயங்களுக்கும் உதவியாக இருந்தனர். பள்ளி ஆய்வாளராக இருந்த ஒருவருக்கு இது மிகுந்த ஊக்கமளித்தது.

காசர்கோடில் மனைவிமக்களுக்கு நிம்மதியான வாழ்க்கை கிட்டியது. அவரது குழந்தைகள் கூறுவதிலிருந்து பள்ளி ஆய்வாளராக இருந்த இந்தத் தந்தை தனது குழந்தைகளுடன் அங்கு வாழ்ந்த வாழ்க்கை மிகவும் மகிழ்ச்சியாகவும் ஆடல் பாடல்கள் நிறைந்ததாகவும் இருந்திருக்கிறது என்பது தெளிவாகிறது. அவரது ஆண் குழந்தைகள் யாவரும் நல்ல கல்வி பெற்று விளங்கினர். விரைவாகவே ஒவ்வொருவருக்கும் நல்ல வேலை கிடைத்தது. மூத்த மகனாகிய முகுந்தராயர் முதலில்

ஜாம்செட்பூரிலும் அதன் பின்னர் பிலாயிலும் இருந்தார்[1]. கோபாலராயர் என்பவர் ஹைதராபாத்தில் குடும்பம் நடத்திவந்தார். வழக்கறிஞராகத் தொழில் புரிந்த அவர் விரைவாக அத்தொழிலில் சிறப்புப்பெற்று முக்கிய வழக்கறிஞர்களுள் ஒருவர் என்னும் புகழ்பெற்றார்[2]. மூன்றாம் மகனாகிய ராமராயர்[3] ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்து மூன்றாம் ஆண்டில் பேருந்து விபத்து ஒன்றில் சிக்கித் துயரமான சூழ்நிலை ஒன்றில் காலமானார். தனது மூத்த மகளாகிய திருமதி அநசூயாதேவி என்பவரை லண்டனில் இலக்கியத்தில் பட்டம் பெற்றுத் திரும்பிய ஒருவருக்குத் திருமணம் செய்து வைத்தார். அவர்கள் பம்பாயில் வாழ்ந்து வருகிறார்கள். எல்லோருக்கும் சிறிய மகளாகிய திருமதி சாந்தா ராமேஷ்வரராவ் என்பவர் ஹைதராபாத்தில் இருந்து வருகிறார். அவர்களின் குடும்ப வாழ்க்கை மிகவும் மகிழ்ச்சிகரமாகவும் உல்லாசம் நிறைந்ததாகவும் உள்ளது. மகிழ்ச்சியலை பொங்கி வழியக்கூடியது. கூட்டுவாழ்க்கை நடத்தி வந்த அவர்கள் நம்மனைவருக்கும் எப்படி வாழவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து வந்தனர். அவரது இல்லற வாழ்க்கையும் மகிழ்ச்சியாக இருந்தது.

மங்கேசராவ் பள்ளி ஆய்வாளராக ஒரு பள்ளியிலிருந்து மற்றொரு பள்ளிக்குக் கால்நடையாகவே செல்ல வேண்டியிருந்தது; அல்லது மாட்டு வண்டிகளிலோ வேறு விதமாகவோ பயணம் செய்ய வேண்டியிருந்தது. அவருடன் பப்பு பை என்னும் பெயர் கொண்ட சமையற்காரனும் ராமநாயக் என்னும் பெயர் கொண்ட உதவியாளும் இருந்தனர். இவர்கள் இறுதிவரையும் மங்கேசராவினுடன் இருந்தார்கள். தமது வேலைகளைப் பார்த்துக்கொண்டதுடன் மங்கேசராவிற்கு அவர்கள் உற்ற துணைவர்களாகவும் இருந்தனர். நடைபெற்ற நிகழ்ச்சிகளை அவர்கள் தொகுத்து வைத்திருந்தனர்.

அந்நாட்களில் மங்கேசராவ் இயற்றிய பற்பல பாடல்களை அவர்கள் நினைவில் வைத்துக் கொண்டிருந்தார்கள். நாட்டுப்புறப்

---

[1] சில ஆண்டுகளுக்கு முன்னர் அங்கிருந்து பணி ஓய்வு பெற்று பூனாவில் தங்கியிருந்தார். தற்போது காலமாகிவிட்டார்.

[2] இவரும் தற்போது காலமாகிவிட்டார்.

[3] ராமராயர் மிகுந்த ஆழ்ந்த கலை உணர்வுள்ளவர். தனது தந்தையின் வாழ்க்கை வரலாற்றை யாவரும் படித்து மகிழும் விதத்தில் மிகவும் சிறப்பாக எழுதியுள்ளார். அது கன்னடம் – ஆங்கிலம் இரண்டு மொழிகளிலும் வெளியாகியுள்ளது. இந்நூலிலிருந்து எனக்குப் பல செய்திகள் கிடைத்தன.

பாடல்களையும் கதைகளையும் பழமொழிகளையும் அனுபவ மொழிகளையும் அவர்கள் தொகுத்திருந்தார்கள்.

சில நாட்களுக்குப் பின்னர் கல்வி பயிற்று முறையில் நல்லறிவு பெற்ற எ. ஜி. பௌர்ன் என்னும் பெயர் கொண்ட ஒருவர் சென்னை மாகாணத்தின் கல்வித் துறைக்கு மாற்றலாகி வந்தார். மொழியை உதவியாகக் கொண்டு கற்பிக்கும் முறை என்று எவற்றையெல்லாம் கூறுகிறார்களோ அவற்றின் உண்மைத் தன்மைகளை அவர் இங்கு புதிதாக விவரித்து நடைமுறைக்குக் கொண்டு வந்தார். இதுவரையில் பள்ளிகள் மற்றும் இதர கல்வி நிலையங்களில் பின்பற்றப்பட்டு வந்த எல்லாப் பயிற்று முறைகளையும் அது தலைகீழாக மாற்றக்கூடியதாகும். மங்கேசராவ் அந்தப் பயிற்று முறையையே பின்பற்றினார். நமது பயிற்றுச் சூழ்நிலைக்கு அதனை ஏற்றுக்கொண்டால் நமது கல்விப் பயிற்றுமுறை எளிதானதாகவும், தெளிவானதாகவும் இருக்கும். கற்பிப்பவருக்கும் கற்றுக் கொள்பவருக்கும் இது மிகவும் எளிதானதாக இருக்கிறது; கஷ்டங்கள் குறைகின்றன. அதாவது, பயிற்றுமுறையின் சுமை குறைந்து பயிற்றுவிக்கும் காலமும் குறைவது அம்முறையின் சிறப்புக் கூறாகும்.

காசரகோடு பிரிவில் அவர் பள்ளி ஆய்வாளராக இருந்தபொழுது ஒரு முழு தாலூக்காவின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள எல்லா பள்ளிகளுக்கும் சென்று வர வேண்டியேற்பட்ட பொழுது தாலூக்காவின் உட்பகுதிகளில் பரவலாக இருந்த மலேரியா காய்ச்சலின் தொல்லை அவருக்கு ஏற்பட்டது. பின்னர் அந்த மலேரியா காய்ச்சலால் தாக்கப்பட்டு சிறிதுகாலம் துயருற்றா-ரெனினும் இரும்பு போன்ற உடல்வாகு, சிறந்த கல்வியளித்திடவேண்டுமென்ற குறிக்கோளிலிருந்த உறுதி இவற்றின் பலனாக அந்த நோயிலிருந்து விடுதலை பெற்றிட அவர் முயன்றார். ஆரம்பப்பள்ளிகளில் பின்பற்றப்படும் பயிற்றுமுறையின் அணுகுமுறைகளையெல்லாம் மாற்றுவது அவருக்கு சாத்தியமாயிற்று. துள்ளித்திரியும் அந்த குழந்தைகளுக்கு அதே விதத்தில் பாடம் கற்பித்து அவர்களது அன்பையும் நம்பிக்கையையும் நற்குணத்தையும் வளர்த்திட அது ஒரு வழிவகுத்தது. பள்ளி ஆசிரியர்கள் பயிற்றுச் சூழலில் நிகழ்ந்த இந்த மாற்றத்தை விரைவாகப் புரிந்துகொண்டார்கள். கல்வி பயிற்றலின் ஒட்டுமொத்த அணுகுமுறையே மாறியது. அவர் பார்த்த வேலை

நிர்வாக வேலையே அல்ல. பொதுவாக நிர்வாக அதிகாரிகள் ஆசிரியர்களைப் பற்றிக் குறிப்புகள் எழுதுவது, தவறுகளைக் கண்டுபிடித்து பல்வேறு விதமான தண்டனைகளைக் கொடுப்பது, குற்றச்சாட்டுகளை விசாரிப்பது போன்றவற்றை மட்டுமே அதுவரையில் செய்து வந்தார்கள். ஆனால் இவருடைய வருகையையோ பள்ளி ஆசிரியர்கள் விரும்பி எதிர்பார்த்திருந்தார்கள். மிகுந்த உற்சாகத்துடன் இவரே பள்ளிகளில் பாடம் நடத்தினார். பாடல் பாடுவது, ஆட்டம் ஆடுவது, கதை கூறுவது, விளையாடுவது முதலியவற்றைச் செய்வதன் மூலம் பள்ளி வாழ்க்கையை மிகுந்த உற்சாகம் நிறைந்ததாக மாற்றக்கூடியது இவரது முறை. குடும்ப மற்றும் நாட்டுப்பிரச்சினைகளை எல்லாம் மறந்து இதற்கு வரவேற்பளித்தனர். பௌர்ன் அவர்களின் உதவியால் கிடைத்த இந்தப் பயிற்று முறை முற்றிலுமாக நடைமுறைக்கு வந்தது.

**கற்பித்தலில் புதுவழி**

கிராமப்பகுதிகளில் இயங்கிவரும் துவக்கப் பள்ளிகளில் கல்வி பயிற்றுவித்தல் முறையை எந்த அளவுக்கு அவர் கண்ணும் கருத்துமாகக் கண்காணித்து வந்தார்? அவ்வளவு ஏன், சாதாரணமாக எல்லாப் பகுதிகளிலுமுள்ள துவக்கப்பள்ளிகளிலும் கிடைத்து வந்த கல்வியின் தரம் பற்றி அவருடைய கருத்து எத்தகையதாக இருந்தது? என்பன பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் ஆசிரியர்கள் அவரை இதற்காக எவ்வளவு நேசித்தார்கள், போற்றினார்கள் என்பனவற்றிலிருந்தும் அவர் அந்த ஆசிரியர்களை எவ்வாறு அணுகினார் என்பதிலிருந்தும் தெரிந்துகொள்ளலாம். அப்போதைய ஆசிரியர்களின் நிலையோ மிகவும் பரிதாபமானது. அவர் எழுதிய 'ஒரு பள்ளித்துணை ஆய்வாளரின் கற்பனை டைரி' என்னும் கட்டுரை பற்றி விளக்கிக் கூறும்போது இவற்றைப் பற்றி விரிவாகப் பார்க்கலாம். அந்நூலைப் படிப்பதன் மூலம் பள்ளி ஆசிரியர்களின் வாழ்க்கை நிலை பற்றிய அறிமுகம் சிறிதளவுக்கு நமக்குக் கிடைக்கிறது. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்து நான்காம் ஆண்டில் ராய்ச்சூரில் நடைபெற்ற கன்னட சாகித்திய சம்மேளனத்தின் ஆண்டுவிழாவில் அவர் ஆற்றிய தலைமையுரையின் இறுதிப் பகுதியில் எந்த அளவுக்கு கிராமங்களில் உள்ள பள்ளிகளையும் அங்குள்ள ஆசிரியர்களின் மனநிலையையும் கன்னட சாகித்திய பரிசத்தின் ஆக்கபூர்வமான முயற்சிகளுக்கு உட்படுத்த முடியும், சாதகமாகப்

பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதைப் பற்றி விளக்கியுள்ளார். அவர் பேச்சின் விவரம் பின்வருமாறுள்ளது:

> "நமது கிராமப் பள்ளிகளையும், கிராமப் பள்ளி ஆசிரியர்களையும் கன்னட சாகித்திய சம்மேளனத்தின் குறிக்கோள்களை, பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இலக்கியப் படைப்பு, மொழி வளர்ச்சி மற்றும் நாட்டுநலனின் எந்தவொரு நற்காரியமும் இந்த ஆசிரியர்களின் கையில் உள்ளது. சம்மேளனத்தின் குறிக்கோள்களை கிராமப் பள்ளி ஆசிரியர்களுக்கு முதற்கண் விளக்கிக் கூறி, அவர்கள் சம்மேளனத்தின் உறுப்பினர்களாவதற்குக் கொடுக்க வேண்டிய சந்தாத் தொகையைக் குறைத்து அவர்கள் யாவரையும் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஆசிரியர்களின் கைவிளக்குகளை இலக்கியத் தீயினால் பற்ற வைத்து விட்டோமென்றால் ஒவ்வொரு கிராமப் பள்ளிகளும் ஒவ்வொரு இலக்கிய மன்றங்களாக உருவெடுக்கும்! அங்குள்ள குழந்தைகள் மன்றம் ஒரு சிறு இலக்கியமன்றமாக வளரும்! கிராமப் பள்ளியில் கொண்டு வரப்படும் கையெழுத்துப் பத்திரிகை கன்னடமொழியில் வெளியாகும் சிறியதொரு பரிஷத் பத்திரிகையாக விளங்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. கன்னடமொழியின் வளர்ச்சிக்கும் மக்கள் வாழ்க்கையின் மறுமலர்ச்சிக்கும் இலக்கியப் படைப்பிற்கும் கிராமங்களில் அளிக்கப்படும் கல்வியே சிறந்த அடிப்படையாக, அடித்தளமாக விளங்கும். இந்த அடித்தளத்தைச் சிறப்பாக வடிவமைக்கக் கூடியவர்கள் கிராமப் பள்ளிகளில் பணியாற்றும் எனது இனிய நண்பர்களாகிய இளம் ஆசிரியர்களே"

அவருடைய காலத்தில் உள்ளாட்சிக் கல்வி நிறுவனங்கள் யாவும் தனியார் நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டன. குழந்தைகளின் கல்விப் பயிற்சி அப்படிப்பட்டவர்களின் நிர்வாகத்தின் கீழிருந்தது. அந்த நிர்வாகங்களில் பல மிகவும் மோசமான நிலைமையில் சீர்குலைந்து போயிருந்தன. போதாததற்கு உள்ளூர் அரசியலும் சாதிப்பாகுபாடும் அங்கு தலைவிரித்தாடின. நிர்வாகத்தின் முக்கியமானவர்களாகிய உள்ளாட்சி மன்றத்தின் தலைவரும் மற்ற உறுப்பினர்களும் இப்பள்ளிக்கு அரசு கொடுத்துவந்த பண உதவிகளைச்

சரிவரப் பயன்படுத்தாது லாபம் ஈட்டிவந்தனர். ஆசிரியர்களுக்குக் கொடுத்து வந்த சிறு ஊதியத்தில் அவர்களும் பங்குபோட்டுக் கொண்டனர். கிராமங்களில் அளிக்கப்படும் இந்தக் கல்வியை உண்மையிலேயே துவக்கக்கல்வி என்று கொள்ளத்தக்க விதத்தில் நாம் அளித்தோமென்றால் சரியான காலத்தில் எவ்வித குறையுமற்ற நலமானதொரு மக்கள் இனம் பிறந்து வளரும். நாம் அனைவரும் நிர்மாணிக்க விரும்பும் நலவாழ்க்கையை அமைத்திடுவதில் இது நமக்கு மிகுந்த உதவியளிப்பதாக அமையும். எல்லா மக்களின் பொதுவாழ்க்கையும் எல்லா விதத்திலும் சிறப்படையும் என்றெல்லாம் மங்கேசராவ் எண்ணினார். தாங்கள் யாவரும் உண்மையிலேயே மனிதப் பிறவிகள் என்று உணரும் விதத்தில் ஆசிரியர்கள் நடத்தப்படவேண்டும். அவர்களுக்கு இருக்கும் கடமைப் பற்று, செயற்பற்று, சிறப்பாக நிர்வகிக்கும் இயல்பு ஆகியன யாவும் அவர்களிடமே தோன்றி நன்கு வளர்ச்சி பெற்றிட வேண்டும். அவர்களது ஊதியம், நிலபுலன்கள், வாழ்க்கைத் தரம் போன்றனவும் மற்றும் அத்தொழிலில் அவர்கள் பெற்றிடும் உதவி, உள்ளாட்சி மன்றங்கள் அத்தகைய ஆசிரியர்களுக்கு அளித்திடும் மதிப்பு இவை யாவற்றையும் கல்வித் துறையினரின் கவனத்திற்குக் கொண்டு வந்து ஆசிரியர்களின் பணி நிலைமைகளையும் வாழ்க்கைத் தரத்தையும் கல்வித்துறையினர் தமது முதற்கடமையாக பரிசிலித்திட வேண்டும் என்பது மங்கேசராவின் விருப்பமாகும்.

இதுதான் மங்கேசராவின் கருத்தோட்டமாகும்; அவரது முயற்சிகளின் முக்கியக்கூறுகளாகும். வேறு பள்ளிக் கல்வி ஆய்வாளர்கள் கல்வி பயிற்று முறையில் வழக்கமானவை என்று அப்போது அவர்கள் கருதிவந்த பலசெயல்களில் மங்கேசராவிற்கு உடன்பாடு உண்டா அல்லது இல்லையா என்பது நமக்கு முக்கியமல்ல. மங்கேசராவ் இதே போன்றதொரு பள்ளிக் கல்வி ஆய்வாளராக மங்களூருக்கு மாற்றம் ஆனபோது பழமையில் ஊறிப் போன, புதுமையை ஆதரிக்காத வேறு சிலர் இவரது கருத்துகளை எதிர்த்தார்கள். புதிய கல்வி முறையை எதிர்த்திட முயற்சி செய்தார்கள். பள்ளிகளை நடத்தி வந்த நகராட்சிகளும், தாலூக்கா மன்றங்களின் அதிகாரிகளும் பற்பல ஊர்களில் உள்ள பலமிக்க உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள் பலரும் இக்கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களும் கூட இந்த விஷயத்தில் எதிர்ப்பு தெரிவித்தனர். ஆனால், அவரது ஒழுக்கக் கட்டுப்பாடுகளோ அல்லது அவரது புகழோ தவறானவை, செயற்கையானவை,

நேர்மைக்குப் புறம்பானவை என்று அதுவரை யாரும் கூறவில்லை. இதைப் பற்றி வேறு யாரும்கூட மாறுபட்ட கருத்துகளைக் கொண்டிருக்கவில்லை. தமது வழியை அவர் விட்டுவிடும்படியோ பிறர் செய்யும் நேர்மைக்குப் புறம்பான செயல்களுக்கு உறுதுணையாயிருக்கும்படியோ அவரை மாற்றிட யாராலும் இயலவில்லை. ஆதலால் அவர்கள் யாவரும் இவருக்கு எதிராக நின்றார்கள். கல்வித்துறையின் நிர்வாகத்தைச் சேர்ந்த உயர்மட்ட அலுவலர்கள் மங்கேசராவின் வழிமுறை சரியானதே; தவறானதல்ல என்று உணர்ந்தனர். இவருடைய எதிரிகளுக்கும் மிகுந்த பலமிருந்தது. இவரை மிகவும் வன்மையாக எதிர்த்தார்கள். அவர்களைத் திடமான மனதுடன் எதிர்த்து நின்றிட வேண்டி வந்தது. ஆதலால் மங்கேசராவை ஆரம்பக்கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கும் நிலையத்தின் தலைமை ஆசிரியராக மாற்றினார்கள். ஒரு விதத்தில் இந்த மாற்றம் மங்கேசராவிற்கு எதிர்பாராத அளவுக்கு மிகுந்த ஓய்வு நேரத்தை அளித்தது என்று கூறவேண்டும். இப்போது அம்மாவட்டத்தில் உள்ள எல்லாத் துவக்கப்பள்ளிகளின் ஆசிரியர்களும் அவரது மாணவர்களாக வந்தார்கள். இது பற்பல துவக்கப் பள்ளி ஆசிரியர்களின் பார்வையையும் அணுகுமுறைகளையும் விரிவாக்கம் செய்திட உதவியது. மேலும், பற்பல சோதனைகளைச் செய்து பார்த்திடவும் அவர்களை மேம்படுத்திடும் வழிமுறைகளைக் கண்டிடவும் உதவியது. அவரின் கீழ் பணியாற்றிய உதவி ஆசிரியர்கள் யாவரும் அவருக்கு நண்பர்களாகி அவரது பயிற்சி முறைகளை ஏற்றுக்கொண்டு அம்முறையில் பயிற்சியளித்து அவருக்கு உதவினர். அப்படிப்பட்ட உதவியாசிரியர்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவர் உல்லாள் மங்கேசராயர் என்பவராவார். இவருக்கு அவரிடம் மிகுந்த மதிப்பும் மரியாதையும் இருந்தன. அவருக்கு உதவிக்கரம் நீட்டி அவரது கடமை என்னும் வேள்வித் தீயை நன்கு வளர்த்து பயிற்சி நிலையத்தின் அணுகுமுறையை மாற்றிட உதவினார். பயிற்சி நிலையங்களில் தலைநிமிர்ந்து நின்றிடும் இதன் சிறப்புகளில் மிக முக்கியமானது என்னவென்றால் அந்நிலையத்தில் அங்குள்ள ஆசிரியர்களிடத்தில் சாதி, இன, வர்க்க அடிப்படையிலான கண்ணோட்டம் சற்றும் இல்லாதிருந்தது.

மிகவும் ஏழ்மை நிலையிலிருந்து வந்த துவக்கப்பள்ளி ஆசிரியர்கள் யாவரும் மனிதப் பிறவிகள், அவர்கள்

வேலைக்காரர்கள் அல்ல என்பதே மங்கேசராவ் துவக்கப்பள்ளி ஆசிரியர்களைப் பற்றி ஆரம்பத்திலிருந்தே கொண்டிருந்த கருத்தாகும். ஆசிரியர்கள் யாரையும் ஒருமையில் அவர் அழைத்ததில்லை; பேசியதில்லை. பணியாளர்களுக்கு ஒரு அலுவலர் ஆணையிடுவதைப் போன்று அவர் ஆணைகளிட்டதில்லை. வீட்டில் தனது குழந்தைகளுக்கும் அவர் இதைத்தான் சொல்லிக் கொடுத்தார். உண்மையில், அவர்களிடம் எவ்வாறு பேசவேண்டும், நடந்து கொள்ளவேண்டும், தமது கடமை அல்லது செயல்குறித்து அவர்களிடம் எவ்வாறு பேசிட வேண்டும் என்றும் சொல்லிக் கொடுத்தார். கல்விக்கூட உலகத்தில் முற்றிலும் தன்னுடைய சொந்தப் பயிற்றுமுறையாகிய ஆடுவது, பாடுவது, கதைகூறுவது இவற்றின்மூலம் பாடம் கற்பிக்கும் முறையை அவர் மிகவும் சிறப்பான முறையில் செயற்படுத்தி வந்தார். காசரகோடு பகுதியிலும், மங்களூர் மாவட்டத்திலும் இம்முறையை அவர் எவ்வாறு பின்பற்றி வந்தார் என்பதற்கு அவருடைய மகன்களின் எழுத்துகளே சாட்சியாக உள்ளன. பயிற்சிநிலையத்துப் பணியை முடித்துக் கொண்டு தந்தையார் எப்பொழுது வீடு திரும்புவார் என்று அவர் குழந்தைகள் ஆர்வத்துடனும் மகிழ்ச்சியுடனும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். தமது குழந்தைகளிடம் மிகுந்த நேரத்தைச் செலவழித்திட அவருக்குச் சமயம் கிடைத்திடவில்லை என்று கூறியுள்ளார். விளையாட்டு மைதானங்களில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெற்று வெற்றி பெறுவதோ அல்லது அங்கு பரிசுகளைப் பெறுவதோ இந்தப் பயிற்சிப் பள்ளி மாணவர்களின் குறிக்கோளாக இருக்கவில்லை. வழக்கமாக ஏற்பாடு செய்யப்பட்டுவரும் இத்தகைய கூட்டங்கள், நிகழ்ச்சிகள் யாவும் மகிழ்வதற்கான, கொண்டாடுவதற்கான வாய்ப்பளித்தன. முற்காலத்தில் புறக்கணிக்கப்பட்டும் அடுத்தவர்களால் மிதிக்கப்பட்டும் துன்புறுத்தப்பட்ட அரிசனங்கள் என்று அழைக்கப்படும் இனத்தவர்களின் குழந்தைகள் உயர்ந்த இனத்தைச் சேர்ந்தவர்களின் குழந்தைகளைப் போன்றே சரிசமமாக இங்கு நடத்தப்பட்டார்கள்; வரவேற்கப்பட்டார்கள். ஒரு விழாவின் போது பயிற்சிக்கு வந்திருந்த ஒரு மாணவனை அழைத்து "புலையனின் பாடல்" என்று அக்காலத்தில் புகழ்பெற்று விளங்கிய பாடல் ஒன்றைப் பாடிட வைத்தார். அப்பாடலில் பயன்படுத்தப்பட்டிருந்த 'உள்ளவர்கள்' என்னும் சொல் பணம், பட்டம், பதவி, அந்தஸ்து ஆகியன உள்ளவர்கள் என்னும் பொருள் குறிப்பதாக இருந்தது. 'இல்லாதவர்கள்' என்னும் சொல் அவற்றைப் பெற்றிருக்காதவர்கள் என்னும் பொருளைக் கொண்டிருந்தது. அன்று பாடப்பட்ட அப்பாடல்

மேல்மட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பணம், பதவி, அதிகாரம் பெற்றுள்ளவர்களுக்கும் அவர் செய்து கொண்ட விண்ணப்பம் ஆகும். அது மட்டுமல்ல அதுவொரு எச்சரிக்கையும்கூட. இவர்களுக்கு நியாயமாக வரவேண்டிய உரிமைகளை வழங்கிடாமல் இவர்களைக் கீழே தள்ளி இடறிவிட்டோமென்றால், அழித்தோமென்றால் அதனால் விளையும் துயரங்களையும் கேடுகளையும் விளக்குவது அந்த எச்சரிக்கையாகும். அரிசனங்கள் என்று அழைக்கப்படும் அவர்கள் பொருளாதார ரீதியிலும் பிறவற்றிலும் பிற மக்களுடன் சமமான இடத்தைப் பெறுவார்களானால் நாட்டை நலமாக முன்னேற்றப் பாதையில் மிகவும் எளிதாகக் கொண்டு சென்றிட முடிவதோடு நாட்டு விடுதலையையும் உறுதியாகவும் நிலையாகவும் பெற்றிட முடியும் என்று அப்பாடலில் விளக்கிக் கூறப்பட்டுள்ளதைக் காணலாம்.

* * *

மங்கேசராவ் அவர்களை எதிர்த்தவர்கள் பலமான பின்னணி கொண்டவர்கள், பிடிவாதக் கொள்கை கொண்டவர்கள், நிதானமில்லாதவர்கள். இவரை அந்த மாவட்டத்திலிருந்து வெளியேற்றும் வரையிலும் திருப்தியடைந்தவர்களாக இருக்கவில்லை. ஆனால், சென்னையில் கல்வித்துறையின் தலைவராக இருந்தவருக்கு மங்கேசராவைப் பற்றி நன்கு தெரிந்திருந்தது. எந்த அளவுக்குப் புத்தம் புதிய சிந்தனைகளைக் கொண்ட ஆழ்ந்த அறிவு படைத்தவர் மங்கேசராவ் என்பதும் பரந்த கண்ணோட்டம் படைத்தவர் என்பதும் அவருக்குத் தெரிந்திருந்தன. சற்று முன்னர்தான் லிடில் ஹேய்ல்ஸ் என்னும் பெயரைக் கொண்ட அலுவலர் ஒருவர் தணிக்கை செய்து போவதற்காக வந்திருந்தார். அவர் மைசூர், குடகு, மங்களூர் ஆகிய மாவட்டங்களின் கல்வி அலுவலர் ஆவார். இவர் மங்கேசராவிற்கு ஏற்கனவே நண்பராவார். தற்போதைய வருகையால் அந்த நட்பு வலுப்பெற்றது. பஞ்சே மங்கேசராவைப் போன்று திடமான மனது பெற்ற தைரியசாலியைத் தெற்குக் கன்னட மாவட்டத்தில் உள்ள யாராலும் எதிர்ப்பதோ அவமதிப்பதோ இயலாத காரியமாக இருந்தது. ஐ.எ.யேட்ஸ் என்னும் அலுவலர்தான் அவரைக் குடகிற்கு மாற்றியவர். அங்கும் பள்ளிக் கல்வி ஆய்வாளராகித் துன்பங்களைத் தாங்கிக் கொண்டு மாட்டு வண்டிகளில் பயணம் செய்தபடி பல பள்ளிகளுக்குச் சென்று சிறிது காலம் தனது கடமையை ஆற்றிட வேண்டியிருந்தது. எப்படியோ அந்தப் பகுதி முழுவதன் அறிமுகமும் ஒருவாறாக மங்கேசராவிற்குக் கிடைத்திருந்தது. விரைவாகவே அவர் மடிகேரியில் உள்ள மையத்துவக்கப் பள்ளியின் தலைமை ஆசிரியராக மாற்றப்பட்டார்.

அங்கு இன்னொரு வகையான தடையும் எதிர்ப்பும் இவருக்கு எதிராகச் செயற்பட்டன. குடகு மக்கள் குறைந்த எண்ணிக்கையிலானவர்கள். ஆனால் அவர்கள் நினைத்ததை நிறைவேற்றிக் கொண்டு வந்தார்கள். மங்கேசராவ் பள்ளிக்கூடப் பணிகளுக்கு குடகு இன மக்களை அதிகமாக அமர்த்திக் கொள்ளவில்லை என்று அவர்கள் தமது எதிப்பைத் தெரிவித்தார்கள். ஆனால் அந்தக் கூற்றை நிருபிப்பதற்கு அவர்களிடம் சரியான ஆவணங்கள் இருக்கவில்லை. பஞ்சே மங்கேசராவை அந்த இடத்திற்கு மாற்றுவதற்கு முன்னர் மைய ஆரம்பப்பள்ளியின் தலைமை ஆசிரியர்களாகப் பணியாற்றிய அனைவரும் ஆங்கிலேயேர்களாகவே இருந்தனர். குடகுப் பகுதியைச் சேர்ந்த மக்களுள் ஆற்றல்மிக்கவரும், ஒரு வேட்டியைக் கட்டிக்கொண்டும் நீளமான மேலங்கியை உடுத்திக்கொண்டும் தலையில் தலைப்பாகை கட்டிக்கொண்டும் பக்கத்து மாவட்டத்திலிருந்து வந்திருக்கும் இவரை அங்குள்ள கல்வி நிலையத்தின் தலைமை ஆசிரியராகப் பார்த்தபொழுது மிகவும் அதிர்ச்சிக்குள்ளானார்கள்; தங்களது மரியாதைக்கு பங்கம் நேர்ந்தது என்று கருதினார்கள். இதனால் சிறிது காலத்திற்கு அவருடைய பணிநிலைமை சற்று கடினமானதாகவே இருந்தது. ஆனால், அங்குள்ள மக்களுள் சிலர் இவருக்கு நண்பராயினர். அங்குள்ள சில சமுதாய மன்றங்களிலும் இன்னும் வேறு சில குழுக்களிலும் இவர் உறுப்பினராகச் சேர்ந்து அவர்களது நம்பிக்கைக்குப் பாத்திரமானார். எப்பொழுது அவரைப் பற்றி நன்கு புரிந்து கொண்டார்களோ அப்போது அவருக்கு அங்கு மரியாதை கிடைத்தது; அன்பும் ஆதரவும் கிடைத்தன. ஆயினும் நெருங்கிய நண்பர்களாகக் கருதிப் பழகும் அளவுக்கு நிறைந்த பண்பினர் யாரும் கிடைத்திலர்.

**மடிகேரியில்**

குடகுப் பகுதியில் உள்ள மடிகேரிக்கு [மெர்க்காரா என்று அழைக்கப்படும் பகுதி] மங்கேசராவ் தமது மனைவியையும் குழந்தைகளையும் அழைத்து வந்தார். ஆட்சி மற்றும் நிர்வாகத்தைப் பொறுத்த அளவில் அவ்வூர் ஒரு முக்கியமான ஊராகும். தற்போது அம்மாவட்டத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று வரவேண்டிய அவசியம் அவருக்கு இல்லை. மங்களூரில் உயர்மட்ட பயிற்சி நிலையத்தின் தலைமையாசிரியராகவும் பணியாற்றிக் கொண்டிருந்த பொழுது அவருக்கு அதற்கு முன்னதாக இருந்த பணத்தட்டுப்பாடோ வேறு எந்தவிதமான தொல்லைகளோ துயரங்களோ இருக்கவில்லை. பொருளாதார ரீதியில் அவர் வாழ்க்கை உயர்ந்த நிலையில் இருந்தது. ஆயினும் அவருடைய மனதின் உள்ளே ஒரு மூலையில் தெற்குக்

கன்னட மாவட்டத்தின் மங்களூர் பற்றிய — தனது சொந்தப் பகுதி பற்றிய — சிந்தனையும் அன்பும் இருக்கத்தான் செய்தன.

காசரகோட்டில் அவர் இருந்த பொழுது சிறு குழந்தைகளின் மனதை மகிழ்விப்பதற்கென்று அவர் "நாகப்பாம்பு" என்னும் மிகச் சிறந்த, புகழ்பெற்ற பாடல் ஒன்றை இயற்றினார். மங்களூரில் இயற்றிய இன்னும் சில பாடல்கள் இந்திய நாட்டின் விடுதலையை, அதற்காகத் தோன்றிய விழிப்புணர்வைப் போற்றி வரவேற்கின்றன. மொத்தத்தில், இந்திய நாட்டிற்குச் சேவை செய்வதற்கு மக்களைத் தூண்டுவதற்காகவும் அவர்களை விழிப்புணர்வு பெற்று நாட்டு விடுதலைக்கு உழைத்திட வேண்டுமென எச்சரிப்பதற்காகவும் அவர் அப்பாடல்களை இயற்றினார். "தூக்க மயக்கத்தைக் களைந்திடாமல் ஏன் இன்னும் உட்கார்ந்திருக்கிறாய் நண்பனே" என்று துவங்கும் பாடல் அப்படிப்பட்ட பாடல்களுள் ஒன்று. கோகலே, திலகர் ஆகியோர் காலமடைந்த போது இயற்றிய இன்னும் சில பாடல்கள் தற்போது கிடைத்தில. பல புனைபெயர்களில் இவர் பற்பல கட்டுரைகளையும் பாடல்களையும் கவிதைகளையும் பத்திரிக்கைகளில் வெளியிட்டுள்ளார். முதலில் "ராமபம்" என்னும் புனைபெயரில் எழுதினார். இப்புனைபெயர் அவரது பெயரை தலைகீழாக உச்சரிக்கக் கிடைப்பதன் சுருக்கிய வடிவம். சிலவற்றை "அரட்டை மல்லன்" என்னும் பெயரில் வெளியிட்டார். "கவி சிஷ்யன்" என்னும் பெயரில் அவர் இயற்றிய "ஹுத்தரி பாடல்" என்னும் தலைப்பிலான பாடல் குடகு மக்கள் அனைவரது பாராட்டையும் பெற்று அவர்கள் அன்றாடம் பாடும் பாடலாயிற்று. குடகு மக்களின் வாழ்க்கை முறை, அவர்களது செழிப்பு போன்றவற்றைச் சிறப்பாக விவரிக்கும் பாடல் அது. அவர் எந்த இடத்தில் இருந்தாலும் என்னவாக இருந்தாலும் நாட்டுப்புறப் பாடல்களையும், பட்டாம்பூச்சிக் கதைகளையும், வரலாற்றையும், மொழியின் சிறப்பு வழக்குகளையும், மக்களின் பண்பாட்டையும் பிற தகவல்களையும் திரட்டி அவற்றைத் தமது ஆசிரியப் பணியைச் செம்மையாகச் செய்யப் பயன்படுத்திக் கொண்டார். கன்னட மொழி அதன் இலக்கிய வளம் போன்றவற்றால் நாம் சிறப்படைகிறோம் என்பது அவருடைய நம்பிக்கை. கன்னடமொழி பேசும் மக்களுக்கு அவர்களின் இச்செல்வங்களைப் பற்றிய அறிவைப் புகட்ட வேண்டும் என்பதே அவரது விருப்பம். எப்போதும் துறுதுறுவென்று இருக்கும் அவரது மனமும், விழித்திருக்கும் அவர் சிந்தனையும் சாதாரண மக்களது வாழ்க்கையின் வெவ்வேறு கோணங்களையும்

நிலைகளையும் நுணுகிப் பார்த்து ஆய்வு செய்து வந்தது. இவரது உதவியாளராகிய பாணசிகே பப்புபை என்பவரும் ஏவலராகிய ராமநாயக் என்பவரும் இத்தகைய பணிகளில் எப்போதும் அவருக்கு உதவியாயிருந்து இவற்றை அவர் செம்மையாகச் செய்திட உதவினர். இறுதி நாட்கள் வரையிலும் இவர்களிருவரையும் மங்கேசராவ் மிகவும் நன்றியுடன் நினைவுகூர்ந்துள்ளார்.

### பத்திரிக்கைகளுக்கு எழுதுதல்

மடிகேரி உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றுவதற்குத் தனக்கு அளிக்கப்பட்ட கால அவகாசம் முடிவதற்கு முன்பாகவே தனது தலைமை ஆசிரியப்பணியை முடித்துக்கொண்டார். கல்வி நிறுவனங்களின் ஆணையர் ஏதோவொரு சூழ்நிலையில் நடந்துகொண்ட முறை மங்கேசராவின் மனதைத் துன்புறுத்தியது. மேலதிகாரிகளின் ஆணையையும் பெற்றுப் பணியிலிருந்து ஒய்வுபெற்று மங்களூருக்குத் திரும்பினார். அங்கு கத்ரி என்னும் பகுதியில் — பிற்காலத்தில் கன்னட இலக்கிய ஆசிரியர்கள் அனைவருக்கும் புண்ணியத்தலம் போன்று விளங்கும் ஒரு வீட்டில் குடும்பத்தோடு தங்கினார். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்து ஏழாம் ஆண்டு வாக்கில் கன்னட சாகித்திய பரிஷத் சம்மேளனம் மங்களூரில் நடைபெற்ற பொழுது நமக்குத் தெரிந்த அளவில் மங்கேசராவும் திரு உல்லாள் அவர்களும் தான் அந்த விழா நடைபெறுவதற்கு முக்கியக் காரணமாக இருந்தார்கள். அங்கு இருந்த உயர் ஆரம்பப்பள்ளியின் வளாகத்திலேயே வெளியில் இருந்து விழாவிற்கு வந்திருந்தவர்களுக்கெல்லாம் தங்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதற்குள்ளாக, பேசல் மிஷனைச் சேர்ந்தவர்கள் மங்கேசராவ் ஆற்றும் கன்னடமொழி இலக்கியப் பணிகளில் துணைநின்றார்கள். கல்விப் பயிற்சிக்குத் தேவையானவற்றை வெளியிடும் பணிகளில் மங்கேசராவின் துணையைப் பெற்றுக் கொண்டார்கள். கன்னட மொழியிலிருந்த பழங்காலத்திய பெரும் இலக்கியங்களை வெளியிடும் பணியிலும், சப்தமணிதர்ப்பணம் என்னும் முதல் கன்னட இலக்கண நூலின் சூத்திரப் பாடல்களை ஆங்கில மொழியில் சிறுகுறிப்புக்களுடன் வெளியிடும் பணியிலும் இவரது உதவியைப் பெற்றுக் கொண்டனர். கன்னடமொழியை அறிந்திராமல் ஆங்கிலமொழி அறிவுமட்டும் பெற்றவர்களும் கூட இதனைப் படிப்பதன் மூலம் சூத்திரப்பாடல்களின் பொருளை மிகவும் எளிதாகப்

புரிந்து கொள்ள முடிந்தது. இந்தப் பணியை இதுவரை யாரும் செய்திருக்கவில்லை; இதற்குப் பின்னரும் யாரும் செய்யவில்லை. அவர்களுடன் ஏற்பட்ட தொடர்பால் ஐரோப்பிய மக்களின் பண்பாட்டுப் பரிச்சயமும் ஏற்பட்டது. இதனோடு ஜெர்மன் மற்றும் ஐரோப்பிய கண்டத்தின் இசைநூல்களின் அறிமுகமும் பயிற்சியும் இவருக்குக் கிடைத்தன. பெருமளவிற்குச் சிறப்பும் புகழும் பெற்றிருந்த மேற்கத்திய நிறுவனங்களின் தலை சிறந்த குழந்தை இலக்கியங்களே அங்கு பயன்பாட்டிற்கு வந்திருந்தன. அத்தகைய குழந்தை இலக்கியங்களைப் பற்றிய புதுப்புதுக் கருத்துகளை இவரிடம் கூறி இவரது அறிவை மேலும் வளர்த்தனர்; ஆழமாக்கினர். . ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இரண்டாம் ஆண்டு வாக்கில் இவ்ருடைய அக்கா கணவராகிய திரு பெனெகல் ராமராயர் என்பவர் "சுவாசினி" என்னும் பெயரில் ஒரு பத்திரிக்கையை நடத்தி வந்தார். அந்த இதழுக்குப் பெருமளவில் பஞ்சே மங்கேசராவ் எழுதி வந்தார். அந்த இதழை நடத்துவதற்குத் தேவையான பணம் நெல்லிக்காய் வெங்கட்டராவ் என்னும் பெயரைக் கொண்ட மங்களூரைச் சேர்ந்த செல்வந்தர் ஒருவரிடமிருந்து கிடைத்தது என்று கூறப்படுகிறது. கொடியாலபை என்னும் ஊரில் இளைஞர் இலக்கிய மன்றம் என்னும் நூல்வெளியீட்டு நிலையம் ஒன்று தொடங்கப்பட்டது. இந்நிலையம் குறிப்பாக குழந்தைகளுக்கான நூல்களையும் பாட்டி கதைகளையும் வெளியிடுவதற்காக ஆரம்பிக்கப்பட்டது. இது பண்பாட்டுத் தகவல் மையமாகவும் கூடச் செயற்பட்டது. தெற்குக் கன்னட மாவட்டத்தைச் சேர்ந்த இளம் எழுத்தாளர்கள் மற்றும் புது எழுத்தாளர்களின் படைப்புகளை இந்நிலையம் வெளியிட்டது. குழந்தைகள் இலக்கியத்தைப் பரப்பும் பணியை இந்த இளைஞர் இலக்கிய மன்றம் மிகவும் சிறப்பாகச் செய்தது.

"பஞ்ச கச்சாயம்" என்னும் பெயரைக் கொண்ட சிறப்பு இதழ் ஒன்று சாகித்திய சம்மேளனத்தால் வெளியிடப்பட்டது. வரலாறு மற்றும் கல்வெட்டுகள் பற்றிய அறிமுகமும், ஆய்வும் எந்த அளவுக்கு இன்பம் பயப்பனவாக அமையும் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் அந்த இதழில் வெளியான மங்கேசராவின் ஒரு கட்டுரையை நாம் படிக்க வேண்டும். மங்கேசராவின் அறிவு எந்த அளவிற்குப் பரவலானது, ஆழமானது என்பது அக்கட்டுரையிலிருந்து நமக்குத் தெரியவருகிறது. கௌதி என்னும் ஊரைப் பற்றியும் பிளகி என்னும் ஊரிலுள்ள சமுதாய அமைப்பு

முறை பற்றியும் அவர் எழுதிய ஒரு கட்டுரையில் பற்பல செய்திகளை விவரித்துள்ளார். அரட்டைமல்லன் என்னும் பெயரில் சிறு சிறு கவிதைகளையும் பிற கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டுள்ளார் என்று முன்னரே கண்டோம். இத்தகைய முயற்சிகள் சற்றேறக் குறைய இந்நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து இவரால் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு சிறுசிறு கதைகள் வெளியிடப்பட்டன. மேலும், நாட்டுப்புறச் செய்திகள் மற்றும் பண்பாடு ஆகியன பொது மக்களின் வாழ்வோடு கொண்டுள்ள தொடர்பை மொழிக் கண்ணோட்டத்திலிருந்து பார்த்து அவற்றை எழுதி வெளியிட்டுள்ளார். அத்தோடு தமது வேறு அனுபவங்களையும் கூட எழுதி வெளியிட்டுள்ளார். இத்தகைய பல்வேறு செய்திகளைப் பற்றி எழுதக்கூடிய அறிஞர் என்னும் புகழ் அவருக்குக் கிடைத்தது. குழந்தைகள் கதை மற்றும் பாட்டி கதைகளில் சில தற்போது கன்னடத்திலிருப்பதைப் போன்றே ஆங்கிலத்திலும் இருக்கின்றன. தலைசிறந்த படைப்புத்திறன் மிளிரும் நூல்கள் அவை என்பதை அவற்றைப் படிக்கும் யாவரும் உணர்ந்து கொள்வார்கள். அத்தகையதொரு திறன் இவருக்கு முன்பு அதிகம் காணப்படவில்லை.

இளைஞர் இலக்கிய மன்றத்துடன் இணைந்து அவர் ஆற்றிய பணிகள் ஒருபக்கம் குழந்தைகளின் தேவைகளை நிறைவேற்றுவனவாக இருந்தன; மறுபக்கம் கல்வி பயிற்று முறையை உயர்த்துவனவாக இருந்தன. கற்பனைத்திறன்மிக்க இளம் வயது எழுத்தாளர்களுக்கு அளிக்கப்பட்ட உற்சாகம் சிறார்களுக்குத் தமது அணுகுமுறை நெடுநோக்குள்ளதாயிருத்தல் வேண்டுமென்று காட்டியதோடு மேற்கத்திய பண்பாடு மற்றும் படைப்புக்கலைகள் பற்றிய நூல்களோடு நெருக்கமானதொரு உறவை ஏற்படுத்திக் கொடுப்பதாயும் அமைந்தது. இந்த வேளையில் வங்காளத்திலும் இந்திய நாட்டின் வேறு பகுதிகளிலும் விடுதலைப் போராட்டம் துவங்கிற்று. இது அவரது நாட்டுப்பற்றைத் தூண்டிவிட்டது. அவரது பணிகளுக்கு ஒருவகையான தீவிரத்தையும், ஈடுபாட்டையும், உற்சாகத்தையும் இப்போராட்டம் அளித்தது. இன்றளவும் கூட நம்மால் நிறைவேற்றப்படாமலிருக்கும் ஆனால் கட்டாயம் நிறைவேற்றப்படவேண்டிய சில சீர்திருத்தத் திட்டங்கள் மற்றும் கருத்துக்கள் அவருக்கு அப்பொழுதே தோன்றி அவற்றை அவர் வெளியிட்டார். திருமணச் சடங்குகள், உபநயனச் சடங்கு, வழிபாடு செய்தல் மற்றும் திருவிழா எடுத்தல் ஆகியவற்றில் பற்பல

எளிமையாக்கங்களை மேற்கொண்டார். அவற்றில் கடைப்பிடிக்கப்படும் செயல்முறைகளைச் சீர்த்திருத்தினார்[1]. சிந்தனையில் உயர்வும் வாழ்க்கை முறையில் எளிமையும் நடவடிக்கைகளில் தூய்மையும் சேரவேண்டும் என்பது அவரது குறிக்கோள். இதுவரை நடந்துவந்த தனிமனித வாழ்க்கைப் பாதையிலும், சமுதாய நடவடிக்கைகளிலும் பிறந்து வளர்ந்து களையிழந்து காணப்படும் தோய்ந்து போய்விட்ட நமது பண்பாடுகளையும் வாழ்க்கை முறைகளையும் உயிர்ப்பிப்பதும் உயர்த்துவதும் அவரது குறிக்கோளாக இருந்தன. மேலைநாட்டு இசை பற்றிய பெரும்நூல்களைக் கற்றுணர்ந்து அவற்றுள் அவருடைய மனதில் நீங்கா இடம் பெற்று நர்த்தனம் புரிந்து வந்த இனிய பாடல்களின் இசை வடிவங்களைத் தமது சொந்தப் பாடல்களில் புகுத்தினார். இது பாடல்களுக்கு இனிமையைத் தந்தது. நமது மொழியில் காணப்படும் யாப்பு மற்றும் இசைநயம் போன்றவற்றில் அவர் கண்ட அழகினை அவர் பேசிய பேச்சிலும், எழுதிய எழுத்துகளிலும் செய்திட்ட செயல்களிலும் எல்லாவற்றிலும் நாம் கண்டு மகிழலாம். கன்னட சாகித்திய சம்மேளனத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர், கன்னட நாட்டின் பிறபகுதிகளிலிருந்து அவரால் தப்பித்துக் கொள்ள முடியாமற்போய்விட்டது. சென்னை மற்றும் மைசூர் பல்கலைக்கழகங்களின் பாடத்திட்டங்களைத் தீர்மானம் செய்யும் குழுவில் இவர் உறுப்பினராகச் சேர்க்கப்பட்டார். மங்களூர், தெற்குக் கன்னட மாவட்டத்தில் எம். எஸ். காமத், மஞ்ஜேஸ்வர கோவிந்த பை, ஹட்டியங்கடி நாராயணராவ், அம்மெப்பள போன்றோர் புதுக்கன்னடத்தின் நடைகளை வடிவமைத்தனர்; மொழி புதுமையாக்கம் பெற்றிடவும் வளர்ச்சி அடைந்திடவும் வழிவகுத்தனர். பி. எம். ஸ்ரீ. என்று அழைக்கப்படும் பி. எம். ஸ்ரீகண்டய்யா அவர்கள் இவருக்கு வெறும் நண்பர் மட்டுமல்ல. அவரைப் பற்றி இவர் மிகுந்த மதிப்பு கொண்டிருந்தார். திரு. மாஸ்தி வெங்கடேச அய்யங்கார் மற்றும் டி. வி. ஜி. என்று அழைக்கப்படும் திரு. டி. வி. குண்டப்பா ஆகியோர் மேல் மங்கேசராவிற்கு இருந்த மதிப்பும் மரியாதையும் வளர்ந்தன. இவர்கள் கன்னடமொழியில் நூல்களை எழுதுவதில் நாட்டின் வேறு பக்கத்தில் மிகவும் தலைசிறந்தவர்களாக

---

[1] ஒரு கடிதத்தில் அவரது மூத்தமகனாகிய முகுந்தராயர் தனது உபநயனச் சடங்கு நடைபெற்ற விதத்தை விளக்கித் தெரிவித்துள்ளார்.

விளங்கினார்கள். பெங்களூரில் உள்ள மையக் [சென்ட்ரல்] கல்லூரியின் கர்நாடக சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்தெட்டாம் ஆண்டில் நிகழ்த்திய ஆண்டுவிழாவிற்கு மங்கேசராவ் தலைவராக இருந்தபோது அவர்கள் யாவருடனும் இவர் இன்னும் நெருக்கமாக ஒட்டி உறவாட முடிந்தது. கர்நாடக சங்கமானது "கவி முத்தண்ணா" என்னும் தலைப்பிலான நூலை வெளியிட்டது. முத்தண்ணன் என்பவர் நந்தளிகையைச் சேர்ந்த லட்சுமிநாரணப்பன் அவர்களே தவிர வேறு யாருமல்லர். இவர் மங்கேசராவின் பழைய நண்பராவார்.

**கன்னட சாகித்திய சம்மேளனமும் தலைமையும்**

அதுவரையில் பஞ்சே மங்கேசராவின் பெயரைப் பற்றி மக்கள் கேள்விப்பட்டிருந்ததோடு சரி. அவரைப் பற்றிச் சிற்சில செய்திகளை மட்டுமே அறிந்திருந்தார்கள். ஆனால், கன்னட சாகித்திய சம்மேளனத்தின் தலைவரான பொழுது மக்களின் எதிரில் நின்ற அறிஞரானார். அவரது ஆளுமை, பண்பாட்டுச் சிறப்பு, நல்மனப்பாங்கு இவற்றின் பாதிப்பு முழுமையாகக் கன்னட நாடெங்கிலும் உண்டாயிற்று. ரெய்ச்சூரில் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்து நான்காமாண்டில் நடைபெற்ற சாகித்திய சம்மேளனத்தின் போது நாட்டின் எல்லாப் பகுதியிலிருந்தும் கூடிய கன்னட மக்கட்திரள் இந்த அறிஞரின் சிந்தனைகளோடும் கருத்துக்களோடும் தங்களை மேலும் இணைத்துக் கொள்ளும் வாய்ப்பைப் பெற்றனர். சம்மேளனத்தின் தலைமைப் பொறுப்பை அவர் ஏற்றிடவேண்டும் என்று பலமுறை அவரை வேண்டிக் கொண்டார்கள். சுமார் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்தொன்பதாம் ஆண்டுக்கு முன்னதாக மங்களூரைவிட்டு வேறிடங்களுக்குச் செல்ல அவர் விரும்பவில்லை. சம்மேளனத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் விருப்பம் சற்றும் அவருக்கு இருக்கவில்லை. மற்றொன்று, அவர் எப்பொழுதும் தனது துணைவியாரின் உடல்நலமின்மையைக் காரணங்காட்டுவார். மனைவி உடல் நலமற்று இருக்கும் துயரமான வேளையில் அவரிடம் யார் எதைச் சொல்லமுடியும்? எவ்வாறு அவரை ஒப்புக் கொள்ளச் செய்ய முடியும்? இறுதியில், சில நண்பர்கள் மங்களூருக்குச் சென்று அவரை சம்மேளனத் தலைமைப் பொறுப்பை ஏற்கும்படிச் செய்தனர். அவர் ஏற்றுக்கொண்ட செய்தியை மஞ்ஜேஸ்வரத்தில் கோவிந்த பை அவர்களிடம் தெரிவித்தனர். இச்செய்தியைக் கேள்விப்பட்ட பை

மற்றும் பரிஷத்தைச் சேர்ந்த எல்லா நண்பர்களும் மிகுந்த மகிழ்ச்சியடைந்தனர். பழைய ஹைதராபாத் சமஸ்தானத்தில் ரெய்ச்சூர் ஒரு முக்கியமான நகரமாகும். அவரது தலைமையுரையைக் கேட்பது மிகவும் இனிமையானதொரு அனுபவம். வாழ்க்கை நடைமுறைகளிலும் இலக்கிய நடைமுறைகளிலும் காணப்பட்ட ஆரம்பகால, இடைக்கால மற்றும் தற்காலச் சிறப்பியல்புகள், சாதனைகள், கன்னட இலக்கிய சாதனைகள் இவற்றைப் பற்றி அவர் தமது உரையில் விவரித்த செய்திகள் யாவரையும் கவர்ந்தன. எதிர் காலத்தைப் பற்றிய அவரது சொந்தக் கருத்து, விருப்பம் எப்படியிருந்தது என்பதை மிகவும் அழகாகவும் திறம்படவும் விவரித்தார். அவரது பேச்சின் இனிமை எந்த அளவுக்கு மனதை மயக்கக்கூடியது என்பது எல்லோருக்கும் தெரிந்திருந்தது. அது மனதை மயக்கக்கூடியதாக மட்டும் அமையாது விரும்பிக்கேட்கக் கூடியதாகவும் இருந்தது. சொற்களை உச்சரிக்கும் விதத்தில் அவரது பேச்சு எவ்வாறு இனிமை பெறுகிறது என்பதையும், கவிதைகளில் அவர் பயன்படுத்தியுள்ள சொற்களில் இசை எவ்வாறு நடம்புரிகிறது, எத்தனைவிதமாக நடம்புரிகிறது என்பதையும் அவர் விளக்கிய முறை அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. கடலைப் பற்றி எட்சுமீசன் என்னும் கவிஞர் எழுதிய பாடலின் இரண்டு மூன்று வரிகளை அவர் பாடிக்காட்டிய விதமே இதற்கு சாட்சி. நாரணப்பரின் பாடல்களிலும் ரத்னாகரவர்ணியின் பாடல்களிலும் காணப்படும் இசைநயம் எத்தகைய இன்பத்தை அளிக்கவல்லன என்பதை வெளிப்படுத்தினார். சொற்பொருள், சொற்களின் உச்சரிப்பு, சொற்பொருளும் இசையும் எவ்வாறு நடம்புரிகின்றன என்பன யாவும் கவிதையை உண்மையிலேயே போற்றும் ரசிகனுக்கு ஒரு மந்திரத்தைப் போன்று இருந்தன. சொற்பொருளே பேச்சில் சிறப்பைப் பெறுகிறது என்பது இதனால் யாவருக்கும் தெளிவாயிற்று. இந்த நவோதய காலத்தில் பழங்கால வரலாற்றையும் ஒருவர் சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளது[1].

அதன் பின்னர் தார்வாரிலும், ஹைதராபாத்திலும் மற்றும் பிற நகரங்களிலும் எழுத்தாளர்களைப் பற்றியும் பிறசெய்திகளைப்

---

[1] ஒலிகளின் மாத்திரை அளவுகள் அப்படியே ஏற்கப்பட்டுவிட்டபோதிலும் எதுகை அமைப்புகள் கைவிடப்பட்டுவிட்டன. ஏனெனில் மாத்திரை அளவுகளின் உதவியால் தான் இனிய பாடல்கள் கன்னடத்தில் புனையப்படுகின்றன. சொல்லிறுதியில் மெய்யொலிகள் வருவது அழிந்து போயிற்று. இரட்டுறமொழிதல், மற்றும் காவிய அலங்காரங்கள் யாவும்கூட தற்போது கைவிடப்பட்டுவிட்டன.

பற்றியும் அவர் பேசியபொழுது அவருடைய பொங்கி வழியும் உற்சாகமும் உணர்ச்சிப் பெருக்கும் எதிரில் இருந்த யாவரையும் மனமயக்கம் கொள்ளச் செய்தன[1]. தனது சொந்தக் குழந்தைகளுக்காகட்டும் அல்லது வேறு யாருக்காவதாகட்டும் வேற்றுமொழியை – எடுத்துக்காட்டாக, கவிதைகளிலும் நாடகங்களிலும் ஆங்கில மொழி பயன்படுத்தப்பட்டிருக்கும் விதத்தை – எவ்வாறு விளக்கிக் கூறுவார் என்று பார்த்தோமானால் அது மிகவும் சிறப்பானதாக இருக்கும். இதனை அவருடைய ராமராயர் என்னும் மகனும் சாந்தா என்னும் மகளும் வருணித்துள்ளார். அவர் தனது வேலைகளை மட்டும் பார்த்துக் கொண்டிருக்காமல் பிறருக்குத் தூண்டுதலும் உற்சாகமும் அளித்து அதன்மூலமாக அவர்கள் சொற்களை உச்சரிக்கும் முறை எவ்வாறு இருக்கவேண்டும் என்று அறிந்து கொள்ளச் செய்தார்.

**இறுதிநாட்கள்**

இதற்குள்ளாக அவரது மூன்று மகன்களும் தத்தமது வேலைகளில் நிலையானதொரு இடத்தைப் பிடித்திருந்தனர். ஒரு மகள் காலமாகி விட்டிருந்தார். மீதியிருந்த இரு மகள்களுள் மூத்தவர் கணவன் வீட்டிலிருந்தார். தனக்குக் கிடைத்த ஓய்வூதியத்தை வைத்துக் கொண்டும் அதுவரை தான் சேர்த்து வைத்திருந்த சிறு பணத்தை வைத்துக்கொண்டும் யாருக்கும் கட்டுப்பட்டிராமலும் சுமையாகயிராமலும் தன்னால் வாழ முடியும் என்னும் எண்ணம் அவருக்குப் பெருமையைத் தந்தது. தனது மகன் மகள்களிடமிருந்துகூட எவ்விதமான பொருளாதார உதவியையும் தான் எதிர்பார்த்திருக்கவில்லை என்று பொருள்படும் விதத்தில் ஒருமுறை பின்வருமாறு கூறினார்.

“எனது தவறுகளும் குற்றங்களும் என்னுடையனவேயாகும். எனது மகன்–மகள்கள் என் வீட்டிற்கு வருதல் வேண்டும். நான் அவர்களுடைய வீடுகளுக்குப் போய் இருக்கவேண்டிய சூழ்நிலை வரக்கூடாது”. மூத்தமகன் வேலைபார்த்து வந்த ஜம்ஷெட்பூரில் நிலவும் தொழிற்சாலை சூழ்நிலையும் இயந்திர உலகமும் அவருடைய மனத்திற்குப் பிடித்தமானவையாக இருக்கவில்லை. சர்க்கரை தயாரிக்கும் ஆலையில் தொழில்நுட்பாளராக இருந்த அவருடைய மூன்றாம் மகன் வாழ்ந்த பாட்னா நகரில் இருந்திடவும்

---

1. ஒரே மாதத்தில் பஞ்சே என்னை கன்னட மொழியின்பால் ஈர்க்க செய்துவிட்டார் என தார்வாரில் சாரஸ்வத வகுப்பைச் சார்ந்த திருமதி கிருஷ்ணபாய் பனஜிகர் கூறியதை நான் இன்று நினைவு கூர்கிறேன். அந்த அம்மையாரின் தாய்மொழி கொங்கணி, மராத்தியுடன் இணைந்தது.

அவர் மனது இடம் கொடுக்கவில்லை. தனக்குப் பழக்கமாகிவிட்ட மக்களிடமிருந்து தூர இருத்தல்; எதுவும் புரியாத விசித்திர, காதுகளைத் துன்புறுத்தும் அயல்மொழி பேசும் சூழலில் வாழ்தல்; இதுபோன்ற நிலைமை அங்கு இருந்ததால் அங்கு வாழும் வாழ்க்கையில் அவருக்கு எத்தகைய உற்சாகமும் கிடைக்காமல் போய்விட்டது. மங்களூரைவிட்டு வேற்றூருக்குப் போய் வாழவேண்டும் என்னும் எண்ணமே அவரது மனதுக்கு வரவில்லை. இறுதியாக, தனது இரண்டாம் மகனுடன் ஹைதராபாத்தில் தங்கியிருப்பதற்கு ஒப்புக்கொண்டார். அந்த ஊர் கர்நாடக மாநில மாவட்டங்களுக்கும் தமது மகன்கள் வசிக்கும் பிற ஊர்களுக்கும் சற்றேறத்தாழ நடுவிலிருக்கும் ஊராகும். அந்தப் பகுதியில் வாழும் மக்கள் எல்லோரின் வாழ்க்கையையும் மேம்படுத்தும் விதத்திலும் அவர்கள் நலம் பெறும் விதத்திலும் அவர் செயல்பட்டார். அவரது இறுதிக்காலம் மிக விரைவாக வந்தது. 25.10. 1937—ஆம் நாள் அவர் தனது இறுதி மூச்சை விட்டார். அவருடைய எல்லா மகன்—மகள்களும் மற்ற சுற்றத்தினரும் அவரது இறுதிமூச்சின்போது அவருக்குப் பக்கத்தில் இருந்தது ஒரு எதிர்பாராத நிகழ்ச்சி என்றே கூறவேண்டும். மக்களுடனும் இந்த உலகத்துடனும் தனக்கிருந்த முழு திருப்தியை அப்போது அவர் தெரிவித்தார். இறுதி நேரத்தில் இரண்டாம் மகனாகிய கோபாலராயர் அவரது சிறிய மகளாகிய சாந்தாவைப் பற்றி ஏதேனும் கவலையிருக்கிறதா என்று கேட்டாராம். இதைக் கேட்டு அவர் புன்னகை பூத்தார். எனக்கு எந்தக் கவலையும் இல்லை. கவலையோ துயரமோ இருப்பவனாக நான் காணப்படுகிறேனா என்று கேட்டாராம். தான் தனது வாழ்க்கையில் அதுவரையில் யார்யாருடன் சேர்ந்து பணியாற்றினாரோ யார்யாரெல்லாம் அவரது நண்பர்களோ அவர்கள் யாவரையும் நினைத்துக் கொண்டாராம். அவர்களுள் சமையற்காரராகிய பப்பு பை, ஏவலராகிய ராமநாயக் ஆகிய இருவரும் அடங்குவர். திரு மாஸ்தி வெங்கடேச அய்யங்கார் இயற்றிய "பாழூர்" என்னும் கவிதையின் சில வரிகளைத் தனது இறுதி நாட்களில் அவர் மீண்டும் மீண்டும் பாடிக்கொண்டிருந்தார் என்று கூறப்படுகிறது.

> "இன்று இவ்வூருக்குப் பகைகளில்லை
> தனது நாள் வந்ததென்றது

கண்களை மூடி
இனிமேல் போதும் எனக்கு என்றது”

அவர் ஏற்கேனவே விருப்பப்பட்டதைப் போன்று “கிருஷ்ணா” என்றும் “கன்னடம்” என்றும் இருசொற்களை இறுதியாகச் சொல்லிக் கண்களை மூடினார்.

அவர் காலமானதால் சாரஸ்வத பிரிவினரும், கொங்கணி மொழிபேசும் மக்களும் கன்னடமொழியின் மீது அன்பு செலுத்தும் ஒரு சிறந்த அறிஞரை இழந்தவர்களானார்கள். அப்படிப்பட்டவர் கன்னட இலக்கியத்திற்கு மிகவும் பரவலானதும் நெடுந்தொலைவு கொண்டதுமான நோக்கைக் கொடுத்தார். உலக வாழ்க்கையில் சுற்றிலும் உள்ளவர்களுடனும் நண்பர்களுடனும் சேர்ந்து தமக்கு எந்தவிதமான பகையுமில்லை என்னும் உணர்வுடன் எல்லோரும் நலமாக வாழும் முறையைக் கற்பித்தார். மன அமைதி உள்ளவராக எவ்விதமான விருப்பு வெறுப்புகளுக்கும் அப்பாற்பட்டு அவருடைய வாழ்க்கை என்னும் படகு தனது இறுதிப் பயணத்தை மேற்கொண்டது. அது 1937—ல் என்று முன்னமே கண்டோம்.

அதிலிருந்து முப்பத்தேழு ஆண்டுகளுக்குப்பின்னர் அவருக்கு நன்றி செலுத்தும் இன்றைய தலைமுறையைச் சேர்ந்த மக்கள் அவருடைய பிறந்த நூற்றாண்டினை பண்டவாளத்தில் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்து நான்காம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 8—10 ஆகிய நாட்களில் கொண்டாடினார்கள். அவர் பிறந்து வளர்ந்த வீடு இருந்த இடத்தில் ஒரு நினைவுச்சிலை எழுப்பப்பட்டுள்ளது. மங்களூரில் மிகவும் சிறப்பான விழாக்கள் எடுக்கப்பட்டன. இளம் வயதைச் சேர்ந்த மற்றும் முதிய பருவத்தைச் சேர்ந்த எழுத்தாளர்கள் பலர் அங்கு விருந்தினர்களாக வரவழைக்கப்பட்டு அவரது வாழ்க்கை, செயற்பாடுகள், இயல்புகள் போன்றனவற்றைப் பற்றிப் பேசினர். அவரது மகன்களில் இருவரும் மூத்தமகனின் மகளும் சேர்ந்து அவரது பாடல்களுள் சிலவற்றைப் பாடினர். குழந்தைகள் பாடும்போதுகூட அவரது பாடல்களின் இசைநயம் எவ்வளவு இனிமையாகவும் மனதை மயக்குபவையாகவும் உள்ளது என்பது யாவருக்கும் புலனாயிற்று. அந்த விழாவிலேயே அவருடைய

படைப்புகள் யாவற்றையும் ஒன்று சேர்த்து நான்கு தொகுதிகளாக வெளியிட்டனர். "தெங்கணகாளி" [தெற்குக்காற்று] என்னும் பெயரில் பண்டவாளத்தில் ஒரு நினைவு மலர் வெளியிடப்பட்டது. கர்நாடகத்தின் பிற பகுதிகளிலும், தன் இறுதிநாட்களில் அவர் வாழ்ந்த ஹைதராபாத்திலும் பற்பல சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பெற்றன.

# 4

## மங்கேசராவின் படைப்புகள்

மங்கேசராவ் விட்டுச்சென்ற அவரது படைப்புகளைப் பற்றிச் சற்றுச் சுருக்கமாக இங்கு காண்போம்.

ஆரம்பநாட்களில் வெவ்வேறு பெயர்களில் காலமுறை இதழ்களில் அவர் எழுதிவந்தார் என்பதை நான் முன்னரே கண்டோம். 'அரட்டை மல்லன்' என்ற பெயரில் மக்களைப் பற்றிய மற்றும் அவர்கள்தம் வாழ்க்கையைப் பற்றிய தம் மதிப்பீடுகளை, குறிப்புகளை எழுதிவந்தார். அக்கட்டுரைகளில் வாழ்க்கையைப் பற்றிய திறனாய்வு இருந்தது; எள்ளல் இருந்தது. பிறரைப் புகழக்கூடிய அல்லது இன்னொருவரது மனதிற்குப் பிடித்தமாதிரி உபசார வார்த்தைகளைக் கூறக்கூடிய செயலில் இறங்கினார். அந்தப் படைப்புகள் இக்காலத்தைச் சேர்ந்த நம்மையெல்லாம் உரத்த குரலில் அழைத்துக் கூறுவதைப் போன்று உள்ளன. ஆனால், அவைகளில் கூறப்பட்டுள்ள செய்திகள் முதன்முதலாகக் கூறப்பட்டுள்ள செய்திகள் என்று எண்ணும் அளவுக்குத் தற்காலத்திற்கும் தேவையானவற்றைப் பற்றியதாக இருக்கும். அப்படிப்பட்ட செய்திகளை எழுதவேண்டிய மொழிநடையையும் அவரது படைப்புகள் புதிதாக உருவாக்கின. அரசியல், சமுதாயம், அல்லது உள்ளூர் தொடர்பாக அவர் எழுதிய கட்டுரைகள் யாவும் புதுமுயற்சிகள். இதுவரையில் யாரும் சென்றிராத திசையில் அவர் சென்றிருக்கிறார். அக்கட்டுரைகளைப் படித்தவர்கள் அவற்றில் புதுச்சுவையைக் கண்டுபிடித்து மகிழ்வார்கள். எழுத்தாளரின் பணி இப்படிப்பட்டதுதான் என்பது யாவருக்கும் புரிந்தது. 'சுவாசினி' என்னும் இதழின் ஆசிரியராக பெனகல் ராமராயர் என்பவர் இருந்தபோதிலும் பெருமளவிற்கு பஞ்சே மங்கேசராவே ஆசிரியராகச் செயற்பட்டிருக்கிறார். 'கவிசிஷ்யன்' என்னும் புனைபெயரில் அந்த இதழில் படைத்திட்ட கவிதைகள் யாவும் மங்கேசராவினுடையதே என்று கன்னடநாடு முழுவதிலுமுள்ள மக்கள் அறிவார்கள். பேசல் மிஷனைச் சேர்ந்தவர்களின்

மதப்பிரசாரப் பணிகளை கன்னடமொழியின் மூலமாகச் செய்வதற்கு மங்கேசராவிடமிருந்து பற்பல உதவிகளையும் ஒத்துழைப்பையும் பெற்றனர். 'மார்ஸ்டென்' என்னும் எழுத்தாளரின் பெயரில் வெளியாகிய பல நூல் தொகுதிகள் யாவும் இவருடைய படைப்புகளே என்று கூறப்படுகிறது. 'கவிசிஷ்ய' என்னும் பெயரில் வந்த மூன்று கவிதை நூல்களும் இவரது உற்சாக வெளிப்பாடுகளே.

**அவரது புலமை**

அறிவுத்திறன், எள்ளல், உலகைப்பற்றிய திறனாய்வு ஆகியவற்றை 'அரட்டைமல்லன்' என்னும் பெயரில் எழுதியுள்ளார். அத்தோடு அவருடைய நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்ட காலத்தில் வெளியாகிய நூலின் நாலாம் பகுதியில் இலக்கியங்கள் பற்றிய அவருடைய திறனாய்வுக் கட்டுரைகளையும், படைப்புகளின் பண்பினை விளக்கும் மிகவும் அரிதான கருத்துக்களைக் கூறும் அவர் கட்டுரைகளையும் காணலாம். கல்வெட்டுக்களை ஆதாரமாகக் கொண்டு அவர் எழுதிய மூடபிதிரே எனும் இடத்தைச் சேர்ந்த புதுக்கோவிலில் உள்ள கல்வெட்டுக்கள் மற்றும் பிளிகி என்னும் இடத்திலுள்ள சில கல்வெட்டுக்கள் என்னும் இரு வரலாற்று நூல்களை நூற்றாண்டு விழாக் குழு வெளியிடுகிறது. அந்த கல்வெட்டுக்கள் யாவும் 15—16—ம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்று மங்கேசராவ் கூறுகிறார். நான்கு கல்வெட்டுக்களில், முதலாவதில் 85 பாடல்கள் இருக்கின்றன. கவிஞர்களின் அல்லது சிற்பிகளின் பெயர் அதில் இல்லை. அக்கல்வெட்டுக்களில் துளு நாட்டோடு தொடர்புடைய பகுதிகளைத் தமது ஆய்வுக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார். மூடபிதிரேவிற்கு வேணுபுரம், சுரபுரம் என்னும் பெயர்கள் இருந்தனவாம். பின்னர் நாட்டின் தலைநகராக இருந்த கேருசொப்ப என்னும் இடத்திற்கு சங்கீதபுரம், பல்லாதகீபுரம் என்னும் பெயர்கள் இருந்தனவாம். ஆரம்பத்தில் ஜைன உடையாரும் மண்டலாதிகாரியும் [சிற்றரசர்கள்] விஜயநகர அரசுக்கு அடிபணிந்தவர்களாக இருந்து பின்னர் நாளடைவில் விடுதலை பெற்றனர். பின்னர் கௌதி என்னும் நகருக்குச் சிறப்பும் முக்கியத்துவமும் வந்தபொழுது அவர்கள் அந்த ஊரையும் தங்கள் திறன் மற்றும் சக்தி ஆகியனவற்றையும் இழந்தார்கள். திருமணத்தின்மூலம் உறவு பூண்ட இரு இனங்களின் பரம்பரை பற்றிய வரலாறு அதில் காணப்படுகிறது. ஐந்தாம் கல்வெட்டானது சாள்வதேவராயனையும் பைரரசனையும் பற்றியதாக உள்ளது. அதில்

'காவ்யசாரம்' என்னும் படைப்பின் ஆசிரியனாகிய வாதிவித்யானந்தனைப் பற்றிய செய்திகளைக் கூறும் கல்வெட்டு ஒன்று பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாயிருக்கக்கூடும் என்று கூறப்படுகிறது. பைர என்னும் அரசனின் பெயர் பைய என்னும் பெயரின் சமஸ்கிருதமொழி வடிவம் என்று கூறப்படுகிறது. அதன் இறுதிப்பகுதி துளு மன்னரின் சக்தி, திறமை ஆகியன எவ்வாறு நாளடைவில் குன்றிப்போயின என்பதை வருணிக்கிறது. சமண மற்றும் பிறகோயில்கள் கட்டியது, ஒரே கல்லில் மிக உயர்ந்த உருவாகிய கோமடேஷ்வரரைச் சிலை வடித்தது ஆகியவற்றை விட்டுவிட்டால், இந்த அரசர் தமது நாட்டின் ஆட்சிப் பொறுப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காக எதுவும் செய்துவிடவில்லை. அதைப் பற்றி அவர் கவனம் செலுத்தவில்லை என்றே கூறலாம். நாட்டு மக்களின் நலன் மற்றும் அவர்களது முன்னேற்றம் ஆகியன பற்றி அவர் ஆட்சிக் காலத்தில் எதுவும் செய்யப்படவில்லை. அப்பகுதிகளில் ஆட்சி நடத்திச் செல்வதற்குத் தேவையான சரியான மற்றும் திறன்மிக்க சட்டதிட்டங்களை ஏற்படுத்துவதற்கு எவ்விதமான முறையும் வகுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. நாட்டு மன்னரும் மக்களும் சுகபோகங்களின்மீது பெருவிருப்புக்கொண்டு இருநதார்கள். அரசனாக விளங்குவது அல்லது ஆட்சிபுரிவது என்றால் ஆட்சியில் இருப்பவர்கள் ராணிகள் பலருடன் கூடிக்குலாவி எந்நேரமும் இன்பத்தில் மூழ்கித் திளைத்திருப்பதுதான் பொருள் என்று கருதும் வண்ணம் இருந்தது என்று கூறப்படுகிறது. அப்படிப்பட்ட அரசர்களைப் புகழ்ந்து பாடுவதிலேயே புலவர்கள் தங்கள் கவனத்தைச் செலுத்தினார்கள்; கவிதை நூல்களையும் படைத்தார்கள். இதற்கு முன்பு விவரிக்கப்பட்ட கல்வெட்டுக்களில் சில கல்வெட்டுக்களாவது அப்படிப்பட்டவர்கள் எழுதியனவாக இருக்கக்கூடும் என்று கருத இடம் உண்டு. ரத்னாகரவர்ணி என்னும் புலவர் இயற்றிய சாங்கத்யம்[1] என்னும் வகையைச் சேர்ந்த 'பாரதேச வைபவ' என்னும் படைப்பானது காதல், கொண்டாட்டம், இன்பத்தில் திளைப்பது ஆகியனவற்றில் விருப்பு மிகுந்திருந்ததற்கு சாட்சியாக விளங்குகிறது. சாள்வன் என்னும் கவியின் 'ரசரத்னாகர' என்னும் படைப்பும் அப்படிப்பட்டதொரு நூலேயாகும். அதைப்போன்றே,

---

[1] சாங்கத்யம் என்பது ஒரு இலக்கிய வகையாகும். ஒவ்வொரு அடியிலும் ஏழு சீர்கள் இருக்கும். நான்கு சீர்கள் ஒரு பிரிவாகவும் மூன்று சீர்கள் மற்றொரு பிரிவாகவும் பகுக்கப்பட்டிருக்கும். இவ்வாறு இருவரிகளைக் கொண்டிருப்பது ஒரு சாங்கத்யத்தின் பண்பாகும்.

கோடேஸ்வரன் என்னும் புலவனின் "ஜீவந்தரஷட்பதி" என்னும் ஆறு அடிகளைக் கொண்ட பாடல்களால் ஆன நூல். ஆதியப்பன் என்னும் புலவன் இயற்றிய "தன்ய குமார சரிதே" என்னும் நூல் ஆகியனவும் அப்படிப்பட்ட நூல்களே. ஆதியப்பன் என்னும் புலவர் ஆயிரத்து அறுநூறு ஐம்பதாம் ஆண்டைச் சேர்ந்தவரல்ல. அதற்குச் சுமார் இருநூறு ஆண்டுகள் முற்பட்டவர். அதாவது ஆயிரத்து நானூற்று ஐம்பதில் வாழ்ந்தவர். ஒருவேளை இந்த புலவரே இரண்டாம் கல்வெட்டின் ஆசிரியராக இருக்கக்கூடும் என்று ஊகிக்கிறார்கள். ஐந்தாம் கல்வெட்டின் ஆசிரியர் பாரதத்தை எழுதிய சாள்வன் என்பவராக இருக்கக்கூடும் என்று கூறுகிறார்கள். இவை எல்லாவற்றிலிருந்தும் பஞ்சே மங்கேசராவின் சிநதனையைக் கவர்வது ஒரு செய்தியாகும்.

"அழகை வருணிப்பதையே குறிக்கோளாகக் கொண்டிருப்பது அந்தக் காலத்து மக்கள் வாழ்க்கையின் அநாசாரத்துக்குச் சாட்சியாக விளங்குகிறது. ஆயினும் இப்படிப்பட்ட நூல்களில் இருந்து இலக்கியத்திற்கு நன்மை உண்டாகாமல் போகவில்லை. இந்தப் புலவர்கள் முந்தியகாலத்துப் பழங்கன்னடத்தை அதன் சிக்கலான பாதையிலிருந்து விலக்கிச் சாதாரண மக்களுக்கும் புரியக்கூடிய இலக்கிய நடையில் கவிதைகள் இயற்றி தாசர்களின் பாடல்களும், கிராமப்புறப் பாடல்களும், இராமாயணம் மகாபாரதம் பாகவதம் முதலிய கதைகளை வருணிக்கும் யக்ஷகானங்களும் தோன்றுவதற்கு மிகவும் உதவியாக இருந்தனர். துளு நாட்டிலும் நகிரே என்று அழைக்கப்படும் நாட்டிலும் அந்த அரசர்களால் போற்றி வளர்க்கப்பட்ட கன்னடத்தின் புகழ் குன்றிப் போய்விடினும் அப்பழங்கன்னடமொழியின் அந்திக்காலத்துச் சிறப்புக்களும் புகழும் கங்காவளி என்னும் நதியிலிருந்து பயஸ்வினி என்னும் நதிவரையிலும் பரவியிருக்கும் துளு நாட்டில் பரவியிருந்தது. இந்த அழகிய அந்திப்பொழுது புகழினைக் கண்டு படகளம் என்னும் பகுதியைச் சேர்ந்த அப்பய்யா, கேரு சொப்பே சாந்தய்யா, மூலிகேய வெங்கண்ண கவி, ஜைன நேமண்ணா, பார்தி சுப்ப மற்றும் நந்தளிகே லட்சுமி நாரண முதலாகிய துளுநாட்டைச் சேர்ந்த யக்ஷகான கவிஞர்கள் தோன்றி கிராமங்களில் உள்ள இதயங்கள் கரைந்துருகும்படி கவிகளியற்றி கன்னடமொழிச் சேவை செய்திட முன்வந்தார்கள் என்று மங்கேசராவ் குறிப்பிடுகிறார்.

பஞ்சே மங்கேசராவ் கல்வியிற் சிறந்த அறிஞராகவும் புலவராகவும் இருந்தார் என்பதையும் வரலாற்றுச் சான்றுகளையம்

குறிப்புகளையும் தெளிவுபடுத்தி விளக்கக்கூடியவர் என்பதையும் கல்வெட்டுக்கள் போன்ற உரைநடைப்பகுதிகளை சிறப்பாக ஆய்வுநோக்கில் அணுகக்கூடியவர் என்பதையும் ஒரு கவிஞனின் மனது பற்பல திசைகளில் செல்லக்கூடியது என்பதையும் இவரது இந்த கட்டுரை தெரிவிக்கிறது. அத்தோடு அக்காலத்து மக்களின் வாழ்வோடு தொடர்பு கொண்ட பண்பாட்டுச் சிறப்புக்களையும் அவர்களது அரசியல் மற்றும் சமுதாய அமைப்பு முறைகளையும் தெளிவுபடுத்தியுள்ளது. இக்கட்டுரைகளின் இறுதியில் அவர் எழுதியுள்ள பரதேசனின் வைபவம் என்னும் சாங்கத்ய வகையைச் சேர்ந்த பாடல்கள் மிகவும் இனிமையாகவும் சிறப்பாகவும் உள்ளன.

இப்பாடல் பஞ்சே மங்கேசராவின் மனச்சிறப்பை வெளிப்படுத்துவதுடன் பரதேசனின் அரசவையில் மிதந்து கொண்டிருந்த இசை அலைகளின் சிறப்பு எத்தகையதென்பதையும் தெரிவிக்கிறது. பாடலின் இசைப்பண்பு மிகவும் அழகாகவும் மனதை ஈர்க்கும் விதத்திலும் உள்ளது. அதில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களின் இனிமையும் பொருட்சிறப்பும் பாடலுக்கு அழகூட்டுகின்றன.

கல்வெட்டுக்களில் விவரிக்கப்பட்டுள்ள பிளிகி என்னும் ஊர் இன்றைய மேற்குக் கன்னட மாவட்டத்தின் சித்தாபுரம் என்னும் ஊரின் அருகில் இருக்கிறது. அதைப்பற்றி விவரிக்கும்போது அழகானதொரு முன்னுரையில் பின்வருமாறு கூறுகிறார். "கர்நாடகப் பேரரசு என்று அழைக்கப்பட்ட விஜயநகர அரசானது கி.பி. ஆயிரத்து ஐந்நூற்று அறுபத்தைந்தாம் ஆண்டில் தாளிகோட்டை என்னும் ஊரில் [தற்போது இவ்வூர் 'ரக்கசதங்கடி' என்ற பெயருடன் புகழ் பெற்று விளங்குகிறது] நிகழ்ந்த போரில் அழிந்துபோனபின்பு, அதுவரையில் அந்த அரசுக்குக் கட்டுப்பட்டிருந்த கன்னட மாவட்டத்துச் சிற்றரசுகள் யாவும் மெல்ல மெல்ல ஒவ்வொன்றாகத் தலைதூக்கி அவ்வப்போது தத்தமக்குள் சண்டையிட்டு மோதல் நடத்தி ஓர் ஒழுங்குமுறையை இழந்து நாயக்க அரசர்களுக்கு அடிபணிந்து இறுதியில் ஹைதர்அலியின் வாயில் விழுந்து கண்ணில் தென்படாமல் மாயமாக மறைந்தன. இப்படிப்பட்ட சிற்றரசுகளின் தலைநகரங்களாக இருந்தவற்றில் பாரகூரு, பசரூரு, கெரவசே, ஸ்வாதே, கேரசப்பே, ஹாடவள்ளி, பிளிகி என்னும்

ஊர்கள் மேற்குக் கன்னட மாவட்டத்தில் தற்போது பாழடைந்து போன நிலையிலிருப்பினும் அவை ஒரு காலத்தில் ஆங்காங்கு அரசாண்ட சிற்றரசுகளின் தலைநகரங்களாகவும் கன்னட மொழியின் புகழுக்கும் சிறப்புக்கும் இருப்பிடங்களாகவும் இருந்தமையால் அவை வரலாற்றுக் கண்ணோட்டத்தில் மிகவும் சிறப்பான நகரங்களாகக் கருதப்படுகின்றன. பிளிகி என்று அழைக்கப்படும் ஊர் இப்படிப்பட்ட புகழ்பெற்ற நகரமாக இருக்கிறது'' என்று அதை நமக்கு அறிமுகம் செய்து வைக்கிறார்.

அனுமன் திருக்கோயிலில் கிடைத்த நான்கு கல்வெட்டுக்களில் பிளிகியைப் பற்றிய இந்த கல்வெட்டின் விவரக் குறிப்புகள் நூல்நிலையத்தில் கிடைத்த ஒரு நூலிலிருந்து எடுக்கப்பட்டதாகும். அது கி. பி. 1463—ம் ஆண்டோடு தொடர்புடைய கல்வெட்டாகும். அதில் திப்பரசய்ய என்பவனின் புகழ் விவரிக்கப்பட்டுள்ளது. பிளிகியிலிருக்கும் சமணக்கோயிலின் இடப்புறமிருக்கும் கற்பாறையின்மேல் இரண்டாம் மூன்றாம் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவற்றில் வெட்டப்பட்டிருக்கும் உரைநடை மிகவும் அழகாக இருக்கிறது. பிளிகி அரசர்களின் பரம்பரை பற்றிய விவரம் இவற்றில் கூறப்பட்டுள்ளது. கல்வெட்டுக்களில் ஒன்று பட்டாகளங்க என்னும் புலவர் இயற்றிய சப்தானுசாசனம் என்னும் புகழ்பெற்ற கன்னட இலக்கண நூலுடன் தொடர்புடையதாக உள்ளது. இந்த நூலாசிரியரை ஆதரித்து உற்சாகப்படுத்தியவர் பிளிகியைச் சேர்ந்த சிற்றரசனாகிய ரங்கப்பன் என்பவரேயன்றி விஜயநகரத்தைச் சேர்ந்த ஸ்ரீரங்கன் அல்ல. இவ்வாறு சில அறிஞர்கள் கருதுகிறார்கள். பட்டாகளங்கனின் காலத்தில் பிராமணர்கள் சமண மதத்திற்கு மாறினார்கள் என்றும் கூறப்படுகிறது.

* * *       * * *       * * *

மூன்று நண்பர்களைக் கொண்ட ஒரு குழுவினர் பாதையில் நடந்து சென்று கொண்டிருக்கும்போது அவர்களுள் இருவருக்கிடையே நிகழ்ந்த கற்பனையான உரையாடலை மங்கேசராவ் ஒரு நூலாக எழுதியுள்ளார். இதை எழுதியவர் கதாசிரியராக இருந்த

மங்கேசராவ் கன்னடமொழியில் கையடக்கப் பதிப்பான ஒரு அகராதியின் தேவையை இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் எழுதப்பட்ட அந்த கட்டுரை வலியுறுத்துகிறது. அவர் எழுதியுள்ள இன்னொரு குறிப்பிடத் தக்க நூல் என்னவெனில் குழந்தைகள் இலக்கியத்தின் தேவை பற்றியதாகும். அந்த இலக்கியத்தில் எத்தகைய செய்திகள் இடம் பெறவேண்டும், அதன் தன்மை, குறிக்கோள், அணுகுமுறை மற்றும் பண்பு ஆகியன எப்படிப்பட்டதாயிருக்க வேண்டும் என்பன பற்றியெல்லாம் கூறியுள்ளார். புதுக்காலத்தின் கன்னட இலக்கியத்தில் எவையெவை இருந்தால் தனக்கு மகிழ்ச்சியாக இருக்கும் என்பது ஹொசதாரி [புதுவழி] என்னும் இன்னொரு நூலின் செய்தியாகும். ரெய்ச்சூரின் கன்னட இலக்கிய சம்மேளனத்தின் போது அவர் ஆற்றிய தலைமையுரை அவருடைய ஆளுமையின் முழுமையையும் வெளிப்படுத்துவதுடன் அவரது கற்பனைத் திறனையும் கேட்பவர்களின் கவனத்தை ஈர்த்து வைத்துக் கொள்ளும் திறனையும் வெளிக்காட்டுவதாக உள்ளது. அவரது உரையைக் கேட்பவர்கள் கன்னடமொழியில் ஆழந்த புலமைபெற்ற அறிஞர்கள் மட்டுமல்லர். அவர்களுள் பலர் அதுவரையில் கன்னட இலக்கியத்தின் வாடையே அறியாத தெலுங்கு இலக்கியம் பயின்றவர்கள். அதுமட்டுமல்லாது, நிஜாம் அரசர்களின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் இருந்த ஆட்சிமொழியாகிய உருதுமொழி பேசுபவர்களும் இருந்தனர். உருதுமொழியின் தாக்கம் எவ்விடத்திலும் இருந்தது. அவர்கள் யாவரின் மீதும் பஞ்சே மங்கேசராவின் உரை தனது தாக்கத்தைச் செலுத்தியது.

ஆரம்ப நாட்களில் மங்கேசராவ் எழுதிய நூல்கள் மனதின் ஆழத்திற்குள் மிக எளிதாகப் பரவிடும் தன்மையைக் கொண்டனவாகும். அவற்றில் சொற்கள் மிகவும் சிறப்பாகவும் திறம்படவும் பயன்படுத்தப்பட்டிருந்தன. இனிய வாழ்விற்குத் தேவையானவை யாவை? சிந்தனைக்கும் நிறுவனங்களின் அமைப்பு முறைகளுக்கும் தேவையான அடிப்படைகள் எவை? தீச்செயல்கள் எவையெவை? என்பனவற்றை மிகவும் துல்லியமாகக் கூறியுள்ளார். உக்திவிலாசம் என்னும் நூலில் காணப்படும் அதே வகையான இசைநயமும் சிறப்பும் யக்ஷகானத்தைப் பற்றி அவர் எழுதிய திறந்த வெளி நடனத்தின் போது பாடப்படும் பாடல்களில்

காணப்படுகின்றன. அதைப்போன்றே, நாரணப்பனின் கன்னட பாரதம், லட்சுமீசனின் ஜைமினி பாரதம், சர்வஞ்ஞனின் பாடல்கள் ஆகியனவற்றின் தாக்கத்தையும் காணலாம். சர்வஞ்ஞனின் பாடல்களை இவர் 'ஓநாமபத்ததி' என்று அழைத்தார். இது வயது வந்தோர் கல்விக்கும் பயன்படக்கூடிய சிறிய ஆனால் மிகச்சிறப்பான பொருள் படைத்த படைப்பாகும். இந்நூலும், ரத்னாகரவர்ணியைப் பற்றிய இவரது மற்றொரு படைப்பும் இவரது உற்சாகத்தை வெளிப்படுத்தக் கூடியனவாகவுள்ளன. பி. எம். ஸ்ரீகண்டையா அவர்களுடன் இணைந்து ஜைமினி பாரதம் என்னும் நூலையும், டி. என். நரசிம்மாச்சாரியுடன் இணைந்து நாரணப்பனின் பாரதத்தையும் பதிப்பிப்பதில் உதவியுள்ளார். ஆனால் அந்நூல்கள் வெளியாகுவதற்கு முன்னரே காலமாகிவிட்டார். இந்தப் பணிகளுக்காக மங்களூரிலிருந்து மைசூருக்கு வந்திருந்து சில நாட்கள் தங்கியிருந்திருக்கிறார்.

மூன்று படைப்புகள் படிப்போருக்கு மிக்க மகிழ்ச்சியளிப்பனவாகவுள்ளன. ஷட்பதிபாரதம் என்னும் ஆறு அடிப்பாடல்களைக் கொண்ட நூலை இயற்றிய குமார வியாசன் என்னும் புலவனைப் பற்றி அவர் எழுதிய கவிதை அவரது ஆற்றலுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. அவர் எழுதிய கவிதைத் தலைப்பு ஷட்பதி பாமினி என்பதாகும். இக்கவிதையானது கற்பனை நயம், கிருஷ்ணனின் மேல் பக்தி இவ்விரண்டிற்காகவும் புகழ்பெற்றதாகும். நூலாசிரியனான குமார வியாசன் தனது பாரதத்தை 'கிருஷ்ணராயனின் சரிதம்' என்று அழைக்கிறான். உலக மக்களுக்கெல்லாம் அரசனாம் கிருட்டிணனின் கதையாகும் இந்நூல். நமது நடுகன்னட மொழியின் காலத்திற்குட்பட்ட இலக்கியத்தில் இந்த நூலைவிடச் சிறப்பானதொரு நூல் வேறெதுவுமில்லை. மங்கேசராவின் மற்றொரு படைப்பு நந்தளிகேயைச் சேர்ந்த லட்சுமிநாரணப்பனைப் பற்றிய கட்டுரையாகும். இக்கட்டுரையானது உரைநடைக்கும் காவிய நடைக்கும் இலக்கணமாக இருக்கும் நூல்களை இயற்றிய லட்சுமி நாரணப்பனின் வாழ்க்கை வரலாறு, அவரது தனிச் சிறப்புகள், பண்புச் சிறப்பு ஆகியனவற்றை விளக்குவதாக உள்ளது. இவர் கவிதையை ஒரு பெயரிலும் உரையிடையிட்ட காவியமான ராமாஸ்வமேதம் என்னும் நூலை ஒரு பெயரிலும் உரையிடையிட்ட

காவியமான ராமஸ்வமேதம் என்னும் நூலை 'முத்தண்ணா' என்னும் வேறொரு பெயரிலும் இயற்றியவர். அப்பொழுதிருந்தே 'குமாரவிஜய' யக்ஷகானம் மங்கேசராவின் கவனத்திற்கு வந்து அவர் அதனை 'கன்னடமொழியின் உதயவானத்தில் ஒரு புது விண்மீன் உதயமானதைப் போன்றுள்ளது' என்று வருணிக்கிறார். அவற்றுடன் அவருடைய பிற யக்ஷகான நூற்களையும் விவரித்துள்ளார். ஷட்பதி பாடல்கள், உரைநடை ஆகியவற்றையும் வெவ்வேறு புனைபெயர்களில் எழுதினார். ராமஸ்வமேதம் என்னும் நூல் நந்தளிகே லட்சுமிநாரணப்பனின் படைப்பே என்று வெளியிடப்பட்டிருப்பினும் அது தவறானதொரு முடிவாகவே இருந்தது. மங்கேசராவ் எழுதிய இந்தக் கட்டுரை மிகவும் சிறப்பானது. இக்கட்டுரை அவருடைய நட்பியல்பைக் காண்பிப்பதோடு நந்தளிகேயின் மீது அவர் கொண்டிருந்த நட்பினையும் காட்டுகிறது. அத்துடன் மிகவும் சிறப்பான இலக்கியப் படைப்புகளை மக்களின் மனதிற்கும் கவனத்திற்கும் கொண்டுவருவதிலும், திரட்டிய செய்திகளை எவ்வாறு சிறப்பாக மக்களுக்குப் புரியும்விதத்தில் எழுதிடவேண்டும் என்பதிலும் ஒரு புது வழிமுறையைக் காட்டிய கட்டுரையாக இது விளங்குகிறது. வாழ்க்கையின் உண்மைத் தன்மையையும் இலக்கியத்தின் உண்மைத்தன்மையையும் திறம்பட விளக்கிக் காட்டுவதாகவும் உள்ளது. "ஓநாமபத்ததி" என்னும் சர்வஞ்ஞனின் படைப்புகளைக் குறித்த மங்கேசராவின் கட்டுரை சொக்கத்தங்கம் போன்று மிளிருவதாக உள்ளது. சர்வஞ்ஞனின் திரிபதி [மூன்றடிப்பாடல்] அல்லது வசனம் என்னும் தலைப்பில் மங்கேசராவ் எழுதிய கட்டுரையானது சிறுவயதினருக்கும் வயதுவந்தோருக்கும் பாடப்பயிற்சி நூலில் பாடமாகச் சேர்க்கப்படக்கூடிய தகுதியுடையதென்பதை நாம் உணரலாம். பழைய நூல்களையும் படைப்புகளையும் வழிமுறைகளையும் புதிய வழியில் அது அணுகுகின்றது. பள்ளிக்கூட ஆசிரியரும் புலவரும் அதனை உணர்ந்தனர்.

* * *   * * *   * * *

அடுத்த நூலில் அவரது கட்டுரைகள் உள்ளன. "என்ன பதார்த்தம்?" என்னும் தலைப்பிலானது இந்த நூல். அந்த நூலில் இருப்பது ஒரே விஷயத்தைப் பற்றியதல்ல. நாம் 'கூட்டு' என்னும் ஒரு உணவுப் பண்டத்தை அறிவோமல்லவா? அதைப் போன்றது இதுவும். காய்கறிகள் பலவற்றைச் சேர்த்து சமைக்கப்பட்டது

போலத் தோற்றமளிப்பது பதார்த்தமாகும். [பதார்த்தம் என்னும் சொல்லுக்கு ஒரு பொருள் உணவு வகை, மற்றொரு பொருள் சொற்பொருள். ஒரு பெயரையும் இச்சொல் குறிக்கும்]. சமையற்கலையில் தேர்ச்சி பெற்றவர்கள் உணவுப் பண்டமாகிய கூட்டை வெவ்வேறு முறைகளில் தயாரிப்பர். தெற்குக் கன்னட மாவட்டத்தில் வெவ்வேறிடங்களில் வெவ்வேறு சமுதாயப் பிரிவைச் சேர்ந்த மிகச் சிறந்த சமையல்காரர்கள் அவற்றை தயாரிக்கும் முறைகள் வேறுபட்டிருப்பினும் அவற்றின் பெயர்களும் வெவ்வேறு விதமாக இருப்பினும் அது மிகவும் ருசிகரமானதாக இருக்கும். இந்த உணவுப் பண்டத்தினை 'மேலோகர' என்றும் அழைப்பதுண்டு. சமையற்கலையில் தேர்ச்சி பெற்றோரால் இது எவ்வாறு தயாரிக்கப்படுகிறது என்பது பற்றிய ஆராய்ச்சி ஒரு புறமும் 'ஓகரை' [சோறு] என்னும் சொல்லின் பொருளைப் பற்றிய ஆராய்ச்சி மற்றொரு புறமும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஓகர என்னும் சொல் மேலோகர என்னும் சொல்லில் இணைந்து கூட்டுச் சொல்லாக வரும்போது அச்சொல் தனது பொருளில் பயன்படுத்தப்படுவதில்லை. ஏனென்றால், ஓகர என்னும் சொல் அரிசியை வேகவைக்கக் கிடைக்கும் சோற்றைக் குறிக்கும். பதார்த்தம் என்பது சோற்றுக்கு ருசியையும், இனிமையையும், மகிழ்ச்சியையும் சேர்க்கக்கூடியதொரு பொருள். நம்மிடமிருந்து விடைபெற்றுச் செல்பவருக்கு வாழ்த்தி வழியனுப்புவதைக் குறிக்கும் சொல் பீள்கொடு [விடைகொடு] என்னும் சொல்லாகும். அச்சொல்லின் பிறப்புப் பற்றியது இக்கட்டுரை. கோமாளித்தனமான ஒரு ஆள் மூக்கொலியைச் சேர்த்து பல சொற்களைச் சொல்லும் பொழுது அக்டோபர் என்னும் ஆங்கில மாதத்தை செப்டம்பர், நவம்பர், டிசம்பர் என்னும் மாதங்களின் பெயர்களுடன் ஒப்புநோக்கி 'அக்டம்பர்' என்று உச்சரித்தானாம்! பிற மாதங்களில் 'எம்பர்' என்று வரும் விகுதி இதில் 'அம்பர்' என்று மாறுகிறது. அவ்வளவுதான். துளு மொழியிலும் கொங்கணி மொழியிலும் சில சொற்களின் ஒலிவடிவத்தில் மூக்கொலி சேர்க்கப்படுகின்றது என்னும் உண்மைக்கு மங்கேசராவ் நமது கவனத்தை அழைக்கிறார்... உதவி ஆசிரியர் ஒருவரின் பெயரை உச்சரித்திடும்பொழுது ஐரோப்பிய நாட்டைச் சேர்ந்த மேலதிகாரி ஒருவர் எவ்வளவு சேட்டைகள் செய்தும் ஆட்டங்கள் ஆடியும் அந்த உதவியாசிரியரின் பெயரை எந்த அளவுக்கு கேலிப் பொருளாக்கினார் என்பது இன்னொரு கட்டுரையிலுள்ளது. இவரது ஐந்தாவது கட்டுரை இன்னும் சற்றுப் பெரியது. சொற்களின் வடிவத்திற்கும், மொழியின்

அமைப்பிற்கும் தொடர்புடைய சொல்லாராய்ச்சியில் புகையிலையைப் பற்றிய கட்டுரை இதில் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். ஒரு சூழ்நிலையில் இக்கட்டுரை விவரிக்கும் உரையாடல் மிகவும் சுவையானது. குமாரவியாசன் இயற்றிய பாரதத்தில் வரும் பாத்திரமாகிய திரௌபதியானவள் தனது சுயம்வர சமயத்தில் மிகவும் சிறப்பான அலங்காரங்களைச் செய்திருந்ததை விவரிப்பதற்கு குமாரவியாசர் பாடியுள்ள பாடல் ஒன்றினை எடுத்துக் கொண்டு அப்பாடலிலுள்ள மூன்று சொற்களுக்குப் பதிலாக வேறு மூன்று சொற்களைச் சேர்த்து நகைச்சுவை உணர்வைக் காட்டுகிறார். அக்பரின் அரசவையில் இருக்கும் ஆண் பெண்களுக்கு புகையிலையின் வாசனையும், புகையின் நெடியும் ஏற்படுத்தும் பாதிப்பை இதில் விவரிக்கிறார். இதன் சுவையைப் படித்துத்தான் உணரவேண்டும்! அக்பரின் அரசவையில் உள்ள சிலருக்குப் புகையிலைப் பழக்கத்தை விட்டுவிட வேண்டும் என்னும் விருப்பம் இருந்ததைப் போன்று எழுதியுள்ளார். அக்பரின் அரசவையில் அமைச்சராக இருந்த பீர்பால் ஒரு தண்டனையை உருவாக்கினார். அதன்படி புகையிலையைக் கண்டவுடன் அந்த இடத்திலேயே அதன் தலையில் நெருப்பிட்டு, புகைத்து, சாம்பலாக்கிவிடவேண்டும்! பீர்பாலின் இந்தத் தீர்மானத்தைக் கேட்டு அக்பர் மகிழ்ச்சி அடைந்ததாகக் கூறுவர். இதனையே பஞ்சே மங்கேசராவ் அவர்கள் 'தும்ரபத்ராவின் தத்வமஸி' என குறிப்பிடுகிறார்.

பிற எடுத்துக்காட்டுக்கள் பழங்கன்னடம், இக்காலக் கன்னடம், துளு, கொங்கணி, அன்றைய மராட்டி ஆகிய மொழிகளைச் சேர்ந்த சொற்களின் அமைப்பில் மூக்கொலிச் சேர்க்கை எவ்வாறு நிகழுகிறது என்பதைப் பற்றியதாகும். கிராமப்புறப் பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியப் பெருமக்கள் கன்னட எழுத்துக்களைக் கற்பிக்கும் பொழுது பொதுவாக எம்முறையைப் பின்பற்றிக் கற்பித்தார்கள் என்பதைப் பற்றிக் கட்டுரை எழுதியுள்ளார். கன்னடமொழியில் ஐம்பத்திரண்டு எழுத்துக்களுடன் சமஸ்கிருதமொழியின் குறில் எழுத்துக்களாகிய எ, ஒ ஆகிய உயிரெழுத்துக்கள் சேருகின்றன. க்ஷ என்னும் ஒலிக்குப் பின்னர் சமஸ்கிருத மொழியின் இலக்கண ஆசிரியராகிய பாணினியின் சூத்திரத்தையும் மீறி 'ள' என்னும் எழுத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. சிறுவர்களுக்கு "ரயிதி" என்று இறுதியில் கற்பிக்கிறார்கள். அதனை "ர" "இதி" என்று பதம் பிரித்திடவேண்டுமென்று பஞ்சே மங்கேசராவ் குறிப்பிடுகிறார்.

அக்காலத்து ஆசிரியர்களுக்கு சமஸ்கிருத மொழி தெரிந்திருந்தது. ஆனால் அவர்களின் தாக்கம் மறைந்த பின்னர் அதனை "அக்ஷர இதி" என்று பதம் பிரித்துச் சிறுவர்களுக்குக் கற்பிக்கவில்லை என்கிறார். மங்கேசராவ் இதற்கு இன்னொரு விளக்கத்தையும் கூறுகிறார். அந்த விளக்கம் மிகவும் நுட்பமானதாகத் திகழ்கிறது. கன்னட மொழி கற்பிக்கும் ஆசிரிய ஐயாக்களின்[1] காலம் மலையேறிவிட்டது. பாடம் கற்பிக்கும் முறையும் மாறிவிட்டது. 'ஸ, ஹ, ள அக்ஷரயிதி' என்பன ஒன்று சேர்ந்து கொஞ்சம் கொஞ்சம் மாறி லஹள க்ஷர பிதி என்பன ஒன்றாகச் சேர்ந்து ஸஹளக்ஷரயிதி என்றாயிற்று. அக்ஷர என்னும் சொல்லில் உள்ள "க்ஷ" என்னும் ஒலி தன் கூட்டாளியை இழந்துவிட்டு அகரவரிசையில் சேர்ந்துவிட்டது [2] இது எவ்வாறுள்ளது என்றால், திருமணம் நடந்து முடிந்த பின்னர் கேட்பாரற்றுக் கிடக்கும் மணமகனின் தோழனைப் போலவும் ஆட்டுக்குட்டிகள் தாய் ஆட்டின் மடியை நாடிச் சென்றுவிட்டதால் கேட்பாரற்றுத் தொங்கிக் கொண்டிருக்கும் கிடா ஆட்டின் தாடையில் உள்ள தாடியைப் போலவும் உள்ளது" என்கிறார்.

எழுத்து என்னும் சொல்லைக் குறிக்க கன்னட மொழியில் பயன்படுத்தப்படும் சொல் பற்றி மங்கேசராவ் மேற்கொண்டு பேசத் தொடங்குகிறார். அக்ஷர என்னும் சொல்லின் பொருள் அழிக்கமுடியாதது என்பதாகும். சமஸ்கிருதமொழியானது எவ்வாறு சுமேருவில் தோன்றி போனிஷியன்களால் வளர்க்கப்பட்டதாகக் கூறப்படுகிறதோ அதைப் போன்றதாகவே இச்சொல்லும் இருக்கக்கூடும். இறுதியாக வரும் கதை ஒரு கற்பனைக் கதையாகும். குறிப்புப் பொருளை உட்கொண்டிருக்கும் ஒரு கட்டுக்கதை. இது வேறொரு பொருள் குறித்து மறைமுகமாக எழுதப்பட்ட கதையாகும். அந்தக் கட்டுரையின் இறுதிவரியானது வேதத்தில் இருந்து பிராகிருத மொழியும் சமஸ்கிருத மொழியும் தோன்றிய நிகழ்ச்சியை விவரிக்கின்றது.

அடுத்து வரும் கட்டுரையானது ஊர்ப்பெயர்கள் சிலவற்றைப் பற்றிய கட்டுரையாகும். அந்தந்த ஊர்களுக்கு அவ்வப்பெயர்கள்

---

[1] ஐகன், ஐயா [தமிழ்], அஜ்ஜா, ஆர்ய [சமஸ்கிருதம்]

[2] 'ரயிதி' என்னும் சொல்லுக்கு 'அக்ஷர இதி' என்பது சரியான விளக்கமாக இல்லாமலும் இருக்கலாம். தமிழ்மொழியைப் போன்றே கன்னட மொழியிலும் ற, ழ என்னும் இரண்டு எழுத்துக்கள் இருந்தன. இவற்றை ர, ட என்னும் ஒலிகளை இரட்டிப்பாக ஒலிப்பதைப்போல அழுத்தி ஒலித்திடவேண்டும்.

எவ்வாறு வரலாயிற்று என்பதைப் பற்றிய விவரங்கள் கூறப்பட்டுள்ளன. துளு மொழியிலிருந்து எவ்வளவு விவரங்களை, ஆதாரங்களைத் திரட்டித் தந்துள்ளார் என்பதைக் கவனிக்கும்போது அவருடைய அறிவின் ஆழம் வெளிப்படுகிறது. சொற்கள் எவ்வாறு பிறந்தன எவ்வாறு பொருள்களைச் சுட்டுகின்றன என்பதைப் பற்றி அதில் ஆராய்ந்துள்ளார். சில சொற்கட்டுகள் எவ்வாறு உருவாக்கப்பட்டுள்ளன என்பதைப் பற்றி அவர் விவரிக்கும்போது புதுப்புதுச் செய்திகள் நமக்குத் தெரியவருகின்றன. இப்படியும் இருக்கக்கூடுமா என்று நம்மனது பிரம்மிக்கும் விதத்தில் இது உள்ளது. அவருக்கு துளுவைப் பற்றி அந்த அளவுக்கு ஆழமான அறிவு இல்லாது இருந்திருக்குமானால் இது தவறு, இது சரியல்ல என்றே சொல்லியிருக்கக்கூடும். ஒரு சொல்லின் பொருளைத் தீர்மானிப்பதில் அச்சொல்லின் உருவம் மட்டுமே போதுமானதாக இருப்பதில்லை. திருவனந்தபுரத்தில் கிடைத்தவை என்று கணபதிசாஸ்திரி அவர்கள் கண்டளித்த நாடகங்கள் பாஷணங்களே என்று வாதிட்டதை டாக்டர் எல்.டி. பார்நெட் அவர்கள் விமர்சனம் செய்தபொழுது அவர் வாதங்களை ஏற்றுக் கொள்வதென்றால் திபெத் என்னும் சொல்லை டாப்ஹெட் (top hat) என்னும் சொல்லிலிருந்தும் இமயமலையின் உச்சியைக் குறிக்கும் எவரெஸ்ட் என்னும் சொல்லை எவர் (ever) என்னும் ஆங்கிலச் சொல்லின் ஏற்றுயர்படியிலுள்ள சொல் (superlative degree) ஆகவும் கூட கூறலாம் அல்லவா? என்று கூறுகிறார். எத்தனையோ செய்திகள், பெயர்கள், இடங்கள், இடங்களின் வரலாறு – இவற்றோடு தொடர்புடைய பழைய, புராணக் கதைகள் யாவும் கூறப்பட்டுள்ளன. மதசம்பந்தமாக அல்லது வழிபாடு தொடர்பான கதைகள் இத்தோடு சேர்ந்து கொண்டு இவர் முயற்சிகளுக்கு உயிர் அளிக்கின்றன. அப்போது, கன்னட மக்களின் அறிவிற்கு இன்னும் புலப்பட்டிருக்காத பல புதிய செய்திகள் விளக்கப்படும்; ஆராயப்படும். அவரது அறிவு எவ்வளவு நுட்பமானது, எவ்வளவு திறன்பெற்றது என்பதும் அவர் மனம் எவ்வளவு உயர்ந்தது என்பதும் நமக்குத் தெளிவாகிறது. அறிவு எவ்வளவு திறமைகளை நமக்கு அளிக்கவல்லது, எங்கெங்கு எவ்வெச்சொற்களுக்குத் தொடர்பு உள்ளதென்பன புலப்படுகின்றன. மொழிகளுக்கு இடையேயுள்ள உறவையும் தொடர்பையும் வெளிப்படுத்தும் விதத்தில் உள்ளது இக்கட்டுரை. துளு மற்றும் கொங்கணி மொழிகளுடன் தொடர்பு கொண்டிருக்கும் சொற்களும் கூட்டுச் சொற்களும் எவ்வாறு கன்னட மொழியில் உள்ளன ? அவற்றுக்கிடையே உள்ள உறவு எத்தகையது? இவற்றைப்

பற்றியதொரு முடிவிற்கு நம்மை இட்டுச் செல்லும் விவரங்கள் மிகவும் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. பின்னர் வரும் கட்டுரை ஒன்றில் சாள்வன், சாளுவன் என்னும் சொற்கள் பற்றி விளக்கும்போது மகாபாரதத்தில் கூறப்பட்டிருக்கும் சால்வன் அனுசால்வன் என்னும் சொற்களுக்கும் மேலே கூறப்பட்டுள்ள இருசொற்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்று குறிப்பிடுகிறார். திராவிட மொழிகளில் 'ஸ' என்னும் ஒலி 'ச' வாக மாறுகிறது என்பதைக் குறிப்பிட்டுள்ளார். ஊர்ப்பெயர்களில் முற்றிலும் கற்பனையான அல்லது கட்டுக்கதையான நிகழ்ச்சிகள் சேர்ந்துள்ளன என்று கூறுகிறார். பிராமணர்கள், குடகு மற்றும் பிற துளு இனத்தவர்கள் யாவரையும் தமது ஆய்வில் சேர்த்துக் கொள்ளுகிறார். அவருடைய முடிவுகளை எல்லாம் நாம் ஏற்றுக்கொள்ளுகிறோமா அல்லது ஒதுக்கித் தள்ளுகிறோமா என்பது வேறு. ஆனால், சொற்பொருள்கள் தொடர்பாக அவர் அளிக்கும் விளக்கங்கள் மிகவும் சிறப்பானவையாக உள்ளன. எடுத்துக்காட்டாக, கூட்டுச் சொற்களில் இரு சொற்கள் சேர்ந்து ஒன்றாக ஆவதை எவ்வாறு விளக்குவது? அவற்றை முன்னொட்டு, பின்னொட்டு என்று விளக்கலாமா? என்பன பற்றி அவர் கூறியுள்ள விவரங்கள் ஆய்வுக்குரியவனவாகும்.

* * * * * * * * *

அடுத்த சில கட்டுரைகள் விலங்குகளின் வாழ்க்கை பற்றியும் புவியியல் பற்றியும் எழுதப்பட்டுள்ளன. வெப்பப் பிரதேசங்களில் உள்ள வனவிலங்குகள் பற்றிய விவரங்களும் உள்ளன. இக்கட்டுரைகளில் விலங்கியல் மற்றும் மானிடவியல் பற்றிய பலசெய்திகள் விளக்கிக் கூறப்பட்டுள்ளன. மொத்தத்தில் இந்த கட்டுரைகள் எல்லாவற்றிலும் மெல்லிய நகைச்சுவை உணர்வும் துல்லியமான அறிவும் காணப்படும். இதைப்போன்ற கட்டுரைகளைக் காண்பது எவ்வளவு அரிது என்பதும் இவற்றில் எவ்வளவு சிறப்பு நிறைந்துள்ளது என்பதும் புலனாகும். இவற்றில் எல்லாம் மங்கேசராவின் ஆளுமையும் அவருடைய அறிவுத்திறனும் காணப்படும். அவர் ஆழமான படைப்புத்திறனறிவும், ஆய்வு மனப்பாங்கும் கொண்டிருந்த அதே சமயத்தில் நகைச்சுவையுணர்வும் வேடிக்கையும் விளையாட்டும் நிரம்பப்பெற்றவராக இருந்ததையும் காணமுடிகிறது.

மைசூரில் உள்ள வரலாற்று ஆய்வு நிறுவனம் வெளியிட்ட "கௌரி நிருப விஜயம்" என்னும் நூலை இவர் திறனாய்வு செய்கையிலும் மேலே கூறப்பட்ட இவரது திறன்கள் மிகவும் சிறப்பாக வெளிப்படுகின்றன. இந்நூல் கவிதை நூலாக விளங்குவதைவிட

வரலாற்று நூலாகச் சிறப்புடன் விளங்குகிறது என்று கூறும் இவர் கவிதைத் திறனும் இந்நூலில் காணப்படுவதைச் சுட்டியுள்ளார். பிதன் என்னும் இடத்தைச் சேர்ந்த வெங்கடப்ப நாயகனின் போர்ப் பயணங்களும் வெற்றிகளும் கூட இதில் விவரிக்கப்பட்டுள்ளன.

இந்த கவிதை பற்றிய நூலானது லிங்கண்ணமந்திரி என்பவர் எழுதிய "கௌதியரசரின் வரலாறு" பற்றிய ஆய்வில் ஈடுபட்டு அவ்வம்சம் எவ்வாறு தோன்றியது, ஹைதர்அலியின் காலம் வரையில் எவ்வாறு வளர்ந்து புகழ் பெற்றது என்பதை விவரிக்கிறது. மிக நீண்டதொரு கவிதை நூலைத் திறனாய்வு செய்வதில் எவ்வளவு சிறப்பாகச் செயல்பட்டுள்ளார் மங்கேசராவ் என்பதைக் காண்கையில் பெருமிதம் மிகுகிறது.

இவரும் பி. எம். ஸ்ரீகண்டையா அவர்களும் மைசூரில் உள்ள கீழை நாட்டு நூல்களின் நூலகத்திலும் சென்னையிலும் உள்ள பதிப்பிக்கப்படாத நூல்களின் எல்லாக் கையெழுத்துப் பிரதிகளையும் ஆய்வு செய்து பரிசிலித்த பின்னர் எந்தெந்த நூல்களை வெளியிடுவதற்கு முதலில் எடுத்துக் கொள்வது என்பது பற்றி ஆலோசித்தனர் என்று கூறப்படுவதுண்டு. இச்செய்தியில் எந்த அளவுக்கு உண்மையுள்ளது என்பது ஆராயப்பட வேண்டியதென்றாலும் அந்நூல்கள் பற்றிய அவர்களது ஆய்வும் திறனாய்வும் மதிப்பீடும் எவ்வாறுள்ளன என்பதை அறிந்து கொள்ள வேண்டுமென்றால் அவற்றைத் தேடிக் கண்டுபிடித்து வெளியிடவேண்டும். இது அவர்களின் அறிவுத் திறத்தைப் புரிந்து கொள்ள வெகுவாக உதவும்.

அடுத்த ஒரு தொகுதியில் பதினான்கு உரைநடைக் கதைகள் உள்ளன. இக்கதைகள் மிகவும் இலக்கியத்தரம் வாய்ந்தனவாகும். இத்தொகுதியில் உள்ள கதைகளுள் முதலாவது கதையும் பதினான்காவது கதையும் மிகவும் சிறப்பானவையாகவும் பொருள் பொதிந்தனவாகவும் உள்ளன. ஒன்றில், பாரதக்கதையை உரைநடையாகக் கூறுவதைப் போன்றுள்ளது. அதில், பாரதக் கதையைக் கூறுவதில் அறிவுக்குப் புறம்பான சூழ்நிலை நிலவிய விதத்தை விவரிக்கிறார். பாரதத்தில் கிருஷ்ணனைக் குறிப்பிடுவதற்கு இருக்கும் பெயர்களாகிய ஹரி, ஜனார்த்தனன், கோவிந்தன், கிருஷ்ணன் என்னும் வெவ்வேறு பெயர்கள்

பாரதத்தைப் பாராயணம் செய்வதற்கு நிதியுதவி செய்தவர்களின் பெயர்களைக் குறிப்பிடுவதைப் போன்று உண்மைக்கு மாறாகப் பயன்படுத்தப்பட்ட சூழலை விவரிக்கிறது. நிதியுதவி செய்தவர்களில் சிலர் மிகுந்த நிதியுதவி செய்தவர்கள்; இன்னும் சிலர் குறைந்த நிதி கொடுத்தவர்கள். இதனால் சிறப்பிக்கப்பட வேண்டியதில் தாம் முக்கியமானவர்கள் பிறர் முக்கியமில்லாதவர்கள் என்று கூறுபவர்கள்... கமலாபுரம் என்னும் ஊரில் ஒரு சிறிய உணவகம். அதன் உரிமையாளர் பூர்ண சுவாமி அய்யங்கார் என்பவர். சிலர் அங்கு வந்து உணவு உண்டபின்னர் என்ன செய்தும் பணம் கொடுக்காமலிருந்ததோடு தொல்லையும் துயரமும் அளித்தனர். அவர்களிடம் சிக்காமல் தப்பிப்பதற்காக அய்யங்கார் செய்த முயற்சிகள் அவரையே தாக்குகின்றன... அடுத்த கதை "மருத்துவனின் சமையல்" என்பதாகும். உள்ளூர் அமல்தாரரும், வருவாய் அதிகாரியும், நிர்வாக அதிகாரியுமாகிய வல்ல பாச்சாரியாருக்குத் தான் செல்லும் ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு சமையல்காரர் தேவைப்பட்டது. அந்த ஒவ்வொரு சமையற்காரரும் அழகிய இளம் பெண்ணாக இருக்கவேண்டும் என்று அவர் விரும்புகிறார். ஒரு கிராமத்தில் எந்த ஒரு சமையற்காரப் பெண்ணும் கிடைக்கவில்லை. அவ்வூர்த்தலைவர் ஒரு மருத்துவரைத் தேடிப்பிடித்து அமல்தாரருக்குச் சமைத்துப் போடுமாறு வற்புறுத்துகிறார். அவன் தன் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளுவதற்காக அமல்தாரருக்குச் செய்த சமையலில் ஏதோ ஒரு மருந்தைச் சேர்த்து விடுகிறான். அதனால் ஏற்பட்ட துயரத்திலிருந்து அமல்தாரரைக் கவனித்துக் கொள்ள வேண்டியது மருத்துவனின் தலையில் விழுந்தது... இன்னொரு கதையானது 'ஹம் நஹிம் கத்தா' என்பதாகும். ஒரு ஆங்கிலேய அதிகாரி இருந்தான். அவனைவிட உயர்பதவியில் இருந்தவர்கள் மலையின் மேல்மட்டத்தில் வாழ்ந்தனர். அவர்கள் பயன்படுத்திய ஆடைகள் வெளுக்கப்பட்ட பின்னர் கழுதைகளின் மேல் ஏற்றப்பட்டு அவர்களின் வீடுகளுக்குப் போய் வினியோகம் செய்யப்பட்டதைக் கவனித்தான். அதைப் போன்றே தன்னுடைய ஆடைகளும் கழுதையின் மேல் ஏற்றப்பட்டுக் கொண்டுவர வேண்டும் என்பதைத் துணி வெளுப்பவர்களிடம் இந்தி மொழியில் சொல்லத் தெரியாது தடுமாறி கடைசியில் தன்னையே கழுதையாக மாற்றிக் கொண்டான். ஆங்கிலத்தில் 'குதிரையாட்டம்' (horse play) என்ற ஒன்று உண்டு. இது குதிரையாட்டம் என்பதைவிட கழுதையாட்டம் என்பதே சரி.

ஆறு முதல் ஒன்பது வரையுள்ள கதைகள் குடும்ப நிகழ்ச்சிகள் பற்றியனவாகும். கதையில் சித்தப்பா சின்னம்மா ஆகியோர் வருகிறார்கள். ஒரு கதை, சித்தப்பா எழுதிய உயிலைப் பற்றியதாகும். ஒன்பதாம் கதையில் மனைவியைப் பற்றிய குறிப்பைக்கூடக் கூறியுள்ளார். தான் மிகவும் விழிப்புடன் இருப்பதாகவும் தன் உறக்கம் மிகவும் மேம்போக்கானது என்றும் மனைவி ஜம்பம் பேசிக் கொள்வதுண்டாம். கணவன் அவளைச் சீண்டுவதற்காக ஒரு தந்திரம் செய்கிறான். தானே திருடனைப் போன்று வேடமிட்டு வந்து இறுதியில் காவலரின் கையில் சிக்கிக் கொள்ளுகிறான். மறுநாள் காலையில் மனைவியானவள் காவல்நிலையம் சென்று கணவனைச் சிறைமீட்க வேண்டி ஏற்பட்டது.

* * * * * * * * *

பத்து முதல் பதின்மூன்று வரையுள்ள கதைகள் வீர நிகழ்ச்சிகளை விவரிக்கும் கதைகளாகும். இக்கதைகள் வாசுதேவய்யா அவர்கள் எழுதிய 'ஆர்ய கீர்த்தி' என்னும் நூலில் வருவதைப் போன்ற நான்கு வீரப்பெண்மணிகளைப் பற்றியது [ஆர்ய கீர்த்தி என்னும் நூல்கூட ரஜனிகாந்தகுப்தா என்பவர் வங்கமொழியில் எழுதிய நூலின் கன்னட மொழிபெயர்ப்பேயாகும். இக்கதைகள் யாவற்றுக்கும் மூலமாக இருப்பது கர்னல் டாட் என்பவர் எழுதிய ராஜஸ்தான வரலாற்றுக் கதைகள் ஆகும்] ... விஜயநகர அரசுடன் தொடர்புகொண்டவள் ப்ரதுள என்னும் பெண்மணி. கெட்ட எண்ணம் கொண்ட அமைச்சன் ஒருவனால் தன் வீரக்காதலன் துயருக்கு ஆளானதால் அவள் அவனைக் கொன்று தன்னையும் மாய்த்துக் கொள்ளுகிறாள். அவளைப் பார்க்க அரசன் வருகிறான். அவள் தன் கடைசி வினாடியில், தன்னைக் காண வந்து உட்கார்ந்த அரசனிடம், மிக்க துயருடன் சற்றே மேலே நிமிர்ந்து உட்கார்ந்து அவனைத் திட்டி, சாபமும் கொடுக்கிறாள்: "உன் மகள் விரைவில் எதிரிகளிடம் சிக்கி முஸ்லீம் அரசர்களின் அந்தப்புரத்தில் அடைக்கப்பட்டு களங்கமுறுவாளாக. பெண்களின் கற்புக்குப் பாதுகாப்பு அளிக்காத உனது அரசு பாமினி சுல்தான்களின் வசப்பட்டு புகழ்குன்றிப் போகட்டும். நீ ஒரு புழுவைப் போன்றவன்".

'ஷைலினி' என்னும் கதையானது ஔரங்கசீபின் காலத்தைப் பற்றியதாகும். அவள் ராஜசிம்ஹனின் மகளாவாள். பேரரசனின்

மகனுக்கு அவளைத் திருமணம் செய்து கொடுப்பேன் என்று தந்தை கூறுகிறான். ஆனால் அவனைக் கண்டாலே இவளுக்கோ கடுஞ்சினம்! அவள் உண்மையில் சிவாஜியைக் காதலிப்பவள். வேடமிட்டு நாடகமாடிய வேறொருவன் மீது சிவாஜி என்று நம்பி காதலை வளர்க்கிறாள். இருவரும் ஒரேமாதிரியான தோற்றம் கொண்டவர்கள். மறுநாள் காலை தந்தையும் மகளும் கிணறு ஒன்றில் விழுந்து தங்கள் உயிரைப் போக்கிக் கொள்ளுகிறார்கள். இதையறிந்த ஔரங்கசீப் மிகவும் துயரமடைகிறான்; விரக்கியுறுகிறான்.

துர்காவதி என்பவளும் ஒரு அரசகுமாரியே. இக்காலத்திய மத்திய பிரதேசத்தைச் சார்ந்த மாஹப்பா என்னும் பகுதியின் சந்தேல் என்னும் அரசனின் மகளாவாள் இவள். இக்கதையானது மக்களின் பேரன்பிற்குப் பாத்திரமாக விளங்கிய அரசி ஒருத்தியின் மக்களன்பையும் மாண்பையும் போற்றும் விதத்தில் அமைந்துள்ளது. தனது நாட்டைக் காப்பாற்ற வேண்டித் தன் உயிரைப் பணயம் வைக்கிறாள்.

வீரமதி என்பவளின் கதையானது தேவகிரியுடன் தொடர்புகொண்டதாகும். ஒரு அரசகுமாரியும் அவளின் காதலனும் அதில் பாத்திரங்களாக உள்ளனர். தன் காதலன் தன் அரசனையும் அவனது கோட்டையையும் எதிரிகளுக்குக் காட்டிக் கொடுத்துவிட்டான் என்பதை அறிந்து அவள் அவனைக் கொன்று தன்னுடைய உயிரையும் போக்கிக் கொள்ளுகிறாள். அந்த இளங்காதலனின் பெயர் கிருஷ்ணா என்பதாகும். இவள் மேல் கொண்டிருந்த காதலினால்தான் தான் அவ்வாறு செயல்பட்டதாகக் கூறிக்கொள்ளுகிறான். இந்தக் கதையானது அலாவுதீன் கில்ஜியின் காலத்தில் இந்தக் கோட்டையைக் கைப்பற்றுவதற்காக அவனுடைய தூதுவனாகி வந்த மாலிக் காபருடன் தொடர்பு கொண்டதாகும்.

வீரதீரம் நிறைந்த இக்கதைகள் ஒரு புறத்தில் காதலைப் பற்றியும் மற்றொரு புறத்தில் தோல்வியறியாது நாட்டுக்காக உயிரையும் கொடுக்க முன்வரும் தியாகத்தைப் பற்றியும் விளக்குகின்றன. இவை அந்தந்த நாட்டின் மற்றும் மக்களின் மானத்தைக் காப்பாற்றும் நிகழ்ச்சிகளை விவரிக்கின்றன. இந்த ஒவ்வொரு நிகழ்ச்சியின்போதும் காட்டப்பட்ட கடமைப்பற்று எப்போதும் நினைவில் வைத்துப் போற்றத்தக்கதாகும்.

இக்கதைகள் யாவும் வீரத்திற்கும் தீரத்திற்கும் சிறப்பளிப்பவையாகும். அவற்றில் அழகும் சொல்வன்மையும் நிறைந்திருக்கின்றன. கடந்த நூற்றாண்டின் இறுதியிலும், இந்நூற்றாண்டின் துவக்கத்திலும் இவை கன்னட மக்களின் மனதை ஆட்சி செய்தன. இவற்றில் தேசப்பெருமிதமும் நீதி புகட்டுதலும் நிறைந்துள்ளன. பஞ்சே மங்கேசராவின் மிகவும் சிறப்பான படைப்பாற்றலும் கற்பனைத் திறனும் இவற்றில் வெளிப்படுகின்றன. நடையிலும் கதைகூறும் விதத்திலும் எல்லாக் கதைகளும் சற்றேறக்குறைய ஒரே விதத்தில் அமைந்துள்ளன. தேவி சௌதூராணிக்குப் பிறகு 1901–இல் மர்மம், கொள்ளை, பலாத்காரம் ஆகியவை அடங்கிய சண்டிக ரகசிய சமாஜா என்ற புதினத்தின் முதல் பகுதியை பஞ்சே எழுதத் துவங்கினார் என்று கூறுவது அவசியம். அது சுவாசினியில் வெளிவந்தது. இரவில் பார்வை சரியாகத் தெரியவில்லை என்ற கருத்து அறிவிப்பை எப்போது உணர முடியும். எதையும் நன்கு பிரித்துப் பார்க்கத் தெரிந்த ஒருவரிடமிருந்து அக்கருத்து வந்தால்தான் உணர முடியும். மீனவர்கள் தங்களது வலைகளை விரித்து விட்டனர். இதுவரை எதுவும் சிக்கவில்லை. ‘மென்மையான காற்று கடற்கரையோரத்தில் அலைந்தாடியும் நதிகளின் அலைகளில் புரண்டோடியும் இன்பத்தை அனுபவித்தது. வானத்தில் மின்னிக்கொண்டிருக்கும் எண்ணிலடங்கா விண்மீன்கள் நதியின் நீரில் தோன்றி மின்னின. நதியின் அலைகள் கரையின் மீது மோதி விளையாடி பின்னோக்கிச் செல்லும்போது மின்னும் விண்மீன்களின் கூட்டமும் நனைந்து வெண்மை வீசும் கரையில் இருந்து விலகிச் செல்வதைப் போலத் தோன்றியது. வானத்தில் அமுதத்தைப் போன்று விளங்கும் நிலவு உதித்திராததால் கடலரசன் மிகுந்த அமைதிக்கோலம் பூண்டிருந்தான். தூரத்தில் மீனவர்கள் மீன் பிடிப்பதற்காக வீசிய தீ பற்றவைக்கப்பட்ட தென்னங்கீற்றுச் சுருள்களின் வெளிச்சம் அவர்களின் சிறுதோணிகளையும் அவர்களையும் சிறிது நேரம் கண்ணுக்குக் காட்டிவிட்டு பிறகு அவர்களை இருளில் அமுழ்த்தியது. இந்த வெளிச்சத்தைக் கொண்டே கடற்கரையோரத்தில் நீண்டு வளர்ந்திருந்த சவுக்கு மரங்கள் அங்கு வீசும் மென்மையான தென்றல் காற்றுக்குச் தலையாட்டிக் கொண்டிருப்பதைப் போலக் காட்சி தருவதையும் காணலாம்.

இனி இப்பகுதியில் உள்ள இரு முக்கிய கட்டுரைகளைப் பற்றிக் காண்போம். இவற்றுள் முதலாவது, பள்ளி உதவி ஆய்வாளரின் கற்பனைக் கையேடு (fake diary) என்பதாகும். கற்பனைக் கையேடு என்பது இக்கட்டுரையின் தலைப்பாகும்.

மங்களூர் அரசுக் கல்வி நிலையத்தில் கன்னட ஆசிரியராகத் துவங்கிய அவரது அரசுப்பணி 1906–ஆம் ஆண்டுவரை அதாவது பதினொரு ஆண்டுகாலம் தொடர்ந்தது. அதற்குப் பின்னர் துவக்கப்பள்ளிகளின் ஆய்வாளராக ஆனார். பழைய நிர்வாக முறையிலிருந்து புதுநிர்வாக முறையொன்றுக்கு மாற்றப்பட்டிருந்த துவக்கப்பள்ளி ஆசிரியர்களுடன் கலந்து செயல்படுவது அவருக்கு இயலக்கூடியதாயிருந்தது. முன்னதாக துணை ஆய்வாளர் என்றிருந்த பெயர் தற்போது உதவித் துணை ஆய்வாளர் என்று மாற்றப்பட்டது. முன்பு ஒரு ஆய்வாளரை வரவேற்பதற்காக அளிக்கப்பட்ட வரவேற்பில் பூமாலை, தாரைதப்பட்டை, சங்கொலி மற்றும் மரியாதைக்காகக் கொடுக்கப்பட்ட கொடைகள் இவையாவும் தற்போது மாறிவிட்டன. அவரைக் குறிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட 'சுவாமி, தேவரே' போன்ற சொற்கள் தற்போது மறைந்து போயின. ஆசிரியர்கள் 'ஆமாம் சார், இல்லை சார்' என்றே பேசினார்கள். கிராமத்து மக்கள் ஒரு காவல்துறை ஆய்வாளருக்கும், ஒரு வருவாய்த்துறை ஆய்வாளருக்கும் கொடுத்த மரியாதையில் வேறுபாடும் மாற்றமும் இருந்தன. மக்களின் பார்வையில் பள்ளிகள் அவ்வளவாக சிறப்பில்லாதனவாகவே இருந்தன. ஆசிரியர்கள் பள்ளிகளுக்கு வருவதும் மாணவர்கள் வகுப்புகளுக்கு வருவதும் அப்படியும் இப்படியுமாக இருந்தது. ஏனோதானோ என்னும் விதத்தில் வேலை. ஒரு ஆய்வாளருக்கும் ஒரு ஆசிரியருக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தை சிறப்பற்றதாக இருந்தது. அந்த ஆசிரியர் வெவ்வேறு விதமான ஆய்வாளர்களை வெவ்வேறு வகையான பாம்புகளுடன் ஒப்பிட்டுப் பேசுகிறார். ஆய்வாளர்கள் எல்லாரும் பாம்புகள் அல்லவா? ஆட்சித்துறை அதிகாரிகள் யாவரும் கட்டுவிரியன்கள்; காவல்துறை ஆய்வாளர்கள், அஞ்சல் அதிகாரிகள் பச்சைப்பாம்புகள் என்கிறார். நீர்ப்பாம்புகள் யார் என்று கேள்வி கேட்டபோது அந்த ஆசிரியர் வருவாய்த்துறை ஆய்வாளர்கள் என்று பதில் கூறுகிறார். நாங்கள் [பள்ளி ஆய்வாளர்கள்] எந்த வகைப்பாம்புகள் என்று கேட்டபோது கிடைத்த பதில் "நீங்க ஐயா, உங்க ஜாதியில் அவ்வளவா கெட்டவரில்ல. 'ஒள்ளே' " என்று கூறினாராம். 'ஒள்ளே' என்னும் [கன்னடச்] சொல் இரு பொருள் கொண்டது. ஒன்று, சிறிய விடமில்லாத பாம்பைக் குறிப்பது; மற்றொன்று, நல்லவர் என்பது. கிராமத்து மக்கள் அதிகாரிகளை அவரவர்களுக்கு இருந்த அதிகாரத்தைக் கவனத்தில் கொண்டு எவ்வாறு வகைப்படுத்தியுள்ளனர் என்பதை நகைச்சுவையுணர்வு நிரம்ப மேற்கண்டவாறு விவரித்துள்ளார். மண்டியிட்டு வணங்குவதா

அல்லது கைகுவித்து வணங்குவதா என்பதும் கையசைவுகள் போன்றனவும் அதிகாரிக்கு அதிகாரி மாறியது. மேலும், அதிகாரி உடுத்தியிருக்கும் ஆடை, அவரது தகுதி மற்றும் பெறும் சம்பளம், அவர் சார்ந்துள்ள துறையின் முக்கியத்துவம், அவர் சார்ந்துள்ள சமுதாயத்தின் தரம் — இவையெல்லாவற்றையும் விட — அடுத்தவர்களுக்குத் தொல்லை தருவதற்கு அவர் வைத்திருக்கும் அதிகாரம் ஆகியனவற்றையும் முக்கியமாகக் கவனத்தில் கொண்டனர். அதிகாரியைப் பற்றி இருக்கவேண்டிய நடுக்கமும், பயம், மற்றும் அபாய — உணர்வு ஆகியனவும் இவர்கள் நடந்து கொள்ளும் முறையைத் தீர்மானம் செய்தன. ஆயினும், அடிப்படையான அன்பும் ஆதரவும் அந்தந்த சூழ்நிலைகளுக்கு ஏற்ப வெளிப்படுகின்றன. கிராமப் பள்ளிகளின் நிலை மிகவும் பரிதாபகரமானதாகும். கிராமப்பள்ளி ஆசிரியர்கள் எத்தகைய பரிதாப சூழ்நிலையில் உள்ளார்கள் என்பது அவர்கள் பள்ளியில் செய்யும் வேலை எப்படிப் பட்டதாயிருக்கும் என்பதை வெளிக்கொணருவதாயுள்ளது. அப்படிப்பட்ட சில குறிப்பிட்ட நிகழ்ச்சிகளை உண்மையைக் கூறுவதற்காக விளக்குகிறார். இத்தகைய குறைபாடுகள் கிராமப்பள்ளி ஆசிரியர்களின் மீது ஒருவிதமான அனுதாபத்தை ஈட்டுகின்றன. வேலை ஏதும் செய்யாமல் தப்பித்துக் கொள்ளுபவர்களுக்குத் தண்டனை கொடுப்பதைவிட நட்பு பாராட்டுவது முக்கியம் என்று கருதுபவர் மங்கேசராவ். அவர் விவரித்துள்ள திம்மப்பன் என்னும் ஆசிரியர் பற்றிய குறிப்பு மிகவும் இனிமையானதாகும். அந்த ஆசிரியரின் உண்மைத்தன்மையும், அவரது அனுதாபப்படத்தக்க சூழ்நிலையையும் புரிந்துகொள்ள வேண்டுமென்றால் அவர் விவரித்துள்ள சொற்களைக் கொண்டே அதைப் படிக்கவேண்டும். வகுப்பில் மாணவர்களுக்கு எதையாவது எழுதிக்காட்டிக் கற்பிப்பதற்கு ஒரு கரும்பலகைகூட இல்லை. எழுதுவதற்கு சாக்குக்கட்டி இருக்கவில்லை. வகுப்பில் அவை இருக்கின்றனவா இல்லையா என்பது பாடம் கற்பித்தலில் ஒரு முக்கிய செய்தியாகும். இங்கு ஒரு, விளையாட்டான நிகழ்ச்சியைக் கூறுகிறார். ஒரு ஆங்கிலேயப் பள்ளி ஆய்வாளருக்கு அந்த ஆசிரியரின் பெயரைச் சரியாக உச்சரிக்க முடியாமல் டி. மப் எனறு அழைத்தாராம். பள்ளியில் இருந்த இன்னும் இரண்டு ஆசிரியர்களின் பெயர்களை நகைச்சுவையாக — அவர்கள் இருவரும் கறுப்பானவர்கள்—குக்கப்பா என்றும் சிக்கப்பா என்றும் அழைத்தாராம். ஆசிரியர்கள் மாணவர்களின் கறுப்பு நிறத்தையும் சாதிப்பாகுபாட்டையும் அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கு பெயர்கள் சூட்டும் நிலையை விவரித்துள்ளார். ஆயினும், திம்மப்பன் ஆசிரியரின் சிறப்பு வேறுவகையானதாகும்.

அதை விவரிக்கும் ஒரு சூழ்நிலையைக் கட்டுரை ஆசிரியர் விவரிக்கிறார். பள்ளிச் சோதனைக்கு வந்த அதிகாரி ஒருவர் பள்ளி ஒன்றுக்கு எவ்வாறு அதிக நிதிக்கொடை கொடுக்கிறார் என்பதை விளக்கியுள்ளார். இந்த ஆசிரியரைப் பற்றி குறிப்பெழுதும் விதத்தில் டி. மப் [கன்னட மாவட்டத்தில் கிராமப் பள்ளி ஆசிரியர்] என்பவர் மிகவும் பரந்த மனங்கொண்டவர். கிராமத்து மக்களாகிய கறுப்பர்கள் யாவரையும் முன்னேற்றுவதற்குப் பெரும் முயற்சி செய்கிறார். [அப்போது அரிசனங்களை கறுப்பர்கள் என்று அழைத்தார்கள்]. தான் பிராமணனாய் இருந்தபோதும் கறுப்பர்களின் முன்னேற்றத்தில் அக்கரை காட்டுகிறார். அங்குள்ள மாணவர்கள் யாவரையும் முன்னேற்றுவதிலும் அக்கறை காட்டுகிறார். அவருடன் பணியாற்றும் உதவியாசிரியர்கள் எல்லோரும் கறுப்பே; பள்ளியில் உள்ள பல மாணவர்களும் கறுப்பே. இவற்றை நான் என் கண்களாலேயே கண்டதால் பள்ளிக்குக் கொடுக்கும் கொடையை உயர்த்துகிறேன் என்று குறிப்பு எழுதுகிறார்.

திம்மப்பன் பள்ளியில் பாடம் கற்பித்தலில் தன் முழுக்கவனத்தையும் செலுத்துகிறாரா இல்லையா என்பதை அந்த ஆய்வாளர் முக்கியமானதாகக் கருதவில்லை. பள்ளிக்குக் கிடைத்த அதிகமான பணக்கொடையை, மிகவும் சிர்குலைந்து போயிருந்த பள்ளிக்கட்டிடத்தைச் சரிசெய்வதற்குச் செலவழிக்கவில்லை. பாடம் கற்பிப்பதற்குத் தேவையான இதர உபகரணங்களை வாங்கவில்லை. உடன் பணியாற்றும் உதவியாசிரியர்களிடம் அதைப் பங்கிட்டுக் கொடுக்கவில்லை. ஆசிரியர்களுள் ஒருவர் அதைப் பற்றி விளக்கம் கேட்டாராம்.

அந்த ஆசிரியர் "இந்தச் சிறு கிராமத்தில் நிலைதடுமாறிப் போயிருக்கும் குளத்தைச் சரிசெய்வதற்கு ஏன் அந்தப் பணத்தைச் செலவு செய்தீர்கள்?" என்று கேட்டாராம். அதற்கு ஆசிரியர் திம்மப்பன் புரந்தரதாசரின் பாடல் ஒன்றின் பல்லவியாகிய 'குளத்து நீரைக் குளத்திற்கே கொடுத்துவிடுங்கள்' என்னும் வரியையே பதிலாகக் கூறினாராம். கிராமப்பகுதிகளில் பள்ளிவாழ்க்கை, ஆசிரியர்களின் வாழ்க்கை[1], பள்ளிக் கல்வி நிர்வாக

---

[1] ரங்கண்ணனின் கனவு நாட்கள்" என்னும் நூலை இயற்றிய எம். ஆர். சீனிவாசமூர்த்தி என்பவர் மட்டுமே பள்ளி ஆய்வாளராகத் தமது அனுபவங்களைக் கன்னடமொழியில் எழுதியுள்ளார்.

முறை போன்றவை பற்றி இச்சிறு நூலில் பல நகைச்சுவையான நிகழ்ச்சிகளாகத் தெரிவித்துள்ளார்.

**கோடி — சென்னய்யா**

இந்நூலில் இருக்கும் கடைசி கட்டுரை கோடி – சென்னய்யா என்பதாகும். கோடி, சென்னய்யா என்னும் இருவரும் ஆரம்பத்திலேயே தந்தை தாயை இழந்த அனாதைச் சிறுவர்கள். துளு நாட்டில் உள்ளபல புகழ்பெற்ற கதைகளில் இவர்களின் விவரம் உள்ளது. பல மூலக்கதைகளில் இருந்து இவர்களின் கதையை மங்கேசராவ் சேகரித்துள்ளார். டாக்டர் மொக்லிங்க் என்பவர் தொகுத்து வெளியிட்டுள்ள புகழ்பெற்ற கன்னட நாட்டுப்புறப்பாடல் தொகுப்பிலிருந்தும் கூட இவர்களைப் பற்றிய விவரங்களைத் திரட்டியுள்ளதாக முன்னுரையில் மங்கேசராவ் குறிப்பிடுகிறார். இது தெற்குக் கன்னட மாவட்டத்தின் மூன்று பகுதிகளில் இருந்த பல்லாளர்கள் என்றழைக்கப்பட்ட துளு அரசர்களின் ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சியை விவரிக்கிறது. இந்த மன்னர்கள் சிற்றரசர்களுக்குரிய அதிகாரத்தையும் வசதிகளையும் பெற்றிருந்தனர். சில வேளைகளில் வேறொரு சிற்றரசனின் மூலமாக விஜயநகரப் பேரரசுடன் இணைந்து இருந்தனர். கோடி மற்றும் சென்னய்யா என்னும் சகோதரர்கள் எவ்வாறு பிறரது நம்பிக்கைக்குப் பாத்திரமாக வளர்ந்தார்கள்? அவர்களுடைய திறமையும் வீரமும் எவ்வாறு நன்மை பயப்பதாக இருந்தது? அதன் காரணமாக ஏற்பட்ட பயம் அவர்களைப் பார்த்த பிறருக்கு எத்தகைய பொறாமையை உண்டாக்கியது? அவர்களது அழகையும் திறமைகளையும் கண்டு பொறாமைப்பட்டு அவர்களை எவ்வாறு காட்டிக் கொடுத்தனர்? எவ்வாறு தம்மைப்பூட்டி வைத்திருந்த சிறையிலிருந்து தப்பித்து ஓடினர்? இப்படிப்பட்டவர்களுடன் போராடி எப்படி உயிரிழந்தார்கள் இந்த சிறுவர்கள்? என்பன யாவும் மிகவும் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. புதுக்கன்னடத்திலாகட்டும் அல்லது பழங்கன்னடத்திலாகட்டும் இப்படிப்பட்ட வேறொரு கதையில்லை. இக்கதையில் பொருள் நிறைந்திருப்பதுடன், கதை கூறுவதில் தேர்ச்சி, உரையாடல்களில் தீவிரம் இவை எதையும் வேறெங்கும் காணமுடியாது. இதற்கு இணையான வேறொரு கதை காணல் அரிது. பயன்படுத்தியுள்ள ஒவ்வொரு சொல்லும் பொருள் பொதிந்தது. தேவையில்லாமல் ஒரு

உரிச்சொல்கூட பயன்படுத்தப்படவில்லை. கதையைக் கூறிச்செல்லும் முறையோ மூச்சைப் பிடிக்கும் வேகத்தில் செல்கிறது. இத்தகைய படைப்புத்திறனையும் புலமையையும் குறைந்த இலக்கியத் திறனுள்ளவர்களிடம் காணமுடியாது. மூன்று ஊர்ப்பெயர்களில் — படுமலை, பஞ்சம், எண்மூரு ஆகியவற்றில் — இந்நூலின் இயல்கள் மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அக்கதையின் உரையாடலில் இருந்து சில பகுதிகள் எடுத்துக்காட்டுக்கென கொடுக்கப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட பகுதிகள் மிகவும் புகழ்பெற்று விளங்குகின்றன.

கோடியும் சென்னய்யனும் படுமலை பல்லாளனின் அரசவைக்குச் சென்று வணங்கினர். அவர்கள் மனிதக் கொலை புரிந்தவர்கள் என்று அவர்கள்மேல் பல்லாளனுக்கு வெறுப்புத் தோன்றியது. கெட்ட எண்ணம் கொண்ட அமைச்சன் ஒருவன் அரசனின் மனதை மாற்றினான். அவனுடைய துர்போதனையால் பல்லாளன் இவர்களைக் கண்டு "ஓஹோ, வங்குகளில் எலிகளைப் போலத் தோன்றிய இந்தச் சிறுவர்கள் இப்போது புலிகளைப் போல மாறிவிட்டார்களே" என்று தனக்குள்ளேயே சினந்துகொண்டு பின்வருமாறு சொன்னான்:

"செய்யக்கூடாததைத் செய்துவிட்டீர்கள். இப்போது நடக்கக்கூடாதது நடக்கவேண்டும். அவ்வளவுதான்"

அப்பொழுது கோடிக்கு பல்லாளனின் உயிரைக் காப்பாற்றிய தன் தாய் தனது காதுகளில் முனங்கியது நினைவிற்கு வந்தது.

"அரசப்பெருமானே! எனது தாய்க்குத் தாங்கள் அளித்துள்ள வாக்குறுதி ஒன்றுள்ளது" என்றான்.

"என்ன உறுதி" என்று கேட்டான் பல்லாளன்.

"அரசே, இந்தப் பொன்னும் பொருளும் உன்னுடையதே. இன்னும் கொடுக்கப்பட வேண்டியுள்ளனவற்றை எதிர்காலத்தில் உனது குழந்தைகளுக்குக் கொடுத்துவிடுகிறேன் என்று தாங்கள் எனது தாயிடம் உறுதிமொழி அளிக்கவில்லையா? என்று கோடி கேட்டான்.

பள்ளாளன்: "கோடி, உனது தாய்க்கு நான் அப்போது கொடுத்த உறுதி மொழிக்கும் நீங்களிருவரும் தற்போது செய்த தவறுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை."

கோடி: "அரசப் பெருமானே! நாங்கள் ஆட்களைக் கொன்றதற்கு எங்களுக்குக் கிடைக்கவேண்டிய தண்டனை கிடைக்கட்டும். ஆனால், தாங்கள் எங்களுக்களித்த வாக்குறுதிக்கு எங்களுக்குக் கிடைக்க வேண்டியது கிடைக்கட்டும்!"

சென்னய்யன்: "நாங்கள் இறந்த பின்னர் தங்களிடம் வந்து கேட்பவர் யார்?"

பல்லாளன்: "என்ன வேண்டும்? சொல்லுங்கள், கொடுக்கிறேன்".

கோடி: "வீட்டின் முன்னால் தோட்டம்"

பல்லாளன்: "அது கிடைக்காது"

கோடி: "பால் வற்றிப்போகாத எருமை"

பல்லாளன்: "அது நமக்கு வேண்டும்"

கோடி: "வருடம் முழுவதும் காயும் பழமும் ஏராளமாக அளிக்கும் பலாமரம்"

பல்லாளன்: "அதை விட்டுவிடு. வேறொன்றைக் கேள்"

சென்னய்யன்: "தங்களின் இரு ராணிகளுக்குச் சொந்தமான பூந்தோட்டங்களைக் கொடுங்கள்"

பல்லாளன்: "என்னவென்று சொன்னாய்?"

பல்லாளனுக்குச் சினத்தால் முகம் சிகப்பாயிற்று. "அரண்மனைப் பாலைக் குடித்து வளர்ந்த நீங்கள் எமது ராணியரின் பூந்தோட்டத்தையும், நாங்கள் பிடிக்கும் உடைவாளையும் கேட்டபின்னர் மேற்கொண்டு இன்னும் எவற்றையெல்லாம் கேட்பீர்கள், என்னவெல்லாம் செய்வீர்கள் என்று சொல்லமுடியாது. உங்களை இப்படியே விடலாகாது" என்று சொல்லி அவர்களைக் கட்டி இழுத்துக் கொண்டு போகுமாறு தன்னுடைய ஆட்களுக்கு ஆணையிட்டான்.

"வாக்குறுதி அளித்த கொடைப்பொருட்களைக் கேட்டால் பல்லாளனுக்கு வராத கோபம் வரும்" என்று தன் தாய் கூறியது உண்மை என்று கோடிக்கு தற்போது தோன்றியது. அவன் தனது போர்வையின் உள்ளே வைத்திருந்த பையொன்றை மெதுவாக உருவினான். அந்தப் பையில் வெற்றிலைக் கட்டுகள் இருந்தன. இதில் வெவ்வேறு வகையான வெற்றிலைகள் இருந்தன... கோடியானவன் வெற்றிலைக் கட்டுகளை கையில் பிடித்துக்கொண்டு பல்லாளன் வீற்றிருக்கும் இடத்தின் அருகே போய் "எங்கள் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு ஆறு வருடம் கெடு வைத்துள்ளோம்" என்று பலமாகக்கூறி அந்த வெற்றிலைகளை அரசனின் இருக்கையின் மேல் வைத்து பயப்படாமல் அங்கேயே நின்றான். கோடியானவன் கெடு வைத்துள்ளதைக் கண்டு பல்லாளனின் அரசவையே கடகடவென நடுங்கிற்று. அந்தப்புரத்தில் பயம் உண்டாயிற்று. அரண்மனையில் இருந்தவர்கள் எல்லோரும்

செய்வதறியாது தடுமாறினர். அங்கு இருந்தவர்கள் யாவரும் கோடி—சென்னய்யர்களின் வீராவேசத்தைக் கண்டு பயந்து அவர்களைப் பிடிப்பதற்கும் வீரமில்லாது அஞ்சி நடுங்கினர்.

கோடி—சென்னய்யர்கள் யாருடைய தடையும் இல்லாது உப்பரிகையிலிருந்து படியிறங்கி அரண்மனையிலிருந்து வெளியேறினர்.

அண்ணன் தம்பிகளாகிய கோடி—சென்னய்யர்கள் பஞ்சம் எனும் பகுதியிலுள்ள படுமலையிலிருந்து புறப்பட்டுச் செல்லும்போது வழியில் ஒரு குடிசை வீட்டுக்குப் போய் குடிப்பதற்கு நீர் கேட்டார்கள். அந்த வீட்டின் தலைவியானவள் தகுந்த உடை அணியாமல் வெளியே உள்ள அந்நியர்களை வந்து காணுதல் முறையல்ல என்று கருதி உள்ளே போய் கிணற்றிலிருந்து ஒரு குடம் நீர் இறைத்து எடுத்து வந்து வாசலின் அருகே வைத்து "இங்கு தண்ணீர் வைத்துள்ளேன்" என்றாள்.

அதற்குக் கோடி "உன்னுடைய கையிலிருந்து தண்ணீர் குடிப்பதென்றால் நீ உன் பிறப்பைப் பற்றிக் கூறியாக வேண்டும். உன் குலம் கோத்திரம் தெரியவேண்டும்" என்றான்.

"அதில் ஒன்றும் தடையில்லை. என் கதைதான் சற்றே பெரியது. என் வீட்டுக்காரர் வருவதற்கும் சிறிதுநேரம் ஆகும்" என்று அவள் பதில் சொன்னாள்.

இதற்குள்ளாக அவளுடைய கணவன் கள்ளை எடுத்துக்கொண்டு பின்கதவு வழியாக வீட்டின் உள்ளே வந்தது அவளுக்குத் தெரியவில்லை. அவள் அந்நியர்களிடம் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டு அவனுக்குச் சந்தேகம் உண்டாகி வீட்டின் வலப்பக்கத்துச் சுவரின் மறைவில் நின்று கொண்டு இவர்களின் உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

சென்னய்யன் : "நாம் கதையைக் கேட்போம்"

பெண் : "எனது பாட்டி, அதாவது அம்மாவின் அம்மா பிராம்மண இனத்தைச் சேர்ந்தவள் என்று கூறுவார்கள். அவள் சரியான காலத்தில் திருமணம் ஆகாமல் பெரியவளாக ஆனதால், பெற்றோர்கள் தமது ஜாதிக் கட்டுப்பாட்டை மீற முடியாது,

அவளுடைய கண்களைக் கட்டி அவளைக் காட்டில் விட்டுவிட்டார்களாம்".
கோடி : "அதற்குப் பின்..."
பெண்: "அதற்குப்பின்னர் கள்ளெடுப்பதற்காகப் பனை மரம் ஏறிய ஒருவன் அவளைப் பார்த்து அரண்மனைக்குப் போய் அரசனிடம் இதுபற்றிக் கூறினானாம். அவருடைய கட்டளையின்படி அவளைத் தன்வீட்டுக்குக் கூட்டிச்சென்று நன்கு வளர்த்து பிராமண வைத்தியனுக்குத் திருமணம் செய்து கொடுத்தானாம்".
கோடி : "கர்கோல் என்னும் தோட்டத்தைச் சேர்ந்த பிராமண வைத்தியனுக்கா?"
பெண் : "ஆம், ஆம். கர்கோல தோட்டம் தான். அந்தப் பெயரே எனக்கு மறந்து போய்விட்டது. எனது தாய் அந்தப் பெயரை ஒருமுறை சொன்னது எனக்குத் தற்போது நினைவிற்கு வருகிறது"
கோடி : "தாய் யார்?"
பெண் : "பிராமண வைத்தியனின் மகளே என்னுடைய தாயாவாள்"
கோடி : "தாயின் பெயரென்ன?"
பெண் : "தேயி"
கோடி : "தந்தையின் பெயர்?"
பெண் : "காந்தண்ணன்"
கோடி : "சொந்த ஊர்?"
பெண் : "கெம்மலஜே என்னும் பகுதியில் உள்ள பிரம்மர என்னும் ஊர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் பார்த்ததில்லை"
கோடி : "தாய்க்கு நீங்கள் மொத்தம் எத்தனை குழந்தைகள்?"
பெண் : "நான்தான் மூத்தவளாம். எனக்குப் பின்னர் அரண்மனையைச் சேர்ந்த இடம் ஒன்றில் என் தாய்க்கு இரட்டை ஆண் குழந்தைகள் பிறந்தனவாம்"
கோடி : "கர்கோல தோட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு அரண்மனையில் குழந்தை பிறக்கக் காரணம் என்ன?"
பெண் : "அதா? அதைப் பற்றிச் சொல்லுகிறேன். படுமலையைச் சேர்ந்த பெருமாள் பல்லாளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கக் கூடும். அவர் ஒரு முறை வேட்டைக்குப் போயிருந்தபோது அவருடைய காலில் முள் ஒன்று குத்தி வாழ்வா சாவா என்றாகிவிட்டது. அப்போது என் தாய் நிறைமாத கர்ப்பிணி. அவளுடைய மருத்துவம் தான் அரசனைக் காப்பாற்றும். அவள் நான்றாகப் பார்த்துக் கொள்வாள் என்று எண்ணி அவளை அழைத்து வந்தார்கள். அவள், தான் நிறைமாத கர்ப்பிணி என்பதையும் பொருட்படுத்தாமல் தானே தன் கையால் பச்சிலைகளை அவரது முள் குத்திய இடத்தில்

வைத்துக் கட்டி அதைச்சரி செய்தாளாம். அதன் பின்னர் அவளுடைய குழந்தைப் பேறு அரண்மனையில் நிகழ்ந்ததாம். அங்குதான் அவள் இரட்டை ஆண் குழந்தைகளைப் பெற்றாளாம்".
கோடி : "அதன் பிறகு என்னவாயிற்று?"
பெண் : "குழந்தை பிறந்த மூன்று மாதங்களிலேயே அவள் இறந்து போனாள்"
கோடி : "அவளுடைய கடைசிக்காலத்தில் அவளுக்குப் பக்கத்தில் யாரும் இருக்கவில்லையா?"
பெண் : "எனக்கு ஏழு வயதாகும்போது என்னை இங்கே கூட்டிவந்து திருமணம் செய்து வைத்தனர். அன்றிலிருந்து நான் வீட்டை விட்டு வெளியே காலைக்கூட வைக்கவில்லை. இப்படியானதால் என் அம்மாவிற்குக் குழந்தைகள் பிறந்த சந்தோஷச் செய்தியையோ, இறந்த துயரச் செய்தியையோ காதில் கேட்டதோடு சரி; கண்ணால் பார்த்தது கிடையாது".

கோடி சென்னய்யர்களின் மனதில் மகிழ்ச்சிப் பெருவகை தோன்றியது. அவர்களிருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு ஒரு நிமிடம் அமைதியாயிருந்தனர்.

சற்று நேரத்திற்குப் பிறகு "அக்குழந்தைகளை யார் வளர்த்தார்கள்? என்று கோடி கேட்டான்.

பெண்: "அதற்குப் பின்னர் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி நான் கவலைப்படவில்லை. நாற்று நடப்பட்டுள்ள வயலைச் சுற்றித் திடமான வேலி இருக்கவேண்டும்; பிறந்த பெண் குழந்தைக்கு தாய்வீடு வளமானதாக இருக்கவேண்டும். தாய் இறந்த பின்னர் நான் தாய் வீட்டிற்குப் போகவில்லை. தம்பியர்களையும் நான் பார்க்கவில்லை. ஊரில் உள்ளவர்கள் மட்டும் அவர்களுடைய வீரதீரத்தைப் புகழ்ந்து பேசுகிறார்கள். நீரிலிருந்து தோன்றிய நெருப்பைப் போன்றும் நிலத்திலிருந்து தோன்றிய இடியைப் போன்றும் உள்ளார்களாம்"

சென்னய்யா: "அக்கா, உன் பெயர் என்ன?"
பெண்: "என் பெயர் கின்னிதாரு"

உடனே கோடியும் சென்னய்யனும் எழுந்து "நீயே எங்களின் அக்கா" என்று வாய் நிறையச் சொல்லி இருவரும் அவளுடைய

கால்களின் மேல் தலையிட்டு கீழே விழுந்து வணங்கினர். அப்பொழுது சுவரின் பின்புறம் இதுவரை மறைந்திருந்த அவளுடைய கணவன் இந்தப் பக்கமாக வந்து "எழுங்கள், எழுங்கள்" என்று சொல்லி, அவர்களை வலது கையால் தூக்கி முற்றத்தில் இருந்த ஊஞ்சலில் உட்கார வைத்தான். கின்னிதாருவுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவள் பசும்பால் கறந்து, பால் காய்ச்சிக் கொடுத்து அவர்களை உபசரித்தாள். அன்று அக்கா வீட்டில் அவர்கள் சாப்பிட்ட வெள்ளைச்சோறும், வெல்லத்தில் செய்த பாயசமும், பலாக்காயில் செய்த குழம்பும், நெய்க்குழம்பும், வெண்ணெய் நிறைந்த தயிரும், ஊறுகாயும் எவ்வளவு ருசியாக இருந்தன என்பதை யாரால் தான் வருணிக்க முடியும்? மொத்தத்தில், பசிக்காத வயிற்றைக்கூட மேலும் உண்ணவைக்கும் விதத்தில் சமையல் சுவையாக இருந்தது".

* * *     * * *     * * *

இதை முடிப்பதற்கு முன்னர் கதையின் கடைசிப் பகுதியானது எவ்வளவு விறுவிறுப்பாக உள்ளது என்பதைச் சுருக்கமாகக் கூற விரும்புகிறேன். கதை இவ்வாறு செல்கிறது.

படுமலை பல்லாளன் இந்தச் சிறுவர்கள் இருவரையும் பிடித்துக் கொடுப்பவர்களுக்குச் சன்மானம் வழங்கப்படும் என்று அறிவிக்கிறான். அவர்கள் அரசனின் ஆள் ஒருவனைச் சீண்டிவிட்டுக் கொன்றுவிட்டனர். இச்செய்தி அரசனுக்கு எட்டியதும், அவர்களை உயிருடனாவது அல்லது பிணமாகவாவது பிடித்துவரவேண்டும் என்று கட்டளையிட்டான். இச்செய்தி பஞ்சம் பகுதிக்குச் சென்றது. அவர்கள் இப்போது பஞ்சத்திற்குச் சென்றார்கள். அங்கு வயிற்றெரிச்சல்காரனும் கெடுமதி படைத்தவனுமாகிய செந்துகிடி என்பவன் விரித்த வலையில் விழுந்து அரசனின் முன்னால் நிறுத்தப்பட்டனர். இறுதியில் சிறையில் வைக்கப்பட்டனர். சிறுவர்கள் சிறையிலிருந்து எவ்வாறு தப்பிச் சென்றனர் என்னும் செய்தி மிகவும் சுவையாக விவரிக்கப்பட்டுள்ளது. அண்ணனின் தோளின் மேல் தப்பி ஏறி நின்று அந்த மாளிகையில் இருந்த ஒரு ஜன்னலைப் பிடித்துக் கொண்டான். அந்த ஜன்னலின் இரும்புக்கம்பிகளை வளைத்திமுத்து சந்து செய்து அவர்களிருவரும் கட்டியிருந்த இடுப்புத்துணியின் உதவியால் மாளிகையைத் தாண்டிச் சென்றனர்; சிறையிலிருந்து தப்பித்துச் சென்றனர். 'குழியில் விழுந்த யானை அதிலிருந்து தப்பித்துக் கொண்டு இருண்ட காட்டிற்கு ஓடிச்சென்று பிழைத்துக்

கொள்வதைப் போன்று அவர்களிருவரும் அந்த இருட்டில் தட்டுத்தடுமாறி பொழுது புலர்வதற்குள்ளாக பஞ்சத்திலிருந்து மறைந்தனர். அதன் பின்னர் அவர்கள் எண்மூருக்குச் சென்றனர். அந்த நாட்டின் அரசன் படுமலை பல்லாளனின் பகையாளியாவான். ஆயினும் அவ்வளவாக பலமில்லாததால் அவனை எதிர்க்கும் திறன் இல்லாதிருந்தான். கோடியும் சென்னய்யனும் அங்கு வந்து அவனுக்கு உதவி புரிந்தனர். இரண்டு பிரிவினருக்கும் கொடிய போர் நடைபெற்றது. ஒரு புறத்தில் படுமலை, பஞ்சம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த போர்வீரர்கள், இன்னொரு புறத்தில் எண்மூரைச் சேர்ந்த போர் வீரர்கள். இன்னும் சற்று நேரத்தில் வெற்றி கிடைத்துவிடும் என்று இருந்தபோது ஒரு அம்பு கோடியைத் தாக்கியது. போர்க்களத்தில் கெடுமதி கொண்டவனான செந்துகிடியும் செத்து மடிந்தான். சென்னய்யன் அவனைத் தாக்கிக் கொன்றான். அந்த கெடுமதியோன் தான் கோடியை பின்னின்று தாக்கி வீழ்த்தியவன். படுமலை பல்லாளன் இதனைக் கண்டு துயருற்றான். எண்மூரின் தேவபல்லாளன் சகோதரர்களின் அருகில் வந்து பின்வருமாறு கூறினான்.

"என்னையும் என் அரசையும் காப்பாற்றிய வீரர்கள் நீங்கள். உங்களின் தொடர்ந்த ஆதரவை நான் என்றும் நாடுகிறேன். எனது கழுத்தை வெட்டி உங்களுக்கு மாலையாகச் சூட்டினாலும் நீங்கள் செய்த உதவிக்கு ஈடாகாது. இப்போது நீங்கள் இருவரும் இந்த போர்க்களத்திலிருந்து புறப்பட்டு இந்தப் பல்லக்குகளில் ஏறி ஊர்வலமாக எனது அரண்மனைக்கு வரவேண்டும்; எனது அரசைக் காப்பாற்ற வேண்டும்" என்று அன்புடன் வேண்டிக் கொண்டான்.

அதற்குள்ளாக பெருமாள் பல்லாளன் அவர்கள் முன்பாக வந்து தனது கைகளை நெற்றியின்மேல் வைத்துக் கொண்டு "நான் வளர்த்த குழந்தைகளின் மேலேயே கைவைத்த பாவி நான். இந்தப் பாவத்திற்கு இதுதான் பரிகாரம்" என்று சொல்லித் தனது கையில் இருந்த கத்தியைத் தன் வயிற்றில் செலுத்த முயன்றபோது கோடியானவன் "வேண்டாம் மன்னவரே! கையை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று சைகை செய்தான். அதற்குள்ளாக சென்னய்யன் எழுந்து பெருமாள் பல்லாளனின் கையிலிருந்த கத்தியைப் பிடுங்கிக் கொண்டான்.

இங்கு கோடியின் உடல் ரத்தவெள்ளத்தில் மிதந்து கொண்டு இருந்தது. அவன் தனது தம்பியாகிய சென்னய்யனைப் பார்த்து,

“சென்னய்யா, எனக்கு நேரம் வந்துவிட்டது. என்னை இந்த சிவன் கோயிலின் எதிரில் படுக்கவை” என்று சொல்லி வானத்தைப் பார்த்து “சென்னய்யா, இன்று சுப்பிரமணியா என்னும் தலத்தில் திருவிழா. இறைவன் தேர்மீது உலா வருவார். கருடப்பறவையானது தனது இறக்கைகளை விரித்து தேரைச் சுற்றிலும் வானில் பறப்பதைப் போன்று தற்போது என் உடலைவிட்டு கைலாயத்திற்குச் செல்ல என் ஆன்மா பறந்து கொண்டிருக்கிறது. ஆனால், எனக்கு சொர்க்கத்திற்குப் போவதற்கு நீர் ஊற்றுவதற்கு முன்னால் நான் இறைவனை வணங்கிவிடுகிறேன்” என்று மிகவும் மெல்லிய குரலில் உயிரைப் பிடித்துக் கொண்டு பேசினான்.

மாலையில் சூரியன் மறைந்தான். திருக்கோயில்களில் ஒலிக்கப்படும் மணிகளின் ஓசை கேட்டது. உள்ளே பூஜையும் ஆராதனையும் நடைபெற்றன. அது முடிந்த பின்னர் அர்ச்சகர் கற்பூர ஆரத்தியை வெளியே கொண்டுவந்து கோடியின் முன்பாகப் பிடித்தார்; புனித நீரை அவன் கைகளில் ஊற்றினார். பக்தியுடன் கோடி அதனைப் பெற்றுக் கொண்டான். தேவபல்லாளனை அழைத்து கோடி “அரசப்பெருமானே, இனிவரும் ஆயிரம் ஆண்டுகளுக்கு இந்த மகாலிங்கேஸ்வரனுக்குப் படுமலையில் பயணிகளுக்கு நீர்வழங்கிக் கொண்டிருக்கும் இந்த பிராமணனால் பூஜை நடத்தவேண்டும்” என்று உறுதி வாங்கிக் கொண்டான். பின்னர் “வாயில் தீர்த்தம் விடுங்கள்” என்று சைகை செய்து வாயைத் திறந்தான்.

தேவபல்லாளனும் பெருமாள் பல்லாளனும் அவனுடைய இருபக்கத்திலும் உட்கார்ந்துகொண்டு சிறிது இளநீரை அவன் வாயில் விட்டனர். கோடியானவன் அவ்விருவரது கைகளையும் தன் கைகளால் பற்றி “இனிமேல் நீங்கள் இருவரும் ஒற்றுமையாக வாழ்வது நல்லது” என்று சொல்லிக் கண்களை மூடினான். மூடிய கண்கள் பின்னர் திறக்கவே இல்லை.

கோடி இறைவனடி சேர்ந்து விட்டதைக் கண்ட சென்னய்யன் “அண்ணா! உங்களைப் பிரிந்து நான் ஏன் வாழவேண்டும்? பிறக்கும்போது ஒன்றாகப் பிறந்தவர்கள் இறக்கும்போதும் ஒன்றாக அல்லவா இறக்கவேண்டும்? அண்ணா, நான் உங்கள் பின்னாலேயே வருகிறேன்” என்று சொல்லி அத்திருக்கோயிலின் முன்புறத்தில் இருந்த கிணற்றில் உள்ள கல்லில் தன் தலையை இடித்துக் கொண்டான். செந்துகிடியின் கத்தி குத்தியதால் ஏற்கனவே இரத்தம்

வடிந்து கொண்டிருந்த அவன் தலையிலிருந்து வெள்ளையான பொருள் ஒன்று வடிந்து மாலை போட்டதைப் போன்று கழுத்தில் வழிந்தது. திருக்கோயிலின் பலிபீடத்தில் வைத்திருந்த மல்லிகைப் பூச்சரத்தைப் போன்ற அது கல்லின் மேல் விழுந்தது. அத்தோடு அவனுடைய ஆன்மாவும் பிரிந்து சென்றது. அதேவேளையில் அத்திருக்கோயிலில் எரிந்துகொண்டிருந்த விளக்குகள் யாவும் தாமாகவே அணைந்து போயின. ஒரு மணிநேரம் வரையிலும் இடி மின்னலாக இருந்தது. திடீரென்று கனமழை சிறிது நேரம் பெய்தது. எல்லாம் சற்றுநேரத்தில் நின்றுவிட்டன.

தேவபல்லாளன் “ஹா! ஹா! விதியே, இன்று என் நாட்டிலிருந்து என்னைக் காப்பாற்றிய யானைகள் விழுந்துவிட்டனவே!” என்று புலம்பினான். அந்த இரண்டு உடல்களையும் அலங்கரித்து, தான் கொண்டு வந்திருந்த பல்லக்கில் ஏற்றி மிகவும் சிறப்பாக ஊர்வலம் நடத்தி அரண்மனைக்குக் கொண்டு வந்தான். மறுநாள் பதினெட்டுப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் ஒன்றுகூடி அவர்கள் குலமுறைப்படி சவ அடக்கம் செய்தனர்.

படுமலை மற்றும் எண்மூர் ஆகிய ஊர்கள் தொடர்பாக இன்னும் வேறு சில விவரங்களும் இந்த புத்தகத்தில் உள்ளன. இத்தகைய துயரச்சம்பவங்கள் ஏன் நிகழ்ந்தன என்பது பற்றி ஒரு சிறு செய்தி உள்ளது. பஞ்சம் என்று அழைக்கப்பட்ட அந்தப்பகுதி அழிந்து போவதற்குக் காரணமாயிருந்த செந்துகிடியும் கேமரபல்லாளனும் ஒரு தந்திரத்தால் இரு சிறுவர்களையும் சிறையிலடைத்துவிட்டனர். சகோதரர்கள் இருவரும் மிகுந்த மதிநுட்பம் கொண்டவர்களாதலால் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டனர். ஆனால், எண்மூரில் பரவியுள்ள செய்தி என்னவென்றால் எண்மூரின் மக்கள் யாவரும் அவர்கள் இருவருக்கும் மதிப்பும் மரியாதையும் அளித்தனர் என்பதாகும். அவ்வாறே, எண்மூரின் அரசன் படுமலையிலிருந்தும் பஞ்சத்திலிருந்தும் தனது அடிமைத்தனத்தை விடுவித்துக் கொண்டு தனியரசனாக முயற்சித்தான் என்றும் செய்தி பரவியிருந்தது. ஒரு பல்லாளன் கின்னிதாருவையும் அவளுடைய கணவனையும் தண்டித்தான். இன்னொருவன் சாயண வைத்தியன் என்பவனைச் சித்திரவதை செய்தான். அவர்களின் கோபம் இன்னும் தீரவில்லை. கோடி—சென்னய்யர்களை எப்படியாவது சிறைபிடித்தாக வேண்டும் என்று ஆணை பிறந்தது. பார்த்தவுடன் அவர்களைப் பிடித்துக் கொள்ளவேண்டும் என்று ஆயிற்று. எண்மூருக்கு இந்த விவரம்

தெரிவிக்கப்பட்டது. சகோதரர்கள் இருவருக்கும் நஞ்சு கலந்த பாலைக் கொடுத்துக் கொன்றுவிடமுயற்சி நடந்தது. ஆனால் அவர்களின் தந்திரம் நிறைவேறவில்லை. கேமரனின் கெடுமதிகொண்ட அமைச்சனின் கெட்ட எண்ணத்தைப் பற்றி இப்படி பேசிக் கொள்ளுகிறார்கள். "அரசே! இது ஏழைநாடாம். தாங்கள் ஏழை பல்லாளராம். இவ்வாறு புது வீரர்கள் வதந்தியைப் பரப்பித் தங்கள் குலத்தைப் பற்றிய பொய் செய்தியையும் பரப்புகின்றனர், அரசே".

பல்லாளனுக்கு மேற்கொண்டும் கேட்பதற்கு மனமில்லாமல் கோடி, சென்னய்யன் இருவரையும் வரவழைத்து இருசாராரையும் நேருக்குநேர் வைத்து விசாரித்தான்.

அப்போது சென்னய்யன் கைகூப்பி "அரசே, இந்தச் செய்தி எதுவும் என் அண்ணனுக்குத் தெரியாது. பேசியது நான் தான். நான் தங்கள் குலத்தைப் பற்றிப் பேசவில்லை. இதை நான் உறுதியாக கூறுகிறேன். தாங்கள் கேட்பதாக இருந்தால் என் பேச்சை நான் இங்கும் பேசுகிறேன் அரசே. சில நாட்களுக்கு முன்பு, நிலைதடுமாறி மக்களைத் துன்புறுத்திக் கொண்டிருந்த அரண்மனை யானையை நாங்கள் இருவரும் பிடித்துவந்து யானையைக் கட்டுமிடத்தில் சேர்த்தோம். அவ்வளவுதான் நடந்தது. அன்று எங்களுக்குப் பெருமகிழ்ச்சி உண்டாயிற்று. இத்தகைய வேலைகளைச் செய்வதன்மூலம்தான் நாங்கள் இங்கு உண்ணும் உணவு எங்களுக்கு ஜீரணமாகிறது. நாங்கள் இந்த நாட்டிற்கு வந்து இரண்டு மூன்று வருடங்கள் ஆகியும், ஏழைகளாகிய எங்களால் இந்த அரசுக்கு எங்களின் திறமையைக் காட்ட முடியவில்லை. காட்டுப்பன்றியின் முடியையோ, புலியின் நகத்தையோ, யானையின் தந்தத்தையோ இன்னும் இதுபோன்றவற்றையோ தங்களுக்குக் காணிக்கையாகக் கொடுக்கலாம் என்றாலோ துப்பேகல்லில் உள்ள காட்டுக்குள் செல்வதற்கு எங்களுக்கு அனுமதியில்லை. போர்க்களத்திற்குச் சென்று பகைவர்களைப் பந்தாடி அவர்களின் தலைகளை தங்கள் பாதங்களின் கீழ் வைக்கலாம் என்றாலோ எமக்குப் போர்க்களத்திற்குப் போக அனுமதி கொடுக்கவில்லை. இவ்வாறு நாங்கள் இங்கு உண்ணும் உணவு எங்களுக்கு ஒவ்வாததாக இருக்கிறது. குடிக்கும் நீர் பித்தத்தைத்தான் சேர்க்கிறது. உடுக்கும் உடை அழுக்கேறுவதில்லை. பிடித்த கத்தி மழுங்கவில்லை. இந்தப் பேச்சுக்கள் தங்களைக் குறைகூறுவன என்றால், இகழ்வன என்றால்

இதோ, கத்தி இங்கு இருக்கிறது. என் கழுத்து இங்கு இருக்கிறது" என்று சொல்லி பல்லாளனின் முன்பாகத் தன் கத்தியை வைத்து பணிந்து நின்றான்.

தேவபல்லாளனானவன் சென்னய்யனின் பேச்சுக்களைக் கேட்டு "ஆமாம் வீரர்களே! நமது நாட்டில் கொண்டாட்டங்களும் திருவிழாக்களும் வேட்டையும் வேடிக்கையும் இருக்கவேண்டும். இவற்றின் மூலமாக மக்களின் உடல் பலம் பெறுகிறது. குழு உணர்வு வளர்கிறது. ஆனால் துப்பேகல்லில் உள்ள காட்டில் வேட்டையாடினால் நாம் பஞ்சம் நாட்டில் உள்ளவர்களை போருக்கு அழைத்ததைப் போலாகும். அதற்காகத்தான் சற்று தயங்க வேண்டியுள்ளது, வீரர்களே" என்றான்.

அதற்கு சென்னய்யன் "அரசே, காட்டு விலங்குகளின் தொல்லையிலிருந்து நம்மக்களைக் காப்பாற்ற வேண்டியது நமது கடமையாகும். அந்தக் கடமையில் எந்த இடையூறு வந்தாலும் அதனை நிறைவேற்றத் தயங்கலாகாது" என்றான்.

"அப்படியானால் துப்பேகல்லில் உள்ள காட்டில் வேட்டை ஆரம்பமாகட்டும்" என்று பல்லாளன் ஆணையிட்டுவிட்டு "சென்னய்யா, இந்த வஞ்சகனை என்ன செய்யலாம்? இவனுக்குத் தக்க தண்டனை எது?" என்று கேட்டான்.

அப்போது சென்னய்யன் "அரசப்பெருமானே! அவனிடம் எனது கத்தி நனையுமளவுக்குக்கூட இரத்தமில்லை. கொத்தித் தின்னுமளவிற்கு உடலில் சதையும் இல்லை. அவனை விட்டுவிடுங்கள்" என்றான்.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் பயனாக சிலநாட்களில் வேட்டையாடுவதற்கு வாய்ப்பு கிடைத்தது. அதன் பலனாக ஒரு காட்டுப்பன்றியை சகோதரர்கள் கொன்றார்கள். இதை எண்மூருக்குக் கொண்டு வந்தார்கள். இதுதான் உண்மையில் நடந்த நிகழ்ச்சி. இது பஞ்சம் நாட்டில் உள்ள மக்களுக்கும் எண்மூர் மக்களுக்கும் நடுவே பெரிய பிரச்சினைக்குக் காரணமாயிற்று. படுமலையைச் சேர்ந்த வீரர்கள் பஞ்சம் வீரர்களுடன் சேர்ந்து கொண்டு முன்னால் நடந்தார்கள். ஆனால் போரில் முற்றிலுமாகத் தோற்றுப் போனார்கள். இதன் விளைவுகளை இதற்கு முன்பே நாம் விவரித்துள்ளோம்.

## பிற படைப்புகள்

வேறு சில வெவ்வேறு விதமான நூல்களை பஞ்சே மங்கேசராவ் எழுதியுள்ளார். அவற்றைப் பற்றிச் சற்றுக் காண்போம். குழந்தைகளுக்கென்று சில ஆரம்பப்பாட நூல்களையும் கதைகள் சித்திரங்கள் போன்றவற்றையும் இவர் எழுதியுள்ளார். ஐரோப்பியர்களின் குழந்தை நூல்களின் மாதிரியில் ஆங்கிலப் பாடல்களுக்கு இணையான கன்னடப் பாடல்களையும், குழந்தைக் கதைகளையும் எழுதியுள்ளார். அவற்றுள் சிலவற்றை குழந்தை இலக்கிய மன்றத்தாரும் இன்னும் சிலவற்றை பேசல் மிஷன் மற்றும் மேக்மில்லன் ஆகியோரும் வெளியிட்டுள்ளார். கிருஸ்தானுஜ வத்ஸ என்பவர் ஆங்கில–கன்னட அகராதி ஒன்றை முதலில் தொகுத்தார். அதனை மேம்படுத்தி மேலும் விரிவுபடுத்தி வெளியிடும் பணியினை மங்கேசராவ் மேற்கொண்டார். அகராதிகளுள் அது மிகவும் சிறப்பான ஒன்றாகும். நண்பர்கள் தமக்குள் பேசிக்கொண்டு செல்லும்போது இத்தகையதொரு அகராதி பற்றிய செய்தியும் வந்தது. அவர்களின் பேச்சுக்களை ஈடேற்றும் விதத்தில் இவ்வகராதி தயாரிக்கப்பட்டது. அவர்களுடைய உரையாடல் ஒரு உரைச் சித்திரத்தைப் போன்ற நடையில் இருக்கிறது. அந்த அகராதியிலிருந்து கிடைத்த பதிப்புரிமைத் தொகையை மங்கேசராவ் அவர்கள் மங்களூரில் உள்ள கணபதி உயர்நிலைப் பள்ளியில் மாவட்ட அளவிலான குழந்தைகள் மாநாடு ஒன்றை நடத்துவதற்காகச் செலவிட்டார். அத்தகையதொரு மாநாடு அந்த மாவட்டத்தில் அப்போதுதான் முதல் முதலாக நடைபெற்றது. ரெவரண்ட் கிட்டல் அவர்களின் புகழ்பெற்ற கன்னட – ஆங்கில அகராதியைத் திருத்திப் பதிப்பதற்கும் விரிவுபடுத்துவதறகும் இவர் பொறுப்பாக்கப்பட்டார். தனது வாழ்நாளில் பல ஆண்டுகளை இப்பணியில் அவர் செலவிட்டார். சுமார் ஓராயிரத்திற்கும் அதிகமான புதிய சொற்களை அதில் சேர்ப்பதற்கும் மேல் வேறு எதுவும் செய்வதற்கு துரதிருஷ்டவசமாக அவருக்குக் காலம் கிடைக்கவில்லை. சப்தமணிதர்ப்பணம் என்னும் நூல் பழங்கன்னடமொழியின் இலக்கண நூலாகும். இந்நூலில் உள்ள சூத்திரங்களின் சாரத்தை ஆங்கில மொழியில் மிகவும் சிறப்பாகக் கொடுத்துள்ளார். இது கன்னடமொழியைப் பயிலும் பிறமொழி பேசுவோருக்கு மிகவும் பயன்படுவதாய் உள்ளது. இலக்கண ஒப்பாய்வு செய்வோருக்கும், மொழியியல் ஆய்வு செய்வோருக்கும் இது பேருதவியாய் இருக்கும். ஆரம்ப காலத்திலும் பிற்காலத்திலும் எழுதப்பட்ட நூல்களுக்கு இது ஒரு அழகிய இணைப்பு நூலாக

விளங்குகிறது. கிட்டல் எழுதிய இலக்கணம் ஒரு மிகச் சிறந்த படைப்பாகும். கால்டுவெல் எழுதியுள்ள திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலில் உள்ள சில செய்திகளை ஆய்வதற்கும் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கும் கிட்டல் எழுதியுள்ள இலக்கணநூல் பேருதவி புரிகிறது. கால்டுவெல் செய்த இந்த ஆய்வுப் பணி மிகவும் தலைசிறந்தவொன்றாகும். ஆனால் அவருக்குத் தமிழ்மொழியில் இருந்த புலமைக்கு இணையாக கன்னடமொழியில் புலமை இருந்திருக்கவில்லை என்றே கூறவேண்டும்.

பள்ளி ஆசிரியராகவும் பள்ளி ஆய்வாளராகவும் இருந்த மங்கேசராவ் அவர்கள் பள்ளிகளில் அளிக்கப்படும் கல்வியின் தரம் உயர்வானதாக இருந்திட வேண்டும் என்பதை ஆசிரியர்களிடத்தும் பொதுமக்களிடத்தும் பரப்பும் நோக்கில் செய்திமடல் ஒன்றை வெளியிடத் துவங்கினார். கல்வி என்றால் என்ன? என்னும் பொருள் பற்றிய முதல் செய்திமடல் அது என்றே கூறலாம். கன்னட மாவட்டத் துவக்கப்பள்ளிகளின் நன்மைக்காக அவர் ஆற்றிய பணி பெரிது. கல்வி கற்பித்தலைக் குறிப்பதற்கு ‘சிக்ஷண’ என்னும் சொல்லைவிட ‘போதனை’ என்னும் சொல்லையே அவர் மிகவும் விரும்பினார். ‘போதனை’, ‘போத்’ என்னும் சொற்களில் மிகவும் பரவலான பொருள் விளக்கம் உள்ளது. ‘சிக்ஷணே’ என்னும் சொல்லில் ‘சிக்ஷை’ அல்லது தண்டனை என்னும் பொருளும் அடங்கியுள்ளது. குழந்தைகளைத் தண்டிப்பதை அவர் ஆரம்பத்தில் இருந்தே எதிர்த்து வந்திருக்கிறார். ஆசிரியர்கள் பிரம்பையோ அல்லது வேறு பொருளையோ பயன்படுத்தி மாணவர்கள் செய்யும் தவறுகளுக்காக அவர்களைத் தண்டிப்பதையோ அல்லது அவற்றைப் பயன்படுத்திக் கல்வியின் தரத்தை உயர்த்துவதையோ அவர் ஆதரிக்கவில்லை. பள்ளிகளில் வேடிக்கையும் விளையாட்டும் கதைகளும் ஆட்டமும் பாட்டமும் மிகுந்திருக்க வேண்டும். குழந்தைகளின் ஆவலையும் ஈடுபாட்டையும் சிந்தனையையும் தூண்டி விடுவதுதான் முக்கியமானது. திருந்தாமல் மேலும் மேலும் தவறுகளையே செய்து கொண்டிருக்கும் மாணவர்களிடம் கூட அவர் பிரம்பைப் பயன்படுத்தியதில்லை. எழுது பலகையையும் அடிக்கொடிடும் உருளையையும் பயன்படுத்தி மாணவர்களைத் தண்டிப்பதும் அதன் மூலம் அவர்களைத் திருத்துவதற்கு முயற்சிப்பதும் அவருக்குச் சற்றும் விருப்பமில்லாத செயல்களாகும். அடியாத பிள்ளை படியாது என்ற வழக்கிலும் அவருக்குச் சற்றும் நம்பிக்கையில்லை. மாணவர்களைத் தண்டித்தால் அவர்கள்

விரைவாக கற்றுக்கொள்வார்கள் என்பது பல ஆசிரியர்களின் நம்பிக்கை. ஆனால் அவரைப் பொறுத்தவரையில் இது ஒரு சாபக்கேடு. வீட்டில் கூட, எப்போதாவது கோபமோ அல்லது அதிருப்தியோ உண்டாகும்பொழுது பிரம்பை எடுக்காமல் விளங்குமாற்றுக்குச்சி ஒன்றை எடுத்து குழந்தைகளைப் பயப்படுத்தியுள்ளாராம்; அதையும் கூட அவர் பயன்படுத்தியதில்லை. ஓரிருமுறைதான் அதைக் கையில் எடுத்துப் பிடித்திருக்கிறார்; அப்போதும்கூட அதைக் குழந்தைகள்மீது பயன்படுத்தியதில்லையாம்.

**கவிதை**

பஞ்சே மங்கேசராவ் அவர்களின் படைப்புகளில் அடுத்து நாம் காண வேண்டியது அவருடைய கவிதைபாடும் திறனை. அவருடைய வாழ்க்கை மிகவும் உன்னதமாக விளங்கியதைப் போன்றே கவிதை பாடும் திறனும் மிகவும் சிறப்பானதாக விளங்கிற்று. குழந்தைகளுக்காக அவர் புனைந்த கவிதைகள் மிகவும் அழகானவையாகும். அவர் இயற்றிய தாலாட்டுப் பாடல்கள் தமது குழந்தைகளுக்காக இயற்றியனவாம். இப்பாடல்கள் துளு, மராட்டி மொழிகளின் சாயலிலும் நாட்டுப்புறப்பாடல்களின் சாயலிலும் உள்ளன. 'அந்திப்பாடல்' என்னும் பொருளில் உள்ள நான்கு பாடல்களில் இரண்டு பாடல்களின் முதற்சொற்கள் இருக்கவேண்டும், வரவேண்டும், சுமக்க வேண்டும், கொடுக்கவேண்டும், உடுக்கவேண்டும், விடவேண்டும் என்று அமைந்த எதுகை மோனை நயத்தோடு விளங்குகின்றன. இப்பாடல்களை அவரே பாடுவதைக் கேட்டால் அதில் உள்ள இசைநயமும் பொருள் நயமும் தெளிவாகும். ஓசையில் ஏற்ற இறக்கங்கள் பாடல்களுக்கு அழகைத்தரும். சிறிது பிந்திய காலத்தில் மகாராட்டிரத்தில் இயற்றப்பட்ட சில பாடல்களில் இத்தகைய அமைப்பை நான் கண்டிருக்கிறேன். குழந்தைப் பாடல்களில் உள்ள சொற்கள் காதுகளால் கேட்பதற்கும் நாக்கால் சொல்லப்படுவதற்கும் அதன்மூலம் கவனத்தை ஈர்ப்பதற்கும் மிகவும் சிறந்த எடுத்துக்காட்டுக்களாக விளங்குகின்றன. ஒருமுறை அதில் கவனத்தைச் செலுத்திவிட்டால் அதிலிருந்து மளுவது கடினமானது. சிறுகுழந்தைகளின் வாழ்க்கையில் ஒரு மகிழ்ச்சியையும் நல்லுணர்வுகளையும் இவை அளிக்கின்றன. நீதியைக் கற்பிப்பது இரண்டொரு பாடல்களில் மட்டுமே. குழந்தைகளின் பாடல்களில் நேரிடையாக நீதியைக் கற்பிப்பதில் மங்கேசராவிற்கு எப்போதும்

விருப்பம் இருந்ததில்லை. பாடல்களில் முக்கியமாக இருக்கவேண்டியது சொல்நயம். பாடல்களின் வரிகள் எப்படிப்பட்டன? அவற்றின் இயல்புத் தன்மையும் நயமும் எப்படிப்பட்டன? அவை எவ்வாறு சென்றடைகின்றன? நாவால் எவ்வாறு சொல்லப்படுகின்றன? அவற்றில் வரும் உவமான உவமேயங்கள் எப்படிப்பட்டன? கற்பனைத்திறம் எப்படிப்பட்டது? என்பனவே அவருக்கு முக்கியமானவையாகும்.

'நாகண்ணனின் கண்ணாடி' என்னும் படைப்பு நகைச்சுவை உணர்வு கொண்டதாகும். எழுத்தறிவு இல்லாத நாகண்ணன் என்பவன் கண் கண்ணாடி விற்கும் கடைக்குப் போகிறான். அங்குள்ள எல்லாவிதமான கண்ணாடிகளையும் கடைக்காரர்கள் விளம்பரப்படுத்தியுள்ளதைப் போலவே போட்டுப் பார்க்கிறான். எழுத்தறிவு இல்லாத ஒருவனுக்கு புத்தகங்களைப் பார்க்கவேண்டும் என்னும் சிரமம் எதற்கு என்பது இறுதியில் அவனுக்குப் புலப்படுகிறது. எழுத்தறிவில்லாதவன் எந்தக் கண்ணாடியை அணிந்து கொண்டால் தான் என்ன? எந்தப் புத்தகத்தை அவனால் படிக்கமுடியும்?

கழைக்கூத்தாடி [தொம்பர்] சென்னி என்னும் கதையானது மனதை அப்படியே சிறைபிடித்துவிடக்கூடிய நாடகமாகும். அதில் உள்ள வருணனை நயமும் சொல் நயமும் படிப்போரின் கண்ணையும் மனதையும் ஒரே சமயத்தில் ஆட்கொண்டு விடுவனவாகும். கழைக்கூத்தாடியின் ஆட்டத்தைப் பார்த்துக் கொண்டிருப்பவர்களில் ஒருவனாகிய வீரத்தலைவன் ஒருவன் [பல்லாளன்] அவனது மகளின் மேல் காதல் கொள்ளுகிறான். அவனிடமிருந்து தப்பிச் செல்வதற்காக கழைக்கூத்தாடியும் அவன் மகள் சென்னியும் அங்கிருந்து ஓடிப்போய் பக்கத்தில் ஓடும் ஆற்றுநீரில் விழுந்துவிடுவார்கள். அவர்களைக் காப்பாற்றிக் கரையேற்றிவிடுகிறார்கள். இறுதியில் என்ன தெரிந்தது? இந்த சிக்கியானவள் பல்லாளனின் அத்தையுடைய அரண்மனையிலிருந்து இந்த கழைக்கூத்தாடியுடன் ஓடிப்போய்விட்டவளின் மகள் என்று தெரியவந்தது. கதை அமைப்பிலும் வருணனை முறையிலும் இது மிகவும் சிறப்பானதொரு கதையாகும். கழைக்கூத்தாடி செய்யும் சாகசச்செயல்கள் பற்பல. அதில் காணப்படும் தேர்ச்சி வியப்படையச் செய்யம்.

'கடேகஞ்சி' என்னும் படைப்பு சிற்றரசன் ஒருவனின் நட்பின் அனுதாபத்தைப் பற்றியதாகும். வாழ்க்கையில் தோற்று, பயந்து போயிருக்கும் ஒருவனுடைய கதை அந்த அரசனின் காதில் விழுகிறது. அவனிடம் மிஞ்சியிருப்பது அவன் வீட்டிலேயே பிறந்த கன்றுக்குட்டி ஒன்றுதான். அதையும் விற்றுவிட அவன் புறப்படுகிறான். வாழ்க்கைக்குத் தேவையான வசதிகளையும் கொடுக்கிறான். ஆரம்பத்தில் அவன் ஓரளவுக்குப் பணவசதியுள்ளவனாக இருந்தானாம். ஆனால், குடிப்பழக்கம் கொண்டதால் ஏழை ஆகிவிட்டானாம். வீட்டிலிருந்த பல பசுக்களையும் கன்றுகளையும் இழந்து இப்போது ஒரே ஒரு கன்று மட்டும் மிஞ்சியிருந்தது. அதைப் பார்க்கும் போது அவனுக்குப் பரிதாப உணர்வு ஏற்பட்டு மனம் கரைந்தது. குடிப்பழக்கத்தால் தன் உடமை எல்லாவற்றையும் இழந்ததை எண்ணி அவன் மனம் மிகவும் வருந்துகிறது. அரசன் அவனை அந்த நிலையில்தான் பார்த்தான். அவனைக் கண்டு நலன் விசாரித்து அவனுடைய பரிதாப நிலையை அறிந்தபோது அரசன் அவனுக்கு தாராளமாக உதவிபுரிந்தான். அதன் பின்பு அந்த மனிதன் அரசனிடம் பின்வருமாறு கூறினான்.

ஏழையாயினும் யான் பொருள் வேண்டேன்,
பெற்ற குழந்தைகளை விற்கமாட்டேன்
கடன்வாங்கேன் சொத்து வேண்டேன்
என்றென்றும் யான் வேண்டேன்.

இதற்குச் சிற்றரசனாகிய பல்லாளன் பின்வருமாறு கூறினான்;
"விழுந்ததே அரியணையில் அமர்ந்திருந்த என்செவிகளில்
நிலத்தை உழுபவரின் துயர்பற்றிய சேதி"

இக்கதையானது படிப்பவரின் மனதைக் கரைக்கும் தன்மை கொண்டதாயுள்ளது.

நாகப்பாம்பு எல்லாருக்கும் தெரிந்திருப்பதைப் போன்றே கொடிய பாம்பாகும். அது தன் படத்தை விரித்து ஆடினால் அதன் அழகு மிகவும் பயங்கரமானதாயிருக்கும். பாம்பாட்டியானவன் மகுடி வாசித்து பாம்பை மயக்குகிறான். காசரகோட்டில் மங்கேசராவ் இருந்தபோது குழந்தைகளுக்கென இதை எழுதினார் என்று அவருடைய குடும்பத்தார் கூறுகின்றனர். அக்கவிதையின் நான்கு

வரிகளைக் கொண்ட ஒவ்வொரு பாடலிலும் இறுதியில் வரும் உயிர்நெடில்கள்[1] மிகவும் மனதைக் கவரும் விதத்தில் உள்ளன. அவை மீண்டும் மீண்டும் வரும் இடங்களிலும் அவ்வாறே உள்ளன. எடுத்துக்காட்டாக, வா வா – வா வா வா வா – வா வா என்பதில் உள்ள நெடில் உயிர்கள் 2 × 4 × 2 என்று பதம் பிரிந்து உச்சரிக்கப்பட வேண்டிய எழுத்துக்களாகும். இப்பாடலில் 'வா' என்னும் சொல் இருந்தால் அடுத்த பாடலில் 'நீ' என்னும் சொல் இதே போன்றுள்ளது. மூன்றாம் பாடலில் 'தா' என்னும் சொல்லும், இறுதிப்பாடலில் 'போ' என்னும் சொல்லும் இதே விதத்தில் பதம்பிரிக்குமாறு புனைந்துள்ளார். பாம்பை வாவென்று அழைப்பது, வந்து யாருக்கும் கெடுதி செய்ய வேண்டாம் என்பது, இறுதியில் குழந்தைகளுக்குத் தொல்லை ஏதும் தராமல் புறப்பட்டுச் செல் என்று சொல்லுவது மிகவும் சிறப்பாக உள்ளது.

'தெற்குக் காற்றின் ஆட்டம்' என்னும் பொருளிலான கவிதையின் அமைப்பிற்கும் சொல்நயத்திற்கும் இணையான பிறிதொரு கவிதையைக் கன்னடத்தில் காணமுடியாது. இதைப்போன்ற வேறு ஒரு கவிதையைப் பார்த்து இக்கவிதையை பாடினாரோ அல்லது சொந்தக் கற்பனையின் திறத்தால் படைத்தாரோ, எனக்குத் தெரியாது. அந்தக் காற்று எதைத்தான் செய்வதில்லை? அதைத் தடுப்பவர்தான் யார்? இப்படிச் செய் என்று சொல்லுபவர் யார்? இதை விட்டுவிடு என்று கூறுபவர்தான் யார்? சாதாரண, அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகள்கூட இந்தத் தெற்குக் காற்றின் ஆட்டத்தால் எவ்வாறு அழகும் சீர்மையும் பெறுகின்றன? என்பன மிகவும் சிறப்பாக உள்ளது. மிகவும் அழகாக ஆடி அசைந்து செல்லும் இதன் பாதை எப்படிப்பட்டதாய் வேண்டுமானாலும் இருக்கும்.

வருகிறது வீசிக்கொண்டு, வீசிக்கொண்டு வருகிறது
தெற்குக் காற்று கொங்கணி சீமைக்கு
வருகிறது! வருகிறது! வருகிறது! வருகிறது!

நெளிவு சுழிவுகளிலும், மென்மையாகவும் வேகமாகவும் ஆடிக்கொண்டு செல்லும் இசையழகிலும், வரிகளின் அமைப்பு

---

இங்கு ஒரு செய்தியைக் கூறவேண்டும். நெடில் உயிர்கள் யாவும் ஒரே அளவான நெடிய ஒலிப்பைக் கொண்டன அல்ல. எடுத்துக்காட்டாக, நாராயண என்னும் சொல்லில் உள்ள முதலிரண்டு நெடில்கள் ஒலிப்பில் ஒரே கால அளவைக் கொண்டன அல்ல.

முறையிலும் இதற்கு இணையான வேறு பாடல் இதுவரையிலும் இல்லை. இசைநயம், பொருள் நயம் இரண்டும் சிறப்பாக இணைந்துள்ளன; இனிமையாக இல்லறம் நடத்தும் கணவன் மனைவியரைப் போன்று இதனை ஒரு பாவகீதை (lyric) என்றழைக்கலாம். உண்மையிலேயே இது ஒரு அழகிய சிறந்த பாடலாகும். சொல்லும் பொருளும் மிகவும் ஒன்றிப்போகும் அழகிய பாடல். இத்தகைய பாடலைப் புனையக்கூடிய திறனுள்ளவர் உண்மையிலேயே இந்திரஜாலம் அறிந்தவராகத்தான் இருக்கவேண்டும்.

* * *   * * *   * * *

ஆங்கிலத்திலிருந்தும் பிற அயல்மொழிகளில் இருந்தும் மொழிபெயர்த்த இன்னும் சில படைப்புக்களையும் மொழித்தழுவல்களையும் பற்றி இனிக்காண்போம். அவருடைய எந்த ஒரு மொழிபெயர்ப்பும் முழு மொழிபெயர்ப்பாக அமையாமல் அவரது படைப்புத் திறனுடன் சேர்ந்த அழகிய தழுவல்களாகவே இருக்கின்றன. 'நதி' என்னும் பொருளிலான ஒரு கவிதை உரையாடல் நடையில் உள்ளது. வருணனையும் அதில் காணப்படுகிறது. நதி பிறப்பது, ஓடுவது, நீர்வீழ்ச்சிகளில் வீழ்வது, மக்களுக்கும் சமுதாயத்திற்கும் அது ஆற்றும் தொண்டு இவை யாவும் இப்பாடலில் சிறப்பாக வருணிக்கப்பட்டுள்ளன[1] . நதி என்னும் பாடலானது பக்கத்தில் உள்ள உணவகத்தைச் சேர்ந்த ஒரு சிறுவன் முதலில் தன் வீட்டுக்கு வந்து நீர் இரைத்துக் கொண்டு போனதைப் பார்த்து மங்கேசராவ் இயற்றினார் என்று திருமதி அனுசூயராவ் கூறுகிறார். பிறர் வேறு விவரங்களைக் கொடுக்கிறார்கள்.

நான்காம் பிரிவிலுள்ள கவிதைகள் சற்றே தீவிரம் நிறைந்தவை.

---

1. சிறிது காலத்திற்கு முன்பு 1957–ம் ஆண்டில் திரு சிவராம காரந்த் அவர்கள் வானொலி நிலையத்திற்காக பிடில் வாத்தியங்களின் மூலமாக 'நதி' என்னும் பெயரில் மிகவும் அழகிய பாடலொன்றை இயற்றிக் கொடுத்தார். அந்த ஒலிப்பதிவு இன்றும் காப்பாற்றப்பட்டுள்ளதா இல்லையா என்று தெரியவில்லை. மேற்கத்திய இசையமைப்பாளர்களின் படைப்பில் உள்ளதைப்போன்று சொனாடார் சிம்பனி என்னும் முறையில் இந்திய நாட்டு ராகங்களைக் கொண்டு கரைபுரண்டோடும் ஒரு நதியின் அழகை மிகவும் சிறப்பான புதுமுறையில் பாடமுடியும் என்று தெரிகிறது.

உரிமையை நான் எடுத்துக் கொள்ளுகிறேன் — ஓ! உள்ளய்யா — உள்ளவனே — உன் கருணையை என்னிடத்தில் காட்டு அல்லது வழங்கு என்று பொருள் படுகிறது. உள்ளய்யா என்னும் சொல் பயன்படுத்தப்பட்ட பின்னர் வரும் சொற்கள் உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் மறுத்தல், வெறுத்தல், பழித்தல் போன்ற பொருள்களைக் குறிப்பனவாக உள்ளன. "உள்ளய்யா[1] தயை கொள்ளய்யா" என்பதாகும். இவ்வரியின் சொற்பொருளை மட்டும் எடுத்துக் கொள்வோமெனில் — அந்த புலையரின் பாடல் என்பது அதிலொன்று. அப்பாடலின் பல்லவி

தட்டிதிக்கா![2] மாரி, முண்ட, முண்டாள!
பிறவிப்புலையனே! போலா! சண்ட சண்டாள!
பொட்டி பொக்குரே! என்று பெயர் சொல்லிக்கூவுவீர்
தொட அஞ்சுவீர் தூரச் சென்றிடுவீர்!

யாரைத் தாழ்ந்த இனத்தவர், துயரப்படுவோர் என்று சொல்லுகிறார்களோ அவர்களின் நிலையை இப்பாடல் வருணிக்கிறது. அவர்கள் தற்போது இருக்கும் நிலை, அவர்களுக்கு எதிராகப் போடப்பட்டுள்ள தடைகள் ஆகியன பற்றியும் கூறியுள்ளார். பாடல் மேலும் தொடருகிறது. இப்படிப்பட்ட பெயர்களைக் கொண்டு எங்களை அழைக்கிறீர்கள். எங்களைக் கூவி அழைத்துவிட்டு, தொடுவதற்கு பயப்படுகிறீர்கள். எங்கள் தொடர்பை வெறுக்கிறீர்கள். எங்களிடமிருந்து தூரதூரமாகப் போகிறீர்கள். உங்களுக்கு எல்லாமும் இருக்கிறது. பதவி, புகழ், சுதந்திரம் எல்லாம் உள்ளன. இவை எதுவும் எமக்கில்லை. நீங்கள் எங்களை நேசித்தால் விடுதலைப் போராட்டத்தில் நாங்கள் உங்களுக்கு உதவியாய் இருப்போம். நாட்டுக்குத் தொண்டு புரிவதிலும் உங்களுடன் சமமாக உழைத்திட எங்களுக்கு வாய்ப்பு கொடுத்திடுங்கள்.

நாங்கள் சுயராஜ்ஜியத்திற்கு ஊன்றுகோல் பார்!
நீடண்ணா! தம்மய்யா! கொடு சரி பங்கு!
வேண்டிக்கேட்கையில் விட்டுக்கொடுப்பதே மேல்!
வேண்டாம், நாங்கள் பறிப்போம் எம் பங்கு!

---

[1] உள + அய என்றும் கூட பதம் பிரித்திடலாம். ஆனால் இச்சொல்லின் மொத்த பொருள், பொருள் படைத்தவன், பணம் உள்ளவன் என்பதேயாகும். உள்ளவர், இல்லாதவர் என்றும் பொருள் கொடுக்கும்.

[2] தட்டிதிக்கா, மாரி, முண்ட, முண்டாள என்பன ஜாதிகளின் பெயர்கள். சண்ட, சண்டாள என்பன புலையர்களைக் குறிக்கும் சொற்கள். பொட்டி, பொக்குரே என்பன ஆட்களின் பெயர்கள். [பொக்குரே என்னும் சொல் நாயையும் குறிக்குமாம்].

எங்களுக்கு நியாயமாக எவையெல்லாம் சேர வேண்டுமோ அவற்றையெல்லாம் எங்களுக்குக் கொடுங்கள். நாங்கள் கேட்கும் போது கொடுத்தால் நீங்கள் அறிவு நிறைந்தவர்கள் ஆவீர்கள். இல்லையென்றால் உங்கள் கைகளிலிருந்து நாங்கள் பிடுங்கிக் கொள்வோம். எங்கள் இனத்தவரைக் கண்டு நீங்கள் கொள்ளும் வெறுப்பு மறைந்து போகட்டும். எங்கள் கரங்களைக் கெட்டியாகப் பிடியுங்கள் எங்கள் அன்பைப் பெற்று எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள். எங்கள் பக்கம் சற்றே மகிழ்ச்சியைக் காட்டுங்கள். அப்போது இந்துக்கள் யாவரும் போற்றிக் கொண்டாடும் தெய்வத்தின் கால் சலங்கை மகிழ்ச்சியால் ஒலிக்கட்டும்.

திரட்டும் புலையனின் மீதுள்ள பகை!
இணையட்டும் கைகள்! பெருகட்டும் புன்னகை
முகத்தில்! கூடட்டும் உள்ளத்தில் அன்பு!
ஒலிக்கட்டும் இந்துதேவியின் காற்சலங்கை மகிழ்ந்து!

பல நூற்றாண்டுகளாக மிதிக்கப்பட்டு நைந்து போயிருந்த ஒரு மனித இனத்தின் மேம்பாட்டிற்கு இப்பாடல் உதவிற்று என்றால், நீண்ட காலம் எழுதியவரின் பெயர் எதுவும் கூறப்படாமலேயே பரவியிருந்த இன்னொரு பாடல் — ஏனென்றால் அப்போது மங்கேசராவ் அரசு அலுவலராக இருந்தார் — இன்னும் சிறப்பானதாகும். இப்பாடல் தம் இனத்தைச் சேர்ந்த ஆண்—பெண்களுக்கு “தூக்கத்தைக் களைய வேண்டும், உட்கார்ந்திருக்கிறாயே நண்பனே!” என்னும் செய்தியைக் கூறுகிறது. தூக்கத்தை விட்டுவிட்டு விழித்தெழு, விழிப்புகொள், சோம்பலை விட்டுவிடு என்கிறது அப்பாடல்:

விட்டுவிடு ஐயத்தை துறந்துவிடு உடற்பொருளை
கடமை ஆற்று நாட்டின் வளத்திற்கு
நேரத்தைப் போக்காதே மூடனே பயப்படாதே!
மடிந்துவிடு இவ்வாழ்வின் பயன்தான் என்னே?

சந்தேகத்தைத் தூக்கி வெளியில் எறிந்துவிடு. பொருள், வாழ்க்கை ஆகியவற்றை விட்டுவிடு. தாய்மொழிக்குத் தொண்டுசெய்.

மடிந்ததோ சாகசம்? வற்றியதோ தைரியம்?
மீண்டும் மறந்துவிட்டோம் கர்ணனை நாம்!
எங்கே போயிற்று பரசுராமனின் வீரம்!
உனது இரத்தத்தில் இல்லையோ மறம்!
களைந்து விடுஉன் ஆன்மாவின் உறக்கத்தை!
எழுந்துவிடு! எழுந்துவிடு! திறந்துவிடு நயனத்தை!

இது வெறும் நாட்டுப்பற்றுப்பாடல் மட்டுமல்ல; இது மக்களின் உணர்வுகளைத் தட்டியெழுப்பும் பாடலுமாகும்.

இப்பகுதியை முடிக்கும் முன்பாக, எந்த நாட்டில் எந்த மக்களுடன் மங்கேசராவ் சிறிதுகாலம் வாழ்ந்து வந்தாரோ அப்படிப்பட்ட குடகு மக்களைப் பற்றியும் அவர்களுடைய வாழ்க்கையைப் பற்றியும் அறநெறிகளைப் பற்றியும் புகழ்ந்து எழுதிய "ஹுத்தரி பாடலின்" சிறப்பை இங்கு கூறியாகவேண்டும். அது மிகவும் சிறந்த, அழகிய பாடலாகும். தெற்குக் காற்றைப் பற்றிய பாடல் ஒரு விதத்தைச் சேர்ந்தது; ஹுத்தரிபாடல் இன்னொரு வகையைச் சேர்ந்தது. வெறெந்த மொழிக்கும் அதை மொழிபெயர்த்திடலாகாது. நான்கு வரிகளைக் கொண்ட சரணங்களுடன் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் வரும் நெறிப்படுத்தும் மூன்று வரிகள் புகழ்பாடுவனவாக உள்ளன. இவையாவும் சேர்ந்து பாடலுக்கு மிகுந்த அழகைத் தருகின்றன. இது வாழ்த்திசைப் பாடலாகவும், சேர்ந்திசைப் பாடலாகவும், தூதுப் பாடலாகவும் இன்னும் பல்வேறு கோணத்திலும் சிறப்பாயுள்ளது. நாம் இதுவரை படித்திருக்கும் அல்லது கேட்டிருக்கும் எந்தவொரு பாடலுக்கும் சமமாகவோ அல்லது அதைவிட சிறப்பாகவோ இருக்கக்கூடியது இப்பாடல். ஒவ்வொரு சொல்லிலும் காணப்படும் இசைநயம் மனதை மிகவும் கவரக்கூடியதாக உள்ளது; சொற்பொருள் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாறக்கூடியது. இத்தகைய இசை நயத்தால் தோன்றும் பொருள் மாற்றங்களை அப்பாடலில் உள்ள வரிகளை சரியானமுறையில் படிக்காவிட்டால் புரிந்துகொள்ளுவது எளிதல்ல. 'ஹுத்தரி' என்பது ஒரு திருவிழாவாகும். அத்திருவிழாவுடன் தொடர்புடையது இப்பாடல். அது கதிர்களை அறுத்து வந்து தானியங்களைப் பிரித்தெடுக்கும் அறுவடைக்காலமாகும். ஆண்களும் பெண்களும் பெரிய வயல்களில் சேருகிறார்கள். தமது இனத்திற்கு

உரிய ஆடைகளை அணிந்து கொண்டு பாட்டு பாடுகிறார்கள். தமது ஆட்டம் ஆடுகிறார்கள். ஆண்கள் வண்ணமயமான உடையணிந்தும் சரிகை வேலைப்பாடு அமைந்த உருமாலை கட்டியும் இடையில் கத்தியொன்றைக் கட்டிக் கொண்டும் ஆடுகின்றார்கள். அழகிய பெண்களும் வீரம் நிறைந்த ஆண்களும் இவ்வாறு சிறந்த வண்ண வண்ண ஆடைகளை உடுத்தி அழகாகத் தோன்றினர். கவர்ந்திழுக்கக் கூடியனவாக இருந்தன பெண்களின் கண்கள். ஆண்கள் உறையில் போடப்பட்டுள்ள தமது கத்திகளை தம் இடையில் கட்டியுள்ள விலைமதிப்புமிக்க சிவந்த பட்டாடைகளில் கட்டித் தொடங்கவிட்டிருந்தனர். இப்பாடல் அந்நாட்டின் அழகையும் மக்களின் சிறப்பையும் அவர்களின் சாதனைகளையும் சித்தரிக்கிறது. அப்பாடலை படிக்கும் அல்லது கேட்கும் யாரும் மயிர்க்கூச்செறியாது இருக்கமுடியாது. அப்பாடலின் இறுதி மூன்று வரிகள் அந்நாட்டிற்குக் காப்பாக உள்ளன. அவையாவன:

நிம்மதியை இது பெறட்டும்
தாயின் வலத்தோளில் இருக்கட்டும்!
நம்குடகிது என்றென்றும் வாழட்டும்!

வேறு சில கவிதைகளும் உள்ளன. அக்கவிதைகள் காப்பியங்களிலும் புராணங்களிலும் கூறப்பட்டுள்ள மாந்தர்களைப் பற்றிப் பேசுகின்றன; புலவர்களையும் காவியங்களையும் புகழுகின்றன. கன்னட மக்கள் எத்தகைய பொருட்களையும் பேறுகளையும் ஈட்டியுள்ளனர் என்பதை இது விவரிக்கிறது. ஒட்டு மொத்த இந்திய நாட்டில் உள்ள மொழிகளுடன் கன்னடமொழியை ஒப்பிட்டு நோக்கினால் இன்றளவும் கன்னடமொழிக்கு ஒரு நல்ல இடம் கிடைக்கவில்லை. அரசியல் அமைப்புச் சாசனத்திலும், அரசியலிலும் கன்னடமொழிக்கு ஒரு இடம் கொடுக்கப்பட்டிருப்பினும் இலக்கியத்தைப் பொறுத்த அளவில் அவ்வளவாகச் சிறப்பானதாக இருக்கவில்லை; பெயரோ புகழோ ஈட்டவில்லை. ஒருவேளை, அவர்கள் ஊக்கம் இல்லாதவர்களோ என்னவோ! அவர்களால் அதிகமான ஆபத்துமில்லை. அவர்கள் அமைதியானவர்கள், எதிர்க்கும் உணர்வு இல்லாதவர்கள், அவர்கள் நாத்திகர்களோ வேதங்களை எதிர்ப்பவர்களோ அல்லர். அதனால்

அவர்கள் அலட்சியப்படுத்தப் பட்டிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. அவர்களால் கெடுதல் ஏதுமில்லை என்பது இத்தகைய நிலைக்குக் காரணமாயிருக்க வேண்டும். பஞ்சே மங்கேசராவ் அவர்களுக்கு இது தெரிந்திருந்தது. எத்தனையோ நூற்றாண்டுகளாகக் கன்னட மக்கள் இந்த மாதிரியான அமைதியை விரும்பும், இணைந்து வாழ்க்கை நடத்தும் ஒப்புறவுச் சிந்தனை கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள். தமக்கு நியாயமான உரிமைகள் உள்ள இடங்களில் அந்த உரிமைகளை நிலைநாட்டப் போராட்டம் நடத்தும் இயல்பு இல்லாதவர்கள். சிலவேளையில் போராட்டங்களும் கலகங்களும் நிகழ்ந்திருக்கின்றன என்பது உண்மைதான். அதைப் பற்றி ஐயம் ஏதுமில்லை. எனவே மனிதர்கள் மனிதர்கள்தான். சீதை சொல்லவில்லையா, தவறு செய்யாதவர்கள் யாரும் இல்லை என்று?

### மங்கேசராவும் அவர் குடும்பமும்

எப்படிப்பட்ட மனிதர் அவர்? அவருடைய குணவியல்புகள் எத்தகையன? என்பதைப் பற்றிய ஒரு சித்திரத்தை அளிப்பதற்காக அவர் தம் வீட்டில் தன் மனைவி மக்களுடன் எவ்வாறு நடந்து கொண்டார் என்பது பற்றிய சில செய்திகளை இங்கு சுருக்கமாகக் காண்போம். கூடவே, அவரைப் பற்றி அவருடைய நண்பர்களும், அவரைப் பாராட்டுபவர்களும் தெரிவிக்கும் சில செய்திகளையும் இங்கு காண்போம்.

மங்கேசராவ் நடுத்தர உயரத்தோடு அழகிய மை வண்ணம் கொண்டு எடுப்பான தோற்றம் கொண்டவராவார். அவர் அவயவங்களில் ஒரு சிறப்பான உயிர்த்துடிப்பு இருந்தது என்பதைவிடப் பொங்கிவழியும் ஆர்வம் மிகுந்திருந்தது என்பதே சரியான விளக்கமாக இருக்கமுடியும். பேசிக்கொண்டிருக்கட்டும், மக்களின் நடுவில் கலந்து பழகிக் கொண்டிருக்கட்டும்! அகன்ற நெற்றி; வெள்ளிபோல் மின்னும் மீசை இவற்றுடன் அவர் பேசுவதைக் கேட்க மிகவும் ஆனந்தமாயிருக்கும். எந்தவொரு செய்தியையாவது சரியாகக் கூறவேண்டும் என்ற பொழுதிலும், மிகவும் பொருள் பொதிந்தது அது என்று வலித்திக்கூறும் பொழுதிலும், அவர் மனம் மகிழ்ச்சியுடன் இருக்கும் பொழுதிலும் அவரது பேச்சு மிகவும் சிறப்பாக அமையும். இது மறக்கமுடியாத நினைவு. நன்பர் ஒருவரைப் பார்க்கும் பொழுதுதான்

அவருக்கு எவ்வளவு மகிழ்ச்சி! அவர் செய்த செயல்கள் தற்போது செய்து வரும் செயல்களைப் பற்றிய திட்டங்கள் போன்றன குறித்து விசாரிப்பார். அவையில் ஒருவரைப் பிறருக்கு அறிமுகப்படுத்தும் பேச்சும், இறுதியில் நண்பரின் பேச்சு முடிந்த பின்னர் இவர் பேசும் பேச்சும் மிகவும் அழகாக இருக்கும். அவர் மிகவும் அரிதாகத்தான் கோட்டு போட்டார். வெளியில் வரும்போது துண்டு போன்ற ஒன்றை மேலே போர்த்துக் கொண்டு வந்தார். வீட்டில் இருக்கும்போது கைகளில்லாத பனியனை அணிந்திருந்தார்; அல்லது மார்பில் துணி ஏதுமில்லாமல் இருந்தார். தமது வீட்டுமுற்றத்தில் இருக்கும் போது அங்கு அவர் உட்கார்ந்தது மிகவும் அரிது. ஒருபுறத்திலிருந்து மற்றொரு புறத்திற்குப் புகைத்துக் கொண்டோ அல்லது புகைக்காமலோ சென்று கொண்டிருப்பார். அவரது அன்பும் ஆதரவும் பற்றும் பாசமும் தடையில்லாதன. நான் அவர் வீட்டிற்குப் போன போது என்னை வீட்டில் தங்கவைத்துக் கொண்டார். அப்போது அவரது மூத்தமகனும் அங்கு வந்திருந்தார். சாப்பாடு முடிந்த பின்னர் "நீயும் உன் மனைவியும் உங்கள் அத்தை வீட்டுக்குப் போய் தங்கிக் கொண்டு உன் அறையை என் நண்பருக்கு ஒதுக்கிக்கொடு" என்று சொன்னார் மங்கேசராவ். எவ்வளவு சிறப்பான முடிவு! மகளும் மருமகனும் வீட்டிற்கு வந்தாலோ அவருக்கு மட்டில்லா மகிழ்ச்சி; ஒருபுறம் அவர்கள் தங்குவதற்கு அறை ஒதுக்கப்படும்; மறுபுறம் அவர்களின் தேவைகள் கவனிக்கப்படும். அவருடைய குரல் வளமும் சொல் இனிமையும் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். "நம் ஊரில் நல்ல ரஸ்க் தயாரிக்கிறார்கள்" என்று சொல்லி நான் பெங்களூருக்குத் திரும்பப் புறப்படும்போது ஒரு டின் நிறைய ரஸ்கும், நல்ல தேனும் ஜாமும் கொடுத்தார். "இவை இரண்டும் நம்மூரில் மிகவும் புகழ்பெற்றவை" என்று சொன்னார். தமது குழந்தைகளுடன் பேசும் பொழுதும் மனைவி மற்றும் பிறருடன் பேசும்பொழுதும் சொற்கள் மிகவும் இயல்பாகவும் அழகாகவும் வாயிலிருந்து வெளிப்படும். அத்தோடு பெரும்பாலும் நகைச்சுவையும் நிறைந்திருக்கும். அவர் பேசாமல் தமது மனதிற்குள்ளேயே வைத்துக் கொண்ட எண்ணங்கள் ஏதுமில்லை என்று பொருளல்ல. ஒருமுறை இப்படியாயிற்று: அவருடைய கவிதைகள் எல்லாவற்றையும் தொகுத்து ஒரு கவிதை நூல் வெளியிடலாம் என்று கூறினேன். அதுவேண்டாம், விட்டுவிடுங்கள் என்று சொல்லிவிட்டார். தமது பெயரில் ஏதாவது ஒரு திருவிழா நடத்தப்படவுள்ளது என்று கேள்விப்பட்டால் அந்த இடத்திலிருந்து ஓடிப்போய்விடுவார் என்று அவருடைய மகள் கூறுகிறார். ஆனால் அதுவரை அவ்வளவாக நன்கு அறிமுகமாகி

இருக்காத புதியவர் ஒருவர் எழுதிய நல்லதொரு கவிதையை அல்லது கட்டுரையைக் கண்டால் அதை மிகவும் போற்றி மகிழ்வார். அவருடைய பாராட்டையும் புகழ்ச்சியையும் கேட்டு அந்த ஆரம்ப எழுத்தாளர்கள் மிகவும் வியப்படைவார்கள். முதன்முதலாக இதைக் கேட்பவர்கள், இதில் அவருக்கு அவ்வளவாக விருப்பில்லை; கேலி செய்கிறார் என்பது போன்று எண்ணத்தோன்றும். ஆனால் விரைவில் நாம் புரிந்து கொள்வோம் அவர் கேலி செய்து பேசுவது அப்பாடல்களையும் எழுத்துக்களையும் பாராட்டாத மக்களைக் குறை கூறுவதற்குத்தான் என்பதை. அவரது பேச்சின் தன்மையையும் பொருளையும் புரிந்துகொண்டு எல்லோரும் சிரிப்பார்கள்; மனமகிழ்வார்கள். அவரைப் புரிந்து கொள்ளாத சிலருக்கு அவருடைய நகைச்சுவையானது குறும்புத்தனம் நிறைந்தது என்று தோன்றினாலும் அது வெறும் விளையாட்டுத்தனம் மட்டுமே நிறைந்தது. அவருடைய பேச்சுக்களில் அன்பும் நற்பண்பும் நிறைந்திருந்தன. அந்தச் சமயங்களில் அவர் பேச்சுக்கு எதிர் பேச்சு பேச யாரும் துணிவதில்லை. தாம் கூறுவதைப் பொறுப்புடன் கவனிக்கும் எவருடைய மனத்தையும் மாற்றிவிடும் தன்மை கொண்டவர் அவர்.

அவர் தமக்கு வரும் கடிதங்களுக்கு அவ்வளவாகப் பதில் கடிதம் எழுதுவதில்லை என்று வீட்டில் உள்ளவர்களும் வெளியில் உள்ளவர்களும் சொல்லுவதுண்டு. எனவே அவருக்கு அதிகக் கடிதங்கள் வருவதும் கிடையாது. வீட்டோடு தொடர்புடைய ஏதாவது ஒரு அவசர வேலையிருந்தால் மட்டுமே உடனே கடிதம் எழுதும் இயல்பு கொண்டவர். ஒரு கார்டுக்கு மேற்பட்டு அதிகமாக அவர் கடிதம் எழுதுவது மிகவும் அரிது. ஹைதராபாத்தில் [1930] அவருடைய இரண்டாம் மகன் கோபாலராயர் வழக்கறிஞராகத் தொழில் மேற்கொண்டு தங்கப் போவதாகத் தீர்மானித்தபோது அவர் எழுதிய கடிதம் இது:

1. முதற்கண் உன் உடல்நலத்தைப் பற்றிக் கவனமாக இருக்கவும். உடல்நலத்தைக் கவனித்துக்கொள். பணச்செலவைப் பொருட்படுத்தாமல் உடல் நலத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும். 2. உன்னிடத்தில் வரும் கேசுகளை நன்கு கவனித்து ஆராயவும். நீதி மன்றத்தைத் தவிர்த்து வேறு எங்கும் அதைப் பற்றிப் பேசவேண்டாம். உன் கட்சிக்காரர்கள் எப்போதும் எந்தச் சூழ்நிலையிலும் உன்னை அணுகும் விதத்தில் நீ இரு. அவர்களிடத்தில் சிடுசிடுப்பாய்

எப்போதும் இருக்காதே. அவர்கள் கூறும் செய்திகளைக் காதுகொடுத்துக்கேள். அவர்களின் பாராட்டைப் பெறுவதற்கு எப்போதும் பாடுபடு. உன் கேசில் நீ வெற்றி பெறுவதற்காக நியாயமற்ற முறைகளில் ஈடுபட வேண்டாம். லஞ்சம் கொடுத்தோ அல்லது பொய் சாட்சி கூறவைத்தோ வெற்றி பெற்றிட முயலவேண்டாம். நீ எப்போதும் நேர்மையைப் பின்பற்றக் கூடியனவாக இருந்திட வேண்டும். அந்த நற்பெயரை நீ ஈட்டிட வேண்டும். தேவையான சட்ட நூல்களைத் திரும்பத் திரும்ப நுணுகிப்படிக்கவும். தினமும் ஒரு நேரத்தை அதற்கெனச் செலவிடு. அவ்வாறு செய்தால் இன்னும் மூன்று வருடத்திற்குள் நீ ஒரு தலைசிறந்த வழக்கறிஞர் என்ற நற்பெயரைச் சம்பாதித்திடமுடியும் என்று எனக்கு நம்பிக்கையுள்ளது. உன்னுடன் உன் மனைவி இருக்கவேண்டியது அவசியம் என்று நீ கருதினால் கடிதம் எழுதி அனுப்பி வைக்கிறேன். உன் தாயையும் நீ உன்னுடன் அழைத்துக் கொள்வது நல்லது என்று நான் எண்ணுகிறேன். இதன் மூலம் என்னுடைய பணி ஓய்வுக் காலத்தில் நான் என் செலவுகளைக் கட்டுப்படுத்தமுடியும்.

இரண்டாம் மருமகள் மீரா கோபாலராயருக்கு ஒருமுறை இவ்வாறு கடிதம் எழுதினார்.

"... தற்போது இசையில் எந்த அளவுக்கு நீங்கள் இருவரும் தேர்ச்சி பெற்றுள்ளீர்கள்? அடிக்கடி ஆசிரியர் வராமல் இருந்ததுவிடுவதால் இசைப்பயிற்சி சரியாக நடைபெறாது உங்கள் முன்னேற்றம் தடைபட்டுள்ளதே? தற்போது இரண்டு தாளங்களாவது தெரியுமா? நீங்கள் இருவரும் ஒன்று சேர்ந்து தாளத்திற்கு ஏற்ப பாடமுடியும் என்றால் எனக்கு மிகவும் மகிழ்ச்சியாயிருக்கும். உன்னுடைய முன்னேற்றத்தையும் சாந்தாவின் முன்னேற்றத்தையும் கண்டு உன் கணவனுக்கு மகிழ்ச்சியா? ஓவியக்கலை வகுப்பிற்குக் கட்ட வேண்டிய கட்டணம் பற்றி எழுதியிருப்பதைக் கவனித்தேன். நீ பயிற்சியில் சேர்ந்து பாடங்களைக் கற்றுவந்தால் நல்லது. இல்லையெனில் அத்திட்டத்தை வரும் ஜூலை மாதம் வரை தள்ளிப் போடவும். அப்போது அதிக நேரத்தை அப்பயிற்சிக்கு நீ ஒதுக்கிட முடியும். எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் நீ அவற்றைக் கற்றுக் கொண்டுவிட வேண்டும். கலைகளைக் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரை நான் தேடி வருகிறேன். அவர் உங்களுக்குப் பயன்படக் கூடியவராய் இருக்கவேண்டும். அப்படிப்பட்ட ஒருவர் இன்னும் எனக்கு கிடைக்கவில்லை."

"உனது கணவன் மோட்டார் வண்டி வாங்குவதற்கு முன்பு நீ அதை ஓட்டுவதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும். இது எனது தந்திரம் என்பது உனக்குத் தெரிந்திருக்கும். உனது அன்றாட வேலைகள் மிகவும் அதிகம். அதனால் கார் ஓட்டக் கற்றுக்கொள்வதற்கு உனக்கு ஓய்வு கிடைக்காது. அதுவரைக்கும் என் பணம் என் கையிலேயே இருக்கும்; உன் கணவனின் கைக்கு வந்து சேராது. உன் கவனம் பல வழிகளில் செல்ல வேண்டியுள்ளது. சமையல் செய்ய வேண்டியது, வேலைக்காரர்களைக் கவனித்துக் கொள்வது, காய்கறி வாங்குவது, தாரா—சாந்தா இருவரின் நலனைக் கவனித்துக் கொள்வது, கோபாலனின் தேவைகளைப் பார்த்துக் கொள்வது, கணக்குகளை எழுதி வைத்துக் கொள்வது... போன்ற பலவற்றை நீ பார்த்துக் கொள்ள வேண்டியுள்ளது. இவ்வாறு இருக்கும்போது ஆங்கிலம் கற்பதற்கு உனக்கு எவ்வாறு நேரம் இருக்கிறது? எவ்வாறு இசையையும் தட்டச்சையும் கற்கிறாய்? நன்கு கன்னடம் படிப்பதற்கும் ஓவியக்கலையைக் கற்பதற்கும் எப்படி நேரம் ஒதுக்குகிறாய்? எத்தனை கதைகளை நீ மீண்டும் படித்தாய்? ஷர்லக் ஹோம்ஸ் கதைகளில் எத்தனை புதிய கதைகளை நீ படித்துள்ளாய்?"

அவருடைய மூத்த மகள் 1918ம் ஆண்டில் இறந்தார். கே. எஸ். உபாத்யாயா என்னும் பெயர் கொண்ட மங்களூரைச் சேர்ந்த இவருடைய ஆசிரிய நண்பர் இந்த மறைவு குறித்து இவருக்கு ஆறுதல் கடிதம் எழுதியதற்குப் பதில் கடிதம் எழுதினார். அந்தப் பதில் கடிதம் இவ்வாறு இருந்தது:

இந்த அகால மரணத்தினால் நான் அடைந்த வருத்தம், எனது நண்பர்கள் எனக்கு எழுதிய பல கடிதங்களால் சிறிதளவு குறைந்தது. பிறப்பும், இறப்பும் இயற்கையே. பழுத்த பழங்கள் கீழே விழுந்து விடும். இது இயற்கையின் விதி. அப்பழத்தை யாராவது பறித்தால் அப்போதுதான் அந்த மரம் தான்பட்ட துன்பத்தை உணரும். அவரவர் துன்பத்தை அவரவர் தான் உணர வேண்டும். பிறந்தவர்கள் ஒருநாள் இறந்தே தீரவேண்டும் என்பதை எல்லாச் சாத்திரங்களும் கூறுகின்றன. மறுபிறப்பு உண்டு என்ற கருத்தில் அபிப்பிராய பேதம் உள்ளது. இறப்பை எண்ணி மனிதர்கள் தங்கள் கடமையைச் சரிவரச் செய்யாமல் இருந்துவிடக் கூடாது. இறப்பு என்ற எண்ணம் ஒருபோதும் மனிதனை ஆள அனுமதிக்கலாகாது. இறக்குமுன் ஒவ்வொருவரும் தன்னால் இயன்ற சேவையை நாட்டிற்கும்

சமூகத்திற்கும் செய்ய வேண்டும். ஆசிரியர்கள் இதனை உணர்ந்து செயல்பட்டால், இறப்பு கொடூரமானதாகத் தோன்றாது; துக்கத்திற்கு காரணப்பொருளாக ஒரு போதும் அமையாது.

மூன்று ஆண் பிள்ளைகளுள் இப்போது இருவர் காலமாகிவிட்டனர். இரண்டாம் மகன் கோபாலராயர் மாவட்ட நீதிபதியாகவும் பின்னர் புகழ்பெற்ற வழக்குரைஞராகவும் இருந்து ஹைதராபாத் அரசின் சட்ட ஆலோசகராக இருந்தார். தேர்ந்த கலையறிவு நிரம்பப் பெற்றவர். மங்கேசராவின் மற்ற குழந்தைகளைப் போன்றே இவரும் அன்பும் நேயத் தன்மையும் கொண்டவர். தந்தையின் பாடல்களைப் பாடவேண்டும் என்று எண்ணிப் பாடிய பொழுது ஒருமுறை தன் சுய நிலையை இழந்து மெய் மறந்துவிட்டார். மங்கேசராவின் நூற்றாண்டு விழா கொண்டாடுவதற்குச் சற்று முன்னர் ஒரு பேருந்து விபத்தில் துக்ககரமான சூழ்நிலையில் அவருடைய கடைசி மகன் காலமானார். மங்கேசராவ் எழுதிய எல்லாவற்றையும் தொகுத்து அவற்றை அச்சிட்டு வெளியிட்டுள்ளனர். அதனை ஓரியண்ட் லாங்க்மேன் நிறுவனத்தார் வெளியிட்டுள்ளனர். அவரது படைப்புகள் ஒவ்வொன்றும் அவ்வளவாகப் பெரியன அல்ல; எனினும், அவருடைய எழுத்துகளில் மங்கேசராவின் இயல்பும் பன்முகப் பார்வையும் தெரியவரும். கடைசி மகனின் பெயர் பஞ்சே ராமராவ் என்பதாகும். அவர் வேதியியல் துறையில் கல்வி பெற்று சர்க்கரை தயாரிக்கும் தொழில் நுட்பத்தில் தேர்ச்சி பெற்றிருந்தார். சர்க்கரை பற்றிய தொழில்நுட்பக் குழுவின் இயக்குநராக இருந்தார். அவருக்கு மேற்கத்திய இசையில் நல்ல புலமை இருந்தது. மூத்த மகன் முகுந்தராயரை நான் ஓரிரு முறை மட்டுமே பார்த்திருக்கிறேன். நூற்றாண்டு விழாவின்போது மகளுடன் மேடைமீது ஏறி தந்தையின் பாடலைப் பாடவேண்டி ஏற்பட்ட பொழுது தம்பியாகிய கோபாலராயரும் உடன் இருந்ததால் உணர்வுப் பெருக்கேற்பட்டு மேற்கொண்டு பாடமுடியாமற் போய்விட்டது. அவர் பொறியியல் வல்லுநராக இருந்தவர். அப்படிப்பட்ட வயதான ஒருவர் எப்படிப்பட்ட அன்பையும் ஆதரவையும் பெற்றிருந்தார் என்பது அதில் தெரியவருகிறது. மங்கேசராவின் அன்றாடப் பழக்க வழக்கங்கள் என்னென்ன? வீட்டில் அவருடைய ஆளுமை எவ்வாறு இருந்தது? என்பனவற்றை அறிந்து கொள்ளுவதற்காக மூத்த மகள் திருமதி அனுசூயா ராமசந்திரராவ் அவர்களுக்கும் சிறிய மகளாகிய

சாந்தா ரமேஷ்வரராவ் அவர்களுக்கும் கடிதங்கள் எழுதி பதில் பெற்றேன். அனுசூயா தேவி பம்பாயில் வாழ்ந்து வருகிறார். சாந்தாதேவி சிகந்திராபாதில் இருக்கிறார். அக்கடிதங்களில் அவருடைய சிந்தனைகளில் ஏற்பட்டிருந்த மாற்றங்களையும் செயல்களில் ஏற்பட்டிருந்த வளர்ச்சியையும் காணமுடிந்தது.

### பண்பும் பின்பற்றிய பாதையும்

மங்கேசராவ் அவர்கள் எப்போதும் அன்பும் நகைச்சுவை உணர்வும் நிறைந்தவராக விளங்கினார். இப்படிப்பட்ட அரிய சிறந்த குணங்கள் நிரம்பிய அரும்பெரும் செல்வத்தைத் தாம் இழந்துவிட்டோம் என்பதை அவருடைய குழந்தைகள் இப்போது உணர்ந்துள்ளார்கள். ஒருவர் நம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கையில் நாம் அவரைப் பற்றி அறிந்து கொள்வதைவிட அவர் நம்மிடையே இல்லாத போது அவருடைய அருமையை மிகத் தெளிவாக உணருகிறோம். இதுதான் வாழ்க்கையின் விசித்திரம்!

மங்கேசராவ் அவர்கள் பிறருடன் எவ்வளவு நேயமாகப் பழகினார் என்பதை நாம் அறிந்துள்ளோம். அவருக்கு மிகவும் பரந்த மனது. ஏதாவது ஒரு கொள்கையிலோ அல்லது செயலிலோ மனத்தை ஈடுபடுத்திவிட்டார் என்றால் அதைப்பற்றி எவ்விதமான பயமும் இல்லாமல் செயல்பட்டார். பள்ளிக் குழந்தைகளின் கல்விப் பயிற்சியை மேம்படுத்துவதில் மிக்க ஆர்வம் காட்டினார். ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவும் உழைத்தார். பள்ளிகளில் பாடம் கற்பிக்கப்படும் முறையையே மாற்றிவர். படைப்பிலக்கியத் துறையில் தம்மால் ஆகக்கூடிய எல்லாவற்றையும் செய்து முடித்திடவேண்டும் என்னும் எண்ணம் கொண்டவர். யாரெல்லாம் பொதுமக்களுக்கான தொண்டுகளைச் செய்வதற்குத் தம்மை காணிக்கையாக்கிக் கொள்ளுகிறார்களோ அவர்களுக்கெல்லாம் தமது சொந்த வீடுகள் பற்றிய சிந்தனை மிகவும் அரிதாகவே இருக்கும். கன்னட மொழியில் கல்விபற்றிய பழமொழி ஒன்றுள்ளது. "ஊர்க்கவலைப் பட்டு வீரசெட்டி ஏழையானான்". அவ்வாறு செய்வது அதற்கு மாறாக நடந்து கொள்வதைவிட மிகவும் பயனுள்ளது என்பதைக் கூற வேண்டிய அவசியம் இல்லை. இன்னொரு பழமொழியும் உள்ளது. "மாடு வைத்திருப்பவன் குழந்தைகளுக்குப் பாலில்லை". இப்பழமொழியானது மாடுவைத்திருப்பவன் வீட்டில் உள்ளவர்களே பாலைக் குடித்துவிட்டால் அவன் பிழைப்பது எவ்வாறு? என்பதை

அடிப்படையாகக் கொண்டது. மங்கேசராவ் அவர்கள் வீட்டிலிருந்தாலோ வீட்டில் உள்ளோருக்கு எல்லையில்லா மகிழ்ச்சி. இவர்கள் குடும்பத் தலைவியான இவரது மனைவி அமைதியானவர். கணவன் மீதும் குழந்தைகள் மீதும் மிகுந்த பாசம் கொண்டவர். அவருடைய மனம் எப்போதும் அதைப்பற்றிய சிந்தனையிலேயே இருந்தது. வீட்டில் உள்ள மற்றும் வீட்டுக்கு வந்த எல்லோரின் மீதும் அன்பும் பரிவும் காட்டுவார். ஒரு மனைவி, ஒரு தாய் எப்படி எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இருந்தார். வீட்டிற்கு விருந்தினர் யாரேனும் வந்தால் வீட்டுத் தலைவிக்கும் பெண்களுக்கும் தானே எல்லா வேலைகளும் சிரமங்களும்? விருந்தினர்களை அவர் எவ்வாறு உபசரித்தார் என்பதைச் சற்று பின்னர் காண்போம்.

பஞ்சே மங்கேசராவ் அர்ச்சகர் ஒருவரின் வீட்டில் பிறந்தபோதும் அவர் மிகுந்த உலகியல் சிந்தனையும் விழிப்புணர்வும் கொண்டவராக இருந்தார். சிறு வயதிலேயே இவருக்குச் சமுதாயத் தொண்டில் மிகுந்த ஈடுபாடு இருந்தது. தம்முடைய இனத்தைச் சேர்ந்தவர்களும் சுற்றிலுமுள்ள பகுதிகளில் வாழ்பவர்களும் பின்பற்றும் பல்வேறு சமுதாயப் பழக்க வழக்கங்களும் மதம் தொடர்புள்ள செயல்களும் இவருக்குத் தெரிந்திருந்தன. ஆனால் ஒரு விஷயம் குறிப்பிடத்தக்கதாகும். சமுதாயப் பிரச்சினைகள் என்று அழைக்கப்படும் பல பிரச்சினைகள் பிராமண இனத்தோடு மட்டுமே தொடர்புடையன. அவருடைய மனது எப்போதும் சுறுசுறுப்பாக செயற்பட்டது. நாம் கடைப்பிடிக்கும் பழக்கவழக்கங்களுக்கும் நெறிகளுக்கும் பின்னணியாக விளங்கும் காரணங்களைப் பற்றியெல்லாம் அவர் சிந்தித்தார். ஆங்கில இலக்கியம், மேற்கத்திய கல்வி பயிற்றுமுறை இவையிரண்டையும் அவர் நன்கு அறிந்திருந்தார். அதற்கும் மேலாக, பௌர்ன், யோட்ஸ், லட்ல் ஹெல்ஸ் போன்ற ஆங்கில அதிகாரிகளுடன் ஏற்பட்ட தொடர்பு புது அனுபவத்தைக் கொடுத்தது. மேலும், பேசல் மிஷன் அமைப்பைச் சேர்ந்தவர்கள் ஏற்படுத்திக் கொடுத்த வழிகளின் பலனாய் அவருடைய பார்வை அகலமாயிற்று; சிந்தனை கூர்மையாயிற்று. அவருடைய சிந்தனைத் திறம் ஒரு புதிய உத்வேகத்தையும் ஆற்றலையும் பெற்றது. மத நெறியிலும் சமுதாய மற்றும் பண்பாடு தொடர்பான நடைமுறைகளிலும் மக்கள் பின்பற்றும் நடவடிக்கைகளுக்குப் பொருள் கண்டுணர்ந்து அவற்றைப் போற்றுவதும் இதனால் இவருக்கு இயலக்கூடியதாயிற்று.

புறத்தோற்றம் முக்கியமானதல்ல; உண்மைத் தோற்றமே முக்கியமானது. சொல் முக்கியமல்ல; அதன் பொருளே முக்கியமானது என்பன அவர் நம்பிக்கைகள். அவருடைய மனத்தை இவை மிகவும் கவர்ந்தன. இரவும் பகலும் அவர் எந்த வேலையில் ஈடுபட்டிருந்தாரோ, மக்களின் நடுவே ஓடியாடி எவற்றைச் செய்தாரோ அவை எல்லாவற்றிலும் இதன் பிடிப்பு இருந்தது. தனது உபநயனச் சடங்கு எவ்வாறு நடைபெற்றது என்பதை அவருடைய மகனாகிய முகுந்தராயர் பின்வருமாறு கூறுகிறார்:

"ஒரு நாள் மாலை எனது தந்தை, தாயிடம் மறுநாள் காலை எல்லோரும் விரைந்து குளிக்கவேண்டும் என்று சொன்னார். எந்த உணவும் உண்ணக்கூடாது என்றும் சொன்னார். மர்மமான இத்தகைய உத்தரவுகள் எதற்காக என்று எங்கள் யாருக்கும் விளங்கவில்லை. எங்கள் தாய்க்கும் எதுவும் புரியவில்லை. இது நடந்தது 1911ல் என்று எண்ணுகிறேன். அப்போது எனக்கு சுமார் ஒன்பது வயது."

"மறுநாள் பொழுது புலர்வதற்கு முன்பே திருக்கோவில் அர்ச்சகர் என்னென்னவோ பொருட்களைக் கொண்டு வந்தார். போடப்பட்டிருந்த இரு பலகைகளின் மீது எனது தாயும் தந்தையும் அர்ச்சகரும் உட்கார்ந்தனர். பட்டு வேட்டி ஒன்றைக் கட்டிக் கொள்ளவேண்டும் என்று என்னை அழைத்தனர். எனது கையில் புனிதமான ஒரு கோலையும் பூணூலையும் கொடுத்தனர். என் தந்தையார் காயத்ரி மந்திரத்தை எனக்குச் சொல்லிக் கொடுத்து மிகவும் எளிய விதத்தில் அதன் பொருளைக் கூறி வேதத்தில் உள்ள மந்திரங்களின் முழுப் பொருள்களையும் சிறப்புக்களையும் விளக்கினார். இந்த நிகழ்ச்சி நடந்து முடிந்தது. எந்தவொரு செயலையும் பகட்டாகச் செய்ததில்லை; மிகுந்த செலவு செய்ததில்லை. ஆனால் எல்லாவற்றையும் அவர் சாதித்துக்கொண்டார்".

இந்த ஆசாரங்கள் மிகவும் எளிமையானவையாகும். மிகவும் விரைவாக முடிந்தன. இவ்வாறேதான் முகந்தராயரின் திருமணமும்கூட மிகவும் எளிமையாக நடைபெற்றது. உல்லாள் மங்கேசராயர் என்பவரின் வளர்ப்பு மகளை முகுந்தராயருக்குத் திருமணம் செய்து வைத்தார். உல்லாள் மங்கேசராயர் அவர்கள் பஞ்சே மங்கேசராவிற்கு உயர்துவக்கப்பள்ளியை நடத்துவதில் மிகுந்த உதவி புரிந்தவர். குழந்தை இலக்கிய மன்றத்தைத்

தோற்றுவிப்பதிலும் அதை நடத்துவதிலும் அவருக்கு உதவிக்கரம் நீட்டியவர். உல்லாள் மங்கேசராயரின்[1] தம்பி மகள்தான் என் மனைவி. ஆரம்பத்திலிருந்தே அவள்தான் எனக்கு மனைவியாக வரப்போகிறவள் என்று தேர்வு செய்யப்பட்டவள். எனது தந்தை தான் அவளைத் தேர்ந்தெடுத்தார். உபநயன நிகழ்ச்சி நடைபெற்றதைப் போன்றே திருமண நிகழ்ச்சியும் மிகவும் எளிமையாகவும் சரளமாகவும் நடைபெற்றது. பேச்சுவார்த்தைகளோ மறுப்புக்களோ எவையும் இல்லை. சாதாரணமாகக் காணப்படும் பகட்டும் படாடோபமும் இருக்கவில்லை. இந்நிகழ்ச்சிகளை என் தந்தை நீண்டநாட்களுக்கு முன்பே சிந்தித்து முடிவெடுத்து வைத்திருந்தார். ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னர் நம் நாடானது இத்தகைய சில திட்டங்களை இப்போதுதான் செயற்படுத்தி வருகிறது."

"வீட்டில் பூசைசெய்வதும் சடங்குகளைக் கடைபிடிப்பதும் எங்கள் தாயின் வேலையாக மட்டுமே இருந்தது. அவர் குடும்பத்தின் தாய். அவர் நம் கண்ணில் என்னவோ படுவதுண்டு; ஆனால் குரல் யாருடைய காதிலும் அதிகம் வீழ்ந்ததில்லை'. திருமதி அனுசூயாவின் கடிதத்திலிருந்து தெரியவரும் செய்திகள் இவை. அக்கடிதத்திலிருந்து மங்கேசராவின் வாழ்க்கை முறைகள் நம்பிக்கைகள் எவ்வளவு எளிமையானவையாகவும் முழுமை பெற்றனவாகவும் இருந்தன என்பது தெரியவருகிறது. இறைவனிடம் அவருக்கு நம்பிக்கை இருந்தது. வெறும் ஆசாரத்தில் எந்த நம்பிக்கையும் இல்லை. நமது வீட்டில் மூடநம்பிக்கைகள் எதுவும் இல்லை. வீட்டில் எந்த பூஜையையும் அவர் செய்யவில்லை. அவற்றை எல்லாம் எங்கள் தாய் கவனித்துக் கொண்டார். எப்போதும் இனிய குரலில் தானாகவே பாடிக் கொண்டிருப்பார். புரந்தரதாசரின் 'கண்கள் இருப்பது எதற்காக?' என்னும் பாடலை பாடிக் கொண்டு இருப்பதைக் கேட்கலாம். நான் எத்தனையோ முறை இதைக்

---

[1] உல்லாள் மங்கேசராயர் என்பவர் இப்சென் எழுதிய 'மக்களின் பகைவன்' மற்றும் 'பொம்மை வீடு' என்பனவற்றையும் கைலாசம் அவர்களின் 'விருப்பமும் நிறைவேறுதலும்' என்னும் நாடகத்தையும் கன்னடத்திற்கு மொழிபெயர்த்துள்ளார். இவ்வாறு இவர் தமது சொந்தத் தகுதிகளின் அடிப்படையில் இலக்கியவாதியானார் என்று யாரும் ஐயப்படமுடியாது. ஆனால் இவர்களிருவரும் இரட்டைக் குழந்தைகளைப் போன்றே நடந்து கொண்டார்கள். உல்லாள் அவர்களின் வளர்ப்பு மகளுடனா திருமணம் என்று நான் அவரைக் கேட்டேன்.

கேட்டுள்ளேன். அப்பாடல் அவருக்கு மிகவும் பிடித்தமானது. கீதையிலிருந்தோ அல்லது வேதங்களின் பாடல்களில் இருந்தோ ஆதிசங்கரரின் பஜகோவிந்தம் புகழ்மாலையிலிருந்தோ பாடல்களைப் பாடி மகிழ்ந்து கொண்டிருப்பார். 'மாலைப்பாடல்' 'எட்டு வேண்டாம்கள்' ஆகிய தலைப்பிலான அவருடைய கருத்துக்களையும் நாம் அறிந்து கொள்ளலாம். 'அணுவிலும் துகள்களிலும் புல் இதழ்களிலும் மரத்துண்டிலும் நான் அசைந்து கொண்டிருக்கிறேன்; கண்களைத் திறந்து வைத்திருப்பவர்களுக்கு நான் தெரிகிறேன்' என்னும் பாடல் மிகவும் பிடித்தமான பாடலாகும்.

### மனைவி மக்களுடன்

வீட்டில் அவர் இருந்தால் வீட்டில் உள்ளவர்கள் யாவருக்கும் பெருமகிழ்ச்சியும் ஆனந்தமும் நிறைந்திருக்கும். அவர் இருந்த இடத்திலெல்லாம் சிரிப்பும் ஆட்டமும் பாட்டமும் கதைகளும் மகிழ்ச்சிப் பெருக்கும் நிறைந்திருக்கும். அவர் எங்கெங்கு இருந்தாலும் யாருடன் இருந்தாலும் இவை காணப்படும். அவர் மதத்தில் நம்பிக்கைக் கொண்டவரைப் போன்றே எப்போதும் தோன்றினார். ஆனால் இவ்வாழ்க்கையைத் தாண்டி பரவாழ்க்கை பற்றி அவருக்கு எவ்விதமான கவலையும் இருக்கவில்லை. மேலும், மத நம்பிக்கைகள் பற்றியவற்றில் எவ்விதமான தீர்மானமான கருத்தையும் அவர் கூறவில்லை. தனது தம்பி காலமான பொழுது அவர் பேரதிர்ச்சி கொண்டார். நீண்டகாலம் அவர் தன் உற்சாகத்தை இழந்து விட்டிருந்தார். அவருடைய மூத்த மகளும் இன்னொரு மகனும் இறந்தபோது அவருடைய மனது மிகவும் துக்கப்பட்டது. பலபாடல்கள் தாலாட்டுப் பாடலாகப் பாடப்பட்டன; அல்லது மகிழ்ச்சியளிக்கக்கூடியனவாக இருந்தன. அவை குழந்தைகளாகிய தங்களை மகிழ்விப்பதற்காகப் பாடப்பட்டன என்று கூறுகிறார்கள். அவர் கூறிய பல கதைகள் தமது குழந்தைகளுக்காகவே எழுதப்பட்டன என்று தோன்றுகிறது. நதி என்னும் தலைப்பில் கவிதை எவ்வாறு புனையப்பட்டது என்பது பற்றி இரண்டு விதமான விவரங்கள் அளிக்கப்படுகின்றன. இரு விவரங்களும் சுவாரசியமாகவே உள்ளன. அப்பாடல் எவ்வாறு உருவாகியிருப்பினும் மிகவும் சிறப்பான பாடலாக அது விளங்குகிறது. 'நாகப்பாம்பு' என்னும் பாடல் காசர்கோட்டில் உள்ள

அவர் வீட்டில் புனையப்பட்டது என்று ராமராயர் எழுதியுள்ளார். எத்தனையோ கழைக்கூத்தாடிகள் அவர் வீட்டிற்கு வரவேற்கப்பட்டிருக்கிறார்கள். படைப்புக்கலையோடு தொடர்புடைய எவருக்கும் அவருடைய வீட்டில் வரவேற்பு எப்போதும் காத்திருக்கும். மனதின் படைப்புத்திறன் எத்தனை விதமாக வெளிப்படுகிறது என்பதை அறிந்து அவர் மனம் பெருமிதம் கொண்டது. பள்ளி ஆய்வாளராகத் தம் பணியை மிகவும் பொறுப்புடன் செய்து வந்தார். குடகில் உள்ள மைய உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி நேர்மையானவர், நற்பண்புமிக்கவர் என்னும் பெயரைச் சம்பாதித்தார். பாடம் கற்பித்தலில் நேரடிமுறை (Direct method) என்னும் முறையைப் பயன்படுத்துவதிலும் மாவட்ட போர்டின் கல்வித்துறையை சீர்செய்து ஒழுங்குபடுத்துவதிலும் மிகவும் பெரும் பணியாற்றியுள்ளார். அவர் செய்திடும் உதவியும் காட்டும் பரிவும் எல்லோருக்கும் புரிந்திருந்தது. யாரையும் புன்னகையுடன் வரவேற்பதும் யாவருக்கும் நம்பிக்கை ஒளியூட்டுவதும் இவர் இயல்பாயிருந்தன. யாரும் இவருடன் பேசமுடியும். மங்கேசராவின் மகள்கள் இருவர், தாம் குழந்தைகளாக இருந்த போது, தந்தையுடன் அதிகநேரத்தைத் தாம் கழிக்கவில்லை என்றாலும் வீட்டில் அவர் இருந்த விதத்தைப் பற்றியும் பழகிய முறை பற்றியும் பின்வருமாறு நினைவு கூர்கிறார்கள்.

### திருமதி அனுசூயாராவ் கூறியுள்ள செய்திகள்

"வீட்டில் அவர் அவ்வளவாக அதிகநேரம் இருப்பதில்லை. ஆனால் அவர் இருக்கும் வேளைகளில் அவர் மிகவும் இயல்பாக எங்களுடன் ஒன்றிப்பழகினார். எங்களின் மகிழ்ச்சியில் பங்கு பெறுவார். எங்கள் விளையாட்டுக்களிலும், விடுகதை கூறுவதிலும், அவற்றை விடுவிப்பதிலும், பழமொழிகள் கூறுவதிலும், கற்பனையைத் தூண்டுவதிலும், மனதிற்குப் பயத்தைத் தரக்கூடிய கதைகளைக் கூறுவதிலும் இதுபோன்ற பலவற்றிலும் எங்களுடன் சேர்ந்து கொள்வார். அப்போது சிறியவர் பெரியவர் என்னும் வேறுபாடுகள் எழுவதில்லை. அவர் வீட்டிற்கு வந்தவுடனே பாடல்கள் பாடுவது ஆரம்பமாகிவிடும். இவ்வாறு அன்றாடம் நிகழும் ஏதாவதொரு நிகழ்ச்சியை மையமாகக் கொண்டு பல கதைகளும் பாடல்களும் எழுதப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, 'எங்கிருந்து வருகிறாய்?' நீரைக் கொண்டு வருகிறாய்? என்னும் பாடலைக் குறிப்பிடலாம். பக்கத்தில் உள்ள உணவகத்தில் வேலை செய்யும்

சிறுவன் ஒருவன் தண்ணீருக்காக நமது கிணற்றுக்கு வருவது தொடர்பாக இப்பாடல் எழுதப்பட்டது. அங்களதுக்கு என்பவள் ஒரு முதியவள். வீட்டு வேலைகளைச் செய்வாள். பாத்திரங்களைத் துலக்குவதற்காக அவளும் நமது வீட்டுக் கிணற்றுக்கு வருவாள். அவளை துக்கே என்று அழைப்பதும் உண்டு. கோடி —சென்னய்யா கதையின் ஒரு வடிவைத் தனக்குத் தெரிந்த அளவில் என் தந்தையிடம் கூறியவள்... நாங்கள் அவருடன் பேசும்போது எங்களுக்கு முழுச் சுதந்திரமும் கொடுத்திருந்தார். அவர் கூறுவனவற்றுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு முழு அனுமதி இருந்தது. தம்மேல் தவறு இருப்பின் அதை ஒப்புக் கொள்வார். அதுமட்டுமல்ல, சிறு குழந்தையாகிய சாந்தாவிடமிருந்துகூட மன்னிப்பு கேட்டுள்ளார். ஆனால் அவரைக் கண்டாலேயே நமக்கு மதிப்பும், மரியாதையும் பயமும் ஏற்படும். நேர்மையில்லாதிருத்தல், வஞ்சித்தல், படாடோபம், ஆரவாரம் போன்றன அவருக்கு மகிழ்ச்சியைத் தாரா. எங்கள் தாய், வீட்டின் தலைவி ஆவார். தங்க அணிகலன்களையாவது அல்லது விலைமதிப்புள்ள துணிகளையாவது எங்களுக்கு அணிவிக்க எங்கள் தாயை அவர் அனுமதிக்கவில்லை. இத்தகைய பண வசதியைப் பெற்றிராத குழந்தைகள், நீங்கள் சிறந்த ஆடை அணிகலன்களை அணிந்திருப்பதைப் பார்த்து எவ்வளவு மனவேதனைப் படுவார்கள் என்று எண்ணிப்பார் என்று எங்கள் தந்தை கூறுவார். வேலைக்காரர்கள் யாரையாவது வேலை செய்யச் சொல்லும்போது ஆணையிடுவது போலச் சொல்வது அவருக்குப் பிடிக்காது. வேலையாளிடம் அதைச் செய் இதைச் செய் என்று சொல்லக்கூடாது. செய்கிறாயா? என்று சொல்ல வேண்டும் என்பார். உண்ணும் உணவைப் பற்றியோ சிற்றுண்டியைப் பற்றியோ குறைகூறுவதோ முணுமுணுப்பதோ அவருக்குச் சற்றும் பிடிக்காது.

**திருமதி சாந்தாராவ் பின்வருமாறு கூறுகிறார்**

எனது தந்தையைப் பற்றி எண்ணியதும் எனக்கு நினைவுக்கு வருவது அவர் பாடும் பாடல்களும், ஆடும் ஆட்டமும் கூறும் கதைகளுமேயாகும். எல்லாவற்றுக்கும் ஒவ்வொரு கதையிருக்கும். எங்கும் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். அவசர அழைப்பு ஒன்று எனக்கு அவரிடமிருந்து வந்தது. 'பாப்பா இங்கே வா, சீக்கிரம் வா, சீக்கிரம் வா' என்று கூப்பிட்டார். என்ன வேண்டும் அவருக்கு என்று தெரிந்து கொள்வதற்காக நான் அவரிடத்தில் வேகமாக ஓடினேன். ஒரு பூவிதழின் மேல் பனிநீர்த்துளி ஒன்று விழுந்திருந்தது. அதை

எனக்குக் காட்டுவதற்காகக் கூப்பிட்டிருக்கிறார். மற்றொரு முறை விண்ணில் மேகங்கள் சூழ்ந்துள்ள சிறப்பானதொரு அமைப்பைப் பார்ப்பதற்காகக் கூப்பிட்டார். இன்னும் ஒருமுறை நிழலின் ஒருவிதமான தோற்றத்தைக் காட்டக் கூப்பிட்டார். அவ்வாறு காட்டுவதற்காகக் கூப்பிடும் போது அவர் குரலில் உள்ள அவசர உணர்வு அப்படிப்பட்ட காட்சிகள் அவர் மனதிற்கு அளிக்கும் சுகத்தையும் இதத்தையும் அமைதியையும் வெளிப்படுத்துவனவாக உள்ளன. இது அவரைப் பிறரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டும் பண்பாக உள்ளது. பலருக்கு இப்படிப்பட்ட காட்சிகள் தென்படுவதில்லை; அப்படியே தென்பட்டாலும் அவற்றை முக்கியமானவை என்று கருதுவதில்லை.

அவருடைய பாடங்களும் அவரைப் போன்றனவே. இத்தகைய பாடங்களைப் பிறர் இயற்ற முடியாது. அதாவது கல்வி கற்பிப்பதில் இவர் மிகுந்த படைப்பாற்றலைப் பின்பற்றினார். அவரது கல்வி உயிர்த்துடிப்புள்ளதாயும் சிறப்பானதாயும் விளங்கிற்று; உற்சாகம் நிறைந்து விளங்கியது. அவர் கற்பிப்பது வரைகணிதமானாலும் சரி ஆங்கில இலக்கணமானாலும் சரி அல்லது வேறு எந்தப் பாடமாயினும் சரி சிறப்பாகக் கற்பிப்பார். கணிதப்பாடத்தை நான் அவ்வளவாக சிறப்பாகப் படிக்கவில்லை என்று என் பள்ளி ஆசிரியர்கள் கூறியிருந்தனர். கணிதப்பாடத்தை நான் எளிதாகக் கற்று உயர்ந்த மதிப்பெண் பெறும் விதத்தில் சொல்லிக்கொடுத்து என் பள்ளி ஆசிரியர்கள் என்மீது கொண்டிருந்த கருத்தைப் பொய்ப்படுத்தினார். இத்தகைய சிறப்பான கல்வி கற்பிக்கும் முறையை இவர் எங்குதான் கற்றாரோ!

அவரது அறிவானது எப்போதும் படைப்பாற்றலும் பெருந்திறனும் பெற்று விளங்கிற்று. குழந்தைகள் மீது அவர் கொண்டிருந்த பாசமும் மனித நேயப் பண்பும் அவரைச் சிறந்தவராக்கின. நான் பலவற்றைக் கற்குமாறு செய்தார். ஆங்கிலத்தில் உள்ள பாடங்களை நான் சத்தமாகப் படிப்பேன். அவர் முற்றத்தில் இந்தப்பக்கமும் அந்தப் பக்கமுமாக நடந்து கொண்டிருப்பார். நான் படிக்கும் ஒவ்வொரு வரியையும் கன்னடத்தில் மொழிபெயர்த்துக் கூறுவார். இவற்றையெல்லாம் எங்கள் தாயாரும் ஊன்றிக் கவனிப்பார். மிகவும் இனிய நாட்கள் அவை. என்னுடன் சேர்ந்து கொண்டு பலமுறை பலபாடல்களைப் பாடியுள்ளார். ஒரு சிறப்பான நிகழ்ச்சி என் நினைவிற்கு வருகிறது. இதை நினைத்தாலேயே எனக்கு நன்றிப்

பெருக்கு எடுத்துவிடும். ஒருநாள் நள்ளிரவுக்கு மேற்பட்ட நேரத்தில், எங்கேயோ தசாவதாரம் கதை நாடகம் நடந்து கொண்டிருப்பதை அறிந்து அதைப் பார்க்கப் போவதற்காக என்னைத் தூக்கத்திலிருந்து எழுப்பிவிட்டார். தன் முதுகின் மீது என்னைச் சுமந்து கொண்டு நடந்தார். சில வேளைகளில் நான் தூக்கமயக்கத்தில் இருந்தால் அவ்விடத்திற்கு என்னைத் தூக்கிக் கொண்டு போனதுண்டு. நாடகத்தின் இயல்புகளை அறிந்து கொள்ளுவதிலும் அவருக்கு மிகுந்த அக்கறை. நடைபெற்ற அந்த நாடகங்களின் சிறப்பான காட்சிகளை மறுநாள் நாங்கள் வீட்டிற்கு வந்து எவ்வளவு சிறப்பாக அக்காட்சிகளை நடித்துக் காட்ட முடியுமோ அவ்வளவு சிறப்பாக மீண்டும் நடித்துக்காட்டுவோம். நடனம், நடிப்பு போன்ற நுண்கலைகளின் மேல் நான் இன்றளவும் வைத்திருக்கும் அன்பிற்குக் காரணம் எனது தந்தையே ஆவார். நாடகங்களுக்கும், ஹரிகதைகளுக்கும் சில வேளைகளில் திரைப்படங்களுக்கும் கூட அவர் எங்களை கூட்டிப்போயிருக்கிறார். பற்பல இயல்புள்ள மனிதர்கள் அவரிடம் வந்து கலந்துரையாடுவார்கள். மகிழ்விப்பார்கள். இவர்களின் பேச்சுகளை நானும் கேட்க வேண்டும் என்பது இவர் விருப்பம். அந்தச் சிறுவயதில் அவற்றைக் கேட்கவேண்டும் என்னும் விருப்பம் இல்லாவிடினும் நான் கேட்டேன். அன்பும் உண்மையான பற்றும் கொண்டு பலர் வீட்டிற்கு வந்துள்ளனர். அவர்கள் யாவருக்கும் வரவேற்பு காத்திருக்கும். தங்களைப் போன்றே, பி. எம். ஸ்ரீகண்டையா அவர்களும் மாஸ்தி வெங்கடேச ஐயங்கார் அவர்களும் இரு சங்கரப்பட்டர்களும் இன்னும் பிற அறிஞர்களும் வீட்டிற்கு வந்துள்ளனர். அதேபோன்று அவ்வளவாகப் புகழ் பெற்றிராத எத்தனையோ பள்ளி ஆசிரியர்களும் கூட வந்துள்ளனர். இப்போது ஹரிஜன் என்று அழைக்கப்படுபவர்களும், கிருத்துவத்தில் பிராட்டஸ்டண்ட் பிரிவைச் சேர்ந்தவர்களும்கூட வந்துள்ளனர். யார் வந்தாலும் வரவேற்பு காத்திருந்தது. வீட்டிற்கு வரும் யாரையும் இனம் பிரித்துப் பார்க்கும் பழக்கம் இல்லை. அவர்களின் தாழ்வோ உயர்வோ இனம் பிரித்துப் பார்ப்பதற்குப் பயன்படுத்தப்படவில்லை".

இனிவரும் பகுதிகளைச் சில கடிதங்களில் இருந்து தொகுத்துப் பின்வரும் வரிசைமுறையில் கொடுத்துள்ளேன்.

1. மூத்த மகன் முகுந்தராயர்
2. தந்தையின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய ராமராயர்

3. அவரது பெண் குழந்தைகளில் மிகவும் இளையவராகிய திருமதி சாந்தா ராமேஸ்வரராவ்

4. தற்போதுள்ள இருவரில் மூத்த மகளாகிய திருமதி அனுசூயா ராவ்

* * *    * * *    * * *

அவருடைய சிறப்பான திறமைகள் குறித்துப் பேசுவதென்றால் அவர் திறமையுள்ள ஒரு நீச்சல் வீரர்; நடிக்கும் நாடகத்தில் சிறப்பாக நடிக்கும் நடிகர்; அழகிய மேடைப் பேச்சாளர்; பாடல் பாடுவதில் நயமான குரல்வளம் கொண்டவர். சமுதாய மேம்பாடு, நாட்டுப்பற்று இவ்விரண்டும் அவருக்கு மிகவும் பிடித்தமானவை. யக்ஷகானத்திலும், நாடகங்களிலும் நடிப்பதிலும்கூட மிகவும் சிறப்பானவர் என்று பெயர் பெற்றவர். கன்னடமொழி ஆசிரியராக இருப்பினும் ஆங்கிலம், கன்னடம் இரண்டு மொழிகளிலும் அவர் நாடகங்களை எழுதியுள்ளார். யக்ஷகான படைப்பில் ஒரு வகையான தாளமத்தளேயைப் பற்றி அவர் பேசும் பேச்சைக் கேட்பதற்காக மைல் கணக்கான தூரத்தில் இருந்தும்கூட நடந்து வருவார்கள். சந்திரஹாசன் என்னும் நாடகத்தில் அவர் ஏற்ற துஷ்டபுத்தி பாத்திரத்தை சரியான விதத்தில் நடிப்பது இவரைவிட வேறு யாராலும் முடியாதது என்று கூறுவார்கள். மங்களூரில் மிகச் சிறந்த நடிகர்களுக்கு — திரு ஹெச். தேவராவ் போன்ற நடிகர்களுக்கு — இவர் பயிற்சி அளித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இவரது மிகவும் நெருங்கிய நண்பர்களுள் இன்னொருவர் திரு குடுமல ரங்கராயர் என்பவர் ஆவார். அவர் தீண்டத் தகாதவர்கள் மற்றும் தாழ்த்தப்பட்டோர் என்று கருதப்பட்டவர்களின் முன்னேற்றத்திற்காக உழைத்தவர். இதனால் அவர் தமது மதத்திலிருந்து வெளியேற்றப்பட்டார் என்பதைப் பற்றியும் அவர் கவலைப்படவில்லை. 1918—ஆம் ஆண்டு முதல் 1920—ஆம் ஆண்டு வரையிலான துவக்க காலத்திலேயே கூட எங்கள் தந்தையாரின் மனது எவ்வாறு செயல்பட்டது என்பது அவருடைய “உள்ளய்யா தயைகொள்ளய்யா” என்னும் பாடலைப் படிப்போர் உணருவர். அவருடைய மனதில் உள்ள நாட்டுப்பற்றையும்

அன்பையும் "தூக்கத்தைக் களையாமல் ஏன் படுத்திருக்கிறாய் நண்பனே!" என்னும் பாடல் வெளிப்படுத்துகிறது.

1925–ம் ஆண்டில் ஒருநாள் காஸ்மாபாலிடன் கிளப் பாதையில் போய் கொண்டிருந்தாராம். அப்போது காங்கிரஸ் கட்சித் தொண்டர்களின் ஊர்வலம் ஒன்றை காவல்துறையினர் கலைத்துக் கொண்டிருந்தார்கள். இருபது வயது இளைஞன் ஒருவனைத் தடிகளால் காவலர்கள் அடிப்பதும், அவ்விளைஞன் நிலத்தின் மேலே விழுந்து முனகிக் கொண்டிருப்பதும் அவர் கண்ணில் பட்டது. பார்த்த அவருக்கு வேதனையேற்பட்டது. முன்பின் பார்க்காது அந்த இளைஞனுக்கு அருகில் போய் 'நிறுத்துங்கள்' என்று காவலர்களிடம் பலமாகக் கூறினார். மெலிதாகவும் பலம் குன்றியும் போயிருந்த முதியவரின் இந்தக் கூச்சல் ஆணையிட்டதைப் போன்று அவர்களுக்குத் தோன்றியிருக்க வேண்டும். காவலர்கள் அவர் பேச்சை ஏற்றுக் கொண்டார்கள். இளைஞனின் காலில் பலமான அடி விழுந்திருந்தது. அவனைத் தூக்கி குதிரை வண்டி ஒன்றில் போட்டு தமது வீட்டிற்குக் கொண்டு வந்தார். காவலர்கள் மற்றும் பொதுமக்களின் கண்முன்னரேயே இது நிகழ்ந்தது.

அந்த இளைஞனின் பெயர் எம். ராமராவ். அவனைக் குளிக்க வைத்து, படுக்கை விரித்துப் படுக்க வைத்தார். காயங்களுக்கு இயன்ற கவனம் செலுத்தி மருந்துகளை இட்டார். "காவலர்களின் ஆணைக்கு எதிராக ஊர்வலத்தை ஏன் நடத்திச் சென்றீர்கள்?" என்று என் தந்தையார் அவ்விளைஞனைக் கேட்டாராம். "எனது நாட்டிற்கு நான் செய்யும் கடமை இது" என்றானாம் ராமராவ் என்னும் அந்த இளைஞன். மாவட்ட அதிகாரிகளுக்குத் தன் செயல் குறித்த விளக்கங்களை ஒரு கடிதத்தில் எழுதித் தெரிவித்தார் என் தந்தை.

அவருடைய படைப்புகளில் பெரும்பகுதி இந்த ஆரம்ப காலத்திலேயே வெளியாகிவிட்டன. அவருடைய படைப்புகளில் மிகவும் அழகானதான 'நாகப் பாம்பு' என்னும் பாடல் காசர்கோடில் 1910–11ம் ஆண்டளவில் இயற்றப்பட்டதாகும். இப்பாடலுக்கான கரு பின்வருமாறு தான் அவருக்குத் தோன்றியது. பாம்பாட்டி ஒருவன், தன் மனைவி குழந்தையுடன் வந்து எங்கள் வீட்டில் பாம்பாட்டிக் காட்டிக் கொண்டிருந்தான். அந்தக் காட்சி இவருக்கு இதற்கான கருவைக் கொடுத்ததோ என்னவோ. அந்த நிகழ்ச்சியைப் பற்றியே ஏழெட்டு நாட்கள் அவர் சிந்தித்துக் கொண்டிருந்தார். வீட்டு

முற்றத்தில் அங்கும் இங்குமாக உலாவிக் கொண்டும் பாடலுக்கு எவையெவை சரியான சொற்கள் என்று யோசித்துக் கொண்டும் பாடிக் கொண்டும் தனக்குள்ளாகவே பேசிக் கொண்டும் இருந்தார். ஒருவழியாக பாடல் இயற்றும் வேலை முடிந்து அது தயாரானதும் முகத்தில் இருந்த கவலை மறைந்து இயல்பான நிலைமை திரும்பியது. தமது பின்பக்கமாகக் கையைச் சாய்த்துக் கைகொட்டினார். இதற்குத் தக்க சரியான பின்னணி கிடைக்கும்வரை அப்பாடலை அவர் பொதுமக்களுக்கு வெளியிடவில்லை.

ஓரிரு மாதங்கள் ரகசியமாக இருந்த இந்தப் பாடலுக்காக நாங்கள் மிகவும் ஆவலுடன் காத்திருந்தோம். பாம்பாட்டியானவன் தனது பண்டம் பாத்திரங்களையும் பாம்புப்புட்டிகளையும் மீண்டும் ஒருநாள் அவரெதிரில் கொண்டு வந்தான். அப்போது அவர் இப்பாடலைப் பாடினார் :

"உடலோ குளிரும் உள்ளமோ கொதிக்கும்
நாக்கோ இரண்டு பயனோ பூஜ்ஜியம்"

என்னும் சொற்கள் பாம்பாட்டியின் காதுகளில் விழுந்தன. அதைக் கேட்ட அவன் மெய்மறந்தான். இவர் கொடுத்த காசையோ அரிசியையோ துணியையோ கூட வாங்கிக் கொள்ளவில்லை!

பலர் இவருக்கு மிகவும் நெருக்கமானவர்களாக இருந்தனர். திரு காரந்த் அவர்களை இவர் தனது அறிவுலக வாரிசு என்று அழைப்பார். அவரைச் சுற்றிலும் எப்போதும் ஒரு மக்கட்கூட்டம் இருந்துகொண்டிருந்தது. எப்போதும் அவரைச் சுற்றி மக்கள் கூடி இருந்ததால் எல்லா பெரிய மனிதர்களின் குழந்தைகளையும் போல நாங்களும் இச்சூழ்நிலைகளில் அவருடன் சேர்ந்திருப்பது இயலாமல் போய்விட்டது. பிற்பகல் அல்லது இரவு உணவின் போது மட்டுமே நாங்கள் அவருடன் சேர்ந்திருந்து பாடம் கற்கும் வாய்ப்பு கிடைத்தது. ஆங்கிலம், கன்னடம், கணிதம், புவியியல், வரலாறு போன்ற பாடங்களை எல்லாம கற்பிப்பார். இவை யாவற்றையும் ஒரே வகுப்பைச் சார்ந்தவர்களுக்கான தரத்தில் கற்பிப்பார். எங்கள் தாயும் அந்த வகுப்பில் சேர்ந்துகொள்வார். சிறுது காலத்திற்குப் பின்னர் அவருடைய மருமகள்கள்கூட, எடுத்துக்காட்டாக என்னுடைய மனைவியும், சேர்ந்து கொண்டனர். பேஸல் மிஷன் நூல்நிலையத்திற்குச் சென்று எனது மனத்திற்குப் பிடித்த எந்தப்

புத்தகத்தையும் நான் எடுத்து வரலாம்; அதைச் சுற்றி அன்றைய பாடம் அமையும். எங்கள் எல்லோருக்கும் மூத்த அக்காவாகிய அம்பா பாடங்களைப் படிப்பாள். நான் அவற்றைக் கன்னடத்திற்கு மொழிபெயர்ப்பேன். பிறர் அவற்றைக் கேட்பார்கள். தேவையேற்பட்டால் மட்டுமே தந்தை உதவுவார்.

* * *     * * *     * * *

சிறுவனாக இருந்தபோது எனது தந்தையார் சிலவேளைகளில் கன்னட மொழியிலும் சிலவேளைகளில் கொங்கணி மொழியிலும் கவிதை நயம் நிறைந்த சொற்றொடர்களையும் வரிகளையும் படைத்துள்ளார். இவ்வாறு படைத்த தொடர்களை தாயிடம் ஓடிச்சென்று பெருமிதத்துடன் காட்டுவார். நாள் முழுவதும் வீட்டுவேலைகளில் மூழ்கிப் போயிருக்கும் அவருக்கு இதைக்கண்டு பெரு மகிழ்ச்சி உண்டாகும். அவர் குறுநகை செய்து மகனின் மகிழ்ச்சியில் பங்கு பெறுவார். சொற்களும் அவை கோர்க்கப்பட்டுள்ள முறைகளும் சிறப்பாக இருந்தாலோ அல்லது சொற்களுக்கு இந்தப் பொருளா அந்தப் பொருளா என்று ஐயம் எழும் விதத்தில் கோர்க்கப்படிருந்தாலோ அவருக்கு மிகுந்த மகிழ்ச்சி உண்டாயிற்றாம். பலவேளைகளில், எதுகை மோனை அமைப்புக் கெடாமல் ஒரு சில குறிப்பிட்ட சொற்களுக்கும் தொடர்களுக்கும் பதிலாக வேறு சொற்களையும் தொடர்களையும் பயன்படுத்த வேண்டும் என்று தாயார் ஆலோசனை வழங்கி உள்ளார். இவ்வாறு சரியான சொற்களைத் தேடுவதும் ஈரடிப்பாடல்களைப் புனைவதும் மட்டும் அல்லாது கதை கூறுவதுடன் கன்னடப் பாடல்களைப் பாடுவதும் இவருக்கும் இவரது இரு சகோதரர்களாகிய சிவா, சங்கர் என்பவர்களுக்கும் வாடிக்கையாயிற்று. விளையாட வாய்ப்பில்லாத பிற்பகல் மற்றும் இரவு உணவு வேளைகளின் பொழுது இத்தகைய செயல்கள் மிகவும் சிறப்பாக நடைபெறும். சொற்களைச் செட்டு சேர்த்து புனைதல், சொற்களில் எதுகை, மோனை அமையும் விதத்தில் தேர்வு செய்தல், அறிவுத்திறத்தை வெளிப்படுத்தும் விதத்தில் பேசிக் கொள்ளுதல் போன்றன அவரது தாயையும் பாட்டியையும் மிகவும் மகிழ்விக்கும். உணவு உண்ணும் பொழுதில் சிறுவர்கள் இவ்வாறு மகிழ்ந்து பேசுவதைக் கண்டு அவர்களின் அன்பும் ஆதரவும் அதிகமாகும். தந்தையாரின் சிறு வயதிலேயே முளைவிட்ட கவிதை புனையும் திறனைக் கண்டு இச்சிறுவயதிலேயே இவ்வளவு திறமையா என்று எண்ணி மகிழ்ந்தனர்.

சிறுவயதில் பிற எதையும் விட அவருக்குச் சதுரங்க ஆட்டத்தில் தான் மிகுந்த விருப்பம். தான் அந்த ஆட்டத்தைக் கற்றுக்

கொண்டவுடன் தனது தம்பி ராகவேந்திரனுக்கும் அதைக் கற்றுக் கொடுத்தார். இந்த அண்ணன் தம்பியர்கள் மணிக்கணக்கில் சதுரங்க விளையாட்டில் மூழ்கியிருப்பார்கள். இந்த விளையாட்டு அவர்களின் அறிவை .வளர்த்தது. இந்த விளையாட்டில் உள்ள நெளிவு சுழிவுகளைக் கற்றதன் மூலம் அவர்கள் மேலும் திறன்மிக்கவர்களாக ஆனார்கள். இந்தச் சகோரனின் மறைவுக்குப் பின்னர் இந்த விளையாட்டை எங்கள் தந்தை விட்டுவிட்டார் என்று தோன்றுகிறது.

தந்தையாருக்கு அகந்த் என்பவர் வெறும் தம்பியாக மட்டும் இருக்கவில்லை. அவர் எங்கள் தந்தையின் பாதுகாப்பில் வளர்ந்தவர். அவரது மாணவராகவும், உறவினராகவும், உற்ற தோழனாகவும் இருந்தார். மிகவும் சிறப்பானவராக இருந்த தந்தையின் பேரன்பிற்குப் பாத்திரராயிருந்தாராம். தந்தையார் இதுவரையில் பார்த்த எல்லாச் சிறுவர்களையும்விட இவர் மிகுந்த அறிவாளியாகவும் கடின உழைப்பாளியாகவும் பணிவு நிறைந்தவராகவும் எளிமையானவராகவும் சுதந்திரமான மனப்போக்கு கொண்டவராகவும் இருந்தாராம். எதிர்காலத்தில் தந்தை எவ்வெவற்றையெல்லாம் சாதித்தாரோ அவ்வவற்றையெல்லாம் இவரிடம் காணமுடிந்தது. தந்தையாருக்கு எவற்றிலெல்லாம் விருப்பம் இருந்ததோ எவையெல்லாம் மகிழ்ச்சியையும் வெறுப்பையும் கொடுத்தனவோ அவற்றிலெல்லாம் இவருக்கும் பங்கு இருந்தது. வேலை செய்யும் பொழுதும், விளையாடும்போதும் படைப்புத் துறையில் செயல்படும்போதும், உணர்வுகளின் வசமாயிருக்கும் போதும் ஒன்றாயிருந்தனர்.

ஒரு புத்தகத்தில் உள்ள இரண்டு தாலாட்டுப் பாடல்களில் ஒன்று அந்திப் பாடல் என்னும் தலைப்பிலானது. 1902ம் ஆண்டளவில் மங்களூரில் மூத்த மகனுக்காகப் புனையப்பட்டது. இரண்டாம் தாலாட்டுப் பாடல் எல்லோரையும் விட இளையவனுக்காகப் படைக்கப்பட்டது. மிகவும் புகழ்பெற்ற பாம்புப்பாடலும் சேர்ந்து பிறபாடல்கள் யாவும் அதன்பின்னர் தான் இயற்றப்பட்டன.

கோடி—சென்னய்யா கதையும், ஹுத்தரி பாடலும் மடிகேரியில் பாடப்பட்டன. குடகில் எந்தெந்தப் படைப்புகள் சிறப்பானவையாக விளங்கினவோ அவற்றை எப்போதும் கவனித்து வந்தார். அந்த மக்கள், அவர்களின் பழக்க வழக்கங்கள், அவர்களின் நோக்கம்,

பின்பற்றும் முறை ஆகியன இவ்வாறு சிறப்பானதாக இருந்ததால் அப்படிப்பட்ட அழகிய கவிதைகளை எழுதத் தக்க சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் பொழுது இப்படிப்பட்டனவற்றை படைக்காமல் இருப்பது எவ்வாறு?

இன்னொரு செய்தி எனக்கு மிகத் தெளிவாகத் தெரிகிறது. வயதான பின்னர், தனக்கு எதிரிகள் இல்லை, தன் மீது யாருக்கும் வெறுப்பு அல்லது கோபம் கிடையாது என்னும் நிலைமை மகிழ்ச்சியைத் தந்தது; தனது வாழ்க்கை பிறவிப்பயன் பெற்றது என்னும் நிறைவைத் தந்தது. பின்வரும் செய்தி முக்கியத்துவம் வாய்ந்ததோ அல்லவோ எனக்குத் தெரியாது. ஆனால், மாஸ்தி வெங்கடேச அய்யங்காரின் 'பாமூர்'[1] என்னும் கவிதை அவருக்கு மிகவும் விருப்பமானது. அப்பாடலின் வரிகளைப் பலமுறை வாய்க்குள் முணகியவாறு தனக்குத்தானே பாடிக் கொள்வார். அந்த வரிகள்:

> இன்று இவ்வூருக்குப் பகைகளில்லை
> என்னுடைய நாள் வந்ததென்றது
> கண்களை மூடி
> இனிமேல் போதும் எனக்கு என்றது
> குளிர்ந்தது...

இவ்வரிகள் அவர் மனதை மிகவும் பாதித்தன

என்னுடைய காலத்தில் மங்களூரில் உள்ள இளைஞர்களுக்குக் கன்னடமொழியின் மீது அதிகம் பற்றோ மதிப்போ இருக்கவில்லை. ஆனால் தந்தையார் சொற்பொழிவாற்றினால் நிலைமை வேறுவிதமாக இருந்தது. அவர் எந்த நிறுவனத்திற்காவது போய் உரையாற்றவிருக்கிறார் என்பது தெரியவந்தபோதும் வரவேற்பு அப்படிப்பட்டதாகவே இருந்தது. மிகவும் முறைப்படியான செய்திகள் பற்றி வளவளவென்று முன்னுரை கொடுத்துக் கொண்டிராமல் ஏதாவதொரு கன்னடப் பேரிலக்கியம் பற்றி நேரடியாக உரையாற்ற ஆரம்பித்துவிடுவார். முதல் சில

---

[1] அவருடைய வாழ்க்கை வரலாற்றை எழுதிய அவருடைய மூத்த மகனாகிய ராமராயர் அந்தப்பாடல் என்னுடையதென்று அதில் தவறாகத் தெரிவித்துள்ளார்.

நிமிடங்களுக்கு இளைஞர்கள் சாதாரணமாகக் கேட்பார்கள். என்ன பேசுகிறார் என்பதைப் புரிந்து கொள்ளுவதற்குச் செலவான அந்தச் சிலநிமிடங்கள் அவர்களை முற்றிலுமாக ஆட்கொண்டு அவரைக் கவனிப்பதல்லாது வேறு ஏதும் செய்வதறியாதவர்களாக மாற்றிவிடும். ஏனென்றால், அதற்குப் பிறகு வெளியுலகு பற்றிய உணர்வு முற்றிலுமாக அவர்களுக்கு இல்லாது போய்விடும். திடீரென்று எவ்விதமான முன்னறிவிப்பும் இல்லாமல் சிரிப்போசை அந்த அரங்கு முழுவதிலும் பரவுமாறு செய்திடுவார். அந்த ஓசை அடங்குவதற்குள்ளாக இன்னொரு சிரிப்பொலி முன்பைவிட பலமாகவும் நீண்ட நேரத்திற்கும் ஒலிக்கும். ஒரு செய்தியிலிருந்து மற்றொரு செய்திக்கும் ஒரு பாடலில் இருந்து மற்றொரு பாடலுக்கும் ஒரு குறிப்பிலிருந்து மற்றொரு குறிப்புக்கும் அவரது சொற்பொழிவு கேட்போரை இட்டுச்செல்லும். அரங்கில் பிற எல்லா ஓசைகளும் அடங்கிப் போய் அமைதியாக இருக்கும். தந்தையாரின் பேச்சொலி மட்டும் கேட்டுக் கொண்டிருக்கும். கண்ணிமைகள் அசையாமல் நிற்கும். முழங்கைகள் மெதுவாக எதிரில் உள்ள மேஜையின் மேல் ஊன்றி, திறந்த உள்ளங்கைகளின் மேல் தாடைகளை ஊன்றி கவனித்துக் கொண்டு இருப்பார்கள். பேச ஆரம்பித்துவிட்டால் நேரம் போவதே தெரியாது. கேட்பவர்களை முற்றிலுமாகப் புராணச் சூழ்நிலையிலேயே இருக்குமாறும் விட்டுவிடமாட்டார். அவர்களுடைய மனதும் தமது அன்றாட அலுவல்கள் அனுபவங்கள் பற்றி சிந்திப்பதும் மறப்பதுமாக இருந்து கொண்டிருக்கும். இருந்தாற்போல் இருந்து, அவையோரின் நீண்ட நேரத்தை எடுத்துக் கொண்டதற்காகத் தந்தையார் மன்னிப்புக் கோருவார். அவ்வாறு அவர் சொன்னவுடனே பேச்சை நிறுத்தவேண்டாம் என்னும் அவையோரின் ஒருமித்த குரல் மிகவும் பலமாகக் கேட்கும். அந்த அரங்கின் செயலாளர்கூட மெய் மறந்த நிலையில் சைகையால் அவையோரின் வேண்டுகோளை ஏற்றுத் தொடர்ந்து பேசுமாறு கேட்டுக் கொள்வார். அந்த விழாவின் தலைவர் தொடர்ந்து பேசுமாறு தந்தையை வேண்டிக் கொள்ளும் விதத்தில் அவர் பக்கமாக பார்ப்பார். தந்தையார் மேலும் சிறப்பான நயங்களைக் காட்டுவார். எதைக் கூறுகிறாரோ அதை மேலும் திறம்படக் கூறுவதற்காக அவ்வாறே வேறு கவிதைகளையும், ஆங்கில மொழிக் கவிதைகளையும் இவற்றுடன் இணைத்து விளக்கிக்கூறுவார். ஒரு புலவரின் வரிகளையும் பாடல்களையும் ஒவ்வொரு சொல்லையும் மக்களுக்கு ஏற்கனவே தெரிந்திருக்கும் கொங்கணி மொழி அல்லது துளு மொழியில் உள்ள சொற்களோடு பாடல்களோடு ஒப்பிட்டுக்

காட்டி விளக்குவார். தாம் இதுவரையில் அறிந்திருக்காத இந்தச் சிறப்பைக் கண்டு தமது இலக்கியங்களையும் பிற இலக்கியங்களையும் மக்கள் போற்றுவர். தமது மொழி எவ்வளவு அழகானதாக உள்ளது? இதை நாம் இதுவரையில் உணராமல் இருந்திருக்கிறோமே! நமது மொழி எவ்வளவு அழகானது; இதுநாள் வரை நாம் இதைக் கவனிக்கவில்லையே என்றும் நமது நாடு எவ்வளவு சிறப்பானது? இதுவரை நாம் இதைப் பொருட்படுத்தவில்லையே என்றும் எண்ணுவர். பழக்க வழக்கங்கள், பண்பாடு ஆகியவற்றின் பெருமை, நமது நீண்ட நெடிய பாரம்பரியம் இவை யாவும் நமது எளிய வாழ்க்கையில் எவ்வாறு நிறைந்துள்ளன என்பனவற்றை அவையோருக்கு விளக்கிக் கூறுவார். அவரது சொற்பொழிவு இறுதியை அடைய அடைய அவையில் உள்ளோர் சிறுதுசிறிதாகத் தமது அன்றாட வாழ்க்கையைப் பற்றியும் வெளியுலக வாழ்க்கை பற்றியும் பிறவற்றைப் பற்றியும் ஆன சிந்தனைக்கு வருவார்கள். எந்த விதமான அறிவுறுத்தலும் கொடுக்காமல், வேண்டுகோளும் வைக்காமல், அறிவுரையும் வழங்காமல் இறுதியில் தன் சொற்பொழிவிற்கு வாய்ப்பும் வசதியும் கொடுத்ததற்கு உபசாரமாக சில வார்த்தைகளை மட்டும் கூறிவிட்டு உடனே தனது உரையை முடித்துக் கொள்வார். அதற்குப் பின்னர் எந்தவொரு கன்னடப் பாடலின் ஒரேயொரு வரியைக் கூடப் படிக்காவிடினும் அவரது சொற்பொழிவைக் கேட்டவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் அவரது பேச்சை மறக்காமல் நினைவில் வைத்துக் கொள்வார்கள். அன்றிலிருந்து கன்னட இலக்கியத்தைப் பற்றிய அவர்களுடைய கற்பனையும் சிந்தனையும் வேறுபட்டதாக இருக்கும்.

கன்னட மொழியின் மேல் அவருக்கு மிகுந்த அன்பு. அவருடைய வாழ்க்கையில், கன்னட மொழியைக் காட்டிலும் சிறந்த வேறொன்று ஏதுமில்லை. அறிவையும் கல்வியையும் அவர் வெகுவாகப் போற்றினார். மனிதனின் மனதில் ஆழமான உணர்வுகளை ஏற்படுத்தக்கூடிய சொற்கள், இசைநயம், பாடலமைப்பு போன்றன அவரை மிகவும் ஆட்கொண்டன. அவர் இவற்றையெல்லாம் உண்மையாகவே நேசித்தார், விரும்பினார். எனவேதான் அவர் தான் ரசித்த இனிய சொற்களையும் வரிகளையும் பிறரும் ரசித்து மெய் மயக்கம் கொள்ளச் செய்தார். புலவர்கள் கண்ட அழகையெல்லாம் இவர்களும் காணச் செய்தார். வாழக்கையின் மற்றும் சிந்தனையின் அழகையும் நட்பின் சிறப்பையும் தந்தையார் எல்லா இடங்களுக்கும் பரப்பினார்.

* * *     * * *     * * *

குழந்தைகளாக இருக்கும்போது அவர்களுக்கு அருகில் ஒரு கவிஞன் இருந்தால் அக்குழந்தைகள் உண்மையிலேயே அதிர்ஷ்டம் நிறைந்தவர்கள்; புண்ணியம் செய்தவர்கள். அப்படிப்பட்ட குழந்தைகளின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. அப்படிப்பட்ட வாய்ப்பு மிகவும் அரிதாகவே குழந்தைகளுக்குக் கிடைக்கிறது. கவிஞன் என்று நான் செல்லும் போது வெறும் கவிதைகளை மட்டும் எழுதக்கூடிய மனிதனைக் குறிப்பிடவில்லை. யாருடைய மனதும் இதயமும் கண்ணும் கவிஞனுடைதைப் போன்றுள்ளதோ அப்படிப்பட்டவரே கவிஞர் என்று நான் கருதுகிறேன். இதை நான் முற்றிலுமாக உணர்ந்து கொண்டது இப்போதுதான்.

தந்தையார் செய்த எல்லாவற்றையும் இயல்பாகத் தன் மனதிற்குத் தோன்றிய விதத்தில் எந்தவிதமான முயற்சியும் இல்லாமல் தானாகவே செய்கிறார் என்று எண்ணியதால் வேறு யாரையும்விட அவர் வேறுபட்டவர் அல்ல என்று எண்ணியிருந்தேன். ஆனால் அவரால் வேறு எதைச் செய்யமுடியும்? அவர் எவற்றையெல்லாம் செய்தாரோ அந்த எல்லாவற்றிலும் அவர் அவராகவே இருந்தார் — ஒருங்கிணைந்தும் முழுவதுமாகவும்.

தந்தையார் ஒரு கலா ரசிகர். கவிஞரும் கூட. படைப்பாற்றல் நிரம்பப் பெற்றவர். அவருடைய குணம் மனிதநேயம் நிறைந்தது. அவர் செய்த எல்லாவற்றிலும் ஒரு ஒழுங்கு இருந்தது.

இந்த மனித நேயப் பண்பிற்குப் பின்புலமாக அவருடைய நகைச்சுவை உணர்வும், புதுச்சிந்தனைகளும் வேடிக்கைகளும் குறும்புகளும் அமைந்திருந்தன. அவரைப் பற்றிய மிகவும் பிடித்த செய்தி என்னவென்றால் நான் நடிப்பதுபோன்று பாசாங்கு செய்த ஒவ்வொரு செய்கையிலும் அவரும் நேரிடையாக, நடிப்பதாக வெளியில் காட்டிக் கொள்ளாமல், கலந்துகொள்வார். ஒப்புக் கொள்வதற்கு நானே தயாராக இல்லாத சூழ்நிலைகளில்கூட அவர் தான் நடிக்கிறோம் என்று வெளியில் காட்டிக் கொள்ளாமல் உண்மையாகவே நம்புவதைப் போன்று நடிப்பார். எடுத்துக்காட்டாக, அவரது தலையில் பேன் பார்ப்பதைப் போன்று நான் நடித்தபோது தான் அதை நம்புவதைப் போன்று நான் நம்பும்படிச் செய்வார். இதைப்போன்ற நிகழ்ச்சிகள் கணக்கிலடங்காதன. ஒருமுறை அஞ்சல்காரர் ஒருவர் பெரிய அஞ்சல் கட்டு ஒன்றை தோட்டம் வரை சுமந்து கொண்டு வந்தார். நான் அப்போது வரைகணிதப் பாடத்தில் மூழ்கியிருந்தேன். சிறிது களைப்புற்றிருந்தேன். "இந்த கணக்கை முடித்த பின்னர் இந்த உலகத்தில் உனக்கு மிகவும் பிடித்தமான

பொருளைக் கூறு. அதை நான் உனக்குக் கொடுக்கிறேன்" என்று அவர் சொன்னார். "ஒரு பெரிய பொம்மை — உண்மையிலேயே பெரிய பொம்மை வேண்டும்" என்று நான் சொன்னேன். "அப்படியே ஆகட்டும், நான் அதைக் கொடுக்கிறேன்" என்றார். அந்தக் கணக்கைப் போட்டு முடித்தேன். அஞ்சல்காரர் அந்தப் பெரிய கட்டை அவரிடம் கொடுத்தார். அந்தக் கட்டில் ஒரு பொம்மை இருந்தது. எனக்கு மிகவும் பிடித்தமான அளவில் அந்த பொம்மை இருந்தது. 'நமது தந்தைக்கு ஏதோ ஒரு மந்திரசக்தி இருக்கிறது' என்று உண்மையிலே எனக்குத் தோன்றியது. ஒரு மந்திராவாதியின் சக்தி அவருக்கு இருந்தது என்று உண்மையாகவே நான் இன்றுவரை நம்புகிறேன். அவர் எனக்காக எந்தவொரு செயலையும் செய்திடத் தயாராயிருந்தார். புத்தகங்கள், பாடல்கள், இசை, நாடகம், நடை, உரையாடல், மக்கள், பயணங்கள், தின்பண்டங்கள் போன்ற பலவற்றையும் எங்களுக்குக் கொடுத்து மனநிறைவைத் தந்தார். பல்வேறு துறைகளிலும் உள்ள மனநிறைவை அளிக்கக்கூடிய பல செய்திகளை நான் அறிந்திடச் செய்தார்.

அரிசன மாணவர்களைக்கூட தந்தை அவர்கள் "ஐயா, நீங்கள்" என்றுதான் அழைப்பார், குறிப்பிடுவார்... இரவு நேரங்களில் பூதங்கள் இருக்கின்றன என்று கூறப்படும் சாலைகளில் கூட நடு இரவு நேரங்களில் சுற்றிக் கொண்டிருப்பார். பகல் பன்னிரண்டு மணிக்கு அப்படிப்பட்ட சில சந்துகளில் செல்வதற்குப் பலருக்கு நடுக்கம். எங்கள் இனத்தைச் சேர்ந்த வெகுசிலரில் இடுகாட்டுக்குப் பிணங்களைத் தூக்கிச் செல்லும் வேலையைச் செய்யும் ஆட்களுள் இவரும் ஒருவராக இருப்பார். 1934—ம் ஆண்டில் அவர் மங்களூரை விட்டுச் செல்லும் வரையிலும் இரவு பகல் என்று பாராமல் அப்போது நேரம் எத்தனை மணியாயிருந்தாலும் நான் வருவதற்கில்லை என்று சொல்லாமல் பிணத்தைச் சுமந்து செல்லும் நால்வருள் ஒருவராக இவர் இருப்பார். தமது மனைவியையும் நான்கு குழந்தைகளையும் காப்பாற்ற வேண்டி இருந்த காலத்தில் கூட தனது வேலை போய்விடும் என்னும் பயம் இருந்தபோதும், ஏழ்மையிலிருந்தபோதும் எவ்வித பயமும் இல்லாமல் பள்ளி ஆசிரியர்கள் சிலரின் நலனுக்காக உழைத்திருக்கிறார், அனுகூலமான செயல்களைச் செய்திருக்கிறார்.

துணிச்சல்காரராகவும் அச்சம் இல்லாதவராகவும் இருந்தபோதிலும்கூட இவர் என்றும் முரடராக இருந்தவரல்லர். யாவரிடத்திலும் அன்பு காட்டுபவராகவே இருந்தார். தமது குழந்தைகளுக்கும் மனிதநேயத்தைக் கற்பித்திடவே உழைத்தார்.

ஒரு குறிப்பிட்ட செயல் நடைபெறக்கூடுமா அல்லது நடைபெறாதா என்பது பற்றி அவர் ஒருபோதும் கவலைப்பட்டதில்லை. அவருக்குத் தனது தலைப்பாகையைக் கட்டிக் கொள்வதுகூட தெரியாது. ஆய்வாளர் பள்ளிக்கு வரவிருக்கிறார் என்று செய்திவரும்போது உல்லாள் என்பவரோ அல்லது மடிகேரியைச் சேர்ந்த ஹரிஷண என்பவரோ அவருக்கு உதவிசெய்திட வேண்டியிருந்தது. பெங்களூருக்கோ சென்னைக்கோ மைசூருக்கோ கூட்டங்களுக்குப் போக வேண்டி வந்தபோது அவருடைய மனதில் தோன்றும் கலவரம் சொல்லித்திராது. உடன் எடுத்துச் செல்லவேண்டிய சில துணிமணிகளை எடுத்துவைத்துக் கொண்டு புறப்படுவதுகூட அவருக்கு இயலாத செயலே. வேறு விஷயங்களில் அவ்வளவாக தேர்ச்சி இல்லாதவரும் சாதாரணமானவரும் ஆன எங்கள் தாயார், கட்டாயம் செய்தாக வேண்டிய இப்படிப்பட்ட வேலைகளை மிகவும் பொறுப்புடன் செய்து வந்தார். அவர் உதவித் துணை ஆய்வாளராக இருந்தபோது வேலையாள் ராமய்ய நாயகன் மற்றும் சமையல் ஆள் பப்பு ஆகியோர் இவருக்கு உதவிபுரிந்து வந்தனர். தனக்குச் சொந்தமான ஏதாவது ஒரு பொருளை ஓர் அறையின் உள்ளே வைத்து அதற்குப் பூட்டுப்போடுவது என்றால் அவருடைய மனதுக்கு மிகுந்த பயமும் துயரமும் ஏற்படும். சாவியை எங்காவது தொலைத்துவிடுவோமோ என்பதே அவர் பயத்துக்குக் காரணம். சாவியைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்வதற்கு மிகவும் சங்கடப்பட்டார். ஒருமுறை சென்னைக்குக் கூட்டம் ஒன்றிற்குச் செல்ல வேண்டி ஏற்பட்டது. அப்போது அவருடைய பெட்டியில் பூட்டு போன்ற ஒரு பொருளை, அது திறந்து கொள்ளாமல் இருக்கட்டும், உள்ளே இருக்கும் பொருட்கள் கீழே விழாதிருக்கட்டும் என்று எண்ணி மாட்டி வைத்தார். அந்த நிமிடமே, நடக்கக்கூடாத ஏதோவொன்று நடந்துவிட்டது போலத் தந்தையார் நடந்துகொண்டார். அவருடைய முகம் களையிழந்து போய்க் காணப்பட்டது. அவர் கருமம் கருமம் என்பதைப் போல் தலையில் அடித்துக்கொண்டார். “இதைப் போன்று என் பொருள்களுக்குப் பூட்டுப் போடக்கூடாது என்று என் மனைவியிடம் எத்தனைமுறை நான் சொல்லியிருக்கிறேன். ஆனால் மீண்டும் அப்படியே செய்திருக்கிறாளே”, என்று சிந்தித்தார். பாவம், அந்த அம்மையார் எத்தனையோ விதத்தில் தன் நிலையை விவரித்தார். இறுதியில் நாங்கள் இதைப் பார்த்து எள்ளி நகையாடினோம். “இதைத் திறப்பதற்கு சாவி தேவைப்படாது; ஆனால் பூட்டைப் போன்றதொரு பொருளைப் போட வேண்டிய அவசியம் உள்ளது” என்று எங்கள்

அண்ணன் விளக்கம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. அதுவரையில் அவருடைய கவலை தீர்ந்தபாடில்லை.

* * * * * * * * *

மாம்பழமும் இரண்டு கோப்பை காப்பியும் அவருடைய அன்றாடத் தேவைகளாகும். அவை இல்லாவிட்டாலோ அல்லது அவற்றின் சுவை வழக்கத்தைப் போன்று இருக்காவிட்டாலோ அன்று நாள் முழுவதும் திக்குமுக்காடிப் போய் விடுவார் அவர்.

ஹைதராபாத்தில் தங்கியிருந்தபோது அவருடைய இறுதிநாட்கள் நினைவில் நிலைத்திருப்பனவாகும். பிற்பகல் வேளையை ஒட்டி அவருடைய நினைவுகள் சிறிதுசிறிதாக மங்கத் தொடங்கின. ஆற்றல் குறைய ஆரம்பித்தது. இச்செய்தி பரவி கன்னட மொழி பேசுவோரும் சாரஸ்வத இனத்தைச் சேர்ந்தோரும் எங்கள் அண்ணனின் வீட்டிற்குக் கூட்டம் கூட்டமாக வர ஆரம்பித்தனர். அவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் அவர் விடைபெற்றுக் கொண்டார். சிறுதி நேரம் சென்ற பின்னர் அவரது நாடித்துடிப்பு நிற்கும் வேளை வந்தது. அதுவரையில், உடல் முழுவதும் குளிர்ந்து நீலநிறம் திரும்பும்வரையில் அவரது அறிவு தெளிவாக இருந்தது. இறுதி நேரம் வரையில் அவரது செயல்பாடுகள் குறையவில்லை. ஒன்றுக்குப் பின்னர் ஒன்றாக நண்பர்களின், உடன் பணியாற்றிவர்களின், மாணவர்களின், பள்ளி ஆசிரியர்களின், அதிலும் குறிப்பாக அவருடைய ஏவலர் மற்றும் சமையற்காரனின் பெயர்களை நினைவுபடுத்திப் பேசினார். அவர்கள் யாவரையும் விசாரித்ததாகச் சொல்லவேண்டும் என்று தன் மகனிடம் சொன்னார். எல்லோரையும் அவர் நினைவுகூர்ந்தது அனைவருக்கும் வியப்பை அளித்தது. மாலை ஏழு மணி அளவில் எங்கள் அண்ணன் கோபாலராவ், மனைவி மற்றும் சிறிய மகளைப் பற்றி அவருக்கு ஏதாவது கவலை இருக்குமோ என்று எண்ணி, "அப்பா உங்களுக்கு எந்த விஷயத்தைப் பற்றியாவது கவலையா?" என்று கேட்டார். அதற்குத் தந்தையார், "இல்லையப்பா. கவலைப்படுபவனைப் போலத் தெரிகிறேனா நான்?" என்றார். சுமார் பத்து மணியளவில் அமைதியாக அடக்கமானார். எந்த விதமான வருத்தமும் இல்லாமல் "கிருஷ்ணா, கன்னடம்" என்னும் இரு சொற்களை மட்டும் சொல்லிக் கொண்டே காலமானார்.

**நண்பர்களின் பார்வையில்**

அவருடைய பிற நல்லியல்புகளை அவருடைய நண்பர்கள், அவரைப் பாராட்டியவர்கள், உடன் பணியாற்றியவர்கள் ஆகியோர் கூறும் செய்திகளில் இருந்து தெரிந்து கொள்ளலாம். அவருடைய மனது எப்போதும் புத்தம் புதிதாக இருக்கும் விதத்தில் அவரது மனிதநேயப் பண்பு சிறந்து விளங்கிற்று. நகைச்சுவை உணர்வு மிகுந்தவர். எந்தக் குழுவில் அவர் இருந்தாலும் அங்கெல்லாம் மகிழ்ச்சியும் இன்பமும் மிகுந்திருக்கும். இலக்கியம், பண்பாடு, கல்வி ஆகிய துறைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்ட எழுத்தாளர்கள் அவர்கள் இளைஞர்களாயிருப்பினும் சரி, முதியோராயிருப்பினும் சரி முழுமனதுடன் அவர்களது சிறப்பியல்புகளைப் புகழுவார்.

ஒருமுறை மைசூரில் உள்ள பெரிய கன்னடமொழி அறிஞராகிய டி. வி. குண்டப்பா அவர்கள் மதிப்பிற்குரிய சீனிவாச சாஸ்திரி அவர்களுடன் மங்களூருக்குப் போனாராம். பஞ்சே மங்கேசராவிற்கும் சாஸ்திரி அவர்களுக்கும் ஏற்கெனவே அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இருவரும் ஆசிரியர்கள்; இலக்கியம் போன்ற கலைகளில் பற்றுள்ளவர்கள். இவர்கள் தங்கள் இருவருக்கும் பொதுவான நண்பர்களைப் பற்றியும் பழைய மாணவர்களைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தனர். மங்கேசராவ் புறப்பட்டுச் சென்ற பின்னர் சாஸ்திரி அவர்கள் "பாருங்கள் குண்டப்பா, இப்படிப்பட்ட இலக்கியப் பற்றுள்ளவர்களை வெவ்வேறு வேலைகளுக்காக ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இப்படிப்பட்ட ஒருவரை இலக்கியப் பேராசிரியராக நியமித்தால் இலக்கியச் சுவையை நயமாக விளக்கிக்கூறும் நூற்றுக்கணக்கான ஆசிரியர்களை உருவாக்கி அவர்களுக்கு இலக்கியப் பாரம்பரியம் பற்றியும் இலக்கிய அமைப்பு முறைகள் பற்றியும் விளக்கிக்கூறி அவர்கள் புரிந்து கொள்ளுமாறும் அவற்றை ரசித்துச் சுவைத்திடுமாறும் செய்திட முடியும். அப்படிப்பட்ட ஆசிரியர்கள் தானே இலக்கியத்தை உயிரோட்டமுள்ள மகிழ்ச்சியூட்டக் கூடிய அனுபவமாகச் செய்யக் கூடியவர்கள்" என்று தமிழ்மொழியில் கூறினாராம்.

மங்கேசராவ் அவர்கள் ரெய்ச்சூரில் நடைபெற்ற இலக்கிய விழாவின் தலைவரான பொழுது, அவருடைய மைத்துனராகிய பெனகல் ராமராயர் என்பவர் நம்முடன் இருந்தார். 'நேரம் போய்க்

கொண்டிருக்கிறதே. நீங்கள் இன்னும் உடை மாற்றிக் கொள்ளவில்லையே' என்று நான் சொன்னபோது, ராமராயரின் முகத்தைப் பார்த்தபடி மங்கேசராவ் அவர்கள் "அது ஒன்றும் அவ்வளவாக கஷ்டமானதல்ல. எல்லாம் தயாராக இருக்கிறது. இந்த உடலைத் துணிகளால் மூடி அழகுபடுத்தும் திறமை மிகவும் வாய்ந்தவரான ஒருவரைப் பக்கத்தில் வைத்துக் கொண்டிருக்கிறேன். ஒரே நிமிடத்தில் நான் தயாராகிவிடுவேன்" என்று அவர் சொல்லியதும் அதை நான் சரியாகப் புரிந்து கொண்டேனா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்வதற்காக "அதைச் செய்யக் கூடியவர் யார்? அவர் எங்கே?" என்று நான் கேட்டேன். "அங்கே உட்கார்ந்திருக்கிறார் அல்லவா? அந்தப் பெரியவர் தான்! அவருடைய தங்கையை இத்தகைய வேலைகளைப் பார்த்துக் கொள்வதற்காக நான் வைத்துக்கொள்ள எனக்கு வாய்ப்புக் கொடுத்துள்ளார்" என்றார் மங்கேசராவ். இப்படிப்பட்ட சொற்கள் எல்லைமீறி பாதிக்கக்கூடும் என்பதால் ராமராயருக்கு இருப்புக் கொள்ளமுடியாமற் போயிற்று.

மற்றொரு சமயம், மைசூரில் மாவட்ட அலுவலகத்தின் முன்புள்ள தோட்டத்தில் நாங்கள் உட்கார்ந்திருந்தோம். ஒரு நண்பர் அங்கு வந்து எங்களுடன் உட்கார்ந்து கொண்டார். முதலில் நலம் விசாரித்துவிட்டு அதன் பின்னர் மங்கேசராவைப் பார்த்து "ஏதாவது கூட்டமோ அல்லது விழாவோ உங்களை மைசூருக்கு வரவழைத்ததா?" என்று கேட்டார்.

மங்கேசராவ்: கூட்டமும் இல்லை, திருவிழாவும் இல்லை. சொந்த வேலையாக வந்தேன்.
நண்பர்: ஒரு மாற்றத்திற்காக இங்கு வந்தீர்களோ?
மங்கேசராவ்: ஆமாம். சிலநாட்களை நண்பர்களுடன் மகிழ்ச்சியாகப் போக்க வேண்டும் என்று ஆசை வந்தது. அதனால் வந்தேன்.
நண்பர்: குடும்பத்துடன் வந்தீர்களா?
மங்கேசராவ்: சொன்னேன் இல்லையா 'மாற்றத்திற்காக வந்தேன் என்று' என்றார்.
இதுதான் பஞ்சே மங்கேசராவ் அவர்களின் இயல்பாகும்[1].

---

[1] அன்றிலிருந்து ஒரு மாற்றத்திற்காக வருவது அல்லது போவது என்பது மைசூரில் ஒரு சிறப்பான நகைச்சுவையாக இருந்து வருகிறது. சாரஸ்வத பிரிவினர்களின் குடும்பங்களிலும் கூட இச்சொற்கள் பயன்பாட்டில் உள்ளன என்று பேராசிரியர் பி. ராமானந்தராவ் அவர்கள் குறிப்பிடுகிறார்.

திரு மாஸ்தி வெங்கடேச அய்யங்கார் என்னும் புகழ் பெற்ற கன்னட எழுத்தாளரும் கவிஞரும் மங்கேசராவ் பற்றித் தமது நினைவுகளைப் பின்வருமாறு விவரிக்கிறார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் கன்னடப் பண்பாடு குறித்து நான்கு சொற்பொழிவுகளை நிகழ்த்த நான் ஒப்புக் கொண்டேன். பெனகல் ராமராயர் எதோ ஒரு திருமணம் தொடர்பாக வேறிடத்தில் இருக்கவேண்டி வந்ததால் முதல் நாள் சொற்பொழிவிற்கு வரவில்லை. ஆனால் மங்கேசராவ் கூட்டத்திற்கு வந்திருந்தார். அவையிலோ மிகவும் சொற்ப கூட்டம். பேசலாமா வேண்டாமா என்றுகூட சிறிது நேரம் யோசித்தேன். இக்கேள்வியை மங்கேசராவிடம் கேட்டேன். இளைஞன் ஒருவனுக்கு உற்சாகக் குறைவால் வந்த கோபத்தால் அப்படிப்பட்ட கேள்வி எழுந்தது என்று இப்போது எனக்குப் புரிகிறது. சுயமரியாதை காரணத்தால் அப்போது எனக்கு அது புரியவில்லை. அதற்கு மங்கேசராவ் "அது சரியான நடவடிக்கை ஆகாது. கன்னட மொழிக்கு மதிப்பளிப்பதற்காகப் பல்கலைக்கழகம் இந்தச் சொற்பொழிவுத் தொடரை அமைத்துள்ளது. அந்த மதிப்பை ஏற்றுக் கொள்வதற்குத் தகுந்தவராகத் தங்களைத் தேர்வு செய்துள்ளது. அந்த மரியாதையை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று பதில் அளித்தார்.

மாஸ்தி வெங்கடேச அய்யங்கார் அவர்கள் சிக்கமகளூரில் துணை ஆணையராக இருந்தபோது மங்கேசராவ் அந்த ஊருக்குப் போய் சிறிது நாள் தங்கியிருந்தாராம். "நம்முடன் தங்கியிருந்த அந்த நாட்களில் வீட்டில் உள்ள குழந்தைகளிடம் தான் அவர் அதிக நேரத்தைச் செலவு செய்தார். ஒரு சிறிய குழந்தை இசையில் சரிகமபதநி என்னும் ஏழு சுரங்களைப் பயிற்சி செய்து கொண்டிருந்தது. அதைவிட சற்றே பெரிய குழந்தைகள் அடுத்த பாடங்களைப் பயின்று கொண்டிருந்தார்கள். அவர்களின் தாத்தாவைப் போன்றிருந்த மங்கேசராவ் அப்பாடல்களை அவர்கள் நன்கு கற்குமாறு உற்சாகம் அளித்தார். கற்பது ஒரு திருவிழாவைக் கொண்டாடுவதைப் போன்றது என்று அவர்கள் உணருமாறு செய்தார்; குழந்தைகளுடன் விளையாடினார்".

"நான் அப்போதுதான் திருபாணி என்னும் நாடகத்தை எழுதி முடித்திருந்தேன். அதில் சில பாடல்கள் இருக்கின்றன. அந்த நாடகத்தை அவரிடம் படித்துக் காட்டினேன். அப்பாடல்களை இசைக் கலைஞரைப் போன்று என்னால் பாடமுடியாது. ஆனால்,

அவற்றைப் பாடும் முறையைத் தெரிவித்தேன். பஞ்சே மங்கேசராவிற்கு இசையறிவு இருந்தது. 'நாடகமேடையில் இப்பாடலைத் தக்கமுறையில் பாடினால் அழகாக இருக்கும்' என்று மங்கேசராவ் கூறினார். நான் அப்பாடலை சரியான முறையில் பாடாவிட்டாலும் அதனை குறைகூறுவது சரியாக இருக்காது என்று அவர் நினைத்திருக்கவேண்டும். நீண்ட வாக்குவாதம் செய்வது அவருக்குப் பிடிக்காது என்பது உண்மையே. பேசவேண்டும்; ஆனால் அதை நயமாகவும் கனிவாகவும் கூற வேண்டும் என்பது அவர் கருத்து'' என்கிறார் மாஸ்தி வெங்கடேச அய்யங்கார்.

மற்றொரு முறை சில நாட்கள் நாங்கள் ஒன்றாகத் தங்கியிருந்தோம். என் வீட்டுக்கு வந்து என்னுடன் சேர்ந்திருந்தார் மிக்க அன்பு பாராட்டும் நண்பராக. கடினமான கேள்வி ஒன்று எழுந்தது. கன்னடத்தில் சிறுகதைகள் எழுதிய முதலாவது கதாசிரியர் யார்? என்பது வினா. இக்கேள்வி எப்போதும் உணர்ச்சியைத் தூண்டிவிட்டு சூடான விவாதத்தை உண்டாக்கக் கூடியது. மேற்குத் தொடர்ச்சிமலையின் இந்தப் பக்கமும் அந்தபக்கமும் இருந்த நாங்கள் ஒருவருக்கு ஒருவர் அந்தச் சிறப்பைக் கொடுத்துக் கொண்டோம். அவருக்கு இதே சிறப்பைக் கொடுத்திட நான் எப்போதும் முயற்சி செய்தேன். அதைப் பலமுறை வெளிப்படையாக, தெளிவாக நான் கூறியுள்ளேன். ஆனால், அவரோ கன்னட மக்களின் வாழ்க்கையைப் பற்றிய கதைகளை முதலில் எழுதியது நான் என்று கூறினார். அவருடைய பதிலோ தனது கதைகள் சிறுகதைகள் என்பது. இதில் பேசப்பட்ட செய்தி முக்கியமானதல்ல. இதில் சிறப்பாகக் கவனிக்கப்பட வேண்டியது என்னவென்றால் இத்தகைய பேச்சுக்கள் கசப்புணர்வுகளையும் பகையையும் எழுத்தாளர்களிடையே வளர்த்திடுகிறது. தற்போது எழுத்தாளர்களிடையே வரவேண்டியது நல்லுறவும் இணைக்கமும்தான். ஒருவர் மீது ஒருவர் பரிவுகாட்டிடுதல் வேண்டும். இப்படிப்பட்ட விஷயங்களைப் பேசுவதும் சர்ச்சை செய்வதும் யாராயிருந்தாலும் . அதை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்பதே அவர் தம் கருத்தாகும். தன்னுடைய மொத்த வாழ்க்கையில், வாழ்க்கையைப் பற்றியும் இலக்கியம் பற்றியும் மங்கேசராவின் நிலை இதுதான். இத்தகைய செய்திகளில் ஒரு அம்சம் மக்களைப் பற்றியதாகவும் மற்றொரு அம்சம் வரலாறு பற்றியதாகவும் இருக்கும். இலக்கிய வட்டங்களில் பணியாற்றிக் கொண்டிருக்கும் எழுத்தாளர்களிடையே நட்புணர்வுக்கு ஆபத்து

வரும் போல இருந்தால் மங்கேசராவ் தான் கன்னடச் சிறுகதை ஆசிரியர்களுள் முதலாமவர் என்பதை ஏற்றுக் கொள்ளாமல் அதைப் புறக்கணிப்பதற்கும் தயாராக இருந்தார். அப்படிப்பட்டது உண்மையான நட்பின், அன்பின் தன்மை. இது தூய தங்கத்தைப் போன்றது. இத்தகைய மனத்தூய்மையும், மனப்பாங்கும் மங்கேசராவைச் சிறந்தவராகவும் உயர்ந்தவராகவும் ஆக்கியது.

திரு சிவராம காரந்த் அவர்கள் ஒரு நிகழச்சியை விவரிக்கிறார். 1932ம் ஆண்டளவில் மங்களூரில் கல்வி வாரம் என்னும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தோம். இந்தப் பணியைச் செய்யுமாறு மங்கேசராவ் என்னை நியமித்திருந்தார். அதற்கு மிகுந்த பணச்செலவு ஆகுமே என்று நான் கேட்டேன். மங்கேசராவோ "காரந்த்! காரியத்தை நடத்துங்கள்" என்று சொன்னார். புகழ்பெற்றவர்கள் இதில் ஈடுபாடு கொண்டு நன்கொடை கொடுப்பார்கள், உதவித்தொகையைத் தாமாகவே முன்வந்து கொடுப்பார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால், அது நடைபெறவில்லை. வாரவிழா முடிந்தது. செலவுத் தொகையைக் கணக்கிட்டுப் பார்த்தபோது ஐந்நூறு ரூபாய் குறைவது தெரியவந்தது. மங்கேசராவிற்கு இது தெரியவந்தபோது இவ்வளவுதான் குறைகிறதா என்று சொல்லிச் சிரித்தார். உடனே தனது காசோலை புத்தகத்தை எடுத்து ஐந்நூறு ரூபாய்க்கு ஒரு காசோலையை என்னிடம் கொடுத்து "காரந்த் அவர்களே, கிராமங்களின் இந்தப் பள்ளி ஆசிரியர்கள் நான் துணை ஆய்வாளராக இருந்தபோது எனக்கு மிகுந்த மதிப்பும் மரியாதையும் கொடுத்துப் பணியாற்றினர். தற்போது நான் அவர்களுக்குத் திருப்பிக் கொடுப்பது மிகவும் குறைவானதேயாகும். அதற்குச் சமமான அன்பையும் உண்மை நேயத்தையும் என்றாவது அவர்களிடம் திருப்பிக் கொடுத்துத் தீர்த்துக் கொள்ளுகிறேன்" என்றார்.

பஞ்சே மங்கேசராவ் அவர்களின் மனது இனிமையானது. பிறர்மேல் வெறுப்பூட்டக்கூடிய அல்லது நியாயமற்ற நிலைகளைக் கண்டால் அவருக்கு மிகுந்த வருத்தம் ஏற்படும். அப்படிப்பட்ட செயல்களைச் செய்பவர்களிடமிருந்து அவர் விலகியிருந்தார்.

குவெம்பு என்று அழைக்கப்படும் கெ.வி. புட்டப்பா என்பவர் கன்னடமொழியில் மிகவும் சிறந்த கவிஞராவார். மங்கேசராவைப் பற்றி அழகியதொரு பாடலைப் பாடியுள்ளார். அப்பாடல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

"பாலில் சர்க்கரை சேர்ந்ததுபோல ஆசிரியரே
செயலில்தூய்மை, பேச்சில் இனிமை உமது சிறப்பு
குழந்தை நகை உமது நட்பாடலில் பகை உமக்குப்பகை
கற்பூரத்தில் நெருப்பும் உண்மைக்கு அழகும்
சேர்ந்தாற்போல வாழ்க்கைப் பகலவன்
உமது மனதின், வாக்கின் சிறப்புக்கு மங்கள
ஒளி வாரி வழங்குகிறது. உமது வாழ்வின் சாந்தி
உமது படைப்புத்திறனுக்கு உவமை. வீணாகானமே!
கடித்தால் கரும்பு சுவைத்தால் தேன்
என உம்சிறப்பைக் காட்டினீர்; கைகொட்டுவோம்
புகழில் மயங்கி வாழ்வது வாழ்வாகுமா
செல்வந்தர்களின் பணத்திற்கோ புகழுக்கோ மயங்கி
வாழ்க்கை வண்டியின் நுகத்தடியை தோளில் ஏற்பவர் நீரல்ல
தேர்க்கயிற்றை இழுத்தீரேயன்றி யார்முன்பும் மண்டியிடவில்லை"

* * *    * * *    * * *

உல்லாள் அவர்கள் பின்வருமாறு கூறுகிறார். "இவருடைய நடவடிக்கை என்றைக்கும் தூய்மையானதாகும். இவருடைய எளிமை, சாதிப் பாகுபாடுகளுக்கு இடம் கொடுக்காது இருக்கும் தன்மை ஆகியன இவருடன் பழகும் எவருக்கும் தெரிந்திருக்கும். பிறரைச் சார்ந்திருக்க வேண்டாம் என்பதே அவருடைய வாழ்க்கையின் முக்கிய குறிக்கோளாகும். ஆசிரியராகவோ சொற்பொழிவாளராகவோ செயல்படும்போது அவர் நாற்காலியின் மீது உட்கார்ந்ததில்லை. இந்தப்பக்கமும் அந்தப்பக்கமும் நடந்து கொண்டு பேசுவார். ஒவ்வொரு கேள்வியையும் பகுத்தாய்ந்து தமது விளக்கத்தைத் கூறுவார். அவருடைய அறிவுத்திறன் எல்லோரையும் கவர்ந்தது".

திரு. பி. எஸ். குசாலப்பன் அவர்கள் குடகைச் சேர்ந்தவர். மடிகேரியிலுள்ள மைய உயர்நிலைப் பள்ளியில் சிறிது காலம் அவருடன் பணியாற்றினார். முதலில் அவருக்கு இவர் மேல் திருப்தி இருக்கவில்லை. சிறிது காலத்திற்குள்ளாகவே அவர்மீது மதிப்பு ஏற்பட்டது. இன்னும் சிறிது காலத்திற்குப் பின்னர் அவர் குடகின் மக்களவைத் தலைவரானார். மங்கேசராவைப் பற்றி அவர் இவ்வாறு சொல்லுகிறார். "ஹுத்தரி பாடலைப் புனைந்த கவிஞர் சாதாரண கவிஞர் அல்ல. இவர் மிகவும் திறமை வாய்ந்தவர். அவரிடம் அன்பு

மிகுந்துள்ளது; உற்சாகம் இருந்தது. நான் எழுதிவரும் இந்தக் காலத்தில் அரசியல் காரணங்களால் குடகு மக்கள் எல்லோரிடமும் இருந்து தகுந்த மதிப்போ மரியாதையோ அதற்குக் கிடைக்கவில்லை. எதிர்காலத்தில் புதுவாழ்க்கையும் புது உற்சாகமும் குடகில் தோன்றும்போது குடகு மக்களை உற்சாகப்படுத்தும் பாடலாக இப்பாடல் விளங்கும். இப்பாடலை முழுக்குரலில் சரளமாகப் பாடவேண்டும். ஒவ்வொரு நாட்டு மக்களுக்கும் ஒரு நாட்டுப்பண் இருக்கவேண்டும். மக்கள் நல்லவராயிருத்தல் என்னும் இயல்பு அவரவரது வீடுகளிலேயே தோன்றிட வேண்டும். ஒரு நாட்டின் மீதுள்ள பற்றும் அப்படிப்பட்டதுதான். குடகில் உற்சாகம் பிறந்து நாட்டுப்பற்று வளரச் செய்யவேண்டும் என்றால் ஹுத்தரி பாடல் அவசியமாகிறது. அப்போது எல்லா மக்களும் மங்கேசராவை நினைத்துக் கொள்வார்கள். இலக்கியம் அழியவேண்டும் என்றால் மக்களின் மொழி அழிய வேண்டும். ஹுத்தரி பாடல் அழிய வேண்டுமானால் குடகுமக்கள் அழியவேண்டும்''.

எதைப் பற்றித் தனது கருத்தைக் கூறவேண்டும் என்று தோன்றுகிறதோ அதைப் படிக்கும் போதும் விளக்கம் கூறும்போதும் அவருடைய குரலின் இனிமை அவருடைய செயலை எளிதாக்கும். அந்தப் படைப்பின் பொருள், சாரம் போன்றன மேலும் தெளிவாகும். முதலில் நன்றாகப் படித்திருந்தாலும் மேலும் சிந்திக்கையில் எது தங்கம் எது பித்தளை என்பது தெரியும் விதத்தில் பேசுவார் என்று கூறப்படுகிறது. ஆனால், படிக்கும்பொழுது அப்படிப்பட்டவற்றையும்கூட அதன் அழகு கெடும் விதத்தில் படிக்கக்கூடாது. படிக்கையில் அதற்கு அநியாயம் செய்துவிடக்கூடாது என்னும் கருத்துடையவர்களாய் இருத்தல் வேண்டும். நல்லன என்பனவற்றில் எவைஎவை மரபை ஒட்டின, காலத்தை ஒட்டி எழுந்தன, செயற்கையானவை போன்றன யாவும் தெளிவாகத் தெரியுமாறு செய்திடுவார். அந்த ஒரு குறிப்பிட்ட பாடலை ஏன் அவர் மெச்சினார், மற்றொரு பாடலை ஏன் அவ்வளவாக ரசிக்கவில்லை என்பது தெளிவாகிறது.

மங்களூர் அரசு கல்வி நிலையத்தில் ஆசிரியராக இருந்தபோது பல புதிய குழுக்களிலும் விவாதக்கூடங்களிலும் பங்கு பெறுவார். அவர் செய்த எந்தச் செயலிலும் பேசிய எல்லாப் பேச்சுகளிலும் ஏதாவதொரு சிறப்பு இருக்கும். அவர் ஒரு சிறந்த நடிகராகவும்

இருந்தாராம். நாடகத்தை அமைப்பதிலும் தயாரிப்பதிலும் பயிற்சியளிப்பதிலும் மிகவும் திறம்பட நடந்துகொண்டார். நடிகர்கள் சாதிக்கவேண்டும் என்னும் அம்சங்களில் தான் எவற்றையெல்லாம் சிறப்பாகச் செய்திட வேண்டுமென்று எண்ணினாரோ அவை நிறைவேறும் விதத்தில் நடித்திட வேண்டும் என்று நடிகர்களை வற்புறுத்துவார். நடிப்பில் அப்படிப்பட்ட தரத்தை அவர் காப்பாற்றி வந்தார். சோம்பலுடன் எதையாவது செய்துகொண்டிருப்பது மூடி மறைப்பது அல்லது கபடம் செய்வது ஆகியவற்றைக் கண்டால் அவருக்குக் கோபம் வரும். எதனுடைய சிறப்பைப் பற்றி அவர் பேசினாரோ எதற்காக அவர் உழைத்தாரோ அவற்றுக்காக சிந்திப்பதிலேயே அவருடைய முழுமனதும் எப்போதும் ஈடுபட்டிருக்கும். ஒரு விஷயத்தின் பல்வேறு முகங்களை அங்கு காணமுடிந்தது. அவருடைய காலத்தில் மக்கள் சம்பிரதாயச் சடங்குகளிலும் ஆசாரங்களிலும் மூழ்கியிருந்தனர். உயர்பதவியில் இருந்தவர்கள் அல்லது அன்றாட இல்லற வாழ்க்கையில் சிறப்பானவர்கள் என்று கருதப்பட்டவர்கள் அவற்றுக்கு உறுதுணையாக இருக்கவேண்டும் என்று கருதி வந்தனர். எப்படிப்பட்ட செயலாக இருந்தாலும்சரி, அச்செயலின் பண்புகளில் குற்றம் குறைகள் எதாவது கண்டால் அவர் அவற்றை எதிர்த்தார். இதனால் இவரைப் பார்த்தால் சிலருக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை; சற்று பயமே ஏற்பட்டது. அவருடைய நட்பாடல், அறிவுத்திறன் நிறைந்த பேச்சு ஆகியன சிலரைச் சில வேளைகளில் எரிச்சல் கொள்ளச் செய்தது. ஆனால் எதைச் செய்தாலும் மிகவும் மென்மையாகச் செய்வார். கூடவே மெல்லிய நகைச்சுவையும் உண்மைத்தன்மையும் உடனிருந்ததால் அவருடைய சொற்கள் பிறரை அவ்வளவாகத் துன்புறுத்தவில்லை; வாட்டவில்லை. அவரது மகனாகிய ராமராயன் பின்வரும் ஒரு சிறிய நிகழ்ச்சியைக் கூறுகிறார். 'ஒருமுறை ஒரு பெரிய விருந்து நடைபெற்றது. மிகுந்த வம்புக்காரராகிய சாமாராயர் என்பவர் [வழக்கமாக சாமண்ணு என்று அவரை அழைப்பர்] தந்தையை இழிவுபடுத்தும் விதத்திலும் தான் அறிவு நிறைந்தவர் என்று தோன்றும் விதத்திலும் நடந்துகொண்டார். தந்தையார் வயதில் அவரைவிடச் சிறியவர். சிறிதுநேரம் பிறருடன் தந்தையார் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார். அதன் பிறகு அமைதியாகத் தோட்டக்கலை

தொடர்பான ஒரு விடுகதையை அங்கிருந்தோர் முன் வைத்தார். ‘சண்டையின் விதைக்கு ஏற்ற மண் எது?’ என்பதுதான் அவருடைய விடுகதையாகும். உணவு உண்டு கொண்டிருந்தவர்கள் சிறிதுநேரம் உண்பதை நிறுத்திவிட்டு சிரித்தார்கள். யாருக்கும் இதற்குப் பதில் தெரியவில்லை. தந்தையாரையே இதற்கான பதிலைக் கேட்டார்கள். வேறு யாரோ ஒருவர் “சண்டையின் விதைக்கு ஏற்ற மண் எது?” என்று மீண்டும் அதே கேள்வியையே திரும்பக் கேட்டார். தந்தையின் பதில் உடனே வந்தது. ‘சாமண்ணு’ என்று பதில் சொன்னார். பந்தியில் இருந்த யாவரும் கலகலவென சிரித்தனர். எதிர்பாராத இந்தப் பதில் [சாமராயரை] வியப்படையச் செய்தது.

அவருடைய கல்விப் பணியில் மிகுந்த பலனைத் தந்தது ஆசிரியர்களின் வாழ்க்கை மகிழ்ச்சியாக இருந்திட வேண்டும் என்பதாகும். அந்த வேலையில் சேர்ந்த மிகவும் தாழ்ந்த மட்டத்தைச் சேர்ந்த மக்களிடையேயும் கூட தாம் மிகச் சிறந்ததொரு பணியில் ஈடுபட்டுள்ளோம் என்னும் நினைவை உண்டாக்குவது அவருடைய குறிக்கோளாகும். நேரிடையாகவும் தனது ஏவலாள் மற்றும் சமையற்காரர் மூலமாகவும் அவர் தொகுத்த நாட்டுப்புற வாழ்க்கை முறை பற்றிய செய்திகள் அவருடைய நினைவுகளைப் புதுப்பித்துக் கொண்டிருந்தன. துளுமொழியில் உள்ள சொற்கள், பழமொழிகள், வழக்காறுகள் ஆகியவற்றை சாதாரணமாக அங்கு பயணம் செய்யும்போது தொகுத்து அச்சொற்களின் உருவாக்கக் கோட்பாடுகளை ஆய்வு செய்ததன் மூலமாக அவருடைய அறிவு பெருகியது. அவருடைய நினைவாற்றல் மிகவும் ஆழமானது. அவர் அன்பு காட்டுதல், உண்மையைப் பின்பற்றுதல் என்னும் நெறிவழிச் சென்றார். யார் யார் எப்படிப் பட்டவர்கள்? எந்தெந்த பொருளின் இயல்பு எப்படிப்பட்டது? என்று அறிந்து கொள்ளுவதிலும் மக்களின் மற்றும் பிறவற்றின் அருமையை அறிந்து கொள்ளுவதிலும் அவர் என்றும் தவறியதே இல்லை.

* * *   * * *   * * *

தனிமனிதராக அவர் மிகவுயர்ந்து விளங்கினார். வயதான மற்றும் இளம் எழுத்தாளர்கள் யாவரும் அவருடைய பாதிப்பை நீண்ட காலத்திற்கு நினைத்துக் கொண்டிருந்தனர். அது அவர்களைத்

தொட்டது: தன்னம்பிக்கை குறைவாகவோ அல்லது வெட்கப்பட்டுக் கொண்டோ அவரிடம் போனவர்கள் உற்சாகம் நிரம்பப் பெற்றவர்களாக ஆற்றலுடன் திரும்பி வருவார்கள். பேராசிரியர் ராமானந்தராயர் பின்வரும் ஒரு சிறு நிகழ்ச்சியைக் கூறுவதன் மூலம் மங்கேசராவின் நல்லியல்புகளை விளக்குகிறார்:

"ஒருமுறை நான் அவருடன் இருந்தபோது கன்னடத்தில் நான் எழுதவேண்டும் என்று என்னை மிகவும் வற்புறுத்தினார். நான் முன்னதாக எழுதிய ஓரிரண்டு சிறு கட்டுரைகளையோ கொங்கணி கன்னடம் என்று கூறி சிலர் ஆட்சேபித்தார்கள் என்று நான் அவரிடம் சொன்னேன். மங்கேசராவ் அவர்கள் உணர்ச்சி தழும்பும் குரலில் நமக்குத் தேவைப்படுவதும் அதுவே என்று பதில் கொடுத்தார். கொங்கணி கன்னடமாக இருந்தாலும் சரி, துளு கன்னடமாக இருந்தாலும் சரி, மராட்டி கன்னடமாக இருந்தாலும் சரி ஒவ்வொரு திசையிலிருந்தும் கன்னடமொழியின் மீது விடுதலைக் காற்று வீசட்டும். அப்போதுதான் மொழி வளர்ச்சி பெறும். ஆங்கிலத்தைப் பாருங்கள். எங்கெங்கிருந்தெல்லாம் இரவல் பெற்றுள்ளது! தற்போதும் பெற்று வருகிறது... உலகில் உள்ள அனைத்து மொழிச் சொற்களாலும் அம்மொழி தன் வளத்தைப் பெருக்கி வருகிறது. அதனால்தான் அது ஒரு பெரிய மொழியாக விளங்குகிறது; உலக மொழியாக சிறக்கிறது. எனவே கன்னடத்தில் எழுதுவதை விட்டுவிட வேண்டாம். உங்களுக்குத் தெரியாமலேயே உங்கள் கொங்கணி கன்னட மொழியானது கன்னடத்தை வளப்படுத்தியுள்ளது என்றார்".

இப்படிப்பட்ட செய்திகள் பற்பல. பல இளம் எழுத்தாளர்களை அவர் உருவாக்கியுள்ளார். கன்னட மொழியின் படைப்புலகில் படைப்பாளிகளையும் செயல்படுவோரையும் அவர் உருவாக்கினார்.

* * *     * * *     * * *

கொங்கணி மொழி பேசுபவராக இருந்தும் அவர் கன்னடமொழியை ஏற்றுக்கொண்டது, கொங்கணியில் குறிப்பிட்டுச் சொல்லும் அளவிலான இலக்கியம் ஏதுமில்லை என்னும் ஒரு காரணத்திற்காக மட்டுமில்லை; கன்னடம் இப்பகுதியின் வட்டார

மொழியுமாகும். கன்னட மாவட்டத்தில் உள்ளவர்களுள் பெரும்பான்மையான மக்கள் கொங்கணி, துளு ஆகிய மொழி பேசுபவர்கள். இம்மொழிகளைப் பயன்படுத்துவதோடு கன்னடமொழியை வளப்படுத்தும் முயற்சியிலும் அவர்கள் ஈடுபட்டார்கள். சொற்களுக்கும் பெயர்களுக்கும் மூலம் எது என்பதை அறிந்துகொள்ள அவருக்கிருந்த துளு, கொங்கணி மொழிகளின் அறிவு உதவிற்று. ஒன்றின் இயல்பான வன்மை மற்றொன்றின் தொழில்நுட்பப் படைப்புத் திறன் இவையிரண்டும் சேர்ந்து அவரது சிந்தனைகளில் வலிமை கொடுத்தன; கன்னடமொழியின் ஒப்பாய்விற்குத் தேவையான தரவுகளைத் திரட்டுவதற்கு உதவின. அவற்றின் சக்தியும் வலிமையும் கன்னடத்திற்கு வரட்டும் என்பது அவருடைய விருப்பம். சொற்களைக் கண்டால் அவற்றின் பொருள் பற்றியும் இசைநயம் பற்றியும் அவர் காட்டும் அன்பு மிகுதியாயிருக்கும். எங்கெங்கு சென்றாலும் அவை அவருடன் வந்தன; அவரது நினைவில் எதிரொலித்தன. ஊர்ப்பெயர்கள் பற்றிய மற்றும் பதார்த்தம் என்ன? என்னும் தலைப்பிலான கட்டுரைகள் எழுதுவதில் இந்த அறிவு இவருக்கு எவ்வாறு உதவிற்று என்பதைக் காணலாம். செய்திகளை விளக்கிக் கூறுவதிலும் அவற்றை நயம்பட அமைப்பதிலும் அவற்றின் உதவி சிறப்பானதாக உள்ளது.

பஞ்சே மங்கேசராவ் பற்றிய என்னுடைய சில கருத்துக்களை, நினைவுகளைக் கூறுவதன் மூலம் அவருடைய குணவியல்புகளின் சிறப்புக்களை விளக்கிடலாம். இங்கு கூறப்படவுள்ள இரண்டு மூன்று செய்திகள் மங்களூரோடு தொடர்புடையவை. மங்களூர் அவர் வாழ்ந்த ஊர். அவர் பெங்களூருக்கு வருகைதந்தபோது நிகழ்ந்தன மீதமுள்ள இரு நிகழ்ச்சிகள்.

1927ம் ஆண்டில் மங்களூரில் கன்னட சாகித்திய சம்மேளனம் நடைபெற்றதல்லவா? அதன் வரவேற்புக் குழுவில் உள்ள ஒரு சிலருடன் சேர்ந்து 'பிரசங்கம்' அல்லது 'தாளமத்தலே' என்றழைக்கப்படும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார். இந்நிகழச்சி வாய்ச்சொற்களால் நிகழ்த்தப்படுவதாகும். கதையின் போக்கு எவ்வாறுள்ளதோ அதற்கேற்றாற்போல பாத்திரங்களின் உரையாடல்களை அவ்வப்போது கற்பனை செய்துகொண்டு

நாடகத்தைப் போன்று கதைகூறும் நிகழ்ச்சி. இந்த யக்ஷகானம் ஒரு நாட்டிய நிகழ்ச்சியாகும். அன்றைய நிகழ்ச்சி சுக்கிரீவன் நட்பு என்னும் ராமாயண நாடகம் என்று எண்ணுகிறேன். இராமனும் இலக்குமணனும் சுக்கிரீவனைக் காண்கிறார்கள். இராமனுக்கும் சுக்கிரீவனுக்கும் இடையே நட்பு வளர்கிறது. சுக்கிரீவன் அண்ணனாகிய வாலி தம்பியை நாட்டைவிட்டு ஓட்டிவிட்டு அவன் மனைவியை தன்னவளாக்கிக் கொள்ளுகிறான். அதனால் இராமன் வாலியைக் கொல்கிறான். வாலி இறந்த பின்னர் சுக்கிரீவன் கிஷ்கிந்தையின் அரசனாக முடிசூடிக்கொள்ளுகிறான். சுக்கிரீவன் இராமனின் கூட்டாளி ஆகிறான். வாலி பகையாளி ஆகிறான். அவன் பாத்திரத்தை ஒரு இராட்சசனைப் போல வடிக்கின்றனர். சண்டே என்னும் பெயருடைய மிகுந்த ஒலியெழுப்பும் மத்தளக்கருவியொன்றை வாலி பேசத்துவங்கும் முன்பு முழங்குவார்கள். சண்டே என்னும் தாள இசைக் கருவியை முழங்குவதில் நிறைய உத்திகள் உள்ளன. அது காட்சிச் சூழ்நிலையை பயங்கரமானதாக மாற்றிக் காட்டுகிறது. கேரளத்தில்

---

[1]தெற்கு – வடக்குக் கன்னட மாவட்டங்களில் கடந்த 400 முதல் 500 ஆண்டுகளாக இத்தகைய யக்ஷகான நிகழ்ச்சிகள் மிகவும் புகழ்பெற்று விளங்குகின்றன. மைசூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த மலைநாடு என்று அழைக்கப்படும் மலைகள் சூழ்ந்த பகுதிகளிலும் கூட இந்நிகழ்ச்சி நிகழ்த்தப்பட்டு வருகிறது. யக்ஷகானம் அல்லது வயலாட்டம் என்னும் நிகழ்ச்சி பற்றி ஏற்கனவே பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த நிகழ்ச்சிகளை டெல்லி, பம்பாய் போன்ற இடங்களில் நடத்தியுள்ளனர். டாக்டர் சிவராம காரந்த் அவர்கள் செயல்முறையிலும் கருத்தளவிலும் இவை பற்றிய ஆய்வுகளைச் செய்வராவார். தற்போது அவர் இதனை பேச்சு இல்லாத ஒரு நாட்டிய நாடகமாக அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். இதில் நாட்டியம் உள்ளது, பாடல் உள்ளது, கதையுள்ளது. இது வெறும் நாட்டுப்புறக் கலையன்று. இது ஒரு இலக்கிய வகைக்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளது. பரதநாட்டியக் கலையில் ஆங்கிக, வாசிக, ஆஹார்ய, அபிநய என்று விளக்கப்படுவதைப் போன்றே இதுவும் ஒரு முழுமை பெற்ற கலையாகும். தாள மத்தளே அல்லது ப்ரசங்க என்றழைக்கப்படுபவை முற்றிலுமாக வாய்ச்சொற்களால் நிகழ்த்தப்படுவனவாகும். கமகவாசனம் என்றழைக்கப்படும் நிகழ்ச்சிக்கும் நாடக மேடைகளிலும் ஹரிகதைகளிலும் கதாகாலட்சேபங்களிலும் பின்பற்றப்படும் நடைமுறைகளுக்கும் இடைப்பட்டதாக ஆனால் மாறுபட்டதாக இது இருக்கும். வரலாற்று நிகழ்ச்சிகளில் இருந்து அல்லது புராணக்கதைகளில் இருந்து ஏதாவதொரு பகுதி அல்லது ஏதாவது ஒரு குறிப்பிட்ட இடத்தைப் பற்றிய வரலாற்று நிகழ்ச்சி யக்ஷகானத்தின் கருவாக இருக்கும். மேற்கத்திய இசை

இக்கருவி இசைக்கப்படும் முறை மாறுபட்டது. ஆனால், கேரளத்திலும் கர்நாடகத்திலும் சண்டே பயன்படுத்தப்படுகிறது. மென்மையான சூழ்நிலைகளிலும் நட்புச் சூழ்நிலைகளிலும் மத்தளத்தைப் பயன்படுத்துகிறார்கள். புணிஞ்சத்தாயர்கள் என்று அழைக்கப்படுபவர்கள் இசைக்கருவிகளை இசைப்பதைக் கவனித்துக் கொள்வார்கள். பிரசங்கம் செய்வதில் மிகவும் தேர்ச்சியும் புலமையும் பெற்ற தெற்குக் கன்னட மாவட்டக் கலைஞர்களால் அன்றைய நாளின் நிகழ்ச்சியானது நிகழ்த்தப்பெறும். தற்போது எனக்கு அத்தகைய இரு கலைஞர்களின் பெயர்கள் மட்டுமே நினைவில் உள்ளது. ஒருவர், சென்னை மாநிலக்கல்லூரியில் கன்னடப் பேராசிரியராக இருந்த உடுப்பி வித்வான் சீனிவாசாசார்யர் என்பவராவார். மற்றவர் திரு பளிகாவாகவோ அல்லது திரு வெங்கப்ப செட்டியாகவோ இருக்கக்கூடும். இந்தப் பகுதிகளில் இவர்கள் மிகவும்

---

வட்டக்கருவியும் அதை இசைப்பதற்கு சிறு குச்சியையும் கொண்டதாகவோ இருக்கும். நிகழ்ச்சி ஆரம்பமாவதைக் குறிக்கும் இறைவணக்கம் முடிந்த பின்னர் கதையைச் சுருக்கமாக விவரிப்பர். இதில் நடிப்பவர்கள் எந்த வேடத்தையும் இட்டுக் கொள்வதில்லை. இவர்களை அர்த்தக்காரர்கள் என்றும் அழைப்பதுண்டு. வேடமிட்டுக் கொள்வதோ, ஒளி அமைப்புக்களைப் பயன்படுத்துவதோ, காட்சி ஜோடனை செய்வதோ இதில் கிடையாது. பலர், எல்லோரையும் போன்றே அரங்கில் நிலத்தின் மீது உட்கார்ந்திருப்பார்கள். அவர்களுடன் அர்த்தக்காரர்கள் என்று அழைக்கப்படும் இந்த நிகழ்ச்சியாளர்களும் விரவி உட்கார்ந்து கொள்ளுவார்கள். பாகவதர் கதையைப் பாடலாகப் பாடுவார். கதையைப் பற்றிய குறிப்பைக் கூறும் இத்தகைய பாடல் 2–3 நிமிடங்களில் பாடி முடிக்கப்படும். அதன் பின்னர், இது நாடகத்தைப் போன்ற உரையாடல் வடிவம் பெற்று சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் வளர்ந்து செல்லும். மேடையின் பின்புலத்தில் எவ்விதமான காட்சி அமைப்பு மாற்றங்களும் இருப்பதில்லை. காட்சிகளில் முதற்காட்சி, இரண்டாம் காட்சி என்பது போன்ற பிரிவுகளும் இருப்பதில்லை. இந்நிகழ்ச்சியை நிகழ்த்துவதில் சில நடைமுறைப் பழக்கவழக்கங்கள் இருப்பினும், உரையாடலின் பெரும்பகுதி ஆங்காங்கு தேவைக்கேற்ப அமைத்துக் கொள்வதே வழக்கம். இதனால் இந்நிகழ்ச்சிகள் மிகவும் சிறப்பானதாகவும், தரம் நிறைந்ததாகவும், இயல்பானதாகவும் சகஜமானதாகவும் உள்ளன. விவரித்தல், வருணித்தல், விமர்சனம் செய்தல், கலந்துரையாடுதல் போன்றவற்றைக் கொண்டு கதை முன்னேறுகிறது. சுமார் இரண்டு மூன்று மணிநேரம் இந்நிகழ்ச்சி நடைபெறும். தெற்குக் கன்னட இலக்கிய வாதிகளின் பேச்சுத் திறன், கலந்துரையாடல் உத்திகள் போன்றன இத்தகைய நிகழ்ச்சிகளின் உதவியால் வளர்ச்சியடைந்தன.

புகழ்பெற்றவர்கள். இது எனக்கு முற்றிலும் புதியதொரு அனுபவமாக இருந்தது. நான் இந்நிகழ்ச்சியைப் பார்க்கும்போது என்னுடன் பஞ்சே மங்கேசராவும் கர்நாடகத்தின் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்த மூன்று நான்கு கன்னட இலக்கிய அறிஞர்களும் இருந்தனர். மங்கேசராவ் அவர்கள் மெல்லிய குரலில் ஆனால் அழகிய குரலில் நிகழ்ச்சியின் நடுநடுவே அவ்வப்போது சிறு குறிப்புக்கள் கொடுத்துக் கொண்டு வந்தார். அர்த்தகாரர்கள் என்றழைக்கப்படும் கதை கூறுபவர்கள் கதையை எவ்வாறு புனைந்து கொண்டு போகிறார்கள், ஷட்பதி என்றழைக்கப்படும் ஆறடிப்பாடல்களைப் பாகவதர்கள் எவ்வாறு இசையுடன் பாடுகிறார்கள், எந்தத் தாளத்தை அதில் இசைக்கிறார்கள், சூழ்நிலைக்கு ஏற்றவாறு இலக்கியத்தரமும் நாடகப் பண்பும் எவ்வாறு இணைந்து செல்கின்றன என்பனவற்றை விவரித்தார். இது யக்ஷகான நாட்டியத்தில் இன்னும் சிறப்பாக வெளிப்படுகிறது[1]. இவ்வாறு மங்கேசராவ் அவர்கள் விவரித்தது எனக்கு மிகுந்த நிறைவை அளித்தது.

காலட்சேபம் முடிந்த பின்னர், அர்த்தக்காரர்களுக்கும், அங்கு வந்திருந்த பரிஷத் அலுவலர்களுக்கும் நன்றியுரை கூறவேண்டும் என்றும் அப்படியே அந்நிகழ்ச்சி பற்றிய மதிப்புரை வழங்கவேண்டும் என்றும் மங்கேசராவைக் கேட்டுக் கொண்டார்கள். அவர் அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டு சற்றுநேரம் பேசினார். அது பொதுக்கூட்டமாக இருந்தபடியால் அன்று மங்கேசராவ் வழக்கமான முறையில் வேட்டியணிந்திருந்தார். அந்த நிகழ்ச்சி பற்றிப் பொதுவாகவும், தமது பகுதியைச் சேர்ந்த் புகழ்பெற்ற கலைஞர்கள் ராமாயணத்தின் ஒரு பகுதியை எவ்வாறு சிறப்பாக நிகழ்த்திக் காட்டினார் என்பது பற்றி குறிப்பாகவும் பேசினார். நடுநடுவே பிரசங்கத்தில் காணப்பட்ட சில சிறந்த அம்சங்களையும் எடுத்துக் கூறினார். அனுமனுக்கும் இராம இலக்குவனர்களுக்கிடையேயும் ராமனுக்கும் சுக்கிரீவனுக்கும் இடையேயும் நடைபெற்ற உரையாடலில் தேர்ந்தெடுத்த சில பகுதிகளை எடுத்துக் கூறி வியந்தார். வாலியை இராமன் கொன்றது சரியான செயலா என்பது இராமாயண காலம் தொட்டு

[1] தாள நடையும் கால அளவும் ஒன்றேயாக இருப்பினும் இசைக் கலைஞர்களும் நாட்டியங்களுக்கு இசை அமைப்பவர்களும் அதனை வெவ்வேறு முறைகளில் அமைக்கிறார்கள். பரதநாட்டியத்தில் ஒருவிதத்திலும் யக்ஷகானத்தில் வேறொரு விதத்திலும் கூட அமைத்திடலாம். சொற்கள், சொற்றொடர்கள் ஆகியன ஒன்றேயாக இருப்பினும் அவை புனையப்பட்டுள்ள முறையையும் உச்சரிக்கப்படும் முறையையும் நாம் கூர்ந்து நோக்க வேண்டும் என்றார்.

விவாதிக்கப்படும் ஒன்றாகும். இதனை அழகுற விளக்கிக் கூறினார். பிரசங்கத்தில் பயன்படுத்தப்பட்ட சில சொற்களையும் சொற்றொடர்களையும் நினைவுபடுத்தி விளக்கினார். பாகவதரைத் தக்கமுறையில் புகழ்ந்து பேசினார். வாதங்களில் அன்று எல்லைமீறிப் போகாமல் மிதமாக இருந்ததையும், வாக்கு வாதங்கள் சாதாரணமாக மிதமிஞ்சிப் போகும் இடங்களில்கூட அளவோடு இருந்ததையும் புகழ்ந்து பேசினார். அவையில் இருந்தோரில் பலர் இலக்கிய அறிவு நிறைந்தவர்கள் என்று முன்னதாகவே யாராவது அவர்களுக்குச் சொல்லியிருக்கவேண்டும். வாக்குவாதங்கள் தேவையில்லாமல் வளர்ந்து இன்றைய அரசியல் நிலைவரைகூட சென்றுவிடுவதுண்டு. வாக்குவாதம் நிகழ்வது அங்கு போர் நிகழ்வதைப் போலத் தோன்றி தாளமத்தலேயின் இனிமையைக் கெடுத்துவிடும்.

மொத்தத்தில் அவர் உடலே ஆடிற்று; முகத்தில் வெளிச்சம் பரவியது. கண்கள் காவியம் பாடின. ஒரு சிறுநகைச்சுவையைக் கூறியபோது மெல்லிய நகையோசை எழுந்தது. அவர் பயன்படுத்திய யுக்திகள் யாவும் பல்வேறு இடங்களில் இருந்து தொகுக்கப்பட்டவை. அவர் போர்த்தியிருந்த உத்தரீயம் காற்றினால் வலப்பக்கமாக ஆடிற்று. அதன் ஆட்டத்தை அவ்வப்போது தடுத்து நிறுத்தி சரிசெய்துகொண்டே பேசினார். சிலசமயம் அதன் ஒரு ஓரத்தைத் தலையின் மேல் இழுத்துவிட்டுக் கொண்டார். இவ்வாறு அவர் ஆற்றிய முடிவுரையானது அன்று நடைபெற்ற பிரசங்கத்தின் சிறப்பிற்கு இணையானது என்றே கூறவேண்டும்[1]. மேடைகளில் ஆற்றப்படும் சொற்பொழிவு எப்படிப்பட்டதாயிருக்கவேண்டும், அது கல்வியறிவு நிரம்பியவர்களை அல்லது பொதுமக்களை கவரும் விதத்தில் எவ்வாறு அமையவேண்டும் என்பனவற்றுக்கு அவருடைய சொற்பொழிவு எடுத்துக்காட்டாக விளங்கிற்று. அவர் பேச்சின் இனிமை, தட்டுத்தடங்கல் இல்லாத பேச்சுநயம் போன்றன மறக்க முடியாதனவாக விளங்கின. அந்தப் பேச்சாளர் சொற்பொழிவாற்றத் தொடங்கியபோது எத்தகைய மாற்றங்களை அடைந்தார் என்பதைப் பற்றிய மறக்கவியலா சித்திரம் அவர்கள் நினைவில் நிலைத்துவிடும். அவ்வளவு சிறப்பான பண்புநிறைந்த

---

[1] இந்நிகழ்ச்சியின் நடைமுறைகளையும் பிறவற்றையும் ராமராவ் அவர்கள் கொடுத்த விளக்கத்தில் கூறியுள்ளோம்.

சொற்பொழிவை பிற இடங்களில் நான் அரிதாகவே கேட்டிருக்கிறேன். அவர் சொற்பொழிவாற்றவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுவிட்டால் மக்கள் வெள்ளம் அங்கு குழுமுவது அதிசயமான செய்தியல்ல. அவர்மீது பொறாமையோ அல்லது வயிற்றெரிச்சலோ கொண்டவர்கள்தான் இதுபற்றி வேறுவிதமாகப் பேசமுடியும்; அதுவும் அவரது முதுகிற்குப்பின். செயின்ட் அலோசியஸ் திருக்கோயில் கட்டப்பட்டுள்ள குன்றைச் சுற்றி பலமுறை அவர் என்னை அழைத்துச் சென்றிருக்கிறார். திப்புசுல்தானின் சமாதியைப் பார்த்துள்ளோம். நூல்நிலையத் தோட்டத்தில் போடப்பட்டிருக்கும் திண்ணைகளின் மீது பலமுறை உட்கார்ந்திருந்திருக்கிறோம். குன்றின் மேலிருந்து கடலின் பக்கமாகப் பார்த்தால் அழகிய சூரிய அஸ்தமனம் தெரியும். மங்களூர் நகரத்தின் மொத்தக் காட்சியையும் மாவட்ட நீதிமன்றத்தின் தோற்றத்தையும் தென்னைமரங்கள் சூழ்ந்துள்ள காட்சியையும் பார்த்துள்ளோம். அந்த ஊரில் எல்லா பெரிய ஊர்களையும் போலவே துயரமும், தொல்லைகளும், ஏழ்மையும், வர்க்கப் போராட்டங்களும், போட்டியும் பொறாமையும் இருப்பினும் நான் பார்த்தது ஓர் அழகிய சித்திரமாகும். எந்தவொரு பெரிய நகரத்தின் வாழ்க்கை முறையிலும் அதன் அளவிலான துக்கமும் துயரமும் இருக்கவே செய்கின்றன. இது மங்களூரிலும் இருக்கத்தானே செய்யும்!

அன்றாட வாழ்க்கை முறையிலும் அன்றாட செயற்பாடுகளிலும் எல்லா இடங்களில் இருப்பதைப் போன்றே இங்கேயும் தொல்லைகள் இருக்கின்றன.

அழைப்பின் பேரில் முதன்முதலாக நான் அவர் வீட்டிற்குச் சென்றது என் நினைவில் உள்ளது. எனது உடை, படுக்கை போன்றவற்றை வண்டியிலிருந்து இறக்கியதும் கைகால் கழுவுவதற்காக பழங்கால முறைப்படியான 'அர்க்ய', 'பத்ய' என்றழைக்கப்படும் நீரைக் கொண்டு வந்து என் எதிரில் வைத்தார். புகைவண்டி நிலையததில் இருந்து ஒரு குதிரை வண்டியில் ஏற்றி அவர் தான் என்னை வீட்டிற்கு அழைத்து வந்தார் என்றாலும் [அத்தகைய அமைப்புள்ள குதிரைவண்டி மங்களூரிலும் வடக்குக் கன்னட மாவட்டத்தின் சில பகுதிகளிலும் மட்டுமே காணப்படும்] கால்கைகள் தூய்மையாய் இருக்கவேண்டுமல்லவா? பின்னர், இரண்டு தட்டுகளில் சிறுசிறு ரஸ்க் துண்டுகள் கலக்கப்பட்ட பொரியை என் முன்னால் வைத்தார்.

ஒரு கோப்பை நிறைய காபி கொடுத்து "மைசூர்க்காரர் நீங்கள்! உங்களுக்குப் பிடித்த விதத்தில் எனது காபி இருக்காது. ஆனாலும்..." என்றார். அடுத்ததாக "தண்ணீர் தயாராக இருக்கிறது. வெந்நீரும் இருக்கிறது; தண்ணீரும் இருக்கிறது — குளித்துக் கொள்ளலாம்" என்றார். கிணற்றிலிருந்து இரைத்த நீரைத் தானே ஒரு குடத்தில் தூக்கி வந்து குளியலறை பக்கம் வைத்தார். குளிப்பதற்குப் போய் நிற்பதற்கு முன்னதாகவே "துவைக்க வேண்டிய எல்லாத் துணிகளையும், படுக்கை விரிப்புகளையும் எடுத்து வையுங்கள். துவைத்து வைத்து விடுகிறேன்" என்றார். அவர் கூறிய இன்னொரு செய்தி யாவரையும் வியப்படையச் செய்யக் கூடியதாகும். "உங்கள் பணப்பையை உங்களிடமே வைத்துக் கொள்ளுங்கள்; இல்லாவிட்டால் என்னிடம் கொடுத்துவிடுங்கள். நீங்கள் இந்த ஊரிலிருந்து திரும்பிச் செல்லும் போது திருப்பிக் கொடுக்கிறேன். என் வீட்டில் நீங்கள் பணச் செலவு செய்திடலாகாது" என்றார். இத்தகையதொரு சொற்களை நான் வேறு இடங்களில் இதுவரையில் கேட்டதில்லை. சிலர் பிறர் வீடுகளுக்கு விருந்தினராகப் போன வேளைகளில் தமது பணத்தைச் செலவு செய்ய வேண்டியிருப்பதுண்டு. இது பல்வேறு விதங்களில் நிகழ்வதுண்டு.

குளித்து முடித்த பின்னர் அப்போதுதான் தயார் செய்த சூடான சிற்றுண்டியை ஒரு தட்டு நிறைய கொண்டு வந்து கொடுத்து மீண்டும் ஒரு கோப்பை நிறைய காபியும் வறுக்கப்பட்ட முந்திரியும் கொண்டு வந்தார். சிறிதுநேரம் ஓய்வு எடுத்துக் கொண்டபின் ஊரின் உட்பகுதியிலிருந்த பாலசாஹித்ய மண்டலின் பக்கமாகப் புறப்பட்டோம். அங்கு போய்ச் சேருவதற்குள்ளாக வழியில் ஒரு ஓரமாக நின்றார்; ஒருவன் கடையில் இருந்து இரு இளநீர்களை வாங்கி ஒன்றை நான் எடுத்துக்கொண்டு குடிக்க வேண்டும் என்று வற்புறுத்தினார். "இவன் மிகச்சிறந்த இளநீரை விற்கிறான். மிகுந்த நேர்மையானவன். ஊரின் உட்பகுதியில் இப்படிப்பட்ட இளநீர்க்காரன் இல்லை" என்னும் விதத்தில் அறிமுகம் செய்து வைத்தார். இவ்வாறு நான் அவருடன் நட்பாடிய சூழ்நிலைகளில் பற்பல நிகழ்ச்சிகள்! இரண்டு மூன்று முறை அவர் என்னை அவைகளில் அறிமுகப்படுத்தியதுண்டு. நான் சொற்பொழிவாற்றிய மேடைகளில் அவர் தலைமைப் பொறுப்பேற்றதும் உண்டு. இலக்கியத்தைப் பற்றியோ, பொருளாதாரம், அரசியல் போன்றவை

குறித்தோ நான் பேசினால் அவர் அதை மிகவும் புகழ்ந்து பேசுவார். நானோ எதையெதைப் பற்றியெல்லாமோ பேசியிருக்கிறேன். கார்லைல் கூறுவதைப் போன்று நான் ஒரு பொதுப்பேராசிரியர் (Professor of things in general) என்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்.

ஒருமுறை கர்நாட் சதாசிவராயரின் வீட்டுப் பக்கமாக நடந்து போய்க் கொண்டிருந்தோம். அதன் பக்கத்தில் ஒரு மருத்துவமனை இருந்தது. அதில் ஏதோவொரு கல்லூரியின் ஆங்கில இலக்கிய விரிவுரையாளர் ஒருவர் மருத்துவம் பெற்று வந்தார். அவருக்கு சயரோகமாக இருந்திருக்கவேண்டும். இவர் அவரைப் பார்த்து நலம் விசாரித்த முறை மிகவும் மென்மையானது. அதில் அன்பும் ஆவலும் நிறைந்திருந்தன. இது என் மீது பெரிய பாதிப்பை ஏற்படுத்திற்று. அந்தச் சூழ்நிலை, சேர்க்கை, நிகழ்ச்சி ஆகியன என்னை மேம்பட்டவனாக ஆக்கின. நாங்கள் இருவரும் மஞ்சேஸ்வரம் போயிருந்தோம். பலவேளைகள் நான் தனியாகவோ அல்லது வேறு யாருடனோ அவ்வூருக்குப் போயிருப்பினும் அவருடன் போன நிகழ்ச்சி மிகவும் வியப்படையச் செய்வதாகும். அது மனதில் நிலையாக நின்றுள்ளது. கடற்கரையில் பலமொழிகள் தெரிந்தவரும் பலசெய்திகள் அறிந்தவருமான கோவிந்த பை அவர்களுடன் நாங்கள் நடத்திய உரையாடல்கள் மறக்க முடியாதனவாகும். மாலை புகைவண்டியில் நாங்கள் மங்களூர் திரும்பினோம்.

சாப்பாட்டிற்குப் பிறகு பிற்பகல் வேளைகளில் அவர் வீட்டிற்கு எத்தனையோ பேர் அவரைக் காண்பதற்கென வருவார்கள். பள்ளி ஆசிரியர்கள், கலைஞர்கள், பிச்சைக்காரர்கள் போன்றோர் வெவ்வேறு சமயங்களில் சிறுசிறு குழுக்களாக மஹாநவமிப் பாடல்களைப் பாடிக் கொண்டு வருவார்கள். ஒரு பாம்பாட்டியோ அல்லது அவ்வூருக்குப் புதியவனோ கூட வரக்கூடும். யார் வந்தாலும் இவர் முழுமையான அக்கறையுடனே வரவேற்பார். அவருக்குக் காட்டும் மரியாதையும் அன்பும் மனப்பூர்வமானதாகவே இருக்கும். இவரைக் காணவந்தவர்கள் புறப்பட்டுச் செல்லும்முன் இவருடைய சிறந்த பேச்சையோ வாழ்த்துச் சொற்களையோ கேட்டு அவர்கள் பெறும் மகிழ்ச்சி அசாதாரணமானதாகும். சிலருக்குத் தவறாமல் ஒரு சிறு அன்பளிப்பும் கிடைப்பதுண்டு.

இங்கு மேலும் இரண்டு செய்திகளை மட்டும் கூற விரும்புகிறேன். இலக்கிய நண்பராகிய முளிய திம்மப்பய்யர்

அவர்களையோ அல்லது கடேங்கோட்லு பட்டரையோ பார்த்ததை விளக்க விரும்பவில்லை[1]

வீட்டில் உணவு உண்பதற்கு உட்கார்ந்திருந்த ஒரு சிறு காட்சியை விளக்க விரும்புகிறேன். வீட்டில் உள்ளவர்கள் "ட" என்னும் வடிவத்தில் உட்கார்ந்திருந்தார்கள். அவருடைய மகள்கள், மகன்கள், மருமகள்கள் ஆகியோர் நீளவாட்டத்தில் உட்கார்ந்து கொள்வார்கள். அவர்களின் பக்கவாட்டில் மங்கேசராவும் அவருக்கு அருகில் நானும் உட்கார்ந்திருந்தோம். எதிரிலுள்ள அறையிலிருந்து சமையற்காரப் பெண்மணி சமைத்த உணவுப்பொருட்களை வரிசையாக எடுத்து திருமதி மங்கேசராவிடம் கொடுத்தாள். மங்கேசராவ் உட்கார்ந்திருக்கும் வளைவுக்கு அருகில் உட்கார்ந்து கொண்டு ஏதும் பேசாமல் உணவைப் பறிமாறினார்கள். மகிழ்ச்சிகரமான எவ்வளவோ செய்திகள் அங்கு பேசப்பட்டன. அவர்களுள் யாருக்காவது ஏதாவது ஒரு பாடலோ, பாடலின் அடியோ, கதையோ நினைவிற்கு வருகிறதா? என்று நடுநடுவே அவர் கேட்பார். நான் தற்போது விவரித்திடும் நாளன்று கார உணவு வகைகளுடன் சுவையான பாயாசமும் செய்திருந்தனர். அந்நாட்களில் கேசரி, பாதாம், ஏலக்காய், திராட்சை, போன்றன மலிவாக வேண்டுமளவுக்குக் கடைகளில் கிடைத்தன. சமையல் மிகவும் சிறப்பாகச் செய்யப்பட்டிருந்தது. விருந்தினராகிய நான் இன்னும் சிறிது பாயாசம் வாங்கிக் கொள்ளவேண்டும் என்று சொன்னார். சாப்பாட்டு வேளையின் போது முழு மாம்பழங்களைப் பரிமாறினார்கள். எனக்கு

---

[1]இவ்விருவரும் புகழ்பெற்ற கன்னடமொழி அறிஞர்கள், புலமைமிக்கோர், கவி புனையும் திறன்மிக்கோர். புகழ்பெற்ற இலக்கியங்களையும் அறிவு நூல்களையும் படைத்தவர்கள். முனிய அவர்கள் மூத்தவர், கவிஞரும் விமர்சகரும் ஆவார். சாத்திரங்கள் கற்றவர். கடேங்கோட்லு அவர்கள் இளைஞர். ஒரு பத்திரிக்கையின் ஆசிரியர். 'ராஷ்டிரபந்து' என்னும் வார இதழைத் தான் வெளியிடுவதாக அவர் கூறினார். தான் நடத்தவிருக்கும் ஒரு பத்திரிக்கைக்கு மங்கேசராவ் ஆசிரியராக இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கு அவர் மறுத்துவிட்டார். அரசியலும், பத்திரிக்கைத் தொழிலும் இவரைப் போன்ற மனது கொண்டவர்களை கூடின சிந்தனையாளர்களாக்கிவிடும், படைப்பிலக்கியப்பணிகள் இதனால் தடைபடும் என்று கூறினாராம். அரசியலும் பத்திரிக்கைத் தொழிலும் மோகினியைப் போன்றவை, விடுபடுவது மிகவும் அரிது.

முழுமாம்பழத்தைத் தின்பதில் பழக்கமில்லை; அதை அறுத்துத் தின்றே பழக்கம். அதற்குள் மங்கேசராவ் இரண்டு மாம்பழங்களை முடித்துவிட்டார். முழுமாம்பழத்தை வைத்துக் கொண்டு தடுமாறுவதைப் பார்த்த மங்கேசராவ் "இவருக்கு இன்னும் கொஞ்சம் பாயாசம் போடு. எனக்கு இன்னும் இரண்டு மாம்பழம் வை" என்றார். அந்த மாம்பழங்கள் அவருக்கு மிகவும் பிடித்தமான வகையைச் சேர்ந்த பழங்களாகும். மாம்பழப் பருவத்தில் பழம் விற்கும் நம்பிக்கையான ஒருவன் வழக்கமாக மாம்பழங்களை இவர் வீட்டிற்கு தினமும் கொடுத்து வந்தான். அந்த மாம்பழத்தைப் பற்றிய ஒரு செய்தியைக் கூறியாக வேண்டு. அது ஒட்டுமாம்பழமில்லை, சிறிது நார் அதில் இருந்தது. ஆனால் மிகவும் சுவையானது; எனக்கும் மிகவும் பிடித்திருந்தது. மாம்பழத்தைச் சுவைப்பதற்கு ஏற்ற விதத்தில் வாகாகப் பிடித்துக் கொண்டு கையில் சற்றும் சாறு ஒழுகாமல் சுத்தமாகச் சாப்பிட்டார் மங்கேசராவ். மாம்பழத்தை அவர் கடித்தவிதம், பற்களில் பற்றி ரசத்தை உறிந்த விதம், சற்று கூட மாம்பழ ரசத்தை விட்டுவைக்காமல் முற்றிலுமாக சாப்பிட்ட விதம் இவை யாவும் கலைநயத்துடன் இருந்தன. கையில் சாறுபடாமல், ஒட்டிக் கொள்ளாமல் அவர் அதைச் சாப்பிட்ட விதம் மிகுந்த ஆச்சரியமாயிருந்தது. இதை அவரிடம் நான் சொன்னபோது அவர் குறுநகை புரிந்தார். "நீங்கள் ஏன், எவ்வாறு, இவ்வளவு இனிமையானவராக இருக்கிறீர்கள் என்று எனக்குப் புரிகிறது" என நான் அவரிடம் சொன்னேன். அதற்கு அவர் ஏற்கெனவே யாருக்கோ சொல்லியிருந்த பதிலையே என்னிடம் சொன்னார் "நான் இளைஞனாக இருந்தபோது மாவனஹெண்ணிடம் [மாமன் மகளிடம்] ஆசை வைத்திருந்தேன்; தற்போது வயதானவனாகிவிட்டேன்; எனவே மாவின ஹண்ணில் [மாம்பழத்தில்] திருப்திபட்டுக் கொள்ள வேண்டியுள்ளது'. சொற்களைச் சேர்த்து தொடர் அமைப்பதில் அவர் காட்டிய திறன் அவரது புலமையை வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளது. திருமதி மங்கேசராவிற்கு இந்த உரையாடலால் கூச்சமேற்பட்டு முகத்தை அந்தப் பக்கமாகத் திருப்பிக் கொண்டார்கள். இப்படிபபட்ட கேலிப் பேச்சுக்களும் நகைச்சுவையும் வீட்டில் வாடிக்கையாக நடைபெறும். மொத்தத்தில் அந்தச் சூழ்நிலையே மகிழ்ச்சிகரமாக இருந்தது.

ஒருநாள் பிற்பகல் வேளை. வீட்டில் 'அஞ்சி' என்றழைக்கப்படும் அவருடைய மூத்த மகளாகிய திருமதி அனுசூயாதேவி வீட்டிற்கு வந்திருந்தார். பம்பாயிலிருந்து தந்தை வீட்டிற்கு அப்போது வந்திருந்தார். மாலையில் வீட்டின் முற்றத்தின் முன்பகுதியில் அவர் உட்கார்ந்திருந்தார். வழக்கத்தைப் போன்றே மங்கேசராவ் கைவைத்த பனியன் ஒன்றைக் போட்டுக் கொண்டு முற்றத்தின் முன்னும் பின்னும் நடந்து கொண்டிருந்தார். இடுப்பில் வேட்டி கட்டியிருந்தார். அவர் தன் மீசையை தடவிக் கொண்டும் ஒழுங்கு செய்து கொண்டும் கையில் ஒரு சிகரெட்டை வைத்துக் கொண்டு விதம்விதமாகப் புகையை விட்டுக் கொண்டு இருந்ததைக் காண்பதற்குக் கண்கொள்ளாக்காட்சியாக இருந்தது. தனது மகளை அழைத்து "பூ விற்கும் ஏழைக் குருட்டுப் பெண் பாடல் இருக்கிறதல்லவா, அதைப்பாடு; வழியில் போகிறவர்கள் அதைக் கேட்டுக்கொண்டு போகட்டும்" என்றார். அவர் மகள் சற்றும் கூச்சமில்லாமல் மிகவும் இனிமையாகவும் சிறப்பாகவும் அப்பாடலைப் பாடினார். அப்பாடல் எனக்குப் பெருமகிழ்ச்சியை அளித்தது. அப்பாடல் கர்நாடக இசையிலோ ஹிந்துஸ்தானி இசையிலோ அமையாமல் கிருத்துவ இசை முறைப்படி அமைந்திருந்தது. பாடல் மிகவும் சரளமானதாகக் கேட்போரின் மனதைக் கரைத்துவிடும் விதத்தில் இருந்தது. அந்த இனிமையையும் ராகத்தையும் பாடலையும் இன்றும் நான் நினைவில் வைத்திருக்கிறேன். நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகும் அது என் காதுகளில் ஒலிக்கிறது[1] அப்பாடல் என் மனதைத் தொட்டுவிட்டது என்பதை மங்கேசராவ் புரிந்து கொண்ட போது சற்றே மனவருத்தத்துடன் மைசூரிலிருந்து வந்திருந்த வேறொரு நண்பர் இப்பாடலைக் குறை கூறியதாகக் குறிப்பிட்டார்.

"நான் எத்தனையோ முறை மங்களூருக்கு வந்து தங்கள் வீட்டில் விருந்தினனாகத் தங்கியுள்ளேன். ஆனால் ஒருமுறை கூடத் தாங்கள்

---

[1]நமது நாட்டிலுள்ள தெற்கத்திய வடக்கத்திய இசைமுறைகளை மட்டுமே நமது மனம் ஏற்றுக் கொள்ளுகிறது. பிற இசைமுறைகளை நம் காது ஏற்றுக் கொள்வதில்லை, சகித்துக் கொள்வதில்லை. நமது மக்களுக்கு கிருத்துவ அல்லது அயல்நாட்டு இசைமுறை மீது நம்பிக்கையில்லை. இன்றைய திரைப்படங்களில் வரும் இசையை நம்மக்கள் எவ்வாறு ரசிக்கிறார்கள் என்பது எனக்குப் பெரும் வியப்பையே அளிக்கிறது. அதை நமது நாட்டு இசையல்ல என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். தான முறையிலாகட்டும், கால அளவிலாகட்டும் சுருதி லயத்திலாகட்டும் அது நம் இசையோடு எவ்விதத் தொடர்பும் வைத்திருக்கவில்லை.

பெங்களூருக்கு வந்து என் வீட்டில் தங்கவில்லை'' என்று ஓரிரு முறை அவரிடம் கூறினேன். இதை ஒரு சிறுவனின் அதிகப் பிரசங்கித்தனம் என்று நினைத்தாரோ என்னவோ ஒருநாள் அவர் "நான் உங்கள் ஊருக்கு வந்து சில நாட்கள் உங்கள் வீட்டில் தங்கியிருக்கிறேன் என்று சொன்னால் என்ன செய்வீர்கள்?'' என்றார். அவர் என்னைவிட மூத்தவரானதால் இதனைச் சவாலாக ஏற்றுக்கொள்ளுகிறேன் என்பது நல்லதல்ல; முறையானதல்ல என்று தோன்றியது. "அந்தப் பெரிய சிறப்பை நான் என்றும் நினைவில் வைத்துக் கொண்டிருப்பேன்'' என்றேன்.

1934–35ம் ஆண்டளவில் என்னுடன் வந்து நான்கு நாட்கள் தங்கியிருக்கப் போவதாகத் தெரிவித்தார். எனக்குப் பிறவிப்பயன் கண்டதைப் போலாயிற்று! நண்பர்கள், உறவினர்கள், சொந்தத் தம்பி ஒருவர் ஆகியோர் பெங்களூரிலிருந்தும் அவர் என் வீட்டிற்கு வந்திருந்தார். இது எத்தனையோ பேருக்கு பெருவியப்பை அளித்தது.

மங்கேசராவ் அவர்களுக்கு மாம்பழம் என்றால் உயிர் என்று கண்டோம். ஒருநாள் கல்லூரியிலிருந்து திரும்பிவரும்போது பெங்களூர் பழச்சந்தையில் இருந்த உயர்ந்தரக மாம்பழங்கள் பலவற்றைப் பார்த்துச் சிலவற்றை வாங்கிவந்தேன். மல்கோவா பழம் பார்ப்பதற்கு அவ்வளவாக நன்றாக இருக்காது. ஆனால் அதன் சுவையோ மிகவும் இனிமையானது. அவற்றைத் துண்டுபோட்டு அவர்முன் கொண்டு வந்து வைத்தாள் என் மகள். பழம் என்னவோ அவருக்குப் பிடித்திருந்தது. "நான் மாம்பழத்தை முழுதாகச் சாப்பிடுவேன். இதில் சிறிது நார் இருக்கிறது என்பது உண்மை. நீங்களே பார்த்தீர்கள். ஆனால் இது மிகவும் சுவையாக உள்ளது. இன்று கடைக்குப் போவோம். எனக்குப் பிடித்தமான மாம்பழங்களை வாங்கி வரலாம்'' என்றார். அவ்வாறே செய்தோம். அங்கிருந்த எந்தவகையான பழமும் அவருக்கு ஏற்புடையதாய் இல்லாதிருந்தும் அவ்வளவு தூரம் வந்து எதையும் வாங்காமல் வருவது சரியல்ல என்று எண்ணி கொஞ்சம் பழங்களை வாங்கினார்.

மற்றொரு நாள் சிகரெட்டு விற்கும் கடை ஒன்றுக்கு கல்லூரியிலிருந்து திரும்பி வரும்போது போனேன். அவனிடம்

இருக்கும் சிகரெட்டுகளில் மிகவும் உயர்ந்த வகையான சிகரெட்டு எது? எந்த வகையைச் சேர்ந்தது? என்று கேட்டேன். என்னைப் பற்றி அவனுக்கு வியப்பாக இருந்தது. ஒரு நண்பருக்காகத் தேவைப்படுகிறது என்று நான் சொன்னேன். அதற்கு அவன் ஸ்டேட் எக்ஸ்பிரஸ் 777 அல்லது 555 என்று ஏதேதோ எண்களைச் சொல்லி சிகரெட்டுப் பெட்டி ஒன்றைக் கொடுத்தான். அதை நான் மங்கேசராவிடம் கொடுத்தபோது அவருக்கு வருத்தம்தான் ஏற்பட்டது. "நான் புகைப்பவன் என்பது உங்களுக்குத் தெரியும். அதைப் பார்த்திருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் புகைக்காத சிகரெட்டை எனக்கு வாங்கித் தர முயற்சிக்க வேண்டாம். மீண்டும் ஒருமுறை இவ்வாறு செய்யாதீர்கள். விருந்தினர்களின் எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றுவது விருந்தளிப்பவர் எவருக்கும் முடியாத காரியமாகும்!" என்றார். அது அவரது கட்டளை. "சரி ஐயா" என்று சொல்லி நான் ஒப்புக் கொண்டேன்.

மறுநாள், உட்கார்ந்திருந்த படியே எனது மூத்த மகளை அழைத்து குடிக்க நீர் கொண்டுவரச் சொன்னேன். அவளை நாங்கள் கமலு என்று அழைப்பது வழக்கம். அப்பெயரைச் சொல்லியே அவளை அழைத்தேன். முதலில் நான் சொன்னது அவள் காதில் விழுந்ததோ இல்லையோ தெரியவில்லை. மீண்டும் கூப்பிடுங்கள் என்றார். மீண்டும் கமலுவைக் கூப்பிட்டேன். சற்று நேரத்திற்குப் பிறகு வேறென்னவோ வேண்டுமென்று சொல்லி மீண்டும் அவளைக் கூப்பிடுங்கள் என்றார். நானும் அப்படியே செய்தேன். பக்கத்திலிருந்த என்னை மங்கேசராவ் தழுவிக் கொண்டார். என் மகளின் பெயரைச் சொல்வதில் என் குரல் மிகவும் இனிமையாகவும் மென்மையாகவும் ஒரே மாதிரியாகவும் இருந்ததாம்; இது அவருக்கு இன்பத்தை அளித்ததாம்[1] இதைச் சொல்வதற்குக் காரணம் சொற்களின் உச்சரிப்பு அவருக்கு எவ்வளவு மகிழ்ச்சியை அளித்துள்ளது என்பதைக் காட்டத்தான். அந்தப் பெயரை 'ஆ' என்னும் நெடிலைக் கொண்டு முடிப்பது செயற்கையாகவும் மோசமானதாகவும் இருக்கும். இதை இகாரத்தைத் கொண்டு முடிப்பது மரியாதை கொடுப்பதாக இருக்காது. மிகவும் நெருக்கமானவர்கள் மட்டும் பயன்படுத்துவது. பிறர் பயன்படுத்தினால் ஒருவகையான அவமரியாதையும் அவமானமும் இருப்பதைப் போன்று எங்கள் பகுதியில் இருப்பவர்களுக்குத் தோன்றும்.

மற்றொரு நிகழ்ச்சியைக் கூறவிரும்புகிறேன். இயலுமென்றால், இசைக்குச் சிறப்பளித்து எடுக்கப்பட்ட திரைப்படம் ஒன்றுக்கு

---

[1] அப்பெயரில் மூன்று குற்றுயிர்கள் உள்ளன. சாதாரணமாக அப்பெயர் அ என்னும் குற்றுயிரில் துவங்கி உ என்னும் குற்றுயிரில் முடியும்.

அவரைக்கூட்டிச் செல்லலாம் என்று சபலம் எனக்குத் தோன்றியது. அவரைக் கேட்கலாமா அல்லது வேண்டாமா என்று எனக்குக் குழப்பமாக இருந்தது. மோரிஸ் ஷேவலியவும் ஜினட் மெக்டோனால்டும் நடித்துள்ள ஒரு படம் நல்ல படம் என்று சொல்லி அவரைத் தூண்டினேன். படத்தின் பெயர் ஒரு காதல் இரவு (One Night of Love) என்பதாகும். அவர்கள் இருவரும் புகழ்பெற்ற பாட்கர்கள். அந்தப் படத்தினை இயக்கியவர் ஏர்னெஸ்ட் ஸ்யூபிஸ் என்பவரோ அல்லது ரூபென் மாமெலிய என்பவரோ எனக்குச் சரியாக நினைவில்லை. இந்த இரு இயக்குநர்களும் மென்மையான உணர்வுகளை மிகச் சிறப்பாகக் காட்டுவதில் புகழ்பெற்றவர்கள். எனவே அவர்கள் எனக்கு மிகவும் பிடித்தமானவர்கள். எனக்கு மிகவும் பிடித்த சில படங்களை இயக்கியவர்கள் இவர்கள். ஆச்சரியத்திலும் ஆச்சரியம் திரைப்படத்திற்கு வருவதற்கு அவர் ஒப்புக்கொண்டார். திரைக்காட்சியின் ஒவ்வொரு நிமிடத்தையும் அவர் ரசித்தார். அந்தத் திரைக்கதை தவறான ஏதோவொரு கற்பனையைச் சுற்றி வளர்ந்திருந்தது. ஒரு அரசிளங்குமரியோ அரசியோ ஒருவனிடம் மனதைப் பறிகொடுத்து அவன்மீது காதல் கொண்டாள். சிறிது காலம் அவனுடன் ஒன்றாக வாழ்ந்த பின்னர்தான் அவர் உயர்ந்த குலத்தைச் சேர்ந்தவன் அல்ல; அவன் ஒரு தையற்காரன் என்பது தெரிந்தது. இதனால் தனது மதிப்பு தாழ்ந்துவிட்டதைப் போல உணர்ந்தாள். அரண்மனை சுகத்திலிருந்து அவனை விரட்டிவிடுகிறாள். படத்தின் இறுதியில் ‘இந்த துரதிர்ஷ்டசாலி தையற்காரன் ஒருவனின் மகன்’ (The Son of a Gun is nothing but a Tailor) என்னும் பாடல் வந்தது. அப்பாடலை வெவ்வேறு திசைகளில் நிலைகளில் தனித்தனியாகவும் குழுவாகவும் வெவ்வேறு குரல்களில் பாடுகின்றனர். தனியாகவோ குழுவாகவோ அப்பாடல் காதில் விழும்படியும் பாடி முடியும் பொழுது

Nothing But A Tailor<br>
... But A Tailor<br>
... A Tailor<br>
... Tailor

என்று மெல்லிய குரலில் பாடினர். படம் முடிந்து நாங்கள் வெளியே வந்தோம். படம் முடிந்த பின்னரும் மங்கேசராவ் மகிழ்ச்சியாக இருந்தார். அதைப் பார்ப்பதற்கு அவரை அழைத்து வந்ததற்காக என்னிடம் நன்றி கூறுவதாகத் தெரிவித்தார். மிகவும் அபூர்வமான அனுபவம் இது என்றும் கூறினார். இரண்டு மூன்று நாட்கள் திரைப்படத்தில் பாடியதைப் போன்றே அவரும் பாடிக் கொண்டிருந்தார்.

Nothing But A Tailor
... A Tailor
... Tailor

இப்பாடலை வெகுவாக ரசித்தார். ஒரு குழந்தை மகிழ்வதைப் போன்று இருந்தது அது. இதில் எனக்கும் மகிழ்ச்சி ஏற்பட்டது என்று நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. சிறு வயதினவர்களுக்கு மகிழ்ச்சியேற்படுத்தும் ஒரு விஷயத்தை பெரியவர்கள் ஏற்றுக் கொள்வது அபூர்வம். அன்று மங்கேசராவிடமிருந்து எனக்கு அத்தகைய அபூர்வமான வாய்ப்பு கிட்டியது.

பெங்களூர் சென்ட்ரல் கல்லூரியின் கன்னட சங்கத்தைச் சேர்ந்தவர்கள் முத்தண்ணனின் உருவப்படத்தைத் திறந்து வைத்து அவர் பெயரில் ஒரு நூலையும் வெளியிட்டார்கள். ஸ்ரீராமஸ்வமேதம் என்னும் நூலின் ஆசிரியர் யார் என்பது எவ்வாறு கண்டறியப்பட்டது என்பதை அப்போது அங்கு பேசிய மங்கேசராவ் தெரிவித்தார். அவர் பேச்சு மிகவும் அழகாக வளர்ந்து சென்றது. இங்குள்ள பெங்களூர்க்காரர்களுக்கு அது ஒரு சிறப்பான விருந்தாக இருந்தது. அதைப் போன்றே ஸ்ரீ அவர்களின் அசுவத்தாமா என்னும் நாடகத்தின் காட்சியை ஒட்டி அவர் பேசிய பேச்சும் சிறப்பாக அமைந்திருந்தது. அவருக்கு ஸ்ரீ அவர்கள் நெருங்கிய நண்பராவார். இந்நாடகம் கலாசிபாளையம் [தற்போது மையப்பேருந்து நிலையம் உள்ள] பகுதியில் ரத்தினாவளி நாடகக் குழுவில் நடைபெற்றது. இந்த நாடகம் அவருக்கு மிகவுயர்ந்ததோர் அனுபவத்தை அளித்தது. அதில் இருந்த பாடல்களின் அழகு, கதை வளர வளர பாடல்கள் அமைந்தவிதம், கதாநாயகனின் தனிப்பேச்சின் சிறப்பு, ஏகலைவன், பீமன், கிருஷ்ணன் ஆகிய பாத்திரங்களுக்கிடையே நிகழும்

உரையாடலின் ஆழம் போன்றன அவர் மனதை மிகவும் கவர்ந்தன. நிகழ்ச்சிகளுக்கு இடையேவரும் பாடல்கள் மிகவும் சிறப்பானவையாக இருந்து மெய்மறக்கச் செய்தன.

கிரேக்க நாடக ஆசிரியனாகிய சோபகிலிசின் 'அயாஸ்' என்னும் நாடகத்தின் தழுவலாகும் அது. மகாபாரதத்தில் சௌப்திக பர்வத்தில் உள்ள கதை 'அயாஸ்' கதைக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட்டது. கன்னட மக்களின் வேடர்கள் தலைவனாக ஏகலைவனும், குருவாக அஸ்வத்தாமனும் வருகிறார்கள். ஏகலைவன் அசுவத்தாமன் காலத்தில் வாழ்ந்தவனல்ல. இதிகாசங்களிலும் புராணங்களிலும் அசுவத்தாமன் சிரஞ்சிவியாவான். இந்த நாடகத்தில் அயாசைப் போலவே அசுவத்தாமனும் தற்கொலை செய்து கொள்ளுகிறான். இவனுக்கு எப்படி சிரஞ்சீவி பட்டம் வந்தது என்று புரியவில்லை! மக்கட்கூட்டம் இல்லாத தனிமையான இடத்தில் தனது வாளை நிலத்தில் நட்டு அதன் மேல் விழுந்து தனது உயிரை மாய்த்துக் கொள்ளுகிறான் அசுவத்தாமன். முந்தியநாள் இரவு குழந்தைகளையும், கூடாரத்தில் இருந்த பெண்களையும், விலங்குகளையும் கொன்றதை நினைத்து மறுநாள் எதிரிகளின் ஏச்சுக்கும் இகழ்ச்சிக்கும் ஆளாகி வாழ விரும்பாமல் அவன் செத்து மடிந்தான். தனது நடத்தையை நினைத்து அவனுக்கு வெறுப்பு ஏற்பட்டது. தனது பக்கத்தைச் சார்ந்த வேறு வீரர்களுக்கும் தனது பகைக்கு ஆளான பீமனைப் போன்றவர்களுக்கும் எவ்வித வாய்ப்பும் கொடுக்காமல் அவன் இவ்வாறு இறந்துவிடுகிறான். மூலக்கதையில் உள்ள யூலிசிஸ் கன்னட நாடகத்தில் கிருஷ்ணனாகிறான். கிரேக்க புராணத்தில் யூலிசிஸ் குடில புத்தி கொண்டவனாவான். நம்நாட்டில் கிருஷ்ணனோ சிவனுக்கு மிகவும் பிரியமான, மக்களிடத்தில் அன்புகொண்ட தர்மமூர்த்தியாக இருப்பவன். இதைப் பார்த்த மங்கேசராவ் "இது எனக்கு ஒரு புது அனுபவம். இந்தச் சிறந்த நாடகத்தை அவர் புனைந்ததும் அதை நான் பார்த்ததும் பெரிய அனுபவம்" என்று கூறினார்.

தான் விரும்பிய பாடலை அவர் எவ்வாறு பாடுவார். அது மக்களின் மேல் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது என்பது யாவரும் அறிந்ததே. பாடல் தன்னுடையதாயிருக்கலாம் அல்லது பிறருடையதாய் இருக்கலாம். பாடலின் பொருளை மட்டுமல்லாது ஒவ்வொரு சொல்லையும், வரியையும், பத்தியையும் உயிர்பெற்றெழச்

செய்துவிடுவார். அத்தகைய திறமை அவருக்கு இருந்தது. அவர் பாடலைப் பாடும் முறை இதுவரையில் நாம் கண்டிராத முறையாக இருக்கும். கவிதையின் ஒவ்வொரு சுரணத்தையும் பகுதியையும் பாடும் பொழுது அதன் வேகத்தையும் இசை அமைப்பையும் மாற்றி புதுப்பொருள் தெரியும் விதத்தில் பாடுவார். இது மேற்கத்திய முறையாகும். இப்படிப்பட்ட சிறப்புக்களை அவருடைய Musicals Revues என்னும் படைப்பில் ரசித்து மெய்மறந்திருக்கிறேன். நமது நாட்டில் ஒரு கவிதையின் பல்லவியையோ சரணத்தையோ பாடும்பொழுது சற்றேறக் குறைய ஒரே விதத்தில் மீண்டும் பாடுகிறார்கள். பல்லவி, அனுபல்லவி ஆகியவற்றின் பொருளையும் அவற்றின் சிறப்பையும் பேசி முடித்து விடுகிறார்கள்[1]. சரணங்களில் குறிப்புக்களோ விவரங்களோ இருக்கின்றன. பாடலைப் பாடும் பாடகர்கள் சரணத்தைப் பாடி முடித்துவிடுகிறார்கள். மங்கேசராவிற்கு ஜெர்மனியைச் சேர்ந்த மிஷனரிகளும் மேற்கத்திய கல்வித்துறையினரும் பாடலை இசைக்கும் இத்தகைய வேறுமுறையை அறிமுகம் செய்து வைத்தனர். அவர்களுள் பலர் உயர்கல்வி பெற்றவர்கள். அதனால், அவர்கள் தாம் பாடும் கவிதைகளில் அவ்வக்கவிதைகளுக்குப் பொருத்தமான ஏற்ற இறக்கங்களை அமைத்துக் கொண்டு புதுமைகள் செய்யக் கூடியவர்களாக இருந்தனர். பல்லவியைப் பாடும் முறையையே மாற்றக்கூடிய தன்மை கொண்டது அது. பாடலின் பொருளை மேலும் பொருள் கொண்டதாக ஆக்கி விதம் விதமாகச் சொல்லி விளங்க வைக்கக் கூடியது. முன்னதாக நான் விவரித்த மாலைப் பாடல் என்னும் கவிதையில் அவர் அவ்வாறு செய்துள்ளார்.

---

[1] 1940களின் ஆரம்ப ஆண்டுகளில் ஹாயி கசான் மற்றும் தேம் சிபில் தோர்ன்டைக் என்போர் இந்தியாவிற்கு வந்து சென்னையில் உள்ள மியூசியம் தியேட்டரில் அப்படிப்பட்ட பாடல் முறைகளை மிகச் சிறப்பாகப் பாடிக் காட்டினர். ப்ரௌனிங் என்னும் கவிஞனின் "Up in the Villa Down in the Valley" என்னும் பாடலையும் அல்பான்சோ தாதே என்பவரின் வார்கசோன் என்னும் பாடலையும் அழகுறப் பாடினார்கள். அப்பாடலின் அமைப்பே சிறப்பானதாகும். கவிதையின் முழு சக்தியும் நமது இரத்தத்தில் கலந்து ஓடும் விதத்தில் நம்மீது பாதிப்பை ஏற்படுத்தினார்கள். நமது நாட்டுப்பண்ணின் பல சரணங்களையும் அவ்வாறு பாடி அதற்கு அற்புதமான சிறப்பை அளிக்கலாம், மேம்படுத்தலாம். தற்போது ஒவ்வொரு சரணத்தையும் மென்மையாக, மெல்லிய குரலில் ஆனால் இனிமை இல்லாமல் ஒரே மாதிரியான தாளகதியில் பாடுகிறார்கள். துயரமும் சோகமும் நிறைந்திருப்பதைப் போன்று அப்பாடல்களைப் பாடுவது சற்றும் சரியல்ல.

ஒருமுறை அவர் ஸ்ரீஅவர்களின் 'துக்கசேது' [துயரப்பாலம்] என்னும் பாடலை அவையில் பாடினாராம். அது தாமஸ் ஹூட் என்னும் கவிஞனின் 'Bridge of Sighs' என்பதன் தழுவலாகும். முதலில் பாடல் பற்றிய விவரங்களைச் சொல்லிவிட்டு பாடலைப் பாடப்பாட அவர் ஏற்படுத்திய தாக்கம் ஒவ்வொருவரையும் மயக்குறச் செய்ததாம். மற்றொரு முறை வேறொரு நிகழ்ச்சி நடந்ததாம். மங்கேசராவ் அவர்கள் ஒரு கதையைக் கூறிக்கொண்டிருக்கும்போது, மயங்கிப் போய் கேட்டுக் கொண்டிருந்த அவையோர்களுள் ஒருவர் எழுந்து நின்று "ராவ் ஐயா! நான் மீண்டும் அத்தகைய பிழையைச் செய்யமாட்டேன். செய்ததற்கு நான் தண்டனையை அனுபவித்துவிட்டதைப் போன்று உணருகிறேன்." என்று கண்களில் நீர் ததும்பக் கூறி அவையிலிருந்து வெளியே போய்விட்டாராம். இவ்வாறு, அவர் பாடல்களைப் பாடும்பொழுது நாம் ரசிப்பது வெறும்பாடலை மட்டுமல்ல, இசைநயத்தை மட்டுமல்ல, பாடலின் பொருளை கேட்போர் மிக எளிதாகப் புரிந்து கொள்ளும் விதத்தில் பாடும் முறையே நம்மை ஈர்ப்பது. இது அவருக்குக் கைவந்த கலையாக ஆயிற்று. பாடல்களைப் பாடுவது இசைநயத்தையும் திறமைகளையும் மட்டும் வெளிப்படுத்துவதற்கு என்று இல்லாமல் இலக்கியத்தை அவர்களுக்கு அளிக்கிறோம். அவர்கள் அதைப் புரிந்து கொள்ள வேண்டும். சொற்களின் பொருள் இசைநடம் புரியும் விதத்திலும் பாடிட வேண்டும். அது மங்கேசராவிற்கு இயலக்கூடியதாக இருந்தது.

நான் அவருக்கு சிகரெட்டு வாங்கிக் கொடுத்ததற்கு வருத்தம் அடைந்ததற்கு அடுத்து அவர் வருத்தமுற்ற ஒரே நிகழ்ச்சி பாடல் தொகுதி வெளியிடுவது பற்றியது. அவர் தனது பாடல்கள் யாவற்றையும் ஒன்றாக்கி வெளியிட அனுமதிக்கவேண்டும் என்று நான் கேட்டபொழுது, 'அந்தப் பேச்சுவேண்டாம்' என்று பதில் விரைவாக வந்தது. ஏனோ தெரியவில்லை தமது பாடல்கள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து வெளியிட அவருக்கு விருப்பமில்லை. அவர் காலமாகி முப்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் தற்போது ஒரு தொகுதி கிடைத்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. தொகுப்புச் சிறியதாக இருந்தால் என்ன? சிறு விளக்கும் வெளிச்சத்தைக் கொடுக்கிறது; நெருப்பு எங்கிருந்தாலும்

எல்லா நேரத்திலும் வெப்பத்தையும் ஒளியையும் உமிழ்கிறது. அவர் எழுதியவற்றுள் சிறப்பானவை தற்போது கன்னட மொழியில் உள்ள சிறந்த படைப்புகளுள் அழகுறச் சேர்ந்துள்ளன.

நூல்களை இயற்றியதைவிட, அவர் படைத்திட்ட நூல்களைவிட அவர் நம்மிடையே இருந்ததும் அவருடை நட்பும், செயல்பாடும் மதிப்பளிக்கப்பட வேண்டியனவாக இருக்கின்றன. யார் மீதும் நம்பிக்கையும் மரியாதையும் காட்டியதால் அது அவரைச் சுற்றி இருந்தவர்களுக்கு மகிழ்ச்சியளித்தது. அவருடைய வாழ்க்கைக் கொடை இதுவேயாகும். அவரைப் பார்த்தவர்கள், அவருடன் இருந்தவர்கள், அவருடைய ஆளுமையின் திறத்தை அனுபவித்தவர்கள், அவரது நண்பர்கள் யாவரும் அவரை எப்போதும் நினைவில் நிறுத்துவார்கள். அடுத்து வரும் தலைமுறையினருக்கு இது ஒரு கட்டுக்கதையைப் போலத் தோன்றக்கூடும். நம்பாதவர்கள் இது வெறும் புகழ்ச்சி என்று எண்ணக்கூடும். இப்படிப்பட்ட ஒருவர் இருந்தார், செயல்புரிந்தார், மனிதர்களுக்கு இத்தகைய திறன் கிடைப்பது அரிது என்பன யாவும் உண்மை. அப்போது கர்நாடகம் ஒரு தனி மாநிலமாக ஆகியிருக்கவில்லை. அவரோ எங்கோ கடைகோடியில் கடற்கரை ஓரத்தில் இருந்தார். அங்கு மலைகள் மிகுந்திருந்ததால் பயணம் செய்வதும் கடினம். ஒருவர் மற்றவரிடம் கருத்துப் பரிமாறிக் கொள்வது இதனால் குறைவானதாகவே இருந்தது. ஆனால், ஒளிப்பிழம்பை மூடி மறைப்பவர் யார்? எது அதை மூடி மறைத்துவிடமுடியும்? அந்த ஒளியோ தூய்மையானது; வெள்ளொளி கொண்டது; நிலையான ஒளிவீசக்கூடியது. மனதிற்கு நிம்மதி கொடுத்தும், மகிழ்ச்சி அளித்தும் தனது ஒளிக்கற்றைகளை பரப்பிக் கொண்டிருக்கிறது.

அவர் எழுதிய சில பாடல்கள், உரைநடைகள் மற்றும் கட்டுரைகள் சிறப்பானவை. அவரது படைப்புகள் தற்காலக் கன்னட மொழி படைப்புகளுடனும் போட்டியிடும் விதத்தில் மிளிரும் தன்மையோடு புகழ் பரப்புகின்றன.

தெற்குக் காற்றின் ஆட்டம் [தெங்கணகாளி ஆட], ஹூத்தரிப்பாடல், கழைக்கூத்தாடி சென்னி, உள்ளய்யா,. நாகப்பாம்பு ஆகிய பாடல்களும், பதார்த்தமென்ன? ஊர்ப்பெயர்கள் என்னும் தலைப்புகளில் அவர் எழுதிய உரைநடை நூல்களும் பொருண்மையியல் மற்றும் மொழியியல் துறை ஆய்வுகளுக்கு மிகவும்

உதவியாக இருக்கக் கூடியனவாகும். அவர் திரட்டிய துளு, கன்னடம், கொங்கணி ஆகிய மொழிச் சொற்கள் இதற்கு உதவுகின்றன. கற்பனை டைரி என்னும் படைப்பு மனதைக் கவரக்கூடியது. கோடி சென்னய்யனின் கதை உரைநடையில் மிகவுயர்ந்த இடத்தைப் பெறக்கூடியது. அதிலுள்ள ஒவ்வொரு சொல்லும் பொருள் பொதிந்தது. நிகழ்ச்சிகள் மூச்சு வாங்கும் வேகத்தில் பாய்ந்தோடுகின்றன. அதில் காணப்படும் வீரம் அசாதாரணமானது. உரைநடைகள் எல்லாவற்றுள்ளும் அதற்குத் தலையாயதோர் இடம் உள்ளது. எந்த இலக்கியமும் இது குறித்துப் பெருமையடையலாம்.

இலக்கிய ஆசிரியர்களுக்கு நூல்கள் புனைவதற்கு அனுகூலமான சூழ்நிலையைத் தந்து கொண்டும், திறமையுள்ளவர்களை ஊக்குவித்துக் கொண்டும் இலக்கிய மற்றும் பண்பாட்டு வளர்ச்சிக்குத் தொண்டாற்றியவர்கள் நம்நாட்டின் இப்பகுதியில் மிகச் சிலரே இருந்தார்கள். கல்வியறிவு பெருகுவதற்கு இருந்த தடைகளை நீக்குவதற்கும் இவர்கள் சிறப்பாக உழைத்துச் சுற்றுப்புறத்தை மகிழ்ச்சி ததும்பும் இடமாக மாற்றினார்கள். நற்பணிகளைச் செய்துகாட்டி பொதுமக்களின் நல்வாழ்விற்கெனச் செய்யக்கூடிய இத்தகைய வேலைகள் இருக்கின்றன என்று செய்து காட்டினார்கள். மொத்தத்தில், அவர்கள் மனிதர்களை உருவாக்கியவர்கள் என்று கூறவேண்டும். அத்தகையவர்களின் ஆளுமையின் தாக்கம் ஒரு நூறு மனிதர்களின் சொல்லுக்கும் செயலுக்கும் சமமானதாக இருக்கும். இவர்கள் வெவ்வேறு விதமான இயல்புகளும் திறன்களும் கொண்டவர்களுக்கும் ஏழை எளியவர்களுக்கும் கூட பயன்படக்கூடியவர்களாக இருந்தார்கள். ஏழைகள், தாழ்த்தப்பட்டோர் என்று கருதாமல் எல்லோரையும் ஒன்றாகப் பாவித்து ஒரே விதத்தில் அன்பு செலுத்தினார்கள். இப்படிப்பட்டவர்களின் வாழ்க்கை படைப்புத்திறனைப் பொறுத்த அளவில் ஒரு தனிச் சிறப்பைப் பெறுகிறது. ஒரே சொல்லில் கூறுவதென்றால் அது அடிப்படையானது என்று கூறலாம். மங்களூரில் பஞ்சே மங்கேசராயர், பெங்களூர், மைசூரில் டி. எப். வெங்கண்ணய்யர் ஆகியோர் செய்த நற்பணிகளுக்காக அவர்களின் புகழைப் பாடுகிறோம். அதிகாலையில் நினைவு கூரத்தக்கவர்கள் என்னும் பெருமை கொண்டவர்கள் இவர்கள். எதிர்காலத்தில் வரும் எழுத்தாளர்களுக்கும், கல்வி கற்பிக்கும் துறையில் இருப்போருக்கும் இவர் எப்போதும் நினைவிலிருக்கக் கூடிய பெரும்சக்தியாக இருக்கிறார்.

# பின்னிணைப்பு 1

## வாழ்க்கைக் குறிப்பு

| | |
|---|---|
| 1874 | - [பிப்பிரவரி 22] பண்டவாளத்தில் பிறந்தார் [தெற்குக் கன்னட மாவட்டம்] தந்தையார் ராமப்பய்யன், தாயார் சாந்தா துர்கா என்னும் சீதம்மா.<br>பண்டவாளத்தில் உள்ள துவக்கப்பள்ளியில் ஆரம்பக் கல்வி பயிலுதல், மங்களூரில் உள்ள முனிசிபல் உயர்நிலைப் பள்ளியில் பயில்தல். |
| 1888 | — மங்களூர் அரசுக் கல்லூரியில் மாணவராகச் சேர்தல். |
| 1890 | — மெட்ரிக் தேர்வில் தேர்ச்சி பெறுதல் |
| 1892 | — எப்ஃ் ஏ<br>மங்களூரில் உள்ள செயின்ட் அலோபியஸ் கல்வி நிலையத்தில் பி. ஏ. வகுப்பில் சேர்தல் |
| 1894 | — கிரிஜா பாய் என்னும் பவானிபாயை மணம் செய்து கொள்ளுதல் |
| 1895 | — பி. ஏ. தேர்வில் மொழித்தேர்வுகளில் வெற்றி பெறுதல் |
| 1896 | — கன்னட இளநிலை ஆசிரியராக மங்களூரில் உள்ள அரசுக் கல்வி நிலையத்தில் பணியில் சேர்தல்.<br>'சத்தியதீபிகை' என்னும் இதழில் மொழி பெயர்ப்புக் கவிதைகளை வெளியிடுதல். |
| 1900 | — பி. ஏ. [வரலாறு மற்றும் பொருளாதாரம்]<br>குடும்பம் பண்டவாளத்திலிருந்து மங்களூருக்கு மாறுதல் . |
| 1900—03 | — பற்பல பெயர்களில், புனைபெயர்களில் நகைச்சுவை, எள்ளல் சுவையுள்ள கட்டுரைகளையும் சிறுகதைகளையும் எழுதி வெளியிடுதல். |
| 1905 | — எல்.டி. |
| 1906 | — மங்களூர் பகுதியில் உதவித் துணை பள்ளிக் கல்வி ஆய்வாளராக நியமனம்<br>தம்பி ராகவேந்திரா [அகந்த்] மரணமடைதல். |

| | | |
|---|---|---|
| 1907 | – | காசரகோடு பகுதிக்கு மாற்றம் பெறுதல், துவக்கப் பள்ளிகளில் சார்ன் அவர்களின் நேரடிக் கல்வி முறையைப் பயன்படுத்த ஆரம்பித்தது. முதற்கவிதைத் தொகுதியை வெளியிடுதல். |
| 1918 | – | வயதான தாயின் மரணம் |
| 1919 | – | மூத்த மகள் அம்பா இன்புளுயன்சா நோயால் மரணமடைதல் |
| 1921 | – | இலக்கிய நடவடிக்கைகளின் உச்சக்கட்டம்; 'அஜ்ஜிய கதைகள்' எனும் தொகுப்பை வெளியிடுதல். பள்ளி ஆய்வாளர் திரு. ஜெ. எ. யெட்ஸ் உடன் தொடப்பு ஏற்படுதல். குழந்தை இலக்கியங்களின் வளர்ச்சிக்கென மங்களூரில் குழந்தை இலக்கிய அமைப்பு ஒன்றை ஏற்படுத்துதல். சென்னை மக்காணக் கல்வித்துறைக்குப் பதவி உயர்வு பெறுதல், உதவிக்கல்வி ஆய்வாளராகக் குடகுக்கு மாற்றம் பெறுதல், பின்னர் மெர்காராவில் உள்ள மைய உயர்நிலைப் பள்ளியின் முதல்வராதல். |
| 1921<br>1928 | – | குடகில் குடும்பம் நடத்துதல்; 'கோடி சென்னய்யா', 'ஹுத்தரி பாடல்' ஆகியன புனைதல். கர்நாடக இலக்கிய உலகுடன் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளுதல் சென்னை மற்றும் மைசூர் பல்கலைக்கழகங்களின் பணிகளை ஏற்றுக் கொள்ளுதல் |
| 1928 | – | விடுப்பில் மங்களூர் திரும்புதல் |
| 1929 | – | பணியிலிருந்து ஓய்வு பெற விரும்புதல் |
| 1930 | – | சென்னைப் பல்கலைக்கழகத்தில் கன்னடமொழியில் நகைச்சுவை என்பது பற்றி தொடர் சொற்பொழிவு நிகழ்த்துதல். |
| 1934 | – | ராய்ச்சூரில் [ரெய்ச்சூர்] நடைபெற்ற கன்ன சாகித்திய சம்மேளனத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றல். |
| 1935–36 | – | மகனுடன் பாட்னா நகரில் வாழ்தல்; பி. எம். ஸ்ரீ. அவர்களுடன் சேர்ந்து மைசூர்ப் பல்கலைக்கழகத்திற்காக 'ஜை மினிபாரதம்' என்னும் நூலை பதிப்பித்தல். 'பதார்த்தமென்ன?' என்னும் சொற்பிறப்பு பற்றிய தொடர் கட்டுரையை எழுதி வெளியிடுதல் |
| 1936–37 | – | மகனுடன் ஹைதராபாதில் வாழ்தல் |
| 1937 | – | [அக்டோபர் 24] நிமோனியா காய்ச்சலால் மரணமடைதல் |

# பின்னிணைப்பு 2

## ஹுத்தரிப்பாடல்

எங்கு பூமித்தாய் இறைவன் சந்நிதி வேண்டி பெருமையுடன் வந்தாளோ, எங்கு அழகிய மலைத் தொடரில் தங்கினாளோ, எங்கு மின்னலைப் போல் காவேரி மினுமினுக்குகிறாளோ, எங்கு நிலத்தை குளிரச் செய்து மக்களை வயலைத் தூய்மையாக்குகிறாளோ,

அங்கு அந்தப் பக்கம் பாருங்கள்!
அங்குள்ள குடகு நாட்டைப் பாருங்கள்!
அங்குள்ள குடகர்கள் வீட்டைப்பாருங்கள்!

புலிப்பாலை அந்நாளில் சுவைத்தவர்கள் யாரோ? கவணால் அடித்து பாம்புகளைப் பிடித்தவர் யாரோ, யானைமுதுகிலேறி தந்தத்தாலான கொம்பை முழங்கியவர் யாரோ, வீரசாகசங்கள் பலசெய்து வேட்டையாடியவர்கள் யாரோ,

அவர்கள் தோல்வி சாவு அறியாதவர்கள்!
அவர்கள் வீரமிக்க மறவர்கள்!
அவர்களே குடகின் மூத்த மனிதர்கள்!

தம்நாட்டை அடிமைத் தளையில் சிக்கவைத்து தலைகுனிந்து நில்லாதோர், பெருமைபேசும் பகைவரைப் புலியைப் போன்று சீறிப்பாய்ந்து தாக்கினோர், மொம்மகிரி முதல் புஷ்பகிரிவரை பரவியுள்ள நாட்டிலுள்ளோர், நீதி, அறம், அன்பு ஆகியவற்றை பொருளெனக்கொண்டோர்,

நமது குடகிது பெருமைவாய்ந்தது!
பெருமைவாய்ந்த குடகு நம்முடையது!
என்றும் நம்முடலைப் பிரிந்துசெல்லாது!

இது அகத்தியன் தவம் செய்த காவேரித்தாய் பிறந்த இடம்,

சந்திரவர்மன் இங்கு போர் புரிந்திட்டான்! இதோ பார்! செங்கள்வ அரசர்கள் மகிழ்ந்தாடிய ஸ்ரீரங்கம்! இதோ! இதோ! ஹலேரி அரசரின் புகழ்மங்கியது இங்கே!

விதியின் விளையாட்டு இந்த குடகு!
அன்றும் இன்றும் என்றும் நமது!
புகழும் சிறப்பும் என்றும் மாறாது!

ஒற்றுமை, இணக்கம், ஏகசிந்தை எங்குளது கூறும். சும்மா கிடைத்தனவோ இந்த உடைகள்? ஹுத்தரி பாட்டைக் கேட்டு எழும்! விழாக் கோலம் கொண்டு ஆடுவீர் பாடுவீர் மகிழ்ந்து! தாய் வாழ்த்திக் கொடுத்த நம்நாடிது, நம் நாடிது!

நிம்மதியை இது பெறட்டும்!
தாயின் வலத்தோளில் இருக்கட்டும்!
நம்குடகிது என்றென்றும் வாழட்டும்!

பாம்புப் பாடல்

நாகப் பாம்பே! பாம்பினில் பூவே!
வாயிற் பொந்து உனது இருப்பிடமோ?
பால் கொடுக்க கைகளைக் கூப்புவேன்!
வாவாவாவா வாவாவாவா

திறந்திடு விரைந்து உன்மஞ்சள் நிறப்படத்தை!
அசைத்திடு மகிழ்ந்து உன்பொன் நிறவுடலை!
இசைத்திடுவேன் மகுடியை ஆட்டிடுவாய் தலையை!
நீநீநீ நீநீநீ.

ஏய் நாகண்ணனே! சொல்வாயா உன்தலையில்
ரத்தினம் இருப்பது உண்மைதானா?
மிகுந்த ஏழையருக்கு ஏராளமான பொன்னைத்
தாதா தாதா தாதா தாதா

உடலோ குளிரும் உள்ளமோ கொதிக்கும்
நாக்கோ இரண்டு பயனோ பூஜ்ஜியம்
வணங்குவேன் நின்னை இப்போதே வெளியே
போபோபோபோபோபோபோபோ.

வருகிறதே! அஹாஹா! தூரத்திலிருந்து வருகிறதே
சீறிப் பாயும் பாதாளத்துப் பாம்போயிது?
பசியால் கதறும் பூதத்தின் கூப்பாடோயிது?
புதிதிது! காலனின் எருமையின் ஓ!ஓ!
பெரு மூச்சோ? தூதூவென ஓலமிட்டு
வருகிறது! பரபரவென விரைந்து வருகிறது!
ஓலமிட்ட வண்ணம் ஒரே சமயத்திலே,
கடல்நீரில் பெருக்கத்தை ஏற்படுத்துகிறது,
அலைகளை கடலை ஓட்டி செலுத்துகிறது
பூம்பூம் என்று ஓசைகளை எழுப்புகிறது
வருகிறது! உடலைக் காட்டாது வருகிறது, அதோ!
பிளக்கிறது கப்பலின் வயிற்றை, நடுமரத்தை
கிழிக்கிறது கட்டியுள்ள பாயைப் பிரிக்கிறது,
பிணைக்கிறது கப்பலை, படகை ஆட்டுகிறது,
இதோ இதோ! வருகிறது! இதோ இதோ வருகிறது!
பூசுகிறது தூசுகளை பறவை கண்களுக்கு
விரட்டுகிறது பசுக்களை காட்டிலிருந்து வீட்டிற்கு
பறக்கிறது காட்டிற்கு எரியும் தீயை அணைப்பதற்கு
வருகிறது இதோ இதோ! இதோ இதோ வருகிறது!
அவிழ்க்கிறது மகளிர்தம் ஆடையை கூந்தலை
சிதைக்கிறது ஏழைமுதியோரின் குடைகளை
ஆட்டுகிறது சிறாரின் தலைதொப்பிகளை
அழிக்கிறது வீட்டில் உள்ள தோட்டங்களை
அலைக்கிறது தென்னையை வளைக்கிறது பாக்கை
உடைக்கிறது பனையை அசைக்கிறது மரத்தை
கெடுக்கிறது மர உச்சிகளின் அமைதியை
எறிகிறது தூக்கி குடிசல்களின் கூரையை
வருகிறது! வருகிறது! இதோ இதோ! வருகிறது?
செடிகள் ஒவ்வொன்றையும் மின்னிட வைத்து
காய்கள் பழங்களை அசைத்து உதிர்த்து
வலப்புறம் இடப்புறம் சுற்றிலும் இறைத்து
மேற்றிசை மேகத்தை சிகரத்திற்கு விரட்டி
நாற்புறமும் மின்னல் ஒளிபாய்ச்சி
இடியை இடித்து நிலத்தை நடுக்கி
தாழையில் வாழையில் மின்னலை இறக்கி
தூறலும் கனமழையும் பெய்வித்து
வறண்ட நிலத்திற்கு குடிநீரை அளித்து
வருகிறது வீசிக்கொண்டு, வீசிக்கொண்டு வருகிறது!
தெற்குக் காற்று கொங்கணி சீமைக்கு
வருகிறது! வருகிறது! வருகிறது! வருகிறது!

# பின்னிணைப்பு 3

## 1. இலக்கியப் படைப்புக்கள்

**1. சிறுகதை, புதினம்**

அ. இதிகாச கதாவளி [சிறுகதைகளின் தொகுப்பு], பாளிகா அண்ட் சன்ஸ், மங்களூர்.

ஆ. கோடி—சென்னய்யா [சிறுபுதினம்], பால சாகித்திய மண்டலி, மங்களூர், 1926.

இ. சண்டிகா ரகசிய சமாஜம் [துப்பறியும் புதினம்], சுவாசினி என்னும் இதழின் 1,9,10 மற்றும் 11 இதழ்களில் வெளியாகியுள்ளது. முதல் இயல் மட்டும் உள்ளது.

**2. குழந்தைகள் இலக்கியம்**

அ. பால கதாவளி [சிறார் கதைகளின் தொகுப்பு], பேசல்மிஷன் புக் டிப்போ, மங்களூர், 1916.

ஆ. மங்களூர் பால சாகித்திய மண்டலம் வெளியிட்ட பின்வரும் கதைகள்: அங்களதுக்கு, அர்கனே முத்தி, அகோளிமஞ்சண்ணா, அஜ்ஜி சாகித மகு, இலிகளின தகதை, ஏக்ரோஜ கா கலீப், ஓட்டன ஓட், கர்ண சரித்ரே, கொக்கோ கோ கோளி, குடுகுடு கும்மட்டி தேவர், கோணி தட்டின பட்டேஹலி, பிட்டே பசவய்யா, பெக்கின பிடார பேரே, பொக்கே பாயி கொக்கே ராஜ், சந்திரஹாசன கதே, மாதாடோ ராஜப்பா, மெணசின காளப்பா, மூரு கரடிகளு, சிகடி யாகே ஓணகலில்ல? ஹேனு சத்து காகே படவாயிது, ஹூலியோ இலியோ?

**3. கவிதை, கவிதைத் தொகுப்பு**

அ. கன்னட மொதலநெய பத்ய புஸ்தக [கன்னடக்கவிதை முதலாம் நூல்]
பேசல் மிஷன் புக் டிப்போ, மங்களூர், 1912. இதுதான் கன்னட மொழியில் வெளியான முதற்கவிதைத் தொகுப்பு. மங்கேசராவின்

ஆறு கவிதைகளும் சமகாலக்கவிஞர்களின் பதினாறு கவிதைகளும் இதில் உள்ளன.

ஆ. கன்னட எரடனெய பத்ய புஸ்தக [கன்னடக் கவிதை இரண்டாம் நூல்]
பேசல் மிஷன் புக் டிப்போ, மங்களூர், 1919. இதில் மங்கேசராவின் ஏழு பாடல்கள் உள்ளன.

இ. கன்னட மூறனெய பத்ய புஸ்தக [கன்னடக்கவிதை மூன்றாம் நூல்]
பேசல் மிஷன் புக் டிப்போ, மங்களூர். மங்கேசராவின் 'ஹூவித்தரிஹாடு' எனும் பாடல் உள்ளது

ஈ. பானிபத [யக்ஷகான வடிவம்]
மங்களூர் பக்தி சந்தேசத்தில் முதலில் வெளியாயிற்று. பின்னர் 1952ல் மங்கேசராவின் நினைவுமலரில் வெளியாகியுள்ளது.

4. பிற

அ. கன்னட மூல வியாகரண [கன்னட இலக்கணம்]
மங்களூர் பேசல் மிஷன் புக் டிப்போ, 1905.

ஆ. சப்த மணி தர்பண, கேசிராஜன் எழுதிய கன்னட இலக்கண நூல்
பதிப்பாசிரியர் ரெவரண்ட் கிட்டல். மங்களூர் பேசல் மிஷன் புக் டிப்போவிற்கென்று திருத்திய மறுப்பதிப்பை பதிப்பித்தார், 1920.
இ. பிராணிகளும் பிரதேசங்களும், பேசல் புக் அண்ட் ட்ரேக்ட் டெபாசிடரி, மங்களூர், 1933.

ஈ. போதனவெந்தரேனு? [கல்வியென்றால் என்ன?] துவக்கக்கல்வி பற்றிய முதல் நூல், ஜில்லா போர்டு, மங்களூர், 1920.

உ. கன்னடதல்லி சுதாரணேகளு [மொழி, இலக்கியம் பற்றியது] 1934–ல் நடைபெற்ற ரெய்ச்சூர் கன்னட சாகித்திய சம்மேளனத்தில் ஆற்றிய தலைமையுரை.

ஊ. இங்கிலீஷ் – கன்னட லகு கோச [சிறு அகராதி], முதற்பதிப்பாளர் கிருஷ்தானுவத்ச என்பவர். மங்களூர் பேசல் மிஷன் புக் அண்ட் ட்ராக்ட் டெபாசிட்டரிக்காக மங்கேசராவ் பெரிதாக்கிய, திருந்திய பதிப்பைப் பதிப்பித்தார்.

எ. மஹாயுத்தத கதே [உலகப்போரின் கதை], சென்னை மாகாண அரசால் வெளியிடப்பட்ட மங்கேசராவின் மொழிபெயர்ப்பு.

**கால முறை இதழ்களிலும் பத்திரிக்கைகளிலும் வெளியாகி சமீப காலம் வரை நூல் வடிவில் வெளியாகாதன**

**1. கதைகள்**

அ. நன்ன சிக்க தாயி [என் சின்னம்மா], சுவாசினி 1—2,3 இதழ்களில் வெளியாகியுள்ளது.

ஆ. நன்ன ஹெண்டதி [என் மனைவி], சுவாசினி 1—8, பிப்பிரவரி 1901.

இ. நன்ன சிக்க தந்தே [என் சிற்றப்பா] சுவாசினி —2 ஆகஸ்ட், 1902.

ஈ. நன்ன சிக்க தந்தேயவர உயில் [என் சிற்றப்பாவின் உயில்], சுவாசினி — 8, பிப்பிரவரி 1903.

உ. ப்ரதுலா, சுவாசினி — 8, பிப்பிரவரி 1903.

**2. பாடல்கள்**

சத்ய ப்ரேமேகே தாயி நடே சென்ன, சோக கீதே, சாரி ஹெளுவெனு, ஜோகுள தூகுவே தொட்டிலே, ஜோகுள ஹாடு, சஞ்ஜேய ஹாடு, ஆடினா மரி, ஸ்திரப்ரயத்ன, உத்யம, ஹெகெய காடி, இடுபக்தி, நடெமுந்தே, சந்த்ரன்னு தா, சூர்யோதய நதி, நக்ஷத்திர, ஜேனுகூடு, சிக்கந்தின நெனபுகளு, ஹொலெயன ஹாடு.

**3. நகைச்சுவை, எள்ளற்சுவை**

1. ஹளெய சப் அசிஸ்டெண்டன சுள்ளு டைரியிந்த [பழைய உதவித் துணை ஆய்வாளரின் டைரியிலிருந்து], கண்டீவரா சிறப்பு மலர், 1935.
2. பாரத ஸ்ரவண, சுவாசினி 2 — 5, நவம்பர், 1902.
3. கமலாபுரத ஹோட்டலிநல்லி, சுவாசினி
4. ஹல்லி, சத்திய தீபிகை,
5. ஹம் நஹீம் கத்தா, சுவாசினி — 4, அக்டோபர், 1902.

**4. இலக்கியக் கட்டுரைகள்**

1. குமாரவ்யாசன ஹெக்களிகே, 18.8.1936—ல் ஹைதராபாத்தில் ஆற்றிய உரை.

2. ஹொசதாரி, மங்களூர் மித்ரமண்டலியின் இலக்கிய விழாவி ஆற்றிய உரை. 26.12.1936 நாளிட்ட ராஷ்ட்ரபந்து இதழி வெளியீடு.

3. பாலசாஹித்ய, ஹைதராபாத்தில் ஆற்றிய உரை, 29.10.1935 நாளிட்ட கண்டீரவ இதழிலும் வெளியாகியுள்ளது.

4. நந்தளிகே லட்சுமிநாராயணப்பனவரு, சுவாசினி, 12.

5. சர்வஞ்ன ஒநாம பத்ததி, கண்டீவரா.

5. ஆய்வு மற்றும் மொழியியல் தொடர்பானவை

1. "பதார்த்தவேனு?" கண்டீவரா
2. "முடிபிதிரே ஹொச பசதிய சிலாசாசனகளு", பஞ்ச கச்சாயம்
3. "பிளிகிய கெலவு சாசனகளு" ராஷ்ட்ரபந்து, 1929.
4. "ஸ்தள நாம" ஸ்வதேசாபிமானி, 1931.

6. ஆங்கிலக் கதைகள்

1. 'The crow and Sparrow'
2. 'Rub a Rub Gummat Ray'
3. 'The Wood Louse is Dead',
4. 'Master Pepper',
5. 'How the Mice Danced?'
6. 'The Lark and its Eggs'

Indian ... SHIMLA
117414.
14/12/04

4. மங்கேசராவ் அவர்களைப் பற்றி

1. பஞ்சேயவர நெனபிகாகி [பஞ்சே மங்கேசராவ் நினைவுமலர்], பஞ்சே நினைவு மலர் வெளியீட்டுக் குழு, பதிப்பாசிரியர்கள்: எம். கோவிந்த பை, வி. சீதாராமய்யா, கெ. சிவராம காரந்த், ஹர்ஷ ப்ரகாசன வெளியீடு, புத்தூர், 1952.
2. பஞ்சே மங்கேசராவ், சேகர் இத்யா, எம்.ஜி. எம் கல்லூரி, உடுப்பி, 1971

3. பஞ்சே மங்கேசராவ், கெ. சிவராம காரந்த், ஐ. பி. ஹெச் வெளியீடு. பெங்களூர், 1972.
4. பஞ்சே மங்கேசராவ், எம். சுமித்ரா சானபாக, பாரத—பாரதி புஸ்தக சம்பதா, பெங்களூர், 1974.
[சேகர் இத்யா அவர்கள் பஞ்சே மங்கேசராவின் நூற்றாண்டு விழாவின் போது வெளியிட்ட தெங்கணகாளி என்னும் நூலில் கொடுத்துள்ள நூலடைவை ஒட்டி மேலே கொடுக்கப்பட்ட விவரங்கள் தயாரிக்கப்பட்டன].

நாட்டின் பல்வேறு இடங்களில் உள்ள மிகவுயர்ந்த திறமைகள் நமது கவனத்திற்கு வராமலிருக்கின்றன; இதற்குக் காரணம் மொழியேயன்றி அவற்றின் தரக்குறைவு அல்ல.

பஞ்சே மங்கேசராவ் ஒரு சிறந்த கன்னடமொழிக் கவிஞராக விளங்கியதோடு இலக்கிய அறிஞராகவும் விளங்கினார். கர்நாடகம் ஒன்று படுத்தப்படாமல் மூன்று ஆட்சிப் பிரிவுகளாக இருந்த காலத்தில், ஒரு நிலையில், கன்னட மக்களாலேயே நன்கு அறியப்படாதவராக இருந்தார்.

ஒரு சிறந்த கவிஞரும் திறனாய்வாளருமான இந்நூலாசிரியர் திரு வி. சீதாராமய்யா அவர்கள் பஞ்சே மங்கேசராவ் வாழ்ந்த காலத்தில் இளைஞராக இருந்தபோதும் அவரிடம் நெருங்கிய உறவு வைத்திருந்ததோடு மதிப்பும் வைத்திருந்தார். அவர் ராவ் பற்றிய தெளிவான விவரங்களை அளிப்பதோடு அவரது படைப்புகளை சரியான விதத்தில் திறனாய்வு செய்துள்ளார்.

*Panje Mangesha Rao (Tamil) Rs. 15*

ISBN 81-7201-517-8

Library IIAS, Shimla
T 891.481 409 2 R 18 S
00117414